யூலை-டிசம்பர் : 2006 காலாண்டிதழ் இதழ்-23

பன்முக சிந்தனைகளுக்கான...

# கூடம்

குடியான் சமூகமும் பொருளியலும்

தேசியப்பிரச்சினையும் மார்க்சியமும்

பின்காலனித்துவம்

உண்மையான வரலாறு என்றால்?

இணையத்தளங்கள்: மாற்றுப் பார்வை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தம் போதிப்பது என்ன?

இன்று சமூக அரசியல் நிலைமைகள் மிக மோசமாகி வருகின்றது. 2002 பிப்ரவரி தொடக்கம் உருவாக்கப்பட்ட சமாதான முயற்சிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, வன்முறைகள் எங்கும் ஆட்சி செய்யத் தொடங்கி விட்டன. யுத்த நிறுத்த உடன்பாடு முடக்கப்பட்டு விட்டன. கடந்த நவம்பர் 2005இல் இடம் பெற்ற தேர்தலில் இருந்து தான் நாட்டில் அமைதியின்மை தொடர்கின்றன. யுத்தச் சூழல் உருவாகின்றன. வன்முறைகளும் உயிர்க்கொலைகளும் வாழ்முறையாகின்றன.

உயிர்க்கொலையை வன்மையாகக் கண்டித்த பௌத்தம் கோலோச்சும் நாட்டில் உயிர்க் கொலைகள் சர்வ சாதாரணமாகிவிட்டது. இதுவே ஒரு கலாசாரமாகவும் பரிணமித்துவிட்டது.

உலகம் முழுவதும் பௌத்தம் பரவுவதற்கு காரணமாக இருந்தவரும் இந்தியத் துணைக் கண்டம் முழுமையும் பௌத்த ஆளுகைக்குள் அசோகச் சக்கரவர்த்தி கொண்டு வந்தார். இவர் தனது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் யாகங்கள் என்ற பெயரில் எந்த ஒரு மிருகத்தையும் கொல்லக்கூடாது; விருந்து கேளிக்கைகளும் கூடாது. ஏனெனில் இத்தகைய கேளிக்கைகளால் பல தீமைகள் நடைபெறுவதை பிரியதரிசி மாமன்னன் அறிந்துள்ளான் எனப் பிரகடனம் செய்தார்.

மிருகங்களைக் கொல்லாதிருப்பது மட்டுமல்ல அவற்றை அன்பு செய்து காப்பதும் பௌத்த ஆளுகையின் ஓரம்சமாக இருந்தது. மனிதர்களுக்காக மட்டுமன்றி மிருகங்களுக்காகவும் மருத்துவமனை கட்டுவிப்பதை ஒரு கொள்கையாக அறிவித்து நடைமுறைப்படுத்தியதும் உலக வரலாற்றில் முதன் முதலில் அசோகனாகத் தான் இருக்க முடியும்.

இத்தகைய பௌத்த மரபு வழிவந்த கொள்கைகள் இலங்கையில் கடைப்பிடிக்கப்படுவதாக இல்லை. ஆட்சியாளர்கள் இலங்கை பௌத்த நாடு என்று பறையாற்றிக் கொண்டாலும், அதற்கான ஆட்சியியல் ஏற்பாடுகளைக் கொண்டிருந்தாலும் பௌத்தக் கொள்கைகள் உணர்ந்தும் அற ஒழுக்கங்கள் கடைப்பிடிக்கபட்டு வரும் நாடாக இல்லை.

பௌத்தம் பகையையும் போரையும் வெறுப்பையும் மறுக்கிறது. அன்பாலும் உயிர்வதையை விலக்குவதாலும் உலகை வெல்ல இயலும் என நம்புகிறது. கோதமர் (புத்தர்) போர் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது அதனை எதிர்த்தார். நெருங்கிய உறவினர்களாக உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளக் கூடாது. எந்தப் பிரச்சினைகளையும் போர் மூலம் தீர்த்துவிட இயலாது. ஒரு போர் இன்னொரு போருக்கே வித்தாகும். போர் செய்யும் தீர்மானத்தை விட்டுவிட்டு இரு தரப்புப் பிரதிநிதிகளும் கூடிப் பேசி சமாதானமாக இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வோம் என்றார். ஆனால் இவரது இந்தக் கருத்து அப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கோதமரும் போருக்கு போக முடியாது என்பதில் உறுதியாக இருந்தார். இந்நிலையில் சித்தாத்தன் நாட்டையும் வீட்டையும் துறந்து செல்ல முடிவு செய்தார். சென்றார். பின்னர் துறவு மேற்கொண்டார். நமக்கு பௌத்த மரபு ஒன்றை விட்டுச் சென்றார்.

இது வரலாறு. ஆனால் இந்த வரலாற்று அனுபவம் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களிடம் எந்தளவிற்கு வாழ்வியல் அறமாகப் பின்பற்றப்படுகிறது என்பது கேள்விதான்.

"தீவிரப்பௌத்தன்" "தீவிர பௌத்தவாதி" என்பவர்கள் தீவிரமாக போர் செய்யும் முடிவை ஏற்க மாட்டார்கள். ஆனால் இலங்கையில் இவர்கள் தான் போரைத் தூண்டுகிறார்கள். பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்கிறார்கள். கடந்த நவம்பர்2005 இல் இடம் பெற்ற தேர்தலில் இருந்து தான் நாட்டில் அமைதியின்மை தொடர்கிறது. யுத்தச் சூழல் உருவாகிறது. வன்முறைகளும் உயிர்க் கொலைகளும் வாழ்முறையாகிறது.

"2006" தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை கடைசி நம்பிக்கைகளையும் பறித்தெடுக்கும் ஆண்டாகவே இருந்துள்ளது. இனிவரும் காலம் எத்தகையது என்பதை இது மேலும் தெளிவாக உணர்த்துகிறது.

நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்றே கிடையாது. இருப்பதெல்லாம் பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே என்கிற குரல் மீண்டும் ஒலிக்கத்தொடங்கிவிட்டன. இதனை வலியுறுத்தும் கருத்துப் பரப்புரைகளும் மேற்கிளம்பத் தொடங்கியுள்ளன. பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்களுடன்.....**

இதுவே சிறிலங்கா அரசின் ஒரே குறிக்கோளாக உள்ளது என்றுதான் ஆளும் தரப்பு கருத்துத் தெரிவிக்கிறது. அந்த அடிப்படையில் தனது நிகழ்ச்சித்திட்டத்தையும் தயாரிக்கிறது. இதனால் வட-கிழக்கு வாழ் மக்கள் மிக மோசமான வாழ்க்கை வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பொருளாதாரத் தடை, நடமாடும் சுதந்திரம், கல்வி கற்கும் உரிமை, தமது வாழ்விடத்தில் வாழ்வதற்கான உரிமை போன்ற இன்னோரன்ன அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

"இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களைத் துண்டாடுவது" மிக உயர்ந்த பட்சத்தீர்வாக இருக்க முடியும் என்ற நம்பிக்கையில் சிங்களத்தரப்பு செயற்படுகிறது. இதில் தீவிரம் காட்டுகிறது. இவை இனப்பிரச்சினை விவகாரத்தில் இவர்களுக்குள்ள அக்கறை தெளிவு எத்தகையன என்பதைத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன. ஆனால் இன்று முன்பு இணைக்கப்பட்ட "வடகிழக்கு மாகாணசபை" பிளவுபடுத்தப்பட்டு தனித்தனி அலகுகளாக்கப்படும் நிலை உருவாகிவிட்டது. இதனை நடைமுறைப்படுத்துவதில் சிறிலங்கா அரசு தீவிர கவனம் செலுத்துகிறது. 2002 க்கு பின்னர் ஓரளவு "சமஷ்டி" என்பது பரவலாக பலராலும் பேசப்பட்டு வந்தது. கூடிய அதிகாரப் பகிர்வுகள் இடம் பெற்று இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் ஒரு பொதுப் போக்கு காணப்பட்டது. அல்லது அவை குறித்து பேசக் கூடிய சாதகமான சூழல் நிலவி வந்தது. ஆனால் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் ஆதிக்கம், நலன்கள் மீண்டும் பகிரங்கமாக வெளிப்படத் தொடங்கியுள்ளன. இதனால் நடைமுறையில் உள்ள சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் முடக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்தன. இன்று எதிர்பார்த்தது போல் நிலைமைகள் பின்னோக்கி நகர்கின்றன. இந்தப் பின்னணியில் தான் வடக்கு கிழக்கு பிரிப்பு பற்றிய நீதிமன்றத் தீர்ப்பும் அதையொட்டி எழுந்துள்ள நிரந்தரப் பிரிப்புக்கான ஆட்சியியல் ரீதியான நகர்வும் தீவிரப்பட்டுள்ளன. நாட்டின் எதிர்காலம் எங்கே செல்லப் போகிறது? யுத்தம் மிகமோசமான கட்டத்தை அடையும் பொழுது அனைத்து இன மக்களும் சொல்லனா துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் மற்றும் இழப்புகளுக்கும் உளாகும் சூழல் உருவாகும் இந்த கசப்புகளைத்தான் இது கானுமான நமது அனுபவம் சுமந்து வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் தான் எம்மை நோக்கி பல்வேறு கேள்விகள் எழுகின்றன. இன்று தோன்றியிருக்கும் நெருக்கடிக்கான காரணங்களை சில தனிநபர்களிலும் சில சக்திகளிலும் மட்டும் கண்டறியாது, நாம் எதார்த்தத்தை பல்வேறு ரீதியாகப் புரிந்து கொள்ள முற்பட வேண்டும். இதற்கு எமக்கு கடினமான அறிவு சார்ந்த உழைப்பு வேண்டும். அதற்கு பல்வேறு கோட்பாடு முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடவேண்டும். இதன் வழியாக அறிவின் ஆதாரங்களையும் அறிவின் பிரயோகங்களையும் ஆக்க மலர்ச்சிகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு உறுதுணையாகவே "கூடம்" வெளிவருகிறது.

இன்று பின் அமைப்பியல், பின் நவீனத்துவம், பின் காலனித்துவம், பெண்ணியம், சூழலியம், தலித்தியம் மார்க்சியம் என பல்வேறு புதிய சிந்தனைகளின் கோட்பாடுகளின் தாக்கம் பலவாறு தமிழில் இடம்பெற்று வருகின்றன. தமிழகச் சூழலில் இவற்றின் தாக்கம் பெரிது. இவை சிந்தனை சொல்,செயல் போன்றதளங்களில் பெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளன. "சமூக மாற்றம்" "விடுதலை" போன்ற உயரிய நோக்கங்களையும் ஊடறுத்து இந்த புதிய சிந்தனைகளின் கோட்பாடுகளின் வேர்விடுகை தமிழில் ஆழமாக இடம் பெறுகின்றன.

ஆகவே நமது தமிழ்ச் சூழலிலும் இவை சார்ந்த புரிதல், விளக்கம், விமரிசனம் ஆழ அகலப்படுத்தப்பட வேண்டும். இதற்கான களங்களைத்தான் இந்தக் கூடம் அடையாளப்படுத்துகிறது.

நமது காலம் ஒற்றை அடையாளங்களை மறுக்கும் காலம். ஒற்றைப் புரிதல்களும் ஒற்றை வாழ்முறையும் சனநாயகத்திற்கு அபாயத்தை ஏற்படுத்துகின்றன என்பது அதிகமாக உணரப்பட்டு வருகிறது. சனநாயகத்தை தீவிரப்படுத்த விளையும் சக்திகள் பன்முக வாசிப்புகளையும் பன்முக புரிதல்களையும் ஊக்குவிக்கின்றன.

விடுதலை அரசியலின் சாத்தியமான திசைப்படுத்தலை நோக்கி அனைத்து வாசிப்புகளுக்கும் களம் அமைத்துக் கொடுப்போம். அதேநேரம் வெறும் ஓய்வு நேர சாய்மனைக் கதிரை அறிவுஜீவிகளின் ஓய்வுக்களமாக "கூடம்" இருக்காது. இருக்கக்கூடாது. கூடத்தில் கூடுவோர் பலராக இருப்பினும் அவர்கள் ஒவ்வொருவரும் "சமூக மாற்றம்" "விடுதலை" போன்ற உயர்ந்த நோக்கத்தை அடையும் வாழ்முறைக்கான உயிர்ப்புத் தன்மைகளை வழங்குபவர்களாகவே நிச்சயம் இருப்பார்கள் அத்தகையவர்களைக் கொண்டு தான் கூடம் கூடும்.

தெ. மதுசூதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


**04** மார்க்சியமும் தேசியப் பிரச்சினையும்
றெஜி டெப்ரேயுடன் ஒரு நேர்காணல்

**24** உண்மையான வரலாறை எழுதுவது எப்படி?
நிவேதிதா மேனன்

**28** பின் காலனித்துவம் : சில விளக்கங்கள்
பேராசிரியர். சச்சிதானந்தம் சுகிர்தராஜா

**36** குடியான் சமூகமும் பொருளியலும்
கந்தையா சண்முகலிங்கம்

**50** படைப்பாளி என்பவன் யார்?
மிஷேல் ஃபூக்கோ

**65** மார்க்சிய கோட்பாட்டுடன் மனிதநலம் சார்ந்த உளவியல் பகுப்பாய்வு முறையைப் பொருத்துதல்
எரிக்பிராம்

**77** இணைய தளங்கள் - மாற்றுப் பார்வை
பேராசிரியர் சோ.சந்திரசேகரன்

**84** இன்னுமொரு ஊழிக்குத் தயாராகிறதா பூமி?
பொ. ஐங்கரநேசன்



**கூடம்**

இதழ் : 02-3 ஜூன்-டிசம்பர் 2006 விலை : 100.00

**ஆசிரியர்:**
தெ.மதுசூதனன்

**ஆசிரியர் குழு :**
க.சண்முகலிங்கம்
சாந்தி சச்சிதானந்தம்
கொ.றொ.கொண்ஸ்ரன்ரைன்

**நிர்வாக ஆசிரியர்:**
ச. பாஸ்கரன்

**அச்சு :**
ரெக்னோ பிரின்ட்,கொழும்பு - 06
தொலைபேசி: 0777-301920

**வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :**
KOODAM
3, Torrington Avenue, Colombo - 07.
Tel : 011-2506272
E-mail : koodam@viluthu.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சியமும் தேசியப் பிரச்சினையும்

## றெஜி டெப்ரேயுடன் ஒரு நேர்காணல்

**றெஜி டெப்ரே** பிரெஞ்சு நாட்டவர். தத்துவத்துறைப் பேராசிரியர். கியூபா புரட்சியால் கவரப்பட்டவர். பத்திரிகையாளர் என்ற முறையில் லத்தீன் அமெரிக்காவில் பல நாடுகள் பயணம் செய்து பல கெரில்லா இயக்கங்களுடன் இருந்தவர். பொலிவியாவில் சேகுவேராவின் கெரில்லா இயக்கத்தில் பங்கு கொண்டவர் என்ற காரணத்திற்ாக பொலிவிய அரசு அவருக்கு 30 ஆண்டுசிறைத் தண்டனை வழங்கியது. அவருக்குச் சிறையில் பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. அவர் விடுதலைக்காக உலகமே குரல் கொடுத்தது.

"புரட்சிப் போராட்டம்" "விடுதலை அரசியல்" "மக்கள்" "தேசியம்" போன்ற பல்வேறு கருத்தகங்களின் கோட்பாட்டு விசாரணையை முன்வைப்பவர். மார்க்சியம் ஒவ்வொரு கண்டத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் அப்பகுதிக்கே உரிய தனிச்சிறப்பான நிலைமைகளை எதிர்கொள்கிறது. இதனால் மார்க்சியம் புதிய வளங்களை கண்டடைகிறது என்பார்.

டெப்ரே எழுதிய "புரட்சிக்குள் புரட்சி" "சேகுவேராவின் கொரில்லா யுத்தம்" போன்ற நூல்கள் தமிழில் உள்ளன. இதைவிட இவரது பல்வேறு கட்டுரைகள் தமிழில் உள்ளன. இந்த சிந்தனைத் தொடர்ச்சியில் இந்த "உரையாடல்" தேசியப் பிரச்சினை குறித்த மார்க்சிய விளக்கம் அது சார்ந்த உரையாடல் இங்கு பலதளங்களினூடு விரிகிறது. மார்க்சியம் எப்பொழுதும் அரசியல் கோட்பாட்டு விவாதங்களைத் தூண்டி புதுவளங்களைச் செரித்துக்கொண்டு வளர்ச்சியடையும். இந்த அடிப்படை இந்த உரையாடலில் தெளிவாகவே வெளிப்படுகின்றது.



முதலில், தேசம் குறித்த விவாதத்தில் கொஞ்சம் தத்துவமும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றேன். நான் மார்க்சியத்தை முதன்முதலாகத் தீவிரமாகக் கேள்விக்குட்படுத்த ஆரம்பித்தது தேசம் பற்றிய பிரச்சினையில் தொடங்கித்தான். எதற்கும் அசைந்து கொடுக்காத அந்த அரணில் விழுந்திருந்த இந்த விரிசல்தான் மேலும் மேலும் அதன் உள்நோக்கிப் பயணிப்பதைத் தவிர்த்துவிட்டு கோட்டைக்கு வெளியே ஒரு சுற்று சுற்றிவர வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தது..... அதுதான் என்னை வெளியே விலகி நிற்க வைத்து, இன்னும் விரிவானதொரு சட்டகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைத்து அதைப் பார்க்கும் வாய்ப்பைத் தந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், வரலாற்றைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் மார்க்சியம் ஒரு முக்கியமான, தீர்மானகரமான கட்டம் தான் என்றாலும் அதுவே இறுதிக் கட்டம் அல்ல என்ற புரிதலுக்கு வருவதற்கு எனக்கு உதவியது.**

**Le Nourel Observaten இதழில் சமீபத்தில் வெளியான தேசியப் பிரச்சினை குறித்து உங்கள் கட்டுரையொன்றில் தேசத்தை ஒரு வரலாற்று ரீதியாக கடந்து செல்லக்கூடிய (transitory) வகையினமாகப் பார்க்கும் கருத்தை நீங்கள் விமர்சிப்பது போலத் தெரிந்தது. மொழியைப் போலவே தேசமும் பல உற்பத்தி முறைகளையும் ஊடறுத்துச் செல்கிற ஒரு மாறாநிலை மதிப்புரு (invariable) என்று எழுதியிருந்தீர்கள். அப்படியென்றால் முதலாளியத்திற்கு முந்தைய உற்பத்தி முறைகளிலும் கூட தேசமும் தேசிய அரசுகளும் தொடர்ந்து நிலவும் என்பதாகச் சொல்ல வருகின்றீர்களா?**

■ ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து சிக்கலான பல கேள்விகள் வலைப் பின்னல் இங்கு எழுகிறது. இதில் உங்கள் கடைசிக் கேள்வியிலிருந்து - பொதுவுடமை உற்பத்தி முறையில் தேசம் பற்றியதிலிருந்து தொடங்க அனுமதியுங்கள். இங்கு நமது விவாதம் பொதுவுடமை உற்பத்தி முறை பற்றி இல்லையென்றாலும் அந்தக் கருத்தாக்கம் முதிர்ச்சியடையாத, சிறுபிள்ளைத்தனமான கற்பனாவாதக் கருத்தமைவுகளில் சிக்குண்ட ஒன்று என்பதை இச்சந்தர்ப்பத்தில் சொல்லிவிடுவது அவசியம் என்று நினைக்கின்றேன். அதாவது, பொதுவுடமைதான் வரலாற்றின் இறுதி இலக்கு என்கிற கருத்து ஒரு கருத்துமுதல்வாத, இயந்திரவியல் வகைப்பட்ட கருத்தாகவே இருக்கிறது. இதை ஒரு தூய மார்ச்சியப் பகுத்தறிவுவாத (Pure Marxist Reason) கருத்தாக்கம் என்று சொல்வது இன்னும் சரியாக இருக்கும். பற்றாக்குறை (scarcity) யை ஒழிப்பது, அரசு உலர்ந்து உதிர்வது, மூளை உழைப்பிற்கும் உடல் உழைப்பிற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வான உறவை ஒழிப்பது என்பன போன்ற கருத்தாக்கங்களை முன்வைக்கிறது என்ற அளவில் மார்க்சியத்தை ஒரு கற்பனாவாதக் கருத்தியல் என்று சொல்வது மிகவும் சரி என்றே நினைக்கிறேன். இதனால்தான் மார்க்ஸ் சிலவற்றை கற்பனாவாதச் சிந்தனையிலிருந்து அப்படியே எடுத்துக் கொண்டுவிட்டார். இவை குறித்த தீவிரமான கேள்விகள் எதுவும் எழுப்பாமலேயே விட்டுவிட்டார். பொதுவுடமை உற்பத்தி முறை என்று சொல்லப்படுவது எல்லாம் நகர்ந்து கொண்டு போகிற தொடுவானம் என்பதற்கு மேலாக எதுவும் இல்லை. இப்போது நாம் அரசு 'உலர்ந்து உதிர்வது' பற்றியும், இன்னும் சமீபமாக பற்றாக்குறையை ஒழிப்பது பற்றியெல்லாம் கூட சில நல்ல தீவிரமான புரிதல்களுக்கு வந்திருக்கிறோம். பாடங்கள் கற்றுக் கொண்டிருக்கிறோம். எப்படியிருந்தாலும், ஒரு உறவுநிலை என்கிற அளவில் வரலாறு நெடுக பற்றாக்குறை என்பது இருந்து வந்திருக்கிறது. மேலும், எல்லாவிதமான பற்றாக்குறைகளும் ஒப்பீட்டளவிலானவைதான் (relative). புதிய அடிவைப்பு என்பதே பற்றாக்குறையை இடைவிடாமல் தோற்றுவிக்கிறது என்கிற அர்த்தத்தில் இந்த ஒப்பீட்டுத்தன்மை அனைத்தும் தழுவியதாக (absolute) இருக்கிறது. கடைசியாக தானியங்கியாக மாற்றப்பட்ட ஒவ்வொரு இயந்திரமும் அது கிடைக்கப் பெறாத முந்தைய தலைமுறைகளுக்கு ஒரு பற்றாக்குறையாக, அரிதான பண்டமாகவே எப்போதும் இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பொருட்களுடனான மனிதனின் பொருளாதார உறவில் பற்றாக்குறை ஒரு தவிர்க்கவியலாத, பிரிக்க முடியாத காரணியாக இருக்கிறது. அதேபோல், சமூக உறவுகளில் அதிகாரம் என்பது மெல்ல மெல்ல மறைந்து விடும் என்கிற கருத்தாக்கம் கூட எந்தவிதமான பொருண்மை அடிப்படையும் அற்ற ஒரு கருத்து என்பதையும் நிறுவ முடியும். ஆனால் இப்போதைக்கு இந்தப் பிரச்சினையை கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிடுவோம். தேசம் குறித்த நமது விவாதித்திற்குத் திரும்புவோம்.

பொதுவுடமை உற்பத்திமுறை என்கிற கருத்தாக்கத்தின் கற்பனாவாதத் தன்மையைக் காட்டும் விஷயங்களில் மற்றொன்று அது அனைத்தும் தழுவியதாக (universal) சொல்லப்படுவது. அதாவது, குறிப்பான பண்பாட்டுக்கு தேசியத் தனித்துவங்கள் மறைந்து போவதை அது எதிர்பார்க்கும் முறை. வரலாற்றின் நிரந்தரமான இயங்குசக்தியாக முரண்பட்ட வர்க்க சக்திகளுக்கு இடையிலான போராட்டமே இருந்து வருகிறது என்கிற கோட்பாட்டோடு எந்தத் தொடர்புமற்ற ஒரு கருத்துமுதல்வாதக் கருத்தாக்கம் இங்கு நம் முன் நிற்கிறது. மார்க்சிடம் தங்கிவிட்ட ஊகச் சிந்தனையின் (speculative thought) மிச்ச சொச்சம் (அதற்கும் மேலாக, அது இன்னும் சிக்கலான பிரச்-

**பற்றாக்குறையை ஒழிப்பது, அரசு உலர்ந்து உதிர்வது, மூளை உழைப்பிற்கும் உடல் உழைப்பிற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வான உறவை ஒழிப்பது என்பன போன்ற கருத்தாக்கங்களை முன்வைக்கிறது என்ற அளவில் மார்க்சியத்தை ஒரு கற்பனா வாதக் கருத்தியல் என்று சொல்வது மிகவும் சரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினையாகவும் இருக்கலாம்) இது. எப்படியோ, ஆனால் Aufklarung இருந்து எடுத்துக் கொண்ட கருத்தாக்கம்.

சரி தேசம் என்ற பல உற்பத்தி முறைகளையும் ஊடறுத்துச் செல்கிற ஒரு மாறாநிலை மதிப்புரு என்பது பற்றிய உங்கள் கேள்வியை எடுத்துக் கொள்கிறேன். இந்தக் கேள்வியிலேயே ஒரு பொறி இருக்கிறது. எப்படி? எப்படியென்றால், தேசம் என்பது வரலாற்று ரீதியாக தீர்மானிக்கப்பட்ட, உருவான ஒரு சமூக அமைவாக இருக்கிறது. இந்த அளவில் அது ஒரு மாறுநிலை மதிப்புரு (variable). என்றாலும், தேசம் வெளிப்படுத்தும் உணர்வு, தேசத்தின் உட்கிடக்கை ஒரு மாறாநிலை மதிப்புரு. நிலப்பிரபுத்துவத்தின் அழிவு, இன்னும் பிற விஷயங்களினால் தோற்றம் பெற்ற தேசம், ஒரு வரலாற்று ரீதியாக கடந்து செல்லக்கூடிய வகையினம் என்பது உண்மையே என்றாலும், வரலாற்று ரீதியாக தீர்மானிக்கப்பட்டது. அதனால் உரு மாறுநிலை மதிப்புரு என்றே இருந்தாலும், மனிதத் திரள்களை பண்பாட்டு ரீதியில் ஒழுங்கமைவு செய்யும் அடிப்படையான முதல்நிலைக் காரணி என்கிற வகையில் அது மாறாநிலை மதிப்புருவாகவும் இருக்கிறது. இதைத்தான் கிரேக்கர்கள் Polis என்று அழைத்தார்கள். இனக்குழு உறவுச் சமூகம், இரத்த உறவுமுறைச் சமூகக் காலங்கள் தொட்டு தற்காலத்திய தேசங்கள் வரை இது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஏதாவது வடிவத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும்.

நீங்கள் ஆட்சேபிக்கவில்லையென்றால், உங்கள் கேள்வியை இன்னும் சற்று விரிவாகவே பார்க்கலாம். வரலாற்று ரீதியாக தீர்மானிக்கப்பட்ட தேசிய அரசின் வடிவத்திற்குள் நாம் சிக்குண்டுவிடக் கூடாது. அதை ஊடுருவி இந்த வடிவம் எதனால் ஆனது என்பதைக் காண முயற்சிக்க வேண்டும். வாழ்க்கையை புனிதமானதாகவோ தீண்டத்தகாததாகவோ ஆக்கிக் கொள்வதன் ஊடாக தம்மைத் தாமே ஒழுங்கமைத்துக் கொள்கிற, மனித இனத்திற்கே உரித்தான ஒரு இயற்கையான தேவையிலிருந்து இது எழுகிறது. தேசியப் பிரச்சினையின் உட்கிடக்கையாக இருப்பது இந்தப் புனிதத் தன்மைக்கான வேட்கையே. முதல் பார்வைக்கு இது ஏதோ ஒரு ஆன்மீகக் கருத்தாக்கம் போலக் கூடத் தோன்றக்கூடும். இதிருக்கட்டும். ஆனால் இப்போதுள்ள சோசலிச அரசுகள் அத்தனையையும் பாருங்கள். அவை அனைத்துமே தமது தாய் நாட்டைப் புனிதமானதாகவும் அதைக் காக்க வேண்டியது மண்ணின் மைந்தர்களது கடமை என்றும் உண்மையிலேயே உள்ளார்ந்து நம்புவதும் பேசுவதும் தெளிவாகவே தெரியும்.... உதாரணத்திற்கு, தூர கிழக்கில் நிகழ்ந்த சீன - ரசிய மோதலின் போது யாலு நதியின் இரு கரைகளிலிருந்தும் வெளிவந்த இராணுவ இதழ்கள் அத்தனையும் 'புனிதம்' என்கிற வார்த்தையைப் பிரயோகித்தன. எங்கோ, ஏதோ ஆழத்திலிருந்து வருகிற இந்த சொல்லாக்கங்களை எங்கும் கேட்க முடிகிறது. கியூபா, போலந்து ஏன் சீனா, ரசியா என்று எங்கும் தேசிய எல்லைகள் கேள்விக்குள்ளாகிற எந்த இடத்திலும் இவற்றைக் கேட்க முடிகிறது. ஆச்சரியம், இல்லையா. ஆனால் கடந்துபோன ஒரு காலத்தின் வழக்கிழந்து போய்விட்ட இந்த சொல்லாட்சிகள் ஏதோ தப்பித்தவறி, வாய்குழறி, தற்செயலாக, இயந்திரத்தனமாக ஒன்றிரண்டு விழுந்துவிடுகின்றன என்று ஒருவேளை நீங்கள் மறுக்க வரலாம். ஆனால், நாம் இதை அப்படி லேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நினைக்கிறேன். இது ஏதோ வாய்தவறி உளறியதாகவே இருக்கட்டும். ஆனாலும், நாம் இதை குறைந்தது நம் கவனத்திற்குரிய உளறலாகவாவது எடுத்துக் கொள்ளலாம் இல்லையா?

சரி, இன்னொரு கோணத்திலிருந்து இதைப் பார்ப்போம். தேசம் என்கிற இந்த நிகழ்வை மனித இனத்தின் இருப்பை ஒழுங்கு செய்து ஆள்கிற சில பொதுவான விதிகளில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்த இருப்பு மரணத்திற்கெதிராக போராட்டத்தில் வெல்லப்பட்ட ஒன்று. மனித சமூக அடைவுகளையும் அனல் (thermal) உள்ளாற்றல் அமைவுகளையும் அச்சுறுத்துகிற, பாதிப்புக்குள்ளாக்குகிற, கைக்குப்படாத, வகுப்படுத்த முடியாத ஆற்றலைக் கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சி, அதாவது கழிவாற்றலின் பற்றாக்குறைக்கெதிரான (entropy) போராட்டம் இது. கையகப்படுத்தப்பட முடியாத இந்தக் கழிவாற்றல் அச்சம் தருகிற ஒரு ஒழுங்கின்மை (chaws). இதில், புலன்களால் உணரத்தக்க அல்லது பருண்மையான இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, என்ன செய்தாலும் திரும்ப நிகழ்த்த முடியாத, வாழ்விலிருந்து மரணத்தை நோக்கிய காலத்தின் நிறுத்தமுடியாத பயணம். மற்றது, ஒரு சமூகக் குழு (community) உடைந்து, வெறும் நிகழ்தகவின் (probality) கைகளில் விடப்பட்டுவிட்ட, எந்தவொரு ஒழுங்குசெய்யும் விதிகளுமற்ற நிலைக்குத் தள்ளிவிடுகிற, வெளி (space) சிதறடிக்கப்பட்டுவிட்ட

தேசம் என்கிற இந்த நிகழ்வை மனித இனத்தின் இருப்பை ஒழுங்கு செய்து ஆள்கிற சில பொதுவான விதிகளில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்த இருப்பு மரணத்திற்கெதிராக போராட்டத்தில் வெல்லப்பட்ட ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை. ஒழுங்கின்மையும் மரணமும் விளைவிக்கிற இரட்டை அச்சுறுத்தல்கள் இவை. இவற்றுக்கு எதிராக, மரணத்தை வென்று வாழ்வதற்காக, மனித இனம் இரண்டு அவசியமான தற்காப்பு விதிகளை, நிகழ்வுகளை உருவாக்கிக் கொண்டுள்ளது. இவை, எல்லா சமூக வடிவங்களிலும் இருப்பதனால் முதல்நிலைக் காரணிகளாக, மானுடவியல் காரணிகளாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இவை, முதலாவதாக, காலத்தை வரையறுத்துக் கொள்வது அல்லது வேறு மாதிரியாகச் சொல்வதென்றால், ஒரு அனாதிகால ஆரம்பத்தை வகுத்துக் கொள்வது - Ark என்ற அந்தப் பொருளில். இதன் அர்த்தம், காரணம் - விளைவு என்கிற முடிவில்லாத ஒரு பின்னோக்கியச் சூழலாக சமூக உருவாக்கத்தைப் பார்ப்பதிலிருந்து தப்பித்துக் கொள்வது. Polisன் புதிரான புராதன தோற்றம், நாகரீகத்தின் அல்லது கிறித்து சகாப்தத்தின் தோற்றம், இஸ்லாமிய சகாப்தத் தோற்றம் - இல்லாத ஒரு ஆரம்பப் புள்ளி குறித்துக் கொள்ளப்படுவது. இந்த ஆரம்பப் புள்ளி அல்லது சூன்யப் புள்ளி, இதுதான் கூங்குச் சுழலை (ritual repetition) அனுமதிக்கிறது. ஆதிகால நினைவுகளை கூங்குச் சுழல், நினைவு விழாக்கள், கொண்டாட்டங்கள் - சுருங்கச் சொல்வதென்றால், திரும்ப நிகழமுடியாத காலத்தை வெல்வதைக் குறிக்கிற இந்த எல்லாவகையான மந்திரச் சடங்குகளையும், உருவாக்கிக் கொள்கிறது.

எந்தவொரு மனித சமூக அமைவிற்கும் உரிய இன்னொரு அடிப்படையான குறிப்பியக்கம் (gesture), ஒரு மூடுண்ட வெளிக்குள் தன்னை வரையறுத்துக் கொள்வது. புனிதம் என்பது – கோயில் என்ற அர்த்தத்தில் இங்கும் வந்துவிடுகிறது. கோயில் என்பதின் தோற்றம் எது? ஆதிகால பூசாரி அல்லது தேவதூதர்கள் தேடி அடைந்த, தம் கைகளை விண்ணை நோக்கி உயர்த்தி அறிவிக்கிற புனித வெளி. புனிதச் சடங்குகள் நிகழ்த்துவதற்குரிய வெளி. அடிப்படையான இந்த குறிப்புணர்த்தல் எல்லாச் சமூகங்களின் தோற்றத்திலும், குறைந்தது அவற்றின் புராணங்களில் எல்லாம் பார்க்க முடிகிறது. ஆனால், இத்தகைய புராணங்கள் நிலவுவதே ஏதோவொரு உண்மையைக் குறிப்பதாக இருக்கிறது.

ஒரு உதாரணத்திற்கு, ரோம் நிறுவப்பட்டது பற்றிய புராணக் கதையை எடுத்துக் கொள்வோம். நான் ரோமைத் தேர்வு செய்தது அதனுடைய முக்கியத்தவம் கருதி. அது மட்டுமில்லாமல், மார்க்சியத்தில் கலந்திருக்கும் சில அனைத்துத் தழுவிய கருத்தாக்கங்கள், யூத - கிறிஸ்தவ பாரம்பரியத்திலிருந்து மட்டுமில்லாமல் ரோமிய அனைத்துத் தழுவியதன்மை (Roman Universalism) யிலிருந்தும் பெறப்பட்டதாக இருக்கலாம் என்பதும் ஒரு காரணம். ரோம் எப்படி நிறுவப்பட்டது என்பதற்கு வருவோம். ரோமுலஸ் தன் சகோதரனைக் கொன்றுவிட்டு தன் கலப்பை கொண்டு ஒரு காடை உழுகிறான். (அனாதிகால கால் இதுதானோ?) அந்த நகரம் கட்டி எழுப்ப வேண்டிய வெளியை இப்படித்தான் தீர்மானிக்கின்றான். இந்த இடம்தான் Pomaerium. இப்படியாக, ஒரு குழுமம் (collectivity) ஒரு மூடுண்ட அமைப்பிற்குள் தன்னைத்தானே ஒழுங்கமைவு செய்து கொண்டு தன்னை கட்டியெழுப்பிக் கொள்கிறது. இந்த அர்த்தத்தில்தான், எல்லை வரையறுத்துக் கொள்வது (demarcation) என்பது ஒரு அடிப்படையான செயலாகிறது. இதே அர்த்தத்தில்தான் ரூகோ தனது சமத்துவமின்மை குறித்த சொல்லாடல் (discourse on equality) என்ற நூலில் இப்படி எழுதுகிறார்: - ஒரு துண்டு நிலத்தை வேலியிட்டுக் கொண்டு- இது எனக்குக் கொஞ்சம்" என்று கவனமாகச் சொன்ன முதல் மனிதன். அவன்தான் சிவில் சமூகத்தைத் தோற்றுவித்தவன்'. 'அரசு' என்று சொல்லாமல் 'சிவில் சமூகம்' என்று அவர் சொன்னது கவனத்திற்குரியது. எல்லை வரையறுத்துக் கொள்ளல் (enclosure) என்ற கருத்தாக்கத்திற்குள்ள சிறப்பான இடத்தோடும், அதாவது பொதுவில் அமைப்பாக இருக்கிற எந்த ஒன்றோடும் இதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். கழிவாற்றல் என்கிற கட்டுக்கடங்காத காட்டாற்றின் மீள்வருகை, ஒழுங்கான போக்கை மீறிக் கொண்டு ஒழுங்காற்றல் பாயும் அந்த நீரோட்டம், உள்ளடங்கிக் கொள்ளலால் அடையப் பெறுகிறது. ஒழுங்கின்மையைக் கட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் கழிவாற்றல் கழிந்து போகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அடிப்படையான ஒரு ஒழுங்கின்மை – ஒரு ஒழுங்கின்மை இல்லாதிருப்பது, எந்த விதிகளுமற்ற ஒரு சிதறுண்ட நிலை என்கிற பொருளியல் - குறித்த அச்சத்தின் விளைவாகவே, இந்த உணர்ச்சிக்கு இந்த முதல் நொடியில் மனித சமூகம் தோன்றுகிறது.

பொதுவில் அமைப்புக்கள் என்ற வகையில், நிலவுகிற மனித சமூக அமைப்புக்களின் நிலைமைகளில் தேசம் என்ற

எந்தவொரு மனித சமூக அமைவிற்கும் உரிய இன்னொரு அடிப்படையான குறிப்பியக்கம் ஒரு மூடுண்ட வெளிக்குள் தன்னை வரையறுத்துக் கொள்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிற இந்தப் புள்ளி ஒரு எதிர்நீரோட்டத்தில் அமைவு கொண்டிருக்கிறது. அதோடு மிகத் தெளிவாகவே வரலாற்று ரீதியாக உருவான இனக்குழுக்கள், இரத்தவழி உறவுகள் தொடங்கி மற்ற இரண்டாம் நிலை பண்பாட்டு உருவாக்கங்களான இனத்தொகுப்புகள் (ethnic groupings) மக்கள் கூட்டங்கள் என்கிற தொடர்ச்சியான மற்ற மனித கூட்டிணைவுகளுக்குப் பிறகே தேசம் வருகிறது. என்றாலும், இதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய புள்ளி என்னவென்றால், தேசம் வரலாற்று ரீதியாக ஒரு கடந்து செல்லக்கூடிய வகையினம் என்கிற கருத்து, ஒரே நேரத்தில் சரியானதாகவும் தவறானதாகவும் இருக்கிறது என்பதுதான். தேசிய அரசுக்கும் இது பொருந்தும். ஆனால், இது மனித இயற்கையின் - மிகத் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு விடுகிற சொல் இது – ஒரு அடிப்படையிலான முதல்நிலை மாறாநிலை மதிப்புருவின் ஒரு குறிப்பான வடிவம்தான்.

அடிப்படையான குடும்ப முக்கோணத்தைப் போலவே இதுவும் ஒரு மாறாநிலை மதிப்புருதான் சொல்லத்தேவையில்லை. குடும்பம் ஒன்றும் ஏதோ ஒரு தெய்வீகமான ஒரு மாறாத அமைப்பு இல்லை என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தாய், தந்தை, குழந்தை என்கிற உறவுமுறை ஒன்றுமே மாறாத, அடியோட்டமாக வருகிற, ஒரு மாறாநிலை மதிப்புருவாக – ஒரு உயிரியல் யதார்த்தமாக இருக்கிறது. தந்தைவழிக் குடும்ப அமைப்பிலிருந்து சில குடும்ப அமைப்பு, இன்னும் வரலாற்று ரீதியான பல்வேறு சாத்தியப்பாடுகளின் ஒரு முழுத் தொகுதியின் ஊடாகவே நாம் வந்திருக்கிறோம். என்றாலும், அடிப்படையான இந்த மாறாநிலை மதிப்புருவின் மேலமர்ந்தே வந்திருக்கிறோம். தேசமும் இதேபோன்ற ஒரு அடிப்படைதான். ஒரு மூடுண்ட அமைவிற்கான தேவை, எல்லைகள், சுவர்கள் கொண்ட ஒரு உயிரியிலான ஒரு கூட்டுச் சமூகத்தை உயிர்ப்புள்ளதாக வைத்துக் கொள்ள உறவும் மூடல் என்கிற அளவில் அது ஒரு மாறாநிலை மதிப்புருவாக இருக்கிறது. இதனாலேயே, எது அதற்கு உள்ளே இருக்கிறது, எது வெளியே நிற்கிறது என்கிற வரையறுப்பு. உண்மைதான், வரலாற்றாசிரியர்கள் பல்வேறு காலங்களில் இந்த எல்லைகள் எவ்வாறெல்லாம் வரையறுக்கப்படுகின்றன என்பது பற்றியெல்லாம் ஆய்வு செய்யலாம். ஆனால் இது எல்லா அடையாளங்களும் வித்தியாசங்களைச் சுட்டுபவை, எல்லா அடையாளப்படுத்தல்களும் வகைப்படுத்தல்கள், என்கிற அடிப்படையான உண்மையை மறந்துவிடக் காரணமாகி விடக்கூடாது. சுற்றியிருக்கும் நிலைமைகளிலிருந்து வித்தியாசப்படுத்தாமல், அதற்கெதிராக நிறுத்தாமல், எல்லைகளை வரையாமல், சமூகத்தின் தனிநபர்களுக்கு எந்தவொரு பயன்பாட்டு அடையாளமும் இருக்கமுடியாது. இது எல்லாமும் அபௌதிகமானதாகக் (meta physical) கூடத் தோன்றலாம். ஆனால் இயற்கை அறிவியல் பூர்வமாகவும் நிரூபிக்க முடியும் என்று நம்புகின்றேன். நல்லகாலமாக 'கார்னோஷியன் புரட்சியின்' பயனாக இந்தச் சிந்தனைகளையெல்லாம் ஒழுங்குபடுத்திச் சொல்வதற்கு நமக்கு வசதிகள் கிடைக்கலாம்.

***அனல் - இயக்க ஆற்றலியலில் வரும் "கார்னோஷியன் புரட்சி"யைப் பற்றியா சொல்கிறீர்கள்?***

■ ஆமாம், அனல் - இயக்க ஆற்றலில்தான். இது கொஞ்சம் அதிக அருவமான மாதிரியாகக் கூட இருக்கலாம். ஆனாலும், சற்று வளமான ஒன்று. இப்போது ஆற்றல் (energy) என்கிற அடிப்படையிலும் ஏன் தரவு-ஆய்வுக் (data – processing) கோட்பாட்டின் அடிப்படையிலும் நனவிலி கூட குறித்து ஆராய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது நமக்கு இன்னும் துல்லியமான ஆய்வுக் கருவிகளைத் தருவதோடு தற்போதுள்ள அறிவுத் தொகுப்பை முற்றிலும் நிராகரித்து விடாமல் அதேநேரத்தில் அதைத் தாண்டிச் செல்வதற்கான புதிய அடிப்படையையும் தந்து நம்மை இன்னொரு பகுத்தறிவுத் தளத்திற்கு இட்டுச் செல்வதாகவும் இருக்கிறது.

***சரி, இவையெல்லாம் மார்ச்சியத்தில் எதைக் கேள்விக்குள்ளாக்குகின்றன?***

■ என்னுடைய பார்வையில் 'இயற்கை' என்பதற்குரிய இடம் குறித்த அதன் கருத்தாக்கத்தை வரலாற்றை இயற்கையானதொரு நிகழ்வாக கற்பித்துக் கொள்ளவும் அதன் முதல்நிலைக் காரணிகளை - இயற்கையான காரணிகள் என்ற அளவில் - கழித்துக்கட்டி விடவும் மார்க்சுக்கு உதவும் இயற்கையை வரலாற்றுப்படுத்தும் முறையை குடும்பமும் தேசமும் தான் சமூக இருப்பின் இந்த முதல் நிலைக் காரணிகள்: பொதுவில் சொல்வதென்றால், குடும்பம் தலைமுறைகள், பாலியல் இவை குறித்த எல்லாமும் ஒரு பக்கம் நாகரீகங்கள், தேசங்கள் இன்னபிறவாக நாம்

**கோயில் என்பதின் தோற்றம் எது? ஆதிகால பூசாரி அல்லது தேவதூதர்கள் தேடி அடைந்த, தம் கைகளை விண்ணைநோக்கி உயர்த்தி அறிவிக்கிற புனித வெளி. புனிதச் சடங்குகள் நிகழ்த்துவதற்குரிய வெளி. அடிப்படையான இந்த குறிப்புணர்த்தல் எல்லாச் சமூகங்களின் தோற்றத்திலும், குறைந்தது புராணங்களில் பார்க்க முடிகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் பண்பாட்டு உருவாக்கங்கள் குறித்த எல்லாமும் இன்னொரு பக்கம். இந்தக் கருத்தாக்கங்களுக்கு மார்க்சியத்தில் எந்தத் துல்லியமான இடமும் பயன்பாடும் இல்லை என்பதாலேயே இவை குறித்த எந்தத் தெளிவான பார்வையும் மார்ச்சியத்திடம் இல்லாமல் போய்விட்டது.



வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தில் - இங்குதான் நாம் விண்ணிலிருந்து மண்ணுக்கு இறங்கி வருகிறோம் - மிக முக்கியமான, அதன் மையக் கருத்தாக்கம் ஒன்று இருக்கிறது. முற்றுமுழுதான கருத்துமுதல்வாதத்தோடு (absolute idealism) அது ஒன்றுபடுகின்ற இந்தப் புள்ளி, அதன் மோசமான பலவீனமும் கூட. மனிதன் தன்னைத் தானே படைத்துக் கொள்ளும் திறன்பெற்றவன் என்ற நம்பிக்கையே அது. வரலாற்றில் இருத்திப் பார்க்கும் போது, தன்னுடைய இருப்புக்கும், தற்போதைய நிலைக்கும் தானே காரணம் என்கிற புறக்காரணிகளின் தலையீடுகளற்ற, முற்றுமுழுதான ஒரு சுதந்திரத்தை மனிதன் பெறுகிறான் என்ற கருத்து அது. இயற்கைக்கு இடமே அளிக்காத ஒரு வரலாற்றுக் கட்டம் என்று புரிந்து கொள்ளப்படுகிற 'பொதுவுடமை'-யும் கூட இதே தவறை உள்ளடக்கியிருக்கிறது. பொதுவுடமை உற்பத்தி முறை பற்றி தொலைநோக்கான பார்வையோடு விளக்கங்கள் சொல்லும் சோவியத் பிரச்சார இலக்கியங்கள் எல்லாவற்றிலும் - உதாரணத்திற்கு 22வது காங்கிரஸ் அல்லது 90 வருடங்களில் பொதுவுடமைச் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது பற்றிய 1962 ஆம் வருடத்திய திட்டம் - எப்போதும் விவசாயத்திற்கல்லாமல், தொழிற்துறையை முற்றுமுழுக்க இயந்திரமாக்கலுக்கே அழுத்தம் தரப்பட்டிருப்பது நாம் கொஞ்சம் கவனமாகவே அலசிப் பார்க்க வேண்டிய விஷயம். உருளைக்கிழங்குகளைப் பயிரிடுவதும் தானியங்களை விதைப்பதும் இயற்கையான காலச் சூழலுக்கு உட்பட்டவை ஆகையால், அவற்றை முழுமையான எந்திரமயமாதலுக்குள் கொண்டுவந்துவிட முடியாது. இது முக்கியமான ஒரு விஷயம். ஏனென்றால், ஏற்றத்தாழ்வான அளவில் சிரமங்கள் உடைய வேலைகள் எப்போதுமே இருக்கும் என்பதால் அது உழைப்பைப் பிரித்துவிடுவதிலும் பிரதிபலிக்கும். உருளைக் கிழங்குகளை வயலில் பயிரிடுவதை விட ஆய்வுக் கூடத்தில் கருத்துக்களை உருட்டிக் கொண்டிருப்பது சுலபம் என்பது தெளிவான விஷயம். ஆக, உருளைக்கிழங்குகளை யார் கையிலெடுக்கப் போகிறார்கள் என்பது பற்றி முடிவு செய்ய யாராவது ஒருவர் வேண்டும். அடிப்படையிலேயே ஒருவரும் செய்ய விரும்பாத வேலைகளோடு ஒப்பிடும்போது எல்லோருமே செய்ய விரும்புகிற வேலைகள் போட்டியின் காரணமாகவே அரிதாகிவிடும். இவற்றுக்கு ஆட்களைப் பிரித்துவிடுவதற்கு எப்போதுமே யாராவது ஒருவர் வேண்டும்.

ஆனால், சரியாக இது பற்றி மட்டும்தான் எதிர்காலப் பொதுவுடமைச் சமுதாயம் குறித்த அந்தத் திட்டங்களில் எதுவுமே பேசப்படுவதில்லை. இயந்திரமயமாக்கல் பற்றிய அந்த ஒரு பேச்சைத்தான் திரும்பத் திரும்ப கேட்க முடிகிறது. சோஷலிச விவசாயத்தில் உள்ள இந்தக் கடுமையான சிக்கல்கள் குறித்துப் பேசாமல் இருப்பதற்கும் தேசம் - இங்கு இயற்கை, ஒருவருடைய பிறந்த இடத்தோடு அவருக்குள்ள பிணைப்பு என்ற பொருளில் - குறித்த மௌனத்திற்கும் ஒரு காரியத் தொடர்பு இருக்கிறது என்று நினைக்கிறேன். நகரங்கள், தொழில்துறை, தொழில்நுட்பம் இன்னும் இதுபோன்ற பிறவற்றின் ஒழுங்கமைந்த பண்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, வேரோடு வேராக இருக்கிற, நம்மை முகத்திலடிப்பது போன்ற பொருண்மைத் தன்மை வாய்ந்த ஒரு வெளிக்கு உரிய விஷயங்கள் இவையிரண்டும். இதுவரைக்குமே தீவிரமாக கருத்தில் கொள்ளப்படாத மார்ச்சியத்தின் பலவீனமான புள்ளி இது. கோந்தா வேலைத் திட்டம் குறித்த விமர்சனத்தில் 'உழைப்பே எல்லாச் செல்வங்களுக்கும் தோற்றுவாய்' என்கிற கருத்தை, 'இல்லை, உழைப்பும் இயற்கையும்' என்று சொல்லி மார்க்ஸ் மறுத்திருந்த போதும் கூட ஏதாவது ஒரு

எல்லா அடையாளப்படுத்தல்களும் வகைப்படுத்தல்கள், என்கிற அடிப்படையான உண்மையை மறந்துவிடக் காரணமாகி விடக்கூடாது. சுற்றியிருக்கும் நிலைமைகளிலிருந்து வித்தியாசப்படுத்தாமல், எல்லைகளை வரையாமல், சமூகத்தின் தனிநபர்களுக்கு எந்தவொரு பயன்பாட்டு அடையாளமும் இருக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளியில் இயற்கை என்பதைக் கையிலெடுக்காமல் உழைப்பு என்பது சாத்தியமில்லை என்பதை அவர் தெளிவாகவே உணர்ந்திருந்தார்.

தேசம் என்கிற கருத்தாக்கமே எல்லாக் கருத்தாக்கங்களிலும் பொருண்மையானது. அது குறித்து ஆன்மீகத்தனமான கருத்துருவாக்கம் ஒன்றும் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், எனது வரலாற்றுப் பொருள்முதல்வாதத்திற்குள்ளேயே பொருள்முதல்வாதம் ஒரு அர்த்தத்தில் வரலாற்றுக்கு எதிராக கலகம் செய்கிற ஒரு கணத்தைக் குறிப்பதாக இருக்கிறது. இதற்கு வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஏறக்குறைய தான் விரித்த வலையில் தானே சிக்கிக் கொள்கிறது. தேசம் ஒரு இடதுசாரிக் கருத்தாக்கம் கூட. இடது, ஆனால் தீவிர இடது இல்லை. எப்படி என்று விளக்குகிறேன். தன்முனைப்புவாதத்தை (voluatarism) அதன் பேரிலேயே களைந்துவிடுகிற கருத்தாக்கம் அது தன்முனைப்புவாதத்தை அரசியல் நடைமுறை கருத்துமுதல்வாத சிந்தனை முறைக்கு ஒப்பானது. பொதுவுடமை இயக்கத்தின் வரலாற்றை ஒருவர் எழுதினாரானால் தேசம் என்கிற யதார்த்தத்தில் மோதி இந்தத் தன்முனைப்பு வாதம் ஒவ்வொரு முறையும் தன் மண்டையை உடைத்துக் கொண்டது தெரியவரும் என்று நினைக்கிறேன். இந்த யதார்த்தம், பொதுமைப்படுத்தப்பட்ட கருதுகோள் உருவாக்கம், வெகுஜனங்களின் பொறுப்பை தான் எடுத்துக் கொள்ளல், கோட்பாட்டுருவாக்கம் முன்னணிப்படைவாதம் போற்றவற்றுக்கெல்லாம் எதிரானது. களங்கமில்லாத தனித்தன்மை வாய்ந்தது. வெகுமக்களை அணிதிரட்டும் முன்னணிப்படை அல்லது சோஷலிசத்தைக் கட்டியெழுப்பக் கிளம்பும் கட்சி போன்ற கருத்துக்கள் எல்லாம் பொதுவில் தேசத்திற்கு எதிரானவை (a-national); அல்லது குறைந்தது அவை தேசம் என்பதின் மீது நம்பிக்கை அற்றவை – அதனால் மண்ணைக் கவ்வ சபிக்கப்பட்டவை. தேசம் அதன் வரையறுப்பிலேயே அறிவுஜீவனத்திற்கு எதிரான ஏதோ ஒன்றைத் தன்னுள் கொண்டுள்ளது. தன்முனைப்புவாதமோ அறிவுஜீவிகளுக்கேயுரிய நடைமுறையின் வடிவம் அறிவுஜீவனத்தின் அமைப்பு ரீதியான மொழிமாற்றம்.

மார்க்சியர்கள், தேசம் குறித்த தங்களுடைய கோட்பாட்டுப் புரிதலின் போதாமையைப் பற்றி எப்போதும் புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்தக் 'கோட்பாட்டு வறுமை' ஏதோ தற்செயலான ஒன்றல்ல. மார்க்சியத்திடம் இயற்கை குறித்த கருதுகோள் எதுவுமே இல்லை என்பதாலேயே தேசம் அவர்களுக்கு கோட்பாட்டுருவாக்கம் தர மறுக்கிறது. நாம் செய்கிற உற்பத்தியைப் பற்றித்தான் அது கருதுகோள்கள் வைத்திருக்கிறது. நமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாத – அதாவது, நாம் உற்பத்தி செய்கிற ஒன்றல்லாமல் நம்மை உற்பத்தி செய்கிற ஒன்றைப் பற்றி அதனிடம் என்ன கருதுகோள் இருக்க முடியும்? இது, மனித சாராம்சம் மீண்டெழுந்து தன்னைத்தானே கண்டுகொள்தல் - அதாவது, மனித இனம் தன் வரலாற்றைத் தானே உருவாக்கிக் கொள்கிறது என்கிற இளம் மார்க்சின் கற்பனைக்கு நம்மைத் திரும்பவும் இட்டுச் செல்கிறது. கருத்துமுதல்வாதக் கற்பனைக்குத் தனிச்சிறப்பான உதாரணம் இந்தக் கருத்தாக்கம். என்னுடைய பார்வையில் மார்க்சியத்தை மீளமுடியாத சுயமுரண்பாட்டிற்குள் தள்ளுவது இதுதான். மார்க்சியத்தில் முழுமையான பொருள்முதல்வாதமாக இல்லாததும் இதுதான்.

இந்தக் கருத்துக்களையெல்லாம் ஒழுங்குபடுத்தித் தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆனால், ஒரு குறிப்பிட்ட வகையிலான மார்க்சியத்தின் குற்ற உணர்வாக தேசம் இருந்துவிட்டது. ஏதோ தற்செயலான ஒன்றல்ல என்று நினைக்கிறேன். தன்னால் வெற்றி கொள்ளப்படமுடியாத ஒன்று - இது வெறும் கோட்பாட்டளவில் மட்டும் இல்லை – குறித்த குற்ற உணர்வு அதற்கு இருக்கிறது. இப்போதைக்கு நமக்குச் சேர்ந்துள்ள அனுபவங்களின், அறிவின் அடிப்படையில் வைத்தும் பார்த்தாலேயே, மார்க்சியத்தின் மீது தீர்ப்பு சொல்ல தேசத்தால் முடியும் பாத்திரங்களின் தகுதியிடத்தை தலைகீழாக மாற்றிவிட முடியும். இந்தத் தீர்ப்பு மார்க்சியத்தை செல்லாக்காசாக்கவிடும் என்றோ மார்க்சியத்தை ஒழித்துக்கட்டிவிடும் என்றோ நான் சொல்லவரவில்லை. மார்க்சியத்தை அதன் எல்லாம் வல்ல இடத்திலிருந்து கீழே இறக்கி, மற்ற பல பார்வைகளைப் போல அதுவும் ஒன்று என்ற நிலைக்குக் கொண்டு வந்துவிடும், அவ்வளவுதான்.

***மார்க்சியம் பொருள்முதல்வாதத் தன்னிறைவு பெற்றிருக்கவில்லை என்று சொல்கிறீர்கள். மார்க்சியமில்லாத பொருள்முதல்வாதவகைச் சிந்தனைகள் எப்போதும் இருந்து வந்திருக்கின்றன. அப்படி மார்க்சியத்தைவிட முழுக்க முழுக்க பொருள்முதல்வாதமாக உள்ள சிந்தனை ஒன்று எதையாவது நீங்கள் சொல்ல முடியுமா?***

**தேசம் என்கிற கருத்தாக்கமே எல்லாக் கருத்தாக்கங்களிலும் பொருண்மையானது. அது குறித்து ஆன்மீகத்தனமான கருத்துருவாக்கம் ஒன்றும் இருக்கிறது. ஆனால், எனது வரலாற்றுப் பொருள்முதல்வாதத்திற்குள்ளேயே பொருள்முதல்வாதம் ஒரு அர்த்தத்தில் வரலாற்றுக்கு எதிராக கலகம் செய்கிற ஒரு கணத்தைக் குறிப்பதாக இருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுக்ரீடியஸ் (Lucretius) ஒரு முழுமையான பொருள்முதல்வாதி. அவருடைய தத்துவத்தில் வரலாற்றின் இறுதி இலக்கு என்று எதுவும் இல்லை. அதனால், முழுமை எய்தக்கூடிய இறுதி எல்லை என்பதே இல்லை. ஆனால், மார்க்சியர்கள் பலருக்கு, வரலாற்றுக்கு இப்படியான இயல்திட்டமான (teleolgical) முடிவு என்பது மட்டுமில்லாமல், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (pre-history) என்பதற்கும் ஒரு முடிவு என்பது இருக்க வேண்டும். இது அனைத்து ஹெகலின் வரலாற்று முழுமை என்கிற கருத்தாக்கமேயன்றி வேறில்லை. எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசவேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது. திரும்பவும் பொதுவுடமை உற்பத்தி முறைக்கு வாருங்கள். 'திறனுக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்' என்கிற முழக்கத்தை மார்க்ஸ் புனித சைமனிடமிருந்து அப்படியே எடுத்துக்கொண்டது ஏதோ தற்செயலான விஷயம் அல்ல. அதைக் கண்டுபிடித்தது மார்க்ஸ் இல்லை. கற்பனாவாத சோஷலிஸ்டுகளிலிருந்து அதை எடுத்துக் கொண்டார். இது ஒரு முக்கியமான விஷயம். ஏனென்றால், மேலோட்டமான ஒரு அலசலுக்குக்கூட முகங்கொடுக்க முடியாத மிகவும் பலவீனமான கருதுகோள் அது. அது என்ன, அந்த மாறாத தேவைகள்? மாற்றத்திற்கும் நீட்சிக்கும் ஆட்படாத என்றுமே மாறாத தேவைகள்? முரண்பாடுகளே மறைந்து போகிற 'உற்பத்தி முறை', என்ன அது? இதில் ஒன்று கூட மார்க்சியப் பார்வையின் முன்னே நிற்கக்கூட முடியாது.

மிக எளிமைப்படுத்தப்பட்ட மார்க்சியத்திற்கு எதிரான அற்புதமான ஒரு கோட்பாட்டு – வெறும் கோட்பாட்டளவில் மட்டுமில்லை – ஆயுதமாக இன்னொரு அர்த்தத்தில் தேசம் இருப்பது, மார்க்சின் வரலாற்று நிகழ்வின் ஒருமுகத்தன்மை பற்றிய கருத்தாக்கத்தோடு தொடர்புடையது. இதுவும் ஒரு கருத்துமுதல்வாதக் கருதுகோளாகவே இருக்கிறது. வரலாற்றில் தேசம் என்ற கருத்தாக்கமே இருக்கக்கூடாது என்பதற்காகவே வடிவமைக்கப்பட்டது அது. வாழ்க்கை நிலைமைகளும் உற்பத்தி நிலைமைகளும் வரலாற்று ரீதியாக மெல்ல மெல்ல ஒருமுகத்தன்மை பெறும் என்கிற கருதுகோள் அது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், முக்கிய உற்பத்தி முறைகளின் ஊடாக மலரும் ஒருமுகப்பட்ட, நேர்கோட்டுப் பாதையிலான வரலாற்றுப் பரிணாம வளர்ச்சிப் பாதையில் மெல்ல, மெல்ல அழிந்துவிடுகிற, வித்தியாசங்களையெல்லாம் அழித்தொதுக்கும் அனைத்தும் தழுவியதன்மை என்கிற இந்தக் கருத்தாக்கமே உண்மையில் ஒரு முதலாளிய பகுத்தறிவு ஆய்வுக் (bourgeois-analytic reason) கருத்தாக்கமாகும். மார்க்ஸ் (இன்னும் அதிகமாக எங்கெல்ஸ்) இவற்றை கான்டார்செட் (condorcot) டிடமிருந்தும் அறிவொளிக்காலச் சிந்தனை மரபிலிருந்தும் நேரடியாக எடுத்துக் கொண்டார். உலகளாவிய வர்க்கமானது அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும்போது தொடர்வண்டிகளின் வலைப்பின்னல் தேசிய எல்லைகளை எல்லாம் அர்த்தமற்றதாக்கிவிடும் என்று மிக எளிமையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏனென்றால் - புகழ்பெற்ற இந்த வாசகங்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள் - 'அதற்கு இழைக்கப்பட்ட அநீதி ஒரு குறிப்பான அநீதி இல்லை. மாறாக அனைத்தும் தழுவிய அநீதி அதனாலேயே, அது ஒரு அனைத்துந்தழுவிய வர்க்கம் பாட்டாளி வர்க்கம் எந்தக் குறிப்பான உரிமையும் கோரவில்லை' ஆக, தேசிய எல்லைகள் எல்லாம் நொறுங்கி, சோவியத்துக்களின் சர்வதேசியக் குடியரசு அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும். மார்க்சியக் கனவின் என்ன அற்புதமான லெனினிய வரைவு

இதையெல்லாம் போட்டு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. மூலதனத்தின் ஆசிரியருக்கு மட்டும் நேரமிருந்தால் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அங்கீகரித்திருப்பார் என்று நாம் நம்பலாம். இருந்தாலும், மார்க்சின் எழுத்துக்களில் குறிப்பானதற்கும் அனைத்துத் தழுவியதற்கும் இடையில் ஒரு முரண் பல இடங்களில் எழுப்பப்படுவதை ஒருவர் பார்க்க முடிகிறது. குறிப்பானவற்றின் அழிவில்தான் மனித இனத்தின் பொதுமை எழும் என்கிற கருத்தையே அவர் கொண்டிருந்தார் என்று ஊகிக்கவும் இவை இடமளிக்கின்றன. உண்மையில், இங்கு ஒரு இயங்கியல் செயலாற்றுகிறது. நமது சமகாலத்திலேயே, ஒரு ஒருமுகத்தன்மையை நோக்கிய போக்கை நிகழச் செய்யும்படியாக, பொருளாதார உற்பத்தி மற்றும் பரிமாற்றத்தின் நிலைமைகள் மேலும் மேலும் ஒன்றை சார்ந்திருப்பவையாக மாறிக் கொண்டிருப்பதை, நம் கண் முன்னேயே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், பண்பாட்டுத் தனித்துவங்களும் பன்மடங்கு அதிகரித்துக் கொண்டுபோவதும் ஒரு இயங்கியல் எதிர்நிகழ்வாக எழுந்துகொண்டிருக்கிறது.

**முக்கிய உற்பத்தி முறைகளின் ஊடாக மலரும் ஒருமுகப்பட்ட, நேர்கோட்டுப் பாதையிலான வரலாற்றுப் பரிணாம வளர்ச்சிப் பாதையில் மெல்ல, மெல்ல அழிந்துவிடுகிற, வித்தியாசங்களையெல்லாம் அழித்தொதுக்கும் அனைத்தும் தழுவியதன்மை என்கிற இந்தக் கருத்தாக்கமே உண்மையில் ஒரு முதலாளிய பகுத்தறிவு ஆய்வுக் கருத்தாக்கமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார சமன்படுத்தலின் இணை நிகழ்வாக, தேசிய, பகுதி சார்ந்த (reginal) உரிமைகள் வலுவாக எழுவது தவிர்க்கவியலாததாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், சமத்துவம் என்பது ஒருபோதும் ஒன்றுகலத்தல் ஆகிவிடாது. அடையாளம் (identity) குறித்த இயங்கியல் பார்வை, பன்முகத்தன்மையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதாக இருக்கும். எழுந்துகொண்டிருக்கும் ஒரு உலகளாவியத்தின் (globalism) மற்றொரு முகம் பண்பாட்டு அடையாளங்கள் மேலும் மேலும் சிதறுண்டு போவதாக, குறிப்பான அடையாளங்களுக்கான தேடலாக இருப்பதைத்தான் நாம் இன்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். இறுதியில், மார்க்சைவிட வரலாற்று யதார்த்தம் இன்னும் பொருள்முதன்மையானதாகவும் இயங்கியலானதாகவும் இருக்கிறது என்றே நினைக்கிறேன். ஒரு அர்த்தத்தில், கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக மார்க்சியத்தை வீழ்த்தியவையெல்லாம் அடிப்படையில் பொருள்முதன்மையானவையாகவே இருந்திருக்கின்றன. மார்க்ஸ் சுவீகரித்துக் கொண்ட ஏராளமான கருத்துமுதல்வாதம் பாரம்பரியத்தையெல்லாம் கழித்துவிடுவதற்கு இந்தப் படிப்பினைகள் உதவக்கூடும்.

இன்னொரு வகையில் பார்த்தால், மார்க்சியம் அரசியல் குறித்தோ பண்பாடு குறித்தோ எந்தவிதமான வரையறுத்த கோட்பாடும் இருக்கவில்லை என்பதும் ஒரு தற்செயலான விஷயமாகத் தோன்றவில்லை. ஏனென்றால், அரசியல், பண்பாடு இரண்டுமே இன்று நிலவும் தேசிய அரசுகளுக்குள் நிகழ்பவை. மார்க்சியம் அரசியல் என்பதற்கு தனியான ஒரு இடமே இல்லை என்பது தெளிவான ஒன்று - எவ்வளவு வெட்கத்துக்குரியது இது. அரசியல் அமைப்பு குறித்த எந்தக் கோட்பாடும் அவரிடம் இல்லை. அத்தகைய அமைப்பை அவசியமான ஒன்றாகக் காட்டுகிற கோட்பாடு கூட இல்லை. மார்க்சிடம் இடைவெளிகள் நிறைய இருக்கின்றன. மேலும், என்னுடைய கருத்தில், வெறும் இடைவெளிகள் என்பதற்கு மேலாக இருப்பவை எல்லாம் - அமைப்பிற்குள் (system) பொதிந்துள்ள நிஜமான முரண்பாடுகள் - எப்போதுமே தேசத்தோடு தொடர்புடைய பிரச்சினைகள். இந்தச் சிறிய இடைவெளியில், மார்க்சியத்தில் பேசப்படாத அனைத்தும் குவிந்து படிந்திருக்கின்றன. அப்புறம், பேசப்படாதவை பேசப்படுபவது தொடங்கும்போது, மற்ற எல்லாமும் சேர்ந்து வெடித்துச் சிதறுகிறது. இந்த அர்த்தத்தில், மார்க்சியம் கோட்பாடாகவும் சோசலிஷம் நடைமுறையாகவும் உள்ள அந்தப் பொதுத் திரளில் தேசம் என்பது அணுக்கருவை (atomic nucleus) போன்று இருக்கிறது என்று நினைக்கிறேன். எடுத்துக்காட்டாக, கடந்த நூறு வருடங்களில் நிகழ்ந்த எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த நூற்றாண்டில் என்னதான் நிகழ்ந்தது? இனி நாம் இது பற்றி பேச ஆரம்பிக்கலாம். நான் சில அவசியமான முன்னூகங்களை முன்மொழிந்து கொண்டிருந்தேன். இனி, நீங்கள் விரும்பினால், நாம் சற்று ஆழமான விரிவான கேள்விகளை எடுத்துக் கொண்டு, அவற்றுக்குப் பதில் தேட முடியற்சிக்கலாம்.

***Nouvel Observateue* இதழில் வந்த உங்கள் கட்டுரையில், ஜாரிஸ்டு ஏகாதிபத்தியவாதிகளின் நட்புச் சக்திகள் என்று மார்க்ஸ் - எங்கெல்ஸ் கருதிய, செக்கொஸ்லோவாக்கியர்கள், க்ரோயோதியர்கள் மற்ற பிற தெற்கு ஸ்லோவாக்கியர்கள் குறித்த அவர்களுடைய தவறான கருத்துக்களை விமர்சித்திருந்தீர்கள். (சரியாகத்தான் என்று நினைக்கிறேன்) ஆனால், "செக்கொஸ்லோக்கியா மீதான படையெடுப்பு மரபான மார்க்சியத்தின் நேர்வழியில் வந்தது" என்று சேர்த்துக் சொன்னதில் நீங்கள் சற்று அவசரப்பட்டுவிடவில்லை? 1848ல் மார்க்சின் புரட்சிகர பிரச்சினைப்பாட்டிற்கும் 1968 ல் பிரஷ்னேவின் பிற்போக்கான நடவடிக்கைகள் காரணத்திற்கும் இடையில் உங்களுக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லையா?**

■ தவறுதான், ஒப்புக் கொள்கின்றேன். விவாதத்தைத் தூண்டுவதற்காக சொல்லப்பட்ட சற்று மிகையான கருத்து அது. ஆனால் - இந்த 'ஆனால்' - க்கு கொஞ்சம் அதிக அழுத்தம் தர விரும்புகின்றேன் - நீங்கள் நன்றாக அறிவீர்கள் உண்மை என்னவென்றால், சுயநிர்ணயத்தை மார்க்ஸ் என்றுமே தன்னளவில் முழுமுதலான ஒரு கோட்பாடாக வைக்கவேயில்லை. எப்போதுமே அது அரசியல், பொருளாதாரச் சூழலைப் பொருத்ததாகவே இருக்கிறது. அதனால், ஜாரோடு நட்பாக இருந்த காரணத்தாலேயே ஒருவர் தெற்கு ஸ்லாவியர்களுக்கும் செக்கொஸ்லோவாக்கியர்களுக்கும் எதிராக இருக்க வேண்டும். ஆனால், ஹாப்ஸ்பர்கின் 'தேசிய இனங்களின் சிறைக்கூடத்தை', இன்ன பிறவற்றை நொறுக்குவதில் முனைந்திருக்கும் மற்றவர்களுக்கு சுயநிர்ணயத்தை

மார்க்சியம் அரசியல் குறித்தோ பண்பாடு குறித்தோ எந்தவிதமான வரையறுத்த கோட்பாடும் இருக்கவில்லை என்பதும் ஒரு தற்செயலான விஷயமாகத் தோன்றவில்லை. ஏனென்றால், அரசியல், பண்பாடு இரண்டுமே இன்று நிலவும் தேசிய அரசுகளுக்குள் நிகழ்பவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரிக்க வேண்டும். அப்படியென்றால், அமெரிக்காவின் மெக்சிக்கப் படையெடுப்பையும், அல்ஜீரியாவை ஃப்ரான்ஸ் காலனியாக்கியதையும், இந்தியாவை பிரிட்டன் காலனியாக்கியதையும் ஒருவர் ஆதரித்தாக வேண்டும். ஏன்? ஏனென்றால், அவை பொதுவான நிகழ்வுப் போக்கைத் துரிதப்படுத்துபவையாக இருப்பதால். ஆகையால், தேசிய விடுலை என்பது மார்க்சுக்கு என்றுமே தனியான, இறுதியானதொன்றாக இருக்கவில்லை. எப்போதுமே ஏதொவொன்றுக்கு கீழ்ப்பட்டதாக வைத்தே தீர்மானிக்கப்பட்டது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள நேரிடும். எதற்குக் கீழ்ப்படிந்து? பொதுவான நிகழ்வுப் போக்குக்கு அல்லது சர்வதேச பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பகுதி எப்போதுமே முழுமைக்கு கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும்.



1887 ல் எங்கெல்ஸ் எழுதிய மிகவும் அசாதரணமாக அந்தக் கடிதத்தில் அவர் சொன்னது உங்களுக்குத் தெரியுமா? 'இந்த நேரத்தில் அல்சேஷியர்கள் எழுச்சி செய்தால் அது ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் இடையில் ஒரு போரைத் தூண்டுவதாக இருக்கும். நாம் இந்தப் போரை விரும்பவில்லை. அது ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு எதிரானதாக இருக்கும்.' என்று அதில் எழுதியிருந்தார். ஆக, அல்சேஷியர்கள் கிளர்ந்தெழத் துணிந்தார்களானால் அவர்களை ஒடுக்குவதற்கு எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். தேசம் என்பது பகுதி, இயக்க நலன்கள் முழுமை. பிரஷ்னேவ் அல்லது காஸ்ட்ரோ – உண்மையில் அது காஸ்ட்ரோதான், பிரஷ்னேவ் இல்லை – செக்கெஸ்லோவாகியாவில் நடந்து கொண்டிருப்பது நியாயமான விஷயம் இல்லை. என்றாலும், முழுமையின் நலன்களுக்கான பகுதியின் நலன்கள் விட்டுக் கொடுக்கப்பட வேண்டும் (இங்கு இரு மாபெரும் சமூக அமைவுகளில் ஒன்றாக சோஷலிச சமூகங்களின் கூட்டமைப்பு நிலைத்திருப்பது என்கிற பொருளில்) என்றும் செக்கெஸ்லோவாகியர்களின் நியாயமான கோரிக்கைகள் குறுகிய கால நோக்கில் முதலாளியத்திற்கும் சாதகமாகிவிடக்கூடும் என்றும் சொல்லும்போது, அது மார்க்சிய நோக்கில் மிகச் சரியான வாதம். இங்கு ஒரு பிரச்சினை எழுகிறது: முழுமையின் நலன்கள் எது, இந்த நலன்கள் எப்போது ஆபத்திற்குள்ளாகிறது என்பதையெல்லாம் யார் தீர்மானிப்பது? மார்க்ஸ் இதற்கெல்லாம் எந்த பதிலும் சொல்வதில்லை. ஏனென்றால், அவர் அரசியல் ரீதியாக சிந்திப்பதேயில்லை. பகுதிக்கும் முழுமைக்கும் இடையிலான முரண்பாட்டை சரியாகக் கணிக்கும் திறன் யாருக்குள்ளது என்பதை நாம் எப்படித் தீர்மானிப்பது என்கிற கேள்வி அவர் எழுப்புவதே இல்லை. இது பிரதிநித்துவம் பற்றிய, மையப்படுத்தலுக்கு எதிராக அதிகாரங்களைப் பரவலாக்குவது பற்றிய பிரச்சினை. ஆனால் அரசியல் குறித்த கோட்பாடு எதுவும் மார்க்சிடம் இல்லாததால் இதை அவர் நிராகரித்து விடுகிறார். ஆக, வடிவ நோக்கில் சொன்னால், பிரஷ்னேவின் காரணங்கள், 1887 இல் எங்கெல்சின் கருத்துக்கள், பொதுவின் மார்க்சின் கருத்துக்கள் (அயர்லாந்து குறித்த சில கூர்மையான பார்வைகள் தவிர்த்து) அனைத்தும் ஒன்றுதான்.

**இந்தப் பிரச்சினையை மிகவும் வடிவ ரீதியாக பார்க்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அதனால்தான் அந்தக் கேள்வியை வைத்தேன். வடிவ ரீதியாக ஒருவர் இத்தகைய ஒப்பீட்டைச் செய்ய முடியும். ஆனால், நான் அழுத்திச் சொல்ல விரும்புவது என்னவென்றால், வடிவத்தை விட்டு உள்ளடக்கத்தை எடுத்துக் கொண்டால், செக் பிரச்சினையில் மார்க்சின் நிலைப்பாட்டிற்கான (தவறான நிலைப்பாடுதான் என்பதை ஒப்புக் கொள்கிறேன்) நியாயம், அதில் அவருடைய அக்கறை. ஐரோப்பாவில் பாட்டாளி வர்க்க ஜனநாயகப் புரட்சி என்பதற்குக் குறைந்து வேறு எதுவும் இல்லை என்பதில்தான் இருக்கிறது. ஆனால் பிரஷ்னேவுக்கோ, கிழக்கு ஐரோப்பாவில் தனது அதிகாரவர்க்க அமைப்பு ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே உண்மையான நோக்கமாக இருந்தது. அதனால், வடிவ ரீதியான ஒற்றுமைகளைத் தாண்டி, உள்ளடக்கத்தில் மிகப் பெரிய அளவிலான வித்தியாசம் இருக்கிறது.**

பகுதிக்கும் முழுமைக்கும் இடையிலான முரண்பாட்டை சரியாகக் கணிக்கும் திறன் யாருக்குள்ளது என்பதை நாம் எப்படித் தீர்மானிப்பது என்கிற கேள்வி அவர் எழுப்புவதே இல்லை.
அரசியல் குறித்த கோட்பாடு எதுவும் மார்க்சிடம் இல்லாததால் இதை அவர் நிராகரித்து விடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெஜி டெப்ரே

**உங்களுடைய வாதத்தில் நீங்கள் இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.**

■ சரி, சரி. என்னுடைய வாதங்களை வடிவ ரீதியான பிரச்சினையோடு நிறுத்திக் கொண்டு விட்டேன் நான். அது தவறுதான். ஆனால், செக்கோஸ்லவாகியா மீதான ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் விஷயத்தில் ஒன்றுபட்டாலும் அதற்கான காரணங்களில் நமக்குள் எந்த ஒற்றுமையும் கிடையாது. அது அதிகாரவர்க்க அமைப்பையும் பேரரசுக் கொள்கையையும் விரிவுபடுத்துவதாக இருந்தது என்று நீங்கள் சொல்வீர்கள். ஆனால், நான் சோஷலிச அரசு, ஒரு தேசிய அடையாளத்தை நசுக்கும் ஒவ்வொரு முறையும் தோற்றுப்போவது முன்னதுதான் என்று சொல்வேன். இங்கு, வரலாறு நமக்குக் காட்டுவதெல்லாம், தேசத்திற்கு எதிராக நிறுத்தப்பட்ட பாட்டாளிவர்க்கம், இரும்பிம் முன்னால் விறகுக்கட்டை போல, என்பதைத்தான். ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தோடு ஒன்றுகலந்த பிற்பாடுதான் அல்லது ஒரு தேசிய அடையாளத்திற்காக நின்ற போதுதான் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரங்கள் வேரூன்ற முடிந்தது என்பதை நவீன வரலாறு திரும்பத் திரும்ப நிரூபித்திருக்கிறது.

இதில், ரொம்பவும் நெருடலான மற்றொரு விஷயம், மார்க்ஸ் பாரீஸ் கம்யூனை அணுகிய விதம். பாரீஸ் கம்யூனின் வரலாற்றை மிக மேலோட்டமாக பார்த்தாலே, அதனுடைய மிக வலுவான தேசப்பற்று, ஏன் தேசிய வெறி தெளிவாகத் தெரியும். ஆனால், மார்க்ஸ் கம்யூனைப் பற்றிய தன்னுடைய புராணக் கற்பனைத் தன்மை வாய்ந்த அர்த்தப்படுத்தலை அவ்வளவு வலுவாக திணித்த விதம் - இன்று வரையிலும் அவருடைய அதே பார்வையிலேயே நாம் அந்நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் - இந்த அம்சம் சுத்தமாக மறைந்தே போய்விட்டது. ஒரு ஆக்கிரமிப்பாளனுக்கெதிராக வெடித்த தேசப்பற்று மிகுந்த எழுச்சி என்கிற அந்த அம்சம் சுத்தமாக துடைத்தழிக்கப்பட்டு விட்டது. ட்ரோச்சு ம், ஜுல்ஸ் /பேவ்ரெடவும் கம்யூன் ஆட்சியின் போது ஏன் தூக்கியெறியப்பட்டார்கள்? ஏனென்றால், அவர்கள் உண்டாக்கித் தந்த உடைப்பு மிகவும் பலவீனமாக இருந்தது. குறைந்த காலமே நீடிப்பதாக இருந்தது. மேலும் பாரீஸ் மீதான முற்றுகையையும் அவர்கள் முறியடிக்க முடியவில்லை. அதனால் - அந்த நீண்ட கதையை சுருக்கமாகச் சொல்வதென்றால் - எதிரியின் கையாட்கள் என்று குற்றம் சாட்டப்பட்டார்கள் கம்யூனுக்கு இப்படியொரு மிகத் தீவிரமான தேசம் எனும் அம்சம் இருக்கிறது. ஆனால் இதை எந்தவொரு இடத்திலும் விவாதிக்கவே இல்லை.

நமது காலத்தில் நிகழ்ந்த சோஷலிசப் புரட்சிகளில் தேச விடுதலையோடு அல்லது தேசப் பாதுகாப்போடு தொடர்பில்லாததாகத் தெரியும் ஒன்றே ஒன்று ரசியப் புரட்சி மட்டும்தான். ஆமாம், ஆனால் எத்தனை காலத்திற்கு? 1919 -ம், 1941- க்குப் பிறகும் நிகழ்ந்த தேசப் பாதுகாப்புப் போராட்டங்கள்தான் போல்ஷிவிக் கட்சி வெகுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கு உதவியவை. இந்த இரண்டு விடுதலைப் போர்களும் இல்லையென்றால், போல்ஷிவிசம் சோவியத் என்கிற அந்த சமூக உள்ளடக்கத்தோடு அவ்வளவு ஒன்றாகக் கலந்திருக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. சீனா, கியூபா, வியட்நாம் போன்ற மற்ற இடங்களைப் பொருத்தவரை நான் எதுவும் விளக்கத் தேவையிருக்காது என்று நினைக்கிறேன்.

அதனால், ஒரு தீவிர சாத்தியத்தைச் சொன்னால், என்னைப் பொருத்தவரை ஒரு தேசிய அடையாளம், ஒரு சோஷலிச அரசமைப்பின் மீது ஏற்றப்படுவது, அப்படியல்லாமல் இருப்பதைக் காட்டிலும் நல்லது. ஏனென்றால், இது சோஷலிச எதிர்காலத்திற்கு இன்னும் சில சாத்தியங்களைத் திறந்துவிடுகிறது. அப்படியல்லாமல் இதற்கு நேரெதிராக நிகழ்ந்தால் சோஷலிசம் தேசத்திற்கு அந்நியமான ஒன்றாகிவிடுகிறது. ஒரு பொதுவான தேசிய விடுதலைப் போராட்டத்தின், வெகுமக்கள் போராட்டத்தின் விளைவாக சோஷலிசம் உருவாகாத நாடுகளில் எல்லாம் நிகழ்ந்து கொண்டிருப்பது இதுதான். சோஷலிச ஏற்றுமதி செய்யப்பட்ட இடங்களில் எல்லாம் அது எப்போது வேண்டுமானாலும் உடைந்து நொறுங்கிவிடக் கூடியதாக இருக்கிறது. அதனால், சோவியத் வகைப்பட்ட அதிகாரத்துவ சோஷலிசத்தை விமர்சிப்பதைவிட செக் தேசியத்தை மிக உயர்வானதொரு மதிப்பாக வைப்பது, வார்சோ ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தை என் உள்ளுணர்விலேயே நிராகரிக்க வைக்கிறது.

*Le Nouvel Obsuraterel* **"மேற்கில் மார்ஷலின் (ஸ்டாலின்) வறட்டுக் கோட்பாட்டு அசட்டைத்தனம் புடாபெஸ்ட், ப்ரேக் இவற்றைப் போல இன்னும் நிறைய இழப்புக்களைத் தருவதாக இருக்கும்" என்று**

நான் சோஷலிச அரசு, ஒரு தேசிய அடையாளத்தை நசுக்கும் ஒவ்வொரு முறையும் தோற்றுப்போவது முன்னதுதான் என்று சொல்வேன். இங்கு, வரலாறு நமக்குக் காட்டுவதெல்லாம், தேசத்திற்கு எதிராக நிறுத்தப்பட்ட பாட்டாளி வர்க்கம், இரும்பிம் முன்னால் விறகுக்கட்டை போல, என்பதைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***எழுதியிருந்தீர்கள். புடாபெஸ்ட் (1956), ப்ரேக் (1968) சம்பவங்களுக்கு ஸ்டாலின் மற்றும் அவருடைய சிஷ்யர்களுடைய வறட்டுத்தன்மை காரணமாகச் சொல்வீர்களா அல்லது அவர்கள் ரசியப் பெருந்தேசியத்திற்கு உகந்த வகையில் தமது வறட்டுக் கோட்பாட்டை வரைந்ததைச் சொல்வீர்களா?***

■ இது பற்றி முடிவான கருத்து எதற்கும் இன்னும் நான் வரவில்லை என்பதைச் சொல்லிவிடுகிறேன். அது இரண்டும் மயங்கிக் கலந்தது போலத் தெரிகிறது. ஸ்டாலினியத்தின் வறுமைக்குக் காரணமாக இருந்தது – நீங்கள் ஆட்சேபிக்கவில்லையென்றால், அதன் மூன்றாந்தர தேசியவாதம் என்று சொல்வேன். அதாவது, 1924 – 8 வாரிசுரிமைப் போராட்டத்தின் போது, ரசிய வெகுமக்களின் பின்தங்கிய நிலைமையோடு ஸ்டாலின் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட விதத்தைச் சொல்கிறேன். ஆனால், ட்ராட்ஸ்கி உணர்வுப்பூர்வமான சர்வதேசியத்திற்காகவும் தொழிற்துறை சார்ந்த முன்னணிப்படைக்காகவும் நின்றார். அதோடு, பஞ்சமும் போரும் ஏராளமான பேரை பலிவாங்கிவிட்ட சூழலில், சோர்ந்துபோயிருந்த வெகுமக்கள், புரட்சி போதும் என்கிற மனநிலைக்கு வந்துவிட்டிருந்தனர். ட்ராட்ஸ்கிக்கு எதிரான ஸ்டாலினின் பெரிய பலம் நீங்கள் சொல்கிற அவருடைய ரசியப் பெருந்தேசியவாதம் என்பதில் சந்தேகமேயில்லை. இடதுசாரி எதிர்ப்புக் குழுவை முறியடிக்க உதவிய அவருடைய பலமான அம்சமே அவருடைய பலவீன அம்சமாகவும் இருந்தது அதாவது, அதனுடைய குறுகிய தன்மை, தேசிய வெறியைச் சொல்கிறேன். என்றாலும், ஹங்கேரிய, செக் எழுச்சிகளின் காரணங்களைப் பற்றிய அலசலுக்குள் நாம் இங்கு மூழ்கிவிடத் தேவையில்லை. அவை குறித்து எனக்கு அதிகம் தெரியா: மேலும், அவை இங்கு நமது பொருளும் இல்லை. அது பிரச்சினை இல்லை. மார்க்சியத்தின் நம்பிக்கைகள் (புடாபெஸ்ட், ப்ரேக் போன்ற) தோல்வியுற்றதற்கு நீங்கள், தேசியப் பிரச்சினையை கவனத்தில் கொள்ளாத ஒரு வறட்டுக் கோட்பாட்டைக் காரணமாகப் பார்க்கிறீர்கள். ஆனால் நான் இதற்கு நேரெதிரான ஒரு பிழைதான் இந்தத் தவறுகளுக்கெல்லாம் காரணம் என்று பார்க்கிறேன். அதிகப்படியானதொரு அருவமான சர்வதேசியவாதமல்ல, மாறாக, மற்ற தேசங்களை ஒடுக்க விழைந்த ரசியப் பெருந்தேசியவாதம் தான் காரணம் என்று பார்க்கிறேன். இதற்கு எதிராகத்தான் இந்த தேசங்கள் மிகச் சரியாகவே கிளர்ந்து எழுந்தன. அதனால், என்னுடைய வாதம் உங்களுடையதோடு நேராக முரண்படுகிறது.

தேசியப் பிரச்சினை குறித்த ஒரு கறாரான பார்வை எதுவும் இல்லாமல் ஒருவர் சர்வதேசியம் குறித்த எந்தத் தெளிவான வரையறுப்பும் வைத்திருக்க முடியாது என்பது மிகவும் சாதாரணமான ஒரு உண்மை.

***சர்வதேசியம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சாத்தியம்தானா, விரும்பத்தக்கது தானா? சோஷலிச அரசியலில் அதற்குரிய உண்மையான இடம் என்ன?***



■ லட்ச ரூபாய் மதிப்புள்ள கேள்வியைக் கேட்டீர்கள் இதற்கு மட்டும் ஒரு பதில் இருக்கிறதென்றால் கேட்கக் காத்துக் கொண்டிருக்கிறேன். இதைத்தான் நாம் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறோம் - சர்வதேசியம் இன்று எங்கே இருக்கிறது? நம்முடைய ஆசைகளை எல்லாம் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு வரலாற்று உண்மைகளிலிருந்து தொடங்குவோம். முதலில் (நான் ஏற்கனவே சொன்னது போல) புரட்சிகர சோஷலிச வெற்றிகள் எப்போதுமே ஏதாவதொரு வகையில் தேசிய விடுதலை இயக்கங்களோடு —— அவை காலனிய எதிர்ப்பாக இருந்தனவோ இல்லையோ, தொடர்புடையவையாக இருந்தன. இரண்டாவதாக, ஒரு முதலாளிய நாட்டில் ஏற்படுகிற ஒவ்வொரு நெருக்கடியின் போதும் வர்க்க அடையாளத்தைவிட —— வெகுமக்களின் மிகப் பெருந்திரளினரான பாட்டாளி வர்க்கத்தின் மத்தியிலும் கூட —— தேசிய அடையாளமே வலுவாக இருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மை. 1914-ல் சமூக-ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட நெருக்கடி ஏதோ விரல்விட்டு எண்ணத்தக்க அளவிலான தலைவர்களின் துரோகத்தால்

**ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தோடு ஒன்றுகலந்த பிற்பாடுதான் அல்லது ஒரு தேசிய அடையாளத்திற்காக நின்ற போதுதான் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரங்கள் வேரூன்ற முடிந்தது என்பதை நவீன வரலாறு திரும்பத் திரும்ப நிரூபித்திருக்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைந்தது அல்ல — லெனின் இந்தக் கருத்தைக் கடுமையாக எதிர்த்தால் ஏகாதிபத்திய வல்லரசுகள், அவற்றில் சலுகை பெற்ற பாட்டாளி வர்க்கம், இவற்றின் எழுச்சியான, ஒரு மொத்த சமூக வரலாற்று சகாப்தத்தின் விளைவும் அல்ல. அதைவிடவும் ஆழமான ஒரு காரணி சொல்லப்பட்டது என்று நினைக்கிறேன். (இந்த வகையிலான மற்ற பிரச்சினைகளிலும் கூட இவற்றையொத்த மாற்றுகளில் இதே போன்ற தேர்வுகள் (choices) முன்வைக்கப்படுகின்றன.) அதாவது, தனித்தனியான பண்பாட்டுப் பிரிவுகளான இனங்கள், தேசங்கள், மக்கட்கூட்டங்கள் போலல்லாமல், குறுக்குவெட்டு வர்க்கப் பிரிவினைகள் சமூக வரலாற்றில் மிகவும் பிற்பட்டே தோன்றின என்று சொல்கிறேன். இங்கு, ஒரு தேசிய உருவாக்கத்தின் அல்லது ஒரு தனிநபருடைய ஆளுமை உருவாக்கத்தின் ஆழமான அடுக்குகளே மற்ற எல்லாவற்றையும்விட நீண்ட காலம் நீடித்திருப்பவை என்கிற ஒரு மானுடவியல் விதி இருக்கிறது. உளவியலிலும் சரி, சமூக அமைவிலும் சரி தனி உயிரியின் தோற்ற வளர்ச்சியிலும் சரி இவைவகையின் தோற்ற வளர்ச்சியிலும் எப்போதுமே தொன்மையானவையே (philogeticaly) உறுதியாக இருப்பவை. மிகத் தொன்மையான அடுக்குத்தான் மிக செயலூக்கமானது — அடிப்படையான உளவியல், வரலாற்று ஆய்வுண்மை இது.

**தேசியப் பிரச்சினை குறித்த ஒரு கறாரான பார்வை எதுவும் இல்லாமல் ஒருவர் சர்வதேசியம் குறித்த எந்தத் தெளிவான வரையறுப்பும் வைத்திருக்க முடியாது என்பது மிகவும் சாதாரணமான ஒரு உண்மை.**

***மன்னியுங்கள், ஒரு சிறிய கேள்வி — 1914 ம் ஆகஸ்டில் தொழிலாளர் இயக்கங்களின் தலைவர்கள் என்ன செய்திருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?***

■ இதற்குப் பதில் சொல்வது கஷ்டம்! மிகவும் ஒருபக்கச் சார்பான கேள்வி இது. ஒரு ஸ்டாலினிஸ்டு விசாரணைக் கமிஷனுக்கு முன்னால் நிறுத்தப்பட்டதைப் போல என்னை உணரச் செய்கிறது. மேலும், இந்தக் கேள்வியில் உண்மையில் ஒரு பொறி இருக்கிறது. ஏனென்றால், சரியான பதில் எதுவென்று எல்லோருக்கும் தெரியும்: 'சமூக – ஜனநாயகவாதிகளின் துரோகத்திற்கு எதிராகப் போராடுங்கள், சுவிட்ஸ்லாந்துக்கு ரயிலைப் பிடியுங்கள் என்று போகும். ஆனால், நான் கேட்க விரும்புகிற கேள்வி இது அல்ல. பின்னோக்கிப் பார்த்து ஒருவருடைய நிலைப்பாடு என்னவாக இருந்திருக்க வேண்டும் என்பதில் எனக்கு அக்கறையில்லை. அதற்குப் பதில், அந்தக் காலத்தில், அந்த இடத்தில், வெகுமக்களும் சமூக ஜனநாயகவாத முன்னணிப் படையினரும் என்ன புரிந்திருந்தார்கள், என்ன செய்தார்கள் என்பதை உள்ளது உள்ளபடியே பார்ப்பதும் புரிந்து கொள்ள முயற்சிப்பதுமே எனக்கு முக்கியம்.

ஆனால், உங்களுடைய புரிதல் சரியானதாக இருக்குமானால், எல்லோருக்குமே அது சரியானதாக இருக்க வேண்டும். இது ஒன்றும் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக – உதாரணத்திற்கு, ரசியாவிலோ இத்தாலியிலோ நடைபெறவில்லை இல்லையா. ஜெர்மனியில், /பிரான்சில், பிரிட்டனில் நிகழ்ந்தது போல இன்னொரு இடத்திலும் நடக்க வேண்டும் என்று எதுவும் விதிக்கப்பட்டிருக்கவில்லையே. தொழிலாளர் இயக்கங்களின் பார்வைகளில் வெளிப்படையாகவே உணரத்தக்க வித்தியாசங்கள் இருந்தன. மேலும், ரசிய வெகுமக்கள் முதலிலேயே விழுந்துவிட்டதைப் போல இல்லாமல் மென்ஷ்விக்குகள் பெருந்தேசிய வெறிக்குள் அவ்வளவு வேகமாக எழுந்துவிடவில்லை, இல்லையா.

இதைச் சுலபமாக விளக்கிவிட முடியும். நீங்கள் எழுப்பும் கேள்விகளை எனது வரலாற்றுப் பிரச்சினைப்பாட்டுக்குள்ளேயே பொருத்திவிட முடியும். இத்தாலி அப்போதுதான் உருவான ஒரு இளம் தேசம். பலவீனமான ஒரு தேசம். ஜெர்மனியிடம் அதற்கும் பகையுணர்ச்சி எதுவும் இருக்கவில்லை. ஆனால் ரசியா, ஒரு உண்மையான அர்த்தத்தில், ஒரு தேசிய அரசாக இருக்கவில்லை. மிகவும் பலவீனமாக விரிந்த ஒரு தேசிய அடையாளத்தோடு, நிறைய கலப்புக்குஉள்ளாகியிருந்த ஒரு மக்கள் கூட்டமாகவே அது இருந்தது. அதனால், தேசிய நலன்கள் மிகவும் குறைவான செல்வாக்கே செலுத்தியிருக்க முடியும் என்பது அங்கு இயல்பான ஒரு விஷயமே. ஒரு பொருள்முதல்வாதி என்ற முறையில் உணர்வுபூர்வமான (consious) நிலையை விட, உள்ளுணர்வே (instinct) தீர்மானகரமான ஒரு காரணியாக – ஒரு விரிந்த அர்த்தத்தில் - இருக்கிறது என்று சொல்வேன். அதாவது, என்ன சொல்ல வருகிறேன் என்றால், இங்கு, ஒரு சர்வதேச உள்ளுணர்வைவிட, ஒரு சர்வதேச உணர்வுநிலை இருக்கிறது. இந்த உண்மையிலிருந்து, சர்வதேச உணர்வுநிலையோடு தேசிய உள்ளுணர்வு மோத நேர்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிரக்ஞையே மிகவும் வலுவானதாக வெளிப்படுகிறது என்று ஊகிக்கிறேன். இந்த விஷயத்தில், யதார்த்தம் என்னோடு இருக்கிறது. அவ்வளவுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலைகளுக்காக நான் வருந்தவேயில்லையா? ஆமாம், வெறுக்கத்தான் செய்கிறேன். என்றாவது ஒரு நாள் இறக்க வேண்டும் என்ற உண்மையை எவ்வளவு வெறுக்கிறேனோ அதேயளவு இதையும் வெறுக்கிறேன். ஆனால் என்ன செய்வது, இது என் தலையில் எழுதியிருக்கிறது.

இது எல்லாம் என் சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்த கொடூரமான, சமகாலச் சம்பவங்களின் வரலாற்றோடு நேரடியாகவும் சம்பந்தப்பட்டிருக்கிறது. பொலிவியாவில் சே-வுக்கு நேர்ந்த கதியை எடுத்துக் கொள்ளுங்கள். இதைப் பற்றி பெரிதாகக் கதையளந்து கொண்டிருக்காமல் நேரடியாக ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். 1971 ல் பொலிவிய அரசு எதிர்ப்பாளர்களின் குழு ஒன்று ஹவானாவிற்கு வந்தது. அவர்களில் ஒருவர் (பொலிவிய சுரங்கத் தொழிலாளர் சம்மேளனத்திலிருந்து வந்த ஒரு சுரங்கத் தொழிலாளி) ஜுலை 26 கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு பேசினார். சமீபகாலங்களில் பொலிவியாவில் நிகழ்ந்த வெகுமக்கள் கிளர்ச்சிகளைப் பற்றி ஒரு உரை ஆற்றினார். புரியாத புதிரான ஒரு மறதியில் சே- வுடைய கெரில்லாப் போரைத் தன்னுடைய பேச்சில் ஒரு இடத்தில் கூட அவர் குறிப்பிடவேயில்லை. சே– வின் கெரில்லாப் போர் நமது சமகாலத்திய நிகழ்வுகளில் மிகத் தூய சர்வதேசியப் பார்வை கொண்டிருந்த ஒரு போராட்டம். ஆனால், பொலிவிய தேசிய யதார்த்தத்திற்குள்ளாக அது செரித்துக் கொள்ளப்படவே இல்லை. வெகுமக்களின் நினைவில் அது இன்னும் ஏதோ ஒரு அந்நியமான நிகழ்வு போலவே படிந்திருக்கிறது. இது ரொம்பவும் சோகமானது. ஆனால் நாம் இதைப் புரிந்துகொள்ள முயற்சிக்கத்தான் வேண்டும். முழுக்க முழுக்க ஒப்புக் கொள்ள முடியாத ஒன்று. ஆனால், மறுக்கமுடியாத ஒரு யதார்த்தம். ஒரு மார்க்சியவாதி என்கிற முறையில் யதார்த்தத்தின் விதிகளை மதித்துப் புரிந்துகொள்ளவே நான் முயற்சிக்கிறேன். என்னுடைய விதிகளை அதன் மீது திணிப்பதில்லை.

***காவுட்ஸ்கி தொடங்கி கய் மோலஸ் வரைக்கும் இரண்டாம் அகிலத்தின் மிக மோசமான பிழை ஏகாதிபத்தியத்தின் சேவையில் இருந்து ஐரோப்பியமையவாதம் தான் என்று உங்கள் கட்டுரையில் எழுதியிருந்தீர்கள். ப்ரெஞ்ச் சோஷலிஸ்டு கட்சி (PSF) இந்தத் தவறிலிருந்து விலகிவிட்டதா?***

■ இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். PSF இன்னும் அதிலிருந்து விலகிவிட்டதாக எனக்குத் தோன்றவில்லை. எந்த மாற்றமோ முன்னேற்றமோ இல்லை என்று இதற்கு அர்த்தம் இல்லை. ஆனால், மொத்தத்தில் அதன் பொதுப்போக்கு ஐரோப்பிய மையவாதமாகவே இன்னமும் இருக்கிறது. சோஷலிச அகிலத்திற்குள் அது உறுப்பினராக சேர்ந்திருப்பது இதற்கு அமைப்பு ரீதியான வடிவம் கொடுத்திருக்கிறது என்று சொல்லலாம். சமூக ஜனநாயகம் மூன்றாம் உலக நாடுகளில் தன்னை அறிமுகம் செய்து கொள்வதில் எப்போதுமே அக்கறையாக இருந்து வந்திருக்கிறது என்பதையும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். வர்க்கப் போராட்ட நலன்கள் என்ற நோக்கில் இதைப் புரிந்துகொள்ள முடியும்: இந்த நாடுகளின் எதிர்ப்புரட்சியின் ஒரே சாத்தியமான வடிவம் சீர்திருத்தம்தான். அதனால்தான் லத்தீன் அமெரிக்கா, ஆப்ரிக்கா, போர்த்துகல் நாடுகளில் சோஷலிச அகிலத்தில்தான் தீவிரமான செயற்பாடுகள், அதிலும் குறிப்பாக, ருளுயு வின் ஏஜென்டாக ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் செயல்பாடுகள் இருக்கின்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளில் இதில் எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடவில்லை.



***1919-ல் பல்வேறு தேசிய அங்கங்களை உள்ளடக்கிய கட்டுப்பாடு மிகுந்த ஒரு சர்வதேசக் கட்சியாக லெனின் அமைத்த மூன்றாம் அகிலம், தேசியம் என்ற மறுக்கமுடியாத யதார்த்தத்தின் வலுவைக் குறைத்து மதிப்பிட்ட ஒரு வரலாற்றுத் தவறு என்று நினைக்கிறீர்களா?***

■ அது ஒரு பிழை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் வரலாறு தவிர்க்க முடியா-

> சே- வின் கெரில்லாப் போர் நமது சமகாலத்திய நிகழ்வுகளில் மிகத் தூய சர்வதேசியப் பார்வை கொண்டிருந்த ஒரு போராட்டம். ஆனால், பொலிவிய தேசிய யதார்த்தத்திற்குள்ளாக அது செரித்துக் கொள்ளப்படவே இல்லை. வெகுமக்களின் நினைவில் அது இன்னும் ஏதோ ஒரு அந்நியமான நிகழ்வு போலவே படிந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கிய ஒன்று. அப்போதைய நிலைமைகளில் சரி என்று பட்டதையொட்டி அந்தப் பரிசோதனை முயற்சித்துப் பார்க்க வேண்டியதொன்றாக இருந்தது. ஏனென்றால், வரலாறு அதைத் தவறு என்று அதுவரையிலும் நிரூபித்திருக்கவில்லை. ஆனால் தவறு உலகப் பாட்டாளி வர்க்கத்தை தேசிய, பண்பாட்டுத் தனித்துவங்கள், வித்தியாசங்களற்ற ஒரு ஒன்றை முழுமையாகப் பார்த்ததில்தான் இருக்கிறது. ஜினோவாவின் இராணுவ மாதிரியில், அந்தச் சகாப்தத்தில் நிலவிய மற்ற இராணுவவாத உருவகங்களின் அடிப்படையில் அமைந்த, ஒரு ஊழியர் அணியின் தலைமையில் நடைபோடக்கூடிய சர்வதேச பாட்டாளி வர்க்க இராணுவம் ஒன்று சாத்தியம் என்று அப்போது நம்பப்பட்டது. இது முழுக்க முழுக்க ஒரு கருத்துமுதல்வாத அடிப்படையிலமைந்த தவறு. அதனால், ஒரு வகையான தன்முனைப்புவாத அமைப்புமுறை சார்ந்த வடிவம்.

இதை இன்னும் கொஞ்சம் பின்னுக்கு கொண்டு போக முடியும். பொதுவாகச் சொல்வதென்றால், அகிலங்கள் அவை தோன்றியதற்கு சொல்லப்பட்ட காரணங்களை எப்போதுமே நிறைவு செய்ததில்லை. 1864-ல் தோன்றிய முதல் அகிலத்திலிருந்து (சர்வதேச உழைப்பாளர்கள் சங்கம்) நான்காம் அகிலம் (இதைப் பற்றி என்னை விட உங்களுக்கு நன்றாகவே தெரியும்) வரைக்கும் அவற்றின் இலக்கு சோஷலிசப் புரட்சி. ஆனபோதிலும், இடைப்பட்ட நூற்றாண்டின் யதார்த்தமான வரலாற்றில் நிகழ்ந்த ஒவ்வொரு சோஷலிசப் புரட்சியும், சோஷலிசத்தை நோக்கிய ஒவ்வொரு முயற்சியும், ஒவ்வொரு முன்னோக்கிய அடிவைப்பும் அவற்றைச் சார்ந்திராமல் சுதந்திரமான முயற்சியில் நடந்தவை – பாரீஸ் கம்யூனிலிருந்து 1959-ல் நிகழ்ந்த கியூபப் புரட்சி வரை. உங்களுக்கே தெரியும், அந்த நிகழ்வைப் பதிவு செய்தது என்பதைத் தவிர முதலாம் அகிலத்திற்குக் கம்யூனோடு எந்தச் சம்பந்தமும் இருக்கவில்லை. தற்செயலாக, அந்த நிகழ்வு, அது நிகழ்ந்த பிறகு அகிலத்தை இழுத்து மூடுவதற்கு ஒரு வகையில், ஒரு காரணமாக அமைந்துவிட்டது. இரண்டாவது அகிலம், தோல்விகளைத் தவிர வேறு எதையும் தரவில்லை. அந்தக் காலத்தின் ஒரே வெற்றி – ரசியப் புரட்சி, அதற்கு எதிராக நிகழ்த்தப்பட்டது. அதேபோல மூன்றாம் அகிலமும் - ஜெர்மனி, இத்தாலி, ஹங்கேரி, ஸ்பெயின் - அதனுடைய உதவியே இல்லாமல், சொல்லப் போனால் அதற்கு எதிராகவே சீனப் புரட்சி வெற்றி பெற்றது. (இரண்டு வாதங்களும் சாத்தியமே. ஒன்றை ஒன்று விலகியவை அல்ல என்றும் சொல்லலாம்) 1944-ல் கிழக்கு அய்ரோப்பாவில் தோன்றிய சோஷலிச நாடுகளைப் பொருத்த வரையில் மூன்றாம் அகிலம் கலைக்கப்பட்டதற்கு அடுத்த ஆண்டில், நீங்கள் ரசியப் பெருந்தேசிய வெறி என்று சொல்லக்கூடிய அதன் பாங்குகளுக்கு எதிராகத் தோன்றியவை.

கியூப, வியட்நாமியப் புரட்சிகள் மற்றும் பொதுவில் காலனிய எதிர்ப்பு புரட்சிகள் என்று சொல்லப்படுபவற்றை எடுத்துக் கொண்டால், இத்தகைய எழுச்சிகளை உருவாக்கியதற்கான சட்டகமாக சொல்லிக் கொண்ட எந்த ஒரு அமைப்போடும் இவற்றுக்கு எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. எல்லா அகிலங்களுமே ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் மழலையர் பள்ளிகளாகவும் கடைசியில் அவற்றுக்கு எதிராகவே திரும்பிய தேசியக் கட்சிகளைக் கட்டுவதற்கு உதவும் பணியையுமே செய்தன. அடிநிலையில் பார்த்தால் ஒரு அகிலத்தின் வெற்றி என்பது அதன் முடிவைக் குவிப்பதாகவே இருந்தது. இதைச் சரியாகப் புரிந்திருந்ததாலேயே மார்க்ஸ் மிக உவப்போடு முதல் அகிலத்தைக் கலைக்க முன்வந்தார். இயக்கம் வளர்ந்துவிட்டது என்றும் அதன் வலுவிற்கு ஆதாரம் - அதற்கு இனிமேலும் ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பு தேவையாக இல்லை என்றும் சொன்னார். அகிலத்தின் நோக்கம் நிறைவேறுவது என்பது அகிலத்தைக் கலைப்பதாக இருந்தது. நோரெஸ், டோக்லியாட்டி, சாண்டியாகோ கரில்லோ போன்ற ஏனையவர்களைப் பயிற்றுவிக்கும் சர்வதேசியத்தையும் அகிலத்தையும் காலப்போக்கில் சவக்குழிக்கு அனுப்பிய தேசிய வெகுமக்கள் கட்சிகளைக் கட்டுவதற்கு உதவியதற்கும் மேலாக மூன்றாம் அகிலம் வேறு என்ன செய்துவிட்டது. இது ஒரு சோகமயமான இயங்கியல் உண்மை. ஆனால், சில இழப்பீடுகளையும் தரவே செய்திருக்கிறது.

இப்போதெல்லாம், நாம் மையத்திலிருந்து விலகிச் செல்லும் ஒரு பொதுவான போக்கையே பார்க்கிறோம். எப்படியிருந்தாலும், வரலாற்று வளர்ச்சிப் போக்கே அப்படி இருக்கிறது. மூன்றாம் அகிலத்தை நிறுவி, சோவியத்துகளின் சர்வதேசக் குடியரசை நிறுவ லெனின் அறைகூவல் விடுத்தபோது, உலகில் ஒரு சோவியத் அரசு கூட இருக்கவில்லை. இலக்கின் பிரம்மாண்டமே வழிகளின் வறட்சியைக் குறிப்பதாக

அகிலங்கள் அவை தோன்றியதற்கு சொல்லப்பட்ட காரணங்களை எப்போதுமே நிறைவு செய்ததில்லை. 1864-ல் தோன்றிய முதல் அகிலத்திலிருந்து (சர்வதேச உழைப்பாளர்கள் சங்கம்) நான்காம் அகிலம் வரைக்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. பிறகு, வழிகள் வளர வளர இலக்கு மெல்ல மறைந்து போனது. வேறு வார்த்தைகளில் சொல்வ-தென்றால், சர்வதேசியவாதியாக இருப்பதற்கான ஒரே வழி சொந்த நாட்டில் புரட்சியை நடத்துவது என்ப-தாகிவிட்டது. இந்த அடக்கமான முடிவு ஒரு வாய்வீச்-சாகக்கூடத் தோன்றலாம். ஆனால், நிகழ்வுகளைப் பார்க்கும் போது யாரும் மறுக்கமுடியாத ஒரு உண்மை.

உங்கள் கடைசிக் கேள்விக்கான பதில் எல்லோருக்-கும் தெரிந்த ஒரு உண்மை. உண்மையில் வரலாற்றை நிகழ்த்துபவர்கள் வெகுமக்களே, என்கிற முரணான ஒரு கருத்தில் இருக்கிறது. எல்லோருக்கும் தெரிந்த இந்த உண்மையை விடாமல் பின்பற்றுங்கள் உணர்ச்சி ஊக்கம் தருகிற அல்லது சோர்வடையச் செய்கிற முடிவுகளுக்கு நீங்கள் வந்து சேர்வீர்கள் - எப்படியிருந்தாலும் நீங்கள் நம்பிக்கை வைத்துத் தொடங்கிய, வெகுமக்கள்தான் வரலாற்றை நிகழ்த்து-பவர்கள் என்பது உண்மையென்றால், நிலவுகிற பண்பாடுகளுக்கும் மொழிகளுக்கும் எல்லைகளுக்-கும் அப்பாற்பட்ட, அவற்றோடு தொடர்பில்லாமல் மேலே அந்தரத்தில் சுற்றிக் கொண்டிருக்கிற ஒரு அருவம் அல்ல அவர்கள் என்பது உண்மையானால் - வரையறுக்கப்பட்ட இயற்கையான பண்பாட்டுக் குழுமங்களாக மட்டுமே அவர்கள் இருக்கிறார்கள் என்றால் - அப்போது அவர்கள் அவர்களாலேயே, அவர்களது நிலைமைகளிலிருந்தே, விண்ணிலிருந்து அல்ல மண்ணிலிருந்தே, உலகுதழுவி அல்ல உள்ளூர் அளவிலேயே வரலாற்றைப் படைப்பார்கள். எல்லோ-ருக்கும் ஒன்றேயான வரலாறு என்று எதுவும் இல்லை. வரலாற்றின் காலம் டோக்கியோவிலும், பாரீசிலும், பீக்கிங்கிலும், வெனீசுவலாவிலும் ஒன்றாக இல்லை. ஒரு உலகப் புரட்சித் திட்டம் பன்முகத்-தன்மைகளை எல்லாம் ஒருமுகப்படுத்தி, மொத்த இயக்கத்தையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவர முயற்சிக்கும் போது அது வரலாற்று இயக்கத்திற்கு எதிராகப் போய் முடிகிறது; ஏனென்றால், அந்த இயக்கம் எப்போதும் ஒருமுகத்தன்மையிலிருந்து பன்முகத்தன்மையை நோக்கி நகர்வதாகவே இருக்-கிறது. நிகழ்வுகள் எப்போதும் கீழிருந்தே தொடங்கு-கின்றன. பன்முகத்தன்மையே எப்போதும் வெற்றி பெறுகிறது. மேலிருந்து வடிக்கப்பட்ட எந்தவொரு திட்டமும் ஒரு உள்ளார்ந்த கருத்துமுதல்வாதக் கருவைக் கொண்டிருக்கிறது. அதன் காகித ஆரவாரத்-திற்கும், வரலாற்றில் அதற்கு இடமில்லாமல் போவ-தற்கும் காரணம் இதுதான். புரட்சி என்பது ஆணைகள் பிறப்பிக்கும் அறைகளிலிருந்து ஒருபோதும் நிகழ்த்தப் போவதில்லை. பராகுவேயின் எல்லைக்கு அருகில் இருக்கிற ஒரு தடம் விலகிய கிராமத்தில் இருந்து புரட்சி தொடங்குகிறது என்றால், அதற்கு ஏதோ 19,000 கி.மீ. தொலைவில் இருக்கிற ஒரு மூளை காரணமல்ல. அந்தக் கிராமத்து தெருமுனை பெட்டிக் கடைக்காரன் நிகழ்த்த வேண்டும் என்று முடிவு செய்ததாலேயே நிகழ்கிறது. அந்த மூளை செய்யக்-கூடியதெல்லாம், தெருமுனையைக் கூட தாண்டிப் போயிருக்காத, ஆனால் கிராமத்தின் பொது அபிப்பி-ராயத்தின் மீது செல்வாக்கு செலுத்துபவனாக இருக்கிற அந்தப் பெட்டிக் கடைக்காரன் அதை நிகழ்த்துவதற்கு, அவ-னுக்கு தூண்டுகோலாக இருந்-தது எது என்பதைப் புரிந்து-கொள்ள முயற்சிப்பது, கிரா-மத்து விவசாயிகளின் தேவை-கள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது, அவ்-வளவுதான். அவர்களுக்கு உல-கப் புரட்சி அவசியமில்லை. ஏனென்றால், அதுபற்றி அவர்-களுக்குத் தெரியாது. கிராமத்-தையே தாண்டியிராதவர்க-ளுக்கு உலகம் என்பதே தெரி-யாது. 1967-ல் முயோபாம்பா வின் மக்களிடம் பொலிவிய கெரில்லாக்கள் வியட்நாமை ஆதரிக்க வேண்டும் என்று விளக்கிப் பேசியபோது, அவர்-கள் வியட்நாமை ஏதோ அவர்-கள் கேள்விப்பட்டிராத, பக்கத்-திலிருந்து ஒரு கிராமம் என்று நினைத்திருந்தார்கள். வாழ்-நாளில் ஒரு அமெரிக்கனைக் கூடப் பார்த்திராத அவர்க-ளுக்கு அமெரிக்க ஏகாதிபத்-தியம் என்றால் என்னவென்று சுத்தமாகத் தெரியவில்லை. ஆனால், அதற்கு மாறாக, அரு-கில் ஓடிய ஆற்றின் மீதிருந்த பாலத்தை பழுது செய்யாமல் இருந்த உள்ளூர் ஆட்சியின் மீது அவர்கள் கடும் கோபத்தி-லிருந்தார்கள். ஆகையால், அங்கு புரட்சியை ஆரம்பிப்பது என்பது அவர்களுக்கு அந்த பாலத்தில் பிரச்சினையில் உதவுவது, ஏன் அந்த அதிகாரி அந்தப் பாலத்தை சரி செய்-யாமல், அக்கறையற்று இருக்-கிறான் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள உதவியது. அது எப்போதுமே கீழிருந்து, தன்-னடக்கமாக, பெரிய எழுத்-துக்கள் இல்லாமல் தொடங்கு-வது. ஆனால், அகிலம் என்பது அதன் வரையறுப்பிலேயே பெரிய எழுத்துக்கள் தேவைப்-படுவது – ஆனால், செயலற்ற ஒரு மேல்கட்டுமானமாகவே இருக்கச் சபிக்கப்பட்டது. ஆனால், தேசம் ஒரு மேல்-கட்டுமானம் இல்லை மாறாக (மொழியைப் போல, பண்-



நாம் எப்போதும் சர்வதேச அளவில் யோசித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் அதைப் பற்றிப் பேசக்கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாம். அதைப் பேசுவதை நிறுத்தும்போது-தானே ஒரு கட்சி வலுவானதாக அதாவது தேசிய-மானதாக ஆகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டைப் போல்) ஒரு உண்மையான உள்கட்டுமானம் (infra – structure). அகிலங்கள் வெறுமனே மேல்கட்டுமானங்களாகவே இருக்கின்றன. அந்தக் காரணத்தாலேயே வரலாற்று ஓட்டத்தில் அடித்துச் செல்லக்கூடியவையாக இருக்கின்றன.

வியட்நாம் போருக்கும் உள்ளூர் ஆற்றுப் பாலத்திற்கும் இடையிலான இந்த முரணைத் தாண்டிச் செல்வதுதான் இயங்கியல் முறையியலின் நோக்கம். பொலிவியாவில் ஒரு இரண்டாவது போர் முனையைத் துவக்கி, வியட்நாம் புரட்சிக்கு உதவவேண்டும் என்று நினைக்கிற ஒரு சர்வதேசப் புரட்சியாளர், தன்னுடைய இலக்கு உள்ளூர் பாலம் குறித்த விவாதத்தைத் துவக்கி வைப்பதைச் சார்ந்திருக்கிறது எனவும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வழியில், பொதுவானதற்கும் குறிப்பானதற்கும் இடையிலான முரண்பாட்டை ஒருவர் இயங்கியல் ரீதியாக கடந்து செல்ல முடியும். பொதுமைக்கும் குறிப்பானதற்கும் இடையிலான, தலைகீழ் விகிதத்திலான ஒரு இயங்கியலின் ஊடாக – நீங்கள் பிரச்சினையை வைக்கும் முறையில் சுத்தமாக மறைந்துவிடுகிற ஒரு இயங்கியல் - பருண்மையான உள்ளூர் யதார்த்தங்களிலிருந்து தொடங்கி சர்வதேச இயக்கத்திற்கு நகர்த்தல், மார்க்சிய சர்வதேசியவாதத்தினது அணுகுமுறை இதுதான்.

ஒப்புக்கொள்கிறேன். எனது அணுகுமுறை விவாத நோக்கில் இருந்ததால் சற்று ஒருதலைச் சார்பானதாக இருந்தது. ஒரு மிகைப்படுத்தலுக்கு எதிராக இன்னொரு திசையிலான மிகைப்படுத்தலாக இருந்தது. உண்மையைச் சொல்வதென்றால், நீங்கள் சொல்வது சரிதான். நாம் ஒரு இயங்கியலைக் கட்டமைக்க வேண்டும். ஆனால், இதில் நாம் ஒன்றுபட்டாலும்கூட, அதன் தன்மைக்கு வரும்போது, நாம் முரண்பட்டுக் கொள்வோம். தேசியப் போராட்டங்களில் புரிந்துகொள்வதற்கான தீர்மானகரமான கோட்பாட்டுச் சட்டகம், உலக அளவில் நடைபெறும். வர்க்கப் போராட்டம் குறித்த ஒரு சர்வதேசிய கோட்பாட்டுச் சட்டகம்தான் என்று நம்புகிறேன். உலகப் போராட்டம் குறித்த கோட்பாட்டின் முக்கிய சரடுகளை முன்கூட்டியே கற்றுத் தேறாமல் பொலிவியாவில் நடைபெறும் நிகழ்வுகளை ஒருவரால் புரிந்துகொள்ள முடியாது. என்றாலும், நடைமுறையில் துவக்கப் புள்ளியாக இருப்பது, நடைமுறை தீர்மானகர காரணியாக இருப்பது, தேசம்தான். பொலிவியாவின் தேசிய வர்க்கப் போராட்ட நிலைமைகள் குறித்த ஆய்வே துவக்கப் புள்ளியாக இருக்க வேண்டும். இல்லையென்றால், உலக நிலைமை பற்றிய விரிந்த கோட்பாட்டுக்கு ஆய்வு பயனுள்ளதாக இருக்காது. உண்மையான வரலாற்று மாற்றங்களைக் கொண்டுவர அதனால் முடியாது. இங்கு, ஒரு பரஸ்பர வினையாக்கம் இருக்கிறது. கோட்பாட்டளவில் முதன்மையாக இருப்பது எப்போதும் செயலளவில் முதன்மையானதாக இருக்க முடியாது. ஒருவேளை இதில் சர்வதேசியத்தை எப்போதும் மனதில் வைத்துக் கொண்டே தேசிய நிலைமைகளைக் கையாள்வது, ஆனால் சர்வதேசியத்தை அங்கே வைக்காமலிருப்பது என்பதில்தான் சூட்சுமம் இருக்கிறது போல தப்பித்தவறி அதை வைத்துவிடுவது, எல்லாம் கெட்டுவிடுவதற்கான அறிகுறியாகிவிடக்கூடும்.

இறுதியாக, நாம் எப்போதும் சர்வதேச அளவில் யோசித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் அதைப் பற்றிப் பேசக்கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாம். அதைப் பேசுவதை நிறுத்தும்போதுதானே ஒரு கட்சி வலுவானதாக அதாவது தேசியமானதாக ஆகிறது. அந்தப் புள்ளியில் தானே ஒரு குழுவாக இருப்பதிலிருந்து மாறி, ஒரு வெகுமக்கள் கட்சியாக – 'பின்னடைவுக்கு' சபிக்கப்பட்டதாக மாறுகிறது. இதுபோன்ற திருப்பங்கள் சர்வதேச பொதுவுடமை இயக்க வரலாற்றில் பலமுறை நிகழ்ந்திருக்கிறது. 1935-36 காலகட்டத்தில் PLF ஒரே மூச்சில் உள்ளூரளவிலான ஒரு மூடிய பாட்டாளிவர்க்க முன்னணிப்படை என்ற நிலையிலிருந்து ஒரு வெகுமக்கள் கட்சியாக மாறிய அந்த நிகழ்வு ப்ரெஞ்சு கம்யூனிச இயக்க வரலாற்றில் முக்கியமான ஒன்று. இது பிறகு திரும்பிப் பார்க்க முடியாத ஒரு நிகழ்வு. 1943ல் இத்தாலிய கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் இதே நிகழ்ந்தது.

***ஆக, சர்வதேசியத்திற்கு ஒரு நியாயம் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறீர்கள். ஆனால், அதை வெகுமக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்பதால் அதைப் பற்றி ஒருவர் பேசக்கூடாது என்று சொல்ல வருகிறீர்கள். முன்னணிப் படை புரிந்து கொண்டதை உதராணத்திற்கு, சர்வதேசப் பரிமாணம், இன்ன பிற - கிரகித்துக் கொள்ளவே முடியாத, திருத்த முடியாத மந்தைக் கூட்டம் என்கிற, வெகுமக்கள் குறித்த ஒரு இயங்காவியல் கண்ணோட்டம் இல்லையா இது?***

> தேசியப் போராட்டங்களில் புரிந்துகொள்வதற்கான தீர்மானகரமான கோட்பாட்டுச் சட்டகம், உலக அளவில் நடைபெறும் வர்க்கப் போராட்டம் குறித்த ஒரு சர்வதேசிய கோட்பாட்டுச் சட்டகம்தான் என்று நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. இது தேர்தல் பாதைக்கு மாறிவிடுவதோ வெகுமக்களின் நிலைக்குத் தாழ்ந்துவிடுகிற சந்தர்ப்பவாதமோ இல்லை. எந்த ஒரு சமூகச் சூழலிலும் செயல்படுகிற சக்திகளின் படிநிலை வரிசைகளில் உள்ளூர் காரணிகளின் அமைப்பே தீர்மானகரமானதாக இருக்கிறது என்பதே இங்கு முக்கியமான புள்ளி. இது ஒரு செயல் அளவிலான பிரச்சினை. இப்போது, 1976-ல், ப்ரான்சில் நாம் செய்யவேண்டியது என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கான பதில் ப்ரெஞ்சு சமூக அமைவிற்கு இருக்கிறதே ஒழிய அதற்கு வெளியில் எங்கும் இல்லை. சர்வதேச அல்லது ஐரோப்பிய போராட்டங்கள் பற்றிய இருப்புநிலை அறிக்கையிலேயே (balance-sheet), ஆய்விலோ அதைத் தேட முடியாது. பகுதியே (local) எப்போதும் தீர்மானகரமான காரணியாக இருக்கிறது. நாம் ஒரு மிகச் சாதாரணமான உண்மையை சுற்றி வளைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். 'அகக் காரணியின் ஊடாகவே புறக்காரணி செயல்பட முடியும்' என்று மாவோ இதை அழகாகச் சொல்லியிருக்கிறார். அகக்காரணி அவசியம். உள்ளுக்குள்தான் இருக்கும். செயலில் இருக்கும் எந்த ஒரு சக்தியிலும் அதிகபட்ச வினாவைக் குறிக்கும் புள்ளியாக இருப்பதால் இந்த அகக்காரணிக்கே எப்போதும் அதிக அழுத்தம் தரப்பட வேண்டும். மிக எளிமையான, இயக்க நுட்பம் குறித்த கேள்வி என்று ஒருவர் இதைச் சொல்லலாம். காரணத்தை சரியாகப் புரிந்து கொண்டு, அதன் பிறகு, நிலைமையை மாற்றியமைக்கும் சாத்தியங்களை உள்ளடக்கிய இந்தப் புள்ளியின் மீது முழுச் சக்தியையும் ஒருவர் பிரயோகிக்க வேண்டும். செயலூக்கமான காரணிகள் எப்போதுமே நுண்ணிய பொருண்மையானவை. பிரம்மாண்டமான கற்பனைத் திட்டங்களோ, ஆதாரப் புள்ளிக்கு வெளியே இருக்கிற அலங்காரங்களோ அல்ல. ஆக, மிகச் சாதாரண, இயக்க நுட்பம் குறித்து கேள்வி இது. வெகுமக்களுக்குப் புரியாத ஒரு மொழியில் அவர்களிடமிருந்து விலகி நின்றுப் பேசுவதைத் தவிர்ப்பது பற்றியது அல்ல. வியட்நாமைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது என்றால், அந்தப் பிரச்சினை அவர்களுக்கு நேரடியாக தொடர்பில்லாத – ஆனால் மறைமுகமாகத் தொடர்புள்ள – ஒன்று என்று யதார்த்தத்திலிருந்து எழுகிற ஒரு உபவிளைவு என்பதுதான் விஷயம். நேரடியான காரணங்கள், அக்கறைகள் மீது ஒருவர் நேரடியாகத்தான் வினையாற்ற வேண்டும்.

ஆகஸ்டு 1914-ஜெர்மனி பற்றிய உதாரணத்திற்கு திரும்பவும் போக விரும்புகிறேன். புரட்சிகர நடவடிக்கையை விரும்பிய அன்றைய புரட்சியாளர்கள், அந்தக் காலத்திய ஜெர்மானிய சமூக அமைப்பு, சமூக வர்க்கங்கள், அரசியல் சக்திகள், வெகுமக்களின் உணர்வுநிலை, ஜெர்மன் தேசியப் பாரம்பரியம் இன்ன பிறவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதையெல்லாம் சொல்லத் தேவையில்லை. ஆனால், வெகுமக்களால் சர்வதேசியத்தை என்றுமே புரிந்துகொள்ள முடியாது என்று ஒருவர் எடுத்துக் கொள்ள முடியாதவரை, இந்தப் பருண்மையான நிலைமைகள் குறித்த ஆய்வு, ஒருவரை வெகுமக்களை அப்போதைய அவர்களது உணர்வுநிலைக்கு மேலாக கொண்டுவர – அதாவது தேசிய வெறியிலிருந்து, கெய்சரை ஆதரிப்பதிலிருந்து – உதவக்கூடிய ஒரு யுத்த தந்திரத்தையும் போர்த் தந்திரத்தையும் வகுப்பதற்கு இட்டுச் செல்ல வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், நிலவுகிற சமூக அமைவை பருண்மையான துவக்கப் புள்ளியாகக் கொள்வதற்கும் சர்வதேச யுத்த தந்திரம் ஒன்றை வகுத்துக் கொள்வதற்கும் இடையில் எந்த முரணும் இல்லை. ப்ரான்சில் இன்றைக்கு புரட்சியாளர்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? தற்போது அவர்கள், மூவர்ணக் கொடியையும் தேசிய கீதத்தையும் நிராகரிக்கவும், 'எல்லா எல்லைகளும் தகரட்டும்' என்று முழங்குவதையும் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் இன்னொரு பக்கம் பிரிட்டானியர்கள் (Britons) மற்றும் கார்ஸிக்கர்களுடைய உரிமைகளுக்காகப் போராடவும் செய்கிறார்கள். இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தேசியச் சின்னங்கள், அடையாளங்கள், மன அமைவுகளைப் பொருத்தவரையில், புரட்சிகர மதிப்புகள் என்று சொல்லப்படுகிறவற்றுக்கு எனது நிலை முற்றிலும் எதிரானது. தேசிய பாரம்பரியத்தை மீட்டெடுக்காத வரைக்கும் ப்ரான்சில் புரட்சி சாத்தியமேயில்லை என்பது என் நம்பிக்கை. தேசியப் பாராம்பரியம் என்கிற இந்தச் சரியான பாதைக்கு திரும்புவதன் வழியாகத்தான் அதிலிருந்து விடுபடுவது பற்றி நாம் யோசிக்கவே முடியும். தொடர்ச்சியும் புதுமை புனைதலும் என்கிற உயர்வான இயங்கியல் என்பதற்கு மேலாக இதில் எதுவும் இல்லை: பழையவற்றின் தொடர்ச்சியை அங்கீகரிக்கும்போதே புதுமை புனைதல் சாத்தியம். எனக்குத் தெரிந்த

தேசிய பாரம்பரியத்தை மீட்டெடுக்காத வரைக்கும் ப்ரான்சில் புரட்சி சாத்தியமேயில்லை என்பது என் நம்பிக்கை. தேசியப் பாராம்பரியம் என்கிற இந்தச் சரியான பாதைக்கு திரும்புவதன் வழியாகத்தான் அதிலிருந்து விடுபடுவது பற்றி நாம் யோசிக்கவே முடியும்.

புரட்சியாளர்கள் எல்லோருமே தனிப்பட்ட முறையில் மிகத் தீவிரமான தேசபக்தர்களாக இருந்தவர்கள் - ஆச்சரியம். ஆச்சரியம் – அவர்களுடைய 'சர்வதேசியம்' பொதுவில் ஒரு தேசிய மீட்புவாதமாகவே இருந்தது. மேலும், கியூபாவிலும் வியட்நாமிலும் ஒரு புரட்சியாளராக இருப்பது என்பது - இப்போது தொழிலாளர் அரசுகள் இருக்கும்போது மட்டுமல்ல, அதற்கும் முன்னும் கூட – தேசியவாதியாக இருப்பதுதான். ஒரு ஆதிக்க தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிற நாம், நம்முடைய தேசியப் பாரம்பரியம் அனைத்தையும் நிராகரித்துவிட வேண்டுமா அல்லது அந்தப் பாரம்பரியத்தில் ஆதிக்கக் கறை படிந்ததை அதன் ஏகாதிபத்திய வேர்களை மட்டும் விலக்கிவிட வேண்டுமா என்பது நம் முன் உள்ள கேள்வி. மோசமான பக்கங்களை விலத்திவிட வேண்டுமா என்பது நம் முன் உள்ள கேள்வி. மோசமான பக்கங்களை விலத்தவிட்டு, சாதகமான அம்சங்களை விதைக்க வேண்டும் என்பது என் கருத்து; அதுவும் பிந்தையவற்றுக்கு ப்ரான்சில் ஒரு வலிமையான வரலாறு இருக்கும் போது.

இந்த நாட்டில், இதன் வரலாற்றில் மிகச் சிறந்ததாக இருக்கிற அத்தனையையும் உருவாக்கிய ஒரு புரட்சி – தற்போது வெறுமனே ஒரு தேசிய ஜனநாயகப் புரட்சி என்று இகழ்ந்து பேசப்படுகிற - இங்கு நிகழ்ந்திருப்பது நமது அதிர்ஷ்டமே. வேல்மி, புனித ஜஸ்ட், பாரீஸ் கம்யூன், ஆக்கிரமிப்பு எதிர்ப்பு முன்னணி (resistance), என்று நமது புரட்சிகரப் பாரம்பரியம் செறிவானது. மேலும், அதன் இயற்கையிலேயே மிகப் பிற்போக்கானதாக இருக்கிற, வெகுமக்கள் முன்னணியை விட ஹிட்லரை விரும்புகிற, வெளிநாட்டுச் சக்திகளின் உதவியை நாடுகிற ஒரு ஆளும் வர்க்கம் நமக்குக் கிடைத்திருக்கிற போது இவற்றை நாம் இன்னும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புரட்சியின் நலன்களோடு தேசிய நலன்களும் கலந்திருப்பதால் நாம் இவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். நம்பிக்கையின்மையோ சந்தர்ப்பவாதமோ இங்கு உதவாது. பாருங்கள், மார்செய்ல்ஸ் (சர்வதேசிய கீதம்) – சபியுங்கள் அதை, ஒரு புரட்சிப் பாடல் இல்லையா் எங்கோ பொலிவியத் தொழிலாளர்கள் அதைக் பாடக் கேட்டிருக்கிறேன். ஈக்லின் போட்டியர் (Eugene Pottia) என்ற கைவினைஞன் *1871*- ல் இயற்றிய இந்த ப்ரெஞ்சுப் பாடலை மாஸ்கோவின் செஞ்சதுக்கத்திலும் பீகிங்கின் டியன் -மென் சதுக்கத்திலும் கோடிக்கணக்கானவர்கள் பாடக் கேட்கும் போது, ஒரு ப்ரெஞ்சுக்காரன் என்ற முறையில் நான் புல்லரித்துப் போகிறேன். நமது சொந்த மக்களுடைய தேசிய வேர்களை அங்கீகரிக்க மறுத்துவிட்டு, மற்ற தேசத்து மக்களுடைய உணர்ச்சிகளை அக்கறையோடு பார்ப்பதை, சீன தேசியத்தை ('மாவோயிசம்' என்ற போர்வையில் மறைந்து கொண்ட தேசியவாதம்), அல்ஜீரிய தேசியத்தை, கியூப, வியட்நாமிய தேசியங்களை மதிப்பதையே சர்வதேசியம் என்று நமது புரட்சிக்காரர்கள் சொல்லும்போது, எனக்கு எரிச்சலும் குழப்பமுமாகவே இருக்கிறது.

கோட்பாட்டளவிலும் சரி, நடைமுறையிலும் சரி, செங்கொடிக்கும் மூவர்ணக் கொடிக்கும் எந்த முரண்பாடு தெரியவில்லை. தேசியப் பொதுவுடமைப் பாதையை நான் முழுமனதோடு ஏற்றுக் கொள்கிறேன். எங்கெல்லாம் பொதுவுடமை கொஞ்சமாவது அர்த்தமுள்ளதாக இருக்கிறதோ அங்கெல்லாம் அது – யுகோஸ்லோவியாவைப் போல, சீனா, கியூபாவைப் போல, தேசியப் பொதுவுடமையாக இருக்கிறது. தெய்பிங்குகளை முன்னோர்களாக வரித்துக் கொண்ட சன்யாட்சென்-னின் வழி வந்தவராக சொல்லிக் கொண்டே மாவோ ஜப்பானியர்களை எதிர்த்து நின்றார். கியுபாவில் ஃபிடல் உருவானது ஜோஸ் மார்ட்டியின் வழித்தோன்றலாகவே. இன்றைய பிரான்சில் ஒரு புரட்சியாளனாக இருப்பதன் அர்த்தம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், புரட்சிகரமான ஒரு மாபெரும் தலைவன் இங்கு உருவானால் நிச்சயம் அவன் கடந்தகால பிரெஞ்சு தேசிய நாயகர்களின் மிகச் சிறந்த பண்புகளையும் பாரம்பரியங்களையும் உட்கிரகித்துக் கொண்டவனாக இருப்பான் என்று உணர்கிறேன். வெட்டவெளிச்சமான உண்மை இது. ஆனால், பிரான்சில், தேசிய உணர்வுகள் மழுங்கிக் கொண்டிருக்கிற தற்போதைய சூழலில் - இந்த மேலோட்டமான தோற்றத்தைக் கண்டு நாம் மயங்கிவிடக் கூடாது என்றாலும் கூட – மிகவும் அழுத்தமாக சொல்லப்பட வேண்டிய ஒரு உண்மை. ஒடுக்கும் தேசத்திற்கும் ஒடுக்கப்படும் தேசத்திற்குமிடையிலான பண்பளவிலான வித்தியாசம் மட்டுமே இங்கு நம்மை வழிநடாத்துவதாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஒடுக்கும் தேசத்தின் தேசியப் பாரம்பரியத்திற்குள்ளேயே நமது கவனத்தைக் கோருகிற மறைக்கப்பட்ட கூறுகள், பழைய அடக்குமுறைகளின் நினைவுச்

> ஒடுக்கும் தேசத்தின் தேசியப் பாரம்பரியத்திற்குள்ளேயே நமது கவனத்தைக் கோருகிற மறைக்கப்பட்ட கூறுகள், பழைய அடக்குமுறைகளின் நினைவுச் சின்னங்கள் நிறைய இருக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னங்கள் நிறைய இருக்கின்றன. பேஷெயின் (Petsin) இங்கு நமக்குத் தேவையில்லை ஆனால் ஜீன் மொலினின் - ஒரு உதாரணத்திற்கு, பாரம்பரியம் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒன்று.

அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு புரட்சிகர கட்சி பாரம்பரியத்தையும் வரலாற்றுத் தொடர்ச்சியையும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் சொல்லும்போது நான் அதோடு உடன்படவே செய்கிறேன். ஆனால், எல்லாவிதமான வர்க்க சமரசங்களுக்கும் தேசப்பற்று அல்லது, தேசியக் கருத்தியலே (ideology) வசதியான ஒரு கருவியாக, எல்லா சமூக முரண்பாடுகளையும் பூசிமெழுகி விடுவதற்கென்றே வடிவமைக்கப்பட்ட ஒரு புனிதக் கூட்டாக – அதனால் ஆதிக்கக் கருத்தியலின் மிக இயல்பான ஒரு ஊடகமாக இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். தொடர்ச்சியை சுவீகரித்துக் கொள்வது அவ்வளவு சுலபம் இல்லை; குறைந்தபட்சம் ஒருவர் அதை விமர்சிக்க வேண்டும் அடித்து வளைக்க வேண்டும். சீனா, கியுபா போன்ற ஒடுக்கப்பட்ட தேசங்களில் பிரச்சினை இது போல இல்லை. ஆனால் பிரான்சில் மூவர்ணக் கொடி கம்யூனை நசுக்கிய வெர்செய்ல்சின் - முதலாளிகளின், பேரரசின் கொடியாகவும் இருந்தது. விஷயங்கள் அவ்வளவு நேராக இருப்பதில்லை. தேசப்பற்று பிரெஞ்சு மக்களின் அபினாகவும் இருந்திருக்கிறது. 1914-ல், 1939-ல் நிகழ்ந்தது போன்ற எல்லாவிதமான அட்டூழியங்களும் அதன் பெயராலேயே நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால், ஒருவர் என்னதான் முயற்சித்தாலும் கூட – முயற்சிக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன் - இந்தத் தொடர்ச்சியை எந்தப் புரட்சிகர நோக்கத்திற்காகவும் சுவீகரித்துக் கொள்ளும் முயற்சி மிகவும் சிரமத்திற்குரிய ஒன்றாகவே இருக்கிறது. பிரான்சுக்கு பல பாரம்பரியங்கள் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும் இதில் எதை எடுத்துக் கொள்வது, எந்தப் பருண்மையான வழியில் இதைச் செய்வது என்பது பற்றி நாம் யோசிக்க வேண்டும்.

நீங்கள் சொல்லும் விமர்சனப்பூர்மவான தேர்வு என்பது மிகவும் அவசியமானதுதான். அதில் சந்தேகமில்லை. வரலாற்று ரீதியாக ஒரு ஒடுக்கும் தேசத்தைக் சேர்ந்தவர்கள் என்கிற நிலைமை எழுப்பும் சிக்கலோடு இது பிணைந்திருக்கிறது. என்றாலும், தேசியத்தை அதற்குள் ஒடுக்கப்பட்டு, மறைக்கப்பட்டிருக்கிற கூறுகளோடு சேர்த்து, ஒட்டுமொத்தமாகவே நிராகரித்து விடுவது என்பது மோசமான விளைவுகளை விலைகொடுத்து வாங்கிவிடுவது போலாகிவிடும். ஜாகோபியன் மீட்புவாதத்தின் (Jacobian Messianism) பால் எனக்குள்ள தனிப்பட்ட விருப்பை, சாய்வை இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிப்படையாக அறிவித்துக் கொள்கிறேன். 1792, 1848-களின் ஜாக்கோபியன்வாதம் எனக்குப் பிடித்தமானது மட்டுமல்ல, ஒரு அர்த்தத்தில் எனது இயல்பும் கூட. ஐரோப்பாவின் விடுதலைக்கு பிரான்ஸ் மறுபடியும் புரட்சிச் சுடரை ஏந்தும் என்று எப்போதுமே நான் நம்பி வந்திருக்கிறேன். விடுதலைப் பாதையை



உறுதியாகப் பிடித்து புரட்சிகரமான பிரான்சின் மேலாண்மையில் கீழில்லாமல் ஐரோப்பாவிற்கு வேறு எந்த நம்பிக்கையும் எனக்குத் தோன்றவில்லை. 'போக்ருக்கு எதிரான' அந்த மொத்த புராணக் கற்பனையும் ஜெர்மனிக்கெதிரான மத அடிப்படையில்லாத நமது பகையும் என்றாவது ஒருநாள் புரட்சியை ஏன் நமது தேசிய ஜனநாயகப் பாரம்பரியத்தைக்கூட காப்பதற்கு நமக்கு உதவாமலா போய்விடும் என்று சிலநேரங்களில் நான் வியப்பதுண்டு. ஆனால், தயவுசெய்து மன்னியுங்கள். இதோடு ஒரு அரசியல், கோட்பாடு விவாதத்தைத் தூண்டச் செய்வதற்கான எனது இந்த முயற்சியை முடித்துக் கொள்ள அனுமதியுங்கள். எதிர்முனைகளில் நின்று கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க, பரிச்சியமானவற்றுக்கு அப்பால் போகத் துணியத் தூண்ட, செய்த முயற்சி இது. அதன் மூலம் நாம் எல்லோரும் வாழவும் சிந்திக்கவும் பழகிக் கொண்ட ஒரு அமைப்பின் உறுதியை சோதித்துப் பார்க்க உதவுவது – மார்க்சியத்தை ஒழித்துக்கட்டுவதற்கு அல்ல, அதை உலுக்கி மீண்டும் உறுதியாக்கவே இந்த முயற்சி.

**New Left Review, Number: 105**
**Sep – Oct 1977**
தமிழில்: வளர்மதி

தேசப்பற்று பிரெஞ்சு மக்களின் அபினாகவும் இருந்திருக்கிறது. 1914-ல், 1939-ல் நிகழ்ந்தது போன்ற எல்லாவிதமான அட்டூழியங்களும் அதன் பெயராலேயே நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால், ஒருவர் என்னதான் முயற்சித்தாலும் கூட - முயற்சிக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான வரலாறை எழுதுவது எப்படி?

## நிவேதிதா மேனன்



**நிவேதிதா மேனன்**
(Nivedita Menon)

"HISTORY AND TRUTH
HISTORY AS TRUTH
The text book Controversy
in India"

*என்ற தலைப்பில் ஆற்றிய உரையினை ICES (கொழும்பு) ஒரு சிறு பிரசுரமாக வெளியிட்டுள்ளது. (30 பக்கங்கள்) இச் சிறு பிரசுரத்தின் பிரதான கருத்துக்களை தொகுத்தும் சுருக்கியும் தமிழில் தருவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.)*

புகழ்பெற்ற ஓவியர் பிக்காசோவிடம் ஒருவர் தம் மனைவியை அழைத்துச் சென்று அவரை ஓவியமாக வரைந்து தரும்படி கேட்டாராம். பிக்காசோ உடனே சம்மதம் தெரிவித்தார். அந்தப் பெண்ணைப் "போஸ்" கொடுக்க வைத்து ஓவியம் ஒன்றை வரையத் தொடங்கினார். சில நாட்களின் பின் ஓவியத்தை பெண்ணின் கணவருக்குக் காட்டினார். அந்த ஓவியத்தில் மூன்று முக்கோண உருவங்களையும் ஒரு மீனின் உருவத்தையுமே கணவரால் அடையாளம் காண முடிந்தது. ஆத்திரம் கொண்ட அவர் "என்னுடைய மனைவி இப்படியா தோற்றமளிக்கிறாள்?" என்று கத்தினராம். பிக்காசோ கேட்டார். "அவள் எப்படி தோற்றமளிப்பாள்?"

"இதோ பாருங்கள் அவளின் புகைப்படம்" என்று புகைப்படத்தை எடுத்துக் காட்டினார். இந்தக் கதை ஓவியம் பற்றி மட்டுமல்ல வரலாறு பற்றிய ஒரு தத்துவ பிரச்சினையையும் எடுத்து விளக்குகிறது.

**உண்மையை பிரதிநிதித்துவம் செய்தல் அல்லது படியெடுத்தல், வரலாற்றை எழுதுதல் தொடர்பான தத்துவார்த்தப் பிரச்சினையும் கூட. இந்தியாவில் வரலாற்றுப் பாடநூல்களை எழுதுதல் பற்றிய விவாதத்துடன் தொடர்புபடுத்தி இது பற்றி ஆராய்வோம்.**

புகைப்படம் உண்மையை (Reality) படம்பிடிக்கிறது அல்லது தன்னுள் அகப்படுத்துகிறது (Capturing) என்றும், ஓவியம் உண்மை பற்றிய ஒரு விளக்கம் (Interpretation) என்றும் நாம் கருதுகிறோம். இரு பரிமாணத்தில், குறுகிய வடிவில் ஒருவரை அகப்படுத்தும் புகைப்படம் எந்தளவுக்கு உண்மையை யதார்த்தத்தை பிரதிபலிக்கிறது. மனதில் புதைந்திருக்கும் வெளித்தெரியாத சில விதிகளில் தான் புகைப்படத்தை உண்மையின் பிரதிநிதித்துவம் என்று நம்மைக் கருத வைக்கிறதா?

உண்மையை பிரதிநிதித்துவம் செய்தல் அல்லது படியெடுத்தல் (Representation) வரலாற்றை எழுதுதல் தொடர்பான தத்துவார்த்தப் பிரச்சினையும் கூட. இந்தியாவில் வரலாற்றுப் பாடநூல்களை எழுதுதல் பற்றிய விவாதத்துடன் தொடர்புபடுத்தி இது பற்றி ஆராய்வோம்.

### I

வலதுசாரி இந்துத்துவ சக்திகள் இந்தியாவின் வரலாற்றை எப்படி எழுத வேண்டும் என்பது பற்றி சில கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

நினைவுக்கு எட்டாப் பழமை முதல் "இந்து" சமூகம் இந்தியாவில் இருந்து வருகிறது. அதன் சாதனைகள் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அது சமத்துவமும் தாராண்மை மனப்பாங்கும் உடைய சமூகம். 19ம் நூற்றாண்டில் வட இந்தியாவின் உயர் வகுப்பு உயர்சாதி இந்துக்களின் வாழ்க்கை, நடைமுறை, விழுமியம் என்பனவற்றின் சாயலில் அமைந்த இந்துப் பண்பாடு பண்டை நாள் முதல் தொடர்ச்சியாக ஒரே உருவில் மாறாமல் இருந்து வருகிறது. இந்து சமூகத்தின் நம்பிக்கைகளில் விலக்கப்பட்டவை எவை? விலக்கப்படாதவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவை? என்பன பற்றிய எண்ணங்கள் மாறாமல் அன்று முதல் இன்று வரை தொடர்கின்றன.

சாதிப் பிரிவினை இந்து சமூகத்தில் பெரிய ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை என்றும் இவர்கள் கூற விரும்புகிறார்கள். இந்து சமூகத்தின் எதிரிகள் முஸ்லிம்கள், அவர்கள் "இந்தியாவிற்கு வெளியில்" இருந்து வந்தவர்கள். இஸ்லாம் இந்துப் பண்பாட்டுக்கு அந்நியமானது என்றும் இவர்கள் கூறுகிறார்கள். இவை யாவும் வரலாற்று நூல்களில் சொல்லப்பட வேண்டும். இவற்றுக்கு மாறான ஒரு இந்திய வரலாற்றுச் சித்திரம் உண்மையைத் திரித்திக் கூறுவதாக இருக்கும் என்பதே இவர்கள் கருத்து.

இடதுசாரி லிபரல் கொள்கையுடைய சமூக விஞ்ஞானிகளும் வரலாற்றாய்வாளர்களும் வேறு விதமான கருத்து உடையவர்கள். இவர்கள் "மதச்சார்பின்மை" என்ற கோட்பாட்டுடன் தம்மை அடையாளம் செய்பவர்கள். இவர்களின் கருத்துப்படி வெளியே தெரியும் தோற்றங்களை விட்டு சமூகத்தின் கட்டமைப்பு எத்தகையது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது சமூக அதிகாரம் யார் கையில் இருந்தது? அதிகாரத்தின் அடிப்படையிலான சமூக உறவுகள் எப்படி இருந்தன? என்ற கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும். இக் கேள்விகளைப் புறக்கணித்து வரலாற்றை எழுத முடியாது என இடதுசாரிகளும் லிபரல்களும் கருதுகின்றனர். சுருங்கக் கூறின் வலதுசாரிகள், இடதுசாரிகள் என்ற இருசாரருமே இந்தியா முன்பு எப்படி இருந்தது? எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும்? என்ற விடயத்தில் முரண்பட்டு நிற்கிறார்கள். முரண்பாட்டின் களமாகவும் அரங்கமாகவும் "வரலாறு" இன்று அமைந்துவிட்டது.

NCERT என்ற அமைப்பு இந்தியாவில் பாடத்திட்டம் வகுத்தல், பாடநூல்கள் எழுதுதல் தொடர்பான விடயங்களில் அதிகாரமுடைய அரச நிறுவனமாகும். இதன் பணிப்பின் படி பாடநூல்களில் இருந்து பல பகுதிகள் நீக்கப்பட்டன. பண்டைய இந்தியர்களிடை மாட்டிறைச்சி உண்ணும் பழக்கம் இருந்தது. புராணங்களில் உண்மைக்குமாறான கற்பனைகள் இருந்தன. பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் பிராமணரின் நடைமுறைகளை எதிர்த்துத் தோன்றிய சமயங்கள் ஆகிய கருத்துக்கள் பி.ஜே.பி ஆட்சிக்கு வருவதற்கு முந்திய காலத்துப் பாடநூல்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. இவை "ஒரு பக்கச்சார்பானவை" "குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவை" சமூகத்தின் "உணர்வுகளைப் புண்படுத்தக் கூடியவை" என்று NCRT கருதியது. அதன் தலைவராக இருந்த ராஜ்புத் பின்வரும் கருத்துப்பட ஒரு முறை குறிப்பிட்டார். "ஒரு குழந்தை தன் வீட்டில் கற்றுக்கொள்ளும் விழுமியங்களுக்கும் பாடசாலையில் கற்கும் விழுமியங்களுக்கும் இடையில் வேறுபாடு இருக்கக் கூடாது. இளம் பிள்ளைகள் சுயமாகச் சிந்திக்கத் தெரியாதவர்கள். அவர்களுக்கு உண்மையை, உண்மையல்லாதனவற்றில் இருந்து வேறுபடுத்தி அறியத் தெரியாது. ஆகவே பாடநூல்கள் கவனத்துடன் எழுதப்பட வேண்டும்."

வலதுசாரி இந்துத்துவத்தின் இந்தக் கருத்தில் என்ன நியாயம் இருக்கிறது? ஒரு அநீதியான சமூக அமைப்பில் மேலோங்கி நிற்கும் விழுமியங்களை ஆட்டுமந்தை மனப்பான்மையுடன் ஏற்றுக்கொள்ளும் முறையில் தான் கல்வி இருக்க வேண்டுமா? "வீட்டில்" கற்றுக்கொண்ட விழுமியங்கள் சரியல்ல என்று குழந்தையை உணர வைப்பதுதானே சிறந்த கல்வியாக இருக்க முடியும். இருப்பதை விமர்சனத்திற்கு உட்படுத்துவது கேள்வி கேட்பது "மன உணர்வுகளைப் புண்படுத்துவது". இவை யாவும் சமூக மாற்றத்திற்கான கல்வியின் அத்தியாவசிய அம்சங்கள் அல்லவா? இடதுசாரிகள் முகாமில் உள்ளவர்களிடமோ அல்லது லிபரல்களிடமோ கூட வரலாறு பற்றிய கல்வி எப்படி இருக்க வேண்டும் என்பதில் தெளிவானதும் ஒருமித்ததுமான கருத்து இல்லை. வலதுசாரி இந்துத்துவ வரலாற்று ஆசிரியர்களுக்கு எதிராக இடதுசாரிகள் முன்வைக்கும் வாதத்தில் வரலாறு "விஞ்ஞானபூர்வமானதாக" இருக்க வேண்டும் "பகுத்தறிவுக்குப்" பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்பதை அழுத்திக் கூறுகிறார்கள். அகவயப்பட்டதல்லாத "புறவயநோக்கு", பக்கச்சார்பு இன்மை, நடுநிலை, பிரச்சார நோக்கு இன்மை ஆகியவற்றையும் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். "பொய்களைக் களைதல்" "உண்மையைச் சொல்லுதல்" என்ற வகையில் இடதுசாரிகளின் வாதங்கள் அமைகின்றன. சுமித் சர்க்கார் இவ்விதம் எழுதுகிறார்.

"பகுத்தறிவுச் சிந்தனையை தூண்டுவதாக கல்வி இருத்தல் வேண்டும். இல்லாவிடில் அதனால் பயனில்லை. பொதுப்புத்தியின் பாற்பட்டவையும் குழந்தைகள் ஏற்கனவே சமூகத்தில் இருந்து உள்வாங்கிக் கொண்டனவுமான விடயங்களை பரிசீலனைக்கும் கேள்விக்கும் உட்படுத்த அவர்களை பழக்கப் படுத்த வேண்டும். சூரியன் உலகைச் சுற்றி வலம் வருகிறது என்று அவர்கள் எண்ணுவதை மாற்றி பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்று விளங்க வைக்க வேண்டும்".

சுமித் சர்க்காரின் இந்தக் கூற்றில் ஒரு பிரச்சினை உள்ளது. வரலாறு எழுதுதல் பற்றிய

> இடதுசாரி லிபரல் கொள்கையுடைய சமூக விஞ்ஞானிகளும் வரலாற்றாய்வாளர்களும் வேறு விதமான கருத்து உடையவர்கள். இவர்கள் "மதச்சார்பின்மை" என்ற கோட்பாட்டுடன் தம்மை அடையாளம் செய்பவர்கள். இவர்களின் கருத்துப்படி வெளியே தெரியும் தோற்றங்களை விட்டு சமூகத்தின் கட்டமைப்பு எத்தகையது என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

## உண்மையான வரலாறை எழுதுவது எப்படி?

நிவேதிதா மேனன்

இந்துத்துவ வலதுசாரிக் கோட்பாட்டை எதிர்க்கும் சர்க்கார் இயற்கை விஞ்ஞானத்தில் இருந்து ஏன் உதாரணம் காட்ட வேண்டும்? வரலாறு சர்ச்சைக்கு இடமில்லாத உண்மைகளைக் கூற முடியாது. அவ்வாறு கூறும் தகுதி வரலாற்றுக்குக் கிடையாது என்பதா இதன் அர்த்தம்? வானியல் எப்படி ஒரு விஞ்ஞானமோ அது போன்று தான் வரலாறும் ஒரு விஞ்ஞானம் தான் என்று நாம் வாதிடமுடியுமா? அல்லது வரலாற்றின் விஞ்ஞானத்தன்மையில் சந்தேகம் உள்ளதா?

வரலாற்று பாட நூல்கள் பற்றி இந்தியாவில் எழுந்த விவாதத்தின் பின்னணியில் எதிர்கால இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய இரு விதமான எண்ணப்போக்குகள் உள்ளன என்று கூறலாம்.

"திறந்த ஜனநாயகத்தன்மையுள்ள மதச்சார்பற்ற அரசை உருவாக்க வேண்டும். இதற்கு சிவில் சமூகத்தில் நவீன விஞ்ஞான நோக்குமுறை (Modern Sientific Outlook) வளர்க்கப்பட வேண்டும் என்பதே இடதுசாரிகளதும் லிபரல்களினதும் விருப்பம். இதற்கு மாறுபட்டதான "குறுகிய பிரிவினைவாத "தலிபான் மயப்படுத்திய இந்து அரசு ஒன்றை" கட்டமைப்பதை வலதுசாரிகள் விரும்புகிறார்கள். இடதுசாரிகளின் "திறந்த, ஜனநாயக, மதச்சார்பற்ற" அரசுக்கும் விஞ்ஞான உலக நோக்கு முறைக்கும்" இடையே நெருங்கிய சம்மந்தம் இருப்பதாக இடதுசாரிகளும், லிபரல்களும் எண்ணுகிறார்கள். ஆனால் "ஜனநாயகம்" "தாராண்மை" "திறந்த தன்மை" (Openness) ஆகிய அரசியல் விழுமியங்களுக்கும் "விஞ்ஞான நோக்குக்கும்" தெளிவான தொடர்பும் உறவும் இருக்கிறதா, விஞ்ஞான நோக்கு உடையவர் ஜனநாயக விழுமியத்தை ஏற்பவரா என்ற கேள்விகள் எழுகின்றன. பிரிவினைவாத, இனவாத சக்திகள் கூட தமது வாதங்களுக்கு " விஞ்ஞான நோக்கு முறையைத் தானே துணைக்கு இழுக்கின்றன? அணுவாயுத உற்பத்தி திட்டங்கள் ஜனநாயக செயல் முறைகள், பொறுப்புச் சொல்லும் கடப்பாடு ஆகியவற்றை மூர்க்கத்தனமாக உதறித் தள்ளுவதன் மூலம் தானே நிறைவேற்றப்படுகின்றன?

சர்தார் சறோவர் அணைக்கட்டுத் திட்டத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் தம் சொந்த வாழிடங்களை விட்டு அகற்றப்பட்டனர். "விஞ்ஞானம், தொழில்நுட்பம், அபிவிருத்தி" என்ற சொல்லாடலின் துணையுடன் தான் இக் கைங்கரியம் நிறைவேற்றப்படுகிறது. ஆகவே விஞ்ஞானத்தை யாரும் துணைக்கு அழைக்கலாம். "விஞ்ஞானநோக்கு" என்பதற்கும் "சகிப்புத்தன்மைக்கும்" கூட எந்த வித சம்மந்தமும் இல்லை.

விஞ்ஞானத்தையும் வரலாறுஎழுதுதலையும் தொடர்புபடுத்துவதன் ஒரே நோக்கம், இந்தியா முன்னர் எப்படி இருந்தது என்பது பற்றிய பொய்மைகளை மறுப்பதற்கும் உண்மைகளை நிரூபிப்பதற்கும் துணையாக விஞ்ஞான பூர்வமான சான்றுகளைத் தருவதுதான். சரி இது தான் வரலாற்றின் நோக்கமென்றால் "வரலாற்று உண்மைகள்" என்பவை எவை? வரலாறு எழுதும் போது இரு வகை உண்மைகள் சம்மந்தப்படுகின்றன.

1) சம்பவங்கள் - குறித்த சம்பவம் நிகழ்ந்ததா? அப்படியாயின் எங்கே, எப்பொழுது நிகழ்ந்தது.

2) அந்த சம்பவத்தின் பொருள் என்ன? அர்த்தம் என்ன என்பது பற்றிய விளக்கங்கள் வியாக்கியானங்கள்

வரலாறு எழுதும் போது இந்த இரண்டு நிலைகளிலும் "உண்மை" இருத்தல் வேண்டும். உதாரணத்திற்காக அமார்த்திய சென் அவர்களின் கூற்று ஒன்றைப் பார்ப்போம். "அசோகன், அக்பர் என்ற இரண்டு பேரும் இந்தியாவின் மிகப் பெரிய சக்கரவர்த்திகள். அவர்களில் ஒருவர் பௌத்தர் மற்றவர் முஸ்லிம்" இந்தக் கூற்றின் மூலம் சென் விளக்க விரும்பிய கருத்துத் தெளிவானது.

இந்தியா ஒரு போதும் இந்து ராச்சியமாக இருக்கவில்லை. பல்வித பண்பாடுகளையும் சமயங்களையும் தன்னகத்தே கொண்ட பன்மைத்துவப் பண்பாடு இந்தியாவில் இருந்து வந்துள்ளது என்பதைத் தான் சென் கூற முனைகிறார். ஆனால் இந்துத்துவ வலதுசாரி ஒருவர் இதே கூற்றைக் கூறி இந்துக்கள் தம் சொந்த மண்ணை ஆள்வதற்கு ஒரு போதும் அனுமதிக்கப்படவில்லை என்று கூறலாம் அல்லவா? ஆகவே சங்பரிவாரின் ஜனநாயக விரோதமான நியாயமற்ற வாதங்களைத் தவறு என்று நிரூபிப்பது அவசியம் தானா? எதற்கு விஞ்ஞானத்தின் துணையை நாம் நாட வேண்டும்? இந்தியா எப்படி இருந்தது என்ற வரலாற்றைச் சரியாக எடுத்துக் கூறுவது மூலம் தான் இந்தச் சண்டையில் நாம் வெற்றியடையப் போகிறோமா? பப்ரி மஸ்ஜித் இருக்கும் இடத்தில் முன்பு ஒரு கோவில் இருந்தது உண்மைதானா என்பதற்கு உச்ச நீதிமன்றின் தீர்ப்பை நாம் எல்லோரும் எதிர்பார்த்தபடி இருக்கிறோம் என்றால் "உண்மை"யின் மீது எங்களுக்கு உள்ள நம்பிக்கையின் அளவை இது எடுத்துக் காட்டுகிறது.

வரலாற்றாசிரியர்களும், புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும் நீதிமன்றின் முன்னால் சான்றுகளை சமர்ப்பிக்கத் தவறினால் நீதிமன்றத்தின் தீர்ப்பு எவ்வாறு இருக்கும்?

**விஞ்ஞானத்தையும் வரலாறு எழுதுதலையும் தொடர்புபடுத்துவதன் ஒரே நோக்கம், இந்தியா முன்னர் எப்படி இருந்தது என்பது பற்றிய பொய்மைகளை மறுப்பதற்கும் உண்மைகளை நிரூபிப்பதற்கும் துணையாக விஞ்ஞான பூர்வமான சான்றுகளைத் தருவதுதான். சரி இது தான் வரலாற்றின் நோக்கமென்றால் "வரலாற்று உண்மைகள்" என்பவை எவை?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக விரோதமான, நீதி நியாயமற்ற செயல் ஒன்றை சங்பரிவார் செய்கிறது. இதனை எதிர்ப்பதற்கு "விஞ்ஞானம்" "உண்மை" என்பன தான் வழிமுறைகளா?

## II

வங்காளிகளுக்கு ஒரு வரலாறு வேண்டும். அது இல்லாவிட்டால் வளர்ச்சி இல்லை.

( பங்கிம் சந்திர சட்டர்ஜி, 19ம் நூற்றாண்டு)

"ஒரு மக்கள் கூட்டம் தனது வரலாறு பற்றி மீண்டும் உணர்வுடையவர்களாய் மாறுதல் என்பது அவர்களின் மறுபிறப்புக்குச் சமமானது".

Ji Ki – Zerbo 1957

ஒரு தேசம் வரலாற்றில் நுழைவது தேச விடுதலைப் போராட்டத்தின் விளைவால் தான்.

பிரான்ஸ் பனன் 1959

"19ம் நூற்றாண்டு வரை தமக்கென்று ஒரு வரலாற்றைப் படைத்திராத வரலாறில்லாத மக்கள் இப்போது வரலாற்றில் இடம் கேட்பது ஏன்?" என்ற கேள்வியை எழுப்பும் டிபேஷ் சக்கரவர்த்தி பின்வருமாறு பதில் கூறுகிறார். "வரலாறு என்பது ஒரு அறிதல் முறை. 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இருந்து எற்றுமதி செய்யப்பட்ட அறிதல் முறையாகிய இந்த வரலாறு மூலம் தான் நாம் எம்மை எமது தேசத்துடனும் அதன் உயர் பிரதிநிதியான அரசுடனும் இணைத்து அடையாளம் காணுகிறோம். ஆகவே வரலாறு, வரலாற்று உணர்வு, ஒரு தேசம் என்ற உணர்வு ஆகியன தேசிய அடையாளத்தின் மிகப் பிரதானமான அம்சங்களாகும். "வரலாறு ஓர் ஆத்மார்த்த சக்தி. சமூகங்கள் இந்த சக்தியை உள்வாங்கிக் கொள்வதால் தான் தங்கள் உணர்வையும் அடையாளத்தையும் கட்டமைக்கின்றன." தேசிய அடையாளம் பற்றிய தேடலில் இருந்து வரலாறு என்பதைப் பிரித்துப் பார்க்க முடியாது. ஆகவே வரலாற்று ஆராய்வை இரண்டு வகை நோக்கங்கள் முன்னெடுத்துச் செல்கின்றன. அவை:

அ) அடையாளத்தை காணும் வழி

ஆ) புறவயமான உண்மையின் தேடல்

இந்த இரண்டு நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை.

உண்மைகள், அல்லது ஆதாரங்கள் என்றால் என்ன? (இதனை facts என்று ஆங்கிலத்தில் கூறுவர்). உண்மைகள் மீன்கடைக்காரனின் மேசையில் போடப்பட்டிருக்கும் மீன் போன்றதல்ல. ஆழங்காண முடியாத விசாலமான சமுத்திரத்தில் நீந்தித் திரியும் மீன்கள் போன்றவை தான் வரலாற்று உண்மைகள். (தரவுகள், ஆதாரங்கள் உட்பட) வரலாற்று ஆசிரியன் எதனைப் பிடிக்கிறான் என்பது சிலவேளை தற்செயலானது. (மீன் பிடிக்கப்படுவது தற்செயலானது போல்) ஆனால் சமுத்திரத்தின் எந்தப் பக்கம் நோக்கி அவன் தன் படகை செலுத்திப் போகிறான், எந்த மீனைத் தேடுகிறான் என்பதைப் பொறுத்துத் தான் எந்த மீன் அகப்படும் என்பது தீர்மானமாகிறது. வரலாற்றாய்வாளனும் எந்த உண்மையை, தரவை, ஆதாரத்தைத் தேடிப் போகிறானோ அது தான் அவனுக்குக் கிடைக்கிறது. வரலாறு என்றால் விளக்கம் கொடுப்பது தான் ( History Means Interpretation) இவ்விதம் ஈ.எச். கார் (E.H.Carr) கூறியிருக்கிறார். ஆகவே வரலாற்றாசிரியன் என்ன கேள்விகளைக் கேட்கிறானோ அதற்கேற்றபடி தான் உண்மைகள் அவனிற்குக் கிடைக்கின்றன. கடந்த காலம் ஏராளமான ஆதாரங்களையும் உண்மைகளையும் வைத்திருக்கிறது. இவையெல்லாம் வரலாற்றாசிரியன் கையில் ஒரே சமயத்தில் கிடைக்கும் முறையில் இல்லை. சரியான கேள்விகளைக் கேட்கும் போது வரலாறு என்ற ஆழ்சமுத்திரத்திலிருந்து அவை வெளிப்படும். ஒரு உண்மையை அல்லது ஆதாரத்தை மறுப்பதற்கு இன்னொரு உண்மை அல்லது ஆதாரம் துணை செய்யும். வரலாறு என்பது பல உண்மைகளுக்கு இடையிலான சச்சரவும், விவாதமும் ஆகும்.

இடதுசாரிகளையும், லிபரல்களையும் பொறுத்த வரை புறவயமான உண்மையைத் தேடி அடைதல், உண்மையை நிறுவுதல் என்ற வகையில் வரலாறு தொடர்பான பிரச்சினையை அணுகுதல் பயனற்றது. வரலாறு என்பது உண்மையின் தேடல் மட்டுமல்ல ஒரு அரசியல் தலையீடும் (Political Intervention) ஆகும். இந்த அரசியல் தலையீட்டை நாம் எப்படிச் செய்யப் போகிறோம்.

இந்தியா எப்படியான நாடாக இருக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோமோ அந்த இலக்குக்கும் கொள்கைகளுக்கும் சார்பான சான்றுகளும் உண்மைகளும் வரலாற்றில் தாராளமாக உள்ளன. இந்தியா பல்லினக் கலாசாரத்தைக் கொண்ட நாடாக எல்லா மக்களுக்கும் சமத்துவத்தை, நீதியை வழங்கும் நாடாக, மதரீதியாக மக்களை பிளவு படுத்தாத நாடாக இருக்க வேண்டும். இதற்கான ஆதாரங்கள் வரலாற்றில் தாராளமாக கிடைக்கவே செய்கின்றன. இந்த ஆதாரங்களைத் தேடுவதுதான் வரலாற்றாய்வின் பிரதான பணி.

*தமிழில் :சண்*

ஒரு தேசம் வரலாற்றில் நுழைவது தேச விடுதலைப் போராட்டத்தின் விளைவால் தான்.

பிரான்ஸ் பனன் 1959



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் காலனித்துவம் : சில விளக்கங்கள்

பேராசிரியர்.சச்சிதானந்தம் சுகிர்தராஜா

கணிதம், கலை, சமூகவியல், வரலாறு என அனைத்திலும் காலனிய சிந்தனை நீக்கம் நிகழ வேண்டும்" "இவ்வாறு இனம் மற்றும் வர்க்கம் (RACE AND CLASS) எனும் இதழின் ஆசிரியர் ஏ. சிவானந்தன் ஒரு நேர்காணலின் போது குறிப்பிட்டர். இந்தக் கருத்து மிக முக்கியமானது. குறிப்பாக எம்மைப் போன்ற காலனிய ஆக்கிரமிப்பு ஆதிக்க அதிகாரப் பிடிக்குள் அகப்பட்ட நாடுகள், காலனிய ஆதிக்கச் சிந்தனை, மனபாங்குகள், எண்ணப்போக்குகள் நடத்தைகள் போன்றவற்றில் இருந்து மக்களை விடுவிப்பதே பின் காலனியத்தின் முக்கிய பணி என்று கூறலாம்.

கடந்த நூற்றாண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட புத்தாக்கக் கோட்பாடுகளில் (innovative theories) பின் நவீனத்துவம், பின் காலனித்துவம் முக்கியமானவை. இந்த இரண்டும் மிக தீவிரமாக அலசப்பட்டவை. இந்த இரண்டும் பலரை, எரிச்சலடையச் செய்தவை. இந்த இரண்டுமே இலகுவில் புரிந்து கொள்வதில் சிக்கலானவை. அதே நேரம் இந்த இரண்டுமே காத்திரமான விமரிசனத்துக்குள்ளானவை. நாம் இங்கே பின் காலனித்துவம் பற்றி பார்ப்போம்.

காலனிய காலத்தில் ஏற்பட்ட எதிர்ப்பு அல்லது ஆட்சேபனை நவீனத்துவத்தின் கட்டுக்குள் அமைந்திருந்தது. இப்போது விடுதலைக்குப் பின்னர் ஏற்பட்டிருக்கும் மற்றும் எதிர்ப்பு ஆட்சேபனை பின் நவீனத்துவத்தினால் தாக்கம் பெற்றது.

பின் காலனித்துவம் என்றதும் முதல் எழும் கேள்வி பின்காலனித்துவம் எப்பொழுது ஆரம்பமாகியது. நாம் நினைப்பது போல் ஆங்கிலேயக்கொடி இறக்கப்பட்டு சிறிலங்கா கொடி ஏற்றபட்ட நாளிலோ அல்லது புதிதாக விடுதலையடைந்த நாடுகள் தமக்கென்று சொந்த விமானசேவையை ஆரம்பித்த போதோ அல்லது தங்களுக்கென்று தேசியகீதத்தை உருவாக்கிய போதோ அல்ல. காலனிய ஆட்சிக் காலத்தில் காலனிய பிரஜைகள் காலனிய ஆட்சியாளர்களுக்கெதிராய் எப்பொழுது குரல் கொடுக்கத் தொடங்கினார்களோ அப்பொழுதே பின் காலனித்துவம் ஆரம்பமாயிற்று.

தென்னாட்டு விடுதலைப் போராட்ட வீரர்கள் அலகமுத்து, புலித்தேவர், கட்டபொம்மன், மருதுபாண்டியன், ஊமைத்துரை, வ.உ. சிதம்பரப்பிள்ளை போன்றோர் வெள்ளையர் ஆட்சிக்கெதிராகக் கலகம் செய்து ஆட்சியாளர்களை எப்பொழுது சஞ்சலபடுத்தினார்களோ அப்பவே பின் காலனித்துவம் தொடங்கிற்று. இந்தியா சுதந்திரம் அடையுமுன் சுப்பிரமணியபாரதியார் "ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோமென்று" எப்ப பாடினாரோ அன்றே பின் காலத்துவத்தின் எதிர்ப்புக் குரல் ஒலிக்கத்தொடங்கியது. ஆனால் அப்போதைய அந்த ஐரோப்பியப் பிடி எதிர்ப்புக்கும் தற்போது நடைபெறுகிற பின் காலனித்துவ எதிர்ப்புக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது.

காலனிய காலத்தில் ஏற்பட்ட எதிர்ப்பு அல்லது ஆட்சேபனை நவீனத்துவத்தின் கட்டுக்குள் அமைந்திருந்தது. இப்போது விடுதலைக்குப் பின்னர் ஏற்பட்டிருக்கும் மற்றும் எதிர்ப்பு ஆட்சேபனை பின் நவீனத்துவத்தினால் தாக்கம் பெற்றது. இந்த பின்நவீனத்துவத்திற்கும் பின்காலனித்துவத்திற்கும் உள்ள இணைபுகள் இணைவின்மைகள் பற்றி சற்றுப்பின்னர் பார்க்கலாம்.

பின்காலனித்துவம் என்பது ஏகாதிபத்திய எதிர்ப்புக்குணம் கொண்ட ஒரு அரசியல் பார்வை. இது ஒரு எதிர்ப்பு நிலை உணர்வு. அதாவது காலனிய ஆக்கிரமிப்பைச் சிக்கல்படுத்திய கலகக்காரர்கள் மேற்கொண்டுள்ள ஒரு மனச் சார்பு. அதாவது சாத்தியக் கூறான எதிர்ப்பு மனோநிலை. இருப்பினும் எல்லாக் காலகட்டத்திலும் விழிப்புள்ள மக்கள் அல்லது இயக்கங்கள் அதிகாரத்துக்கும் அடக்கு முறைக்கும் எதிராகவும், உரிமைக்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அப்போதே எதிர்ப்பின் குறியீடாக பின்காலனித்துவம் செயல்படுவதைப் பார்க்கலாம். அது ஒரு எதிர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையைத் தூண்டிவிடும் கருத்துநிலை. ஒரு விதத்தில் பின்காலனித்துவத்தில் காணப்படும் "பின்" "பின்பு" "பின்னர்" போன்றவை கால எல்லைக்குள் அடங்குவதில்லை. அவை காலத்தை விஞ்சி நிற்பவை, மீறியவை. இன்னொருபுறம் பின் காலனியத்தின் செல்வாக்கும் வீச்சும் குறுகிய குறிக்கப்பட்ட காலவரைக்குள் மட்டும் கட்டுப்பட்டவை அல்ல.

பொதுவாக பின்காலனித்துவம் ஒரு அறிவுக்கோட்பாடாக ஆரம்பிக்கவில்லை. இது முதலில் ஆட்சேபனை அல்லது விடுதலை இலக்கியமாகத்தான் உருவானது. இது எதிர்ப்பு இயக்கங்களுடன் தொடர்புடையவர்களால் உருவாக்கப்பட்டது. அதாவது ஐரோப்பிய கருத்துநிலையிலிருந்து அதன் செல்வாக்குப்பிடியிலிருந்து விடுவிக்கவே பின்காலனித்துவம் ஒரு சிந்தனைக் கருவியாக பயன்படுகிறது. மேலும் இது ஒடுக்கப்பட்டோரின் ஆயுதமாகவே பயன்படுகிறது. இதற்கு விடுதலை எழுத்தாளர்கள் சிலர் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக ஆபிரிக்க மற்றும் மேற்கிந்திய எழுத்தாளர்கள் முக்கியம் வகிக்கிறார்கள் இதில் ஃபான்னன், மிமி, காப்றால், சி. எல். ஆர் ஜேம்ஸ் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடைய விடுதலை எழுத்துக்கள் வேறுபட்ட அரசியல் கலாசார சூழலில் படைக்கப்பட்டாலும் இவர்களது எழுத்தின் முக்கிய குறிக்கோள் ஐரோப்பிய எழுத்துகளில் காணப்பட்ட கீழைத்தேசியர்களைப் பற்றிய தகவற் குழப்பங்களையும், தப்பான பரப்புரைகளையும் திருத்தம் செய்வதும், திருப்பி எழுதுவதுமே ஆகும். அதாவது விடுதலை எழுத்தாளர்களுடன் இலக்கியப் படைப்பாளிகளும் ஐரோப்பிய கலாசார திணிப்புக்கு ஈடுகொடுக்கும், சரிப்படுத்தும் இலக்கியப்படைப்பை எதிர் கொண்டார்கள். இவர்களில் ஆபிரிக்காவைச்சேர்ந்த சினுவா ஆட்சிபெ, வோல்லெ சொயிங்கா, கூகி வா தியாங்கோ மற்றும் மேற்கிந்திய டொர்க்வால்காட், ப்ரேட்த் வைபிட் ஆகியோர் முக்கியமானவர்கள்.

20ம் நூற்றாண்டில் தோன்றிய திறனாய்வுகளில் அமைப்பியல், பின்அமைப்பியல், பெண்ணியம், பின் நவீனத்துவம் போன்றவை மேற்கத்திய சமூக, அரசியல், கலாசார கேள்விகளுக்கும் முரண்பாடுகளுக்கும் விடை தேடும் முயற்சியாக உருவாயின. இதற்கு மாறாக பின்காலனித்துவம் மூன்றாம் மண்டலப் பிரச்சினைகளுக்கு விமோசனம் தேட 1960களில் அமெரிக்காவில் குடியேறிய முன்னை நாள் பிரஜைகளால் அறிமுகப்படுத்தப்பட்டது எனலாம்.

பின்காலனித்துவம் ஒரு ஆட்சேபனை அல்லது ஒரு எதிர்ப்பு இலக்கியமாகத்தான் முதலில் பொதுக் கவனத்துக்குக்கிட்டியது. எண்பதுகளில் தான் பின்காலனித்துவம் ஒரு திறனாய்வுக் கோட்பாடாக மாறி பல்கலைக் கழக பண்டிதர்களின் அறிவார்ந்த திறனாய்வாக மாறியது. இந்த மற்றத்திற்கு மூன்று காரணங்கள் உண்டு. ஒன்று, அறுபதுகளின் பிற்பகுதியிலும் எழுபதுகளின் துவக்கத்திலும் அணிசேராநாடுகள் காலனித்துவத்துக்குக் கொடுத்துவந்த எதிர்ப்புகுரல் குறைந்து வந்தது. அந்த எதிர்ப்பு வெளியை நிரப்பவே பின்காலனித்துவம் எதிர்ப்பின் குறியீடாக உருவானது. இரண்டு, எண்பதுகளில் சோவியத் ஒன்றியம் உடைந்ததின் விளைவாக சோசலிசக் கருத்துக்கள் சிதறடிக்கப்பட்டு அவற்றின் வலு குறைந்தது. கம்யூனிசம் தளர்ச்சியடைந்தது. ரீகன், தட்சர் ஊக்கப்படுத்திய தனியார் சந்தை மேலாட்சிக்கு எதிராக இன்னுமொரு மார்க்சிய நோக்கு நிலை சார்பான சிந்தனை முறை தேவையாயிற்று. இதற்கு பின்காலனித்துவம் அறிமுகப்படுத்திய ஆய்வு முறை துணை புரிந்தது. மூன்று, எண்பதுகளில் இன அடையாள அரசியல் முனைப்படைந்தது. அமெரிக்கப் பல்கலைகழகக் வளாகங்களில் ஏற்பட்ட மாணவர் கிளர்ச்சி காரணமாக இனக்குழு சார்ந்த கற்கைகள் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இக்கட்டத்தில் ஆப்பிரிக்க -அமெரிக்கர் காலத்தின்- அமெரிக்கர் நாட்டு அமெரிக்கர் போன்ற சொல்லாடல்களை அறிமுகப்படுத்தினர். இந்த இனவிளக்கவியலை (Identity hermeneutics) துல்லியப்படுத்தவும் அதைச் சர்ச்சைப்படுத்தவும் ஒரு விளிம்புநிலைச் சிந்தனை, அறிவுக் கோட்பாடு தேவையாயிற்று. இந்த இடத்தை பின்கானித்துவம் பூர்த்தி செய்தது.

நாம் இங்கு கவனிக்க வேண்டிய செய்தி உண்டு. அதாவது 1940 களில் இந்தியா சிறிலங்கா போன்ற நாடுகள் சுதந்திரம் அடைந்தன. 1960, 1970களில் ஆபிரிக்க நாடுகள் விடுதலை அடைந்தன. ஆனால் பின்காலனித்தும் ஒரு கோட்பாடாக எண்பதுகளில் தான் உருவாகியது. இந்த நீண்ட இடைவெளி பின்காலனித்துவத்துக்கு காலனித்துவம் பற்றியும், சுதந்திரத்திற்கு பிறகு ஆட்சிக்கு வந்த தேசிய அரசியல் அமைப்பு பற்றியும் நிதானமாக மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதாவது, உடனடியாக பின்காலனித்துவம் காலனி ஆட்சியினுடைய எதிர்மறைப் பண்புகள் பற்றி மட்டும் பேசவில்லை. மாறாக பின் காலனித்துவம் காலம் தாழ்த்தி வந்ததினால் இனம், சாதி, சமயம், மொழி சார்ந்த தேசிய அரசியலுக்கு மாறாகவும் எதிர்ப்பு வியாக்கியானம் செய்தது. வெள்ளைநிறஆட்சி போய் மேல்மட்ட உயர் கறுப்புநிற, பழுப்பு நிறத்தினரிடம் ஆட்சியிருந்தது. இதனால் தேசியஒற்றுமை, தேசநலன் போன்ற எடுத்துரைப்பில்

பின்காலனித்துவம் ஒரு ஆட்சேபனை அல்லது ஒரு எதிர்ப்பு இலக்கியமாகத்தான் முதலில் பொதுக் கவனத்துக்குக்கிட்டியது. எண்பதுகளில் தான் பின்காலனித்துவம் ஒரு திறனாய்வுக் கோட்பாடாக மாறி பல்கலைக் கழக பண்டிதர்களின் அறிவார்ந்த திறனாய்வாக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட, ஒதுக்கி வைக்கப்பட்ட "மற்றதுகள், அல்லது மற்றமைகள்" (other) பெண்கள், தலித்துக்கள், மலையக மக்கள், ஆதிவாசிகள், ஓரின ஈர்ப்பாளர்கள் போன்றோரின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்குரிய கௌரவத்தையும் மரியாதையையும் தர முனைந்தது. குறிப்பாக அவர்களுக்குரிய இருப்பையும் நியாயத்தையும் வலியுறுத்தியது. இதனால் பின்காலனித்துவம் காலனித்துவத்தையும் மற்றும் பேரினவாத தேசியத்தையும் தீவிரமாக விமர்சனம் செய்தது. அவற்றைச் சிக்கல்படுத்தியது.

## பின் காலனியத்தின் மும்மூர்த்திகள்

பின் காலனித்துவம் ஒரு அறிவியல் கோட்பாடாக அங்கீகாரம் பெறுவதற்கு மூவர் முக்கியமானவர்கள். இவர்களுள் ஒருவர் பாலஸ்தினிய ஆங்கில இலக்கியப் பேராசிரியரான எட்வர்ட் செய்த் அடுத்த கொமிபாபா, காயத்திரி ஸ்பீவக் ஆகியோராவர். இந்த இருவரும் இந்தியர்கள். இந்த மூவரும் பின் காலனித்துவத்தின் மும்மூர்த்திகள் என்று சிலரால் செல்லமாக அழைக்கப்படுகின்றனர். இவர்களது எண்ணங்களை வரையறுப்பது அவ்வளவு சுலபமல்ல. செய்த்தும் காயத்திரியும் பின்காலனித்துவத்தை ஒரு எதிர்வாசிப்பு உபாயமாக பயன்படுத்துகின்றனர். கொமிபாபா பின் காலனியத்தன்மையை ஒரு நிலைப்பாடாகக் கருதுகிறார். இந்தநிலைமை மேற்குலகின் தொடர்பால் நவீன வளர்ச்சிகள், சவால்களை உள்வாங்கிக் கொண்டமையால் ஏற்பட்டது எனலாம். இந்த இருப்பு நிலை உணர்த்தும் அடையாளங்களாவன: பின்காலனித்துவப் பிரஜைகளிடையே காணப்படும் கலாசார, தாக்கத்தால் காலனியப்படுத்தப்பட்டவர்கள் மேற்கொள்ளும் ஒப்புப் போலிப்பண்பு (mimicry), மற்றும் புலம்பெயர்வதால் ஏற்படும் எல்லை நிராகரிப்பு போன்ற அம்சங்கள் கொமிபாபா சொல்லும் அடையாளங்கள் ஆகும்.

பின் காலனித்துவம் ஒரு அறிவியல் கோட்பாடாக அங்கீகாரம் பெறுவதற்கு மூவர் முக்கியமானவர்கள். இவர்களுள் ஒருவர் பாலஸ்தினிய ஆங்கில இலக்கியப் பேராசிரியரான எட்வர்ட் செய்த் அடுத்த கொமிபாபா, காயத்திரி ஸ்பீவக் ஆகியோராவர்.

எட்வர்ட் செய்த் எழுதிய "orientalism" மற்றும் "Culture and Imperialism" போன்ற நூல்கள் முக்கியமானவை. இதில் "ஓரியண்டலிசம்" பின்காலனியத்தின் அடிப்படை பாடநூலாகக் கருதப்படுகிறது. 18ம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மேற்கு நாட்டு அறிஞர்களிடையே கீழைத்தேசங்களின் மரபுகள் வாழ்க்கை முறைகள், சமயங்கள், இலக்கியங்கள் போன்றவை குறித்த தேடலும் விழிப்புணர்வும் ஏற்பட்டது. இதன் விளைவாக கீழைத்தேசவியம் (ஓரியண்டலிசம்) என்ற அறிவியல் சொல்லாடல் உருவாகியது.

கீழைத்தேசவியத்தின் முக்கிய பணி மற்றமைகளை பற்றிய சங்கதிளைச் சேகரிப்பது, அவைகளைப் பற்றி அதிகாரமான கூற்றுகளைத் தெரிவிப்பது, அவற்றைப் பணியவைத்து ஐரோப்பிய கண்காணிப்புக் குள்ளாகுவது, மற்றும் இலக்கியங்கள், இதிகாசங்கள், வரலாறுகள் யாவற்றையும் கட்டுப்படுத்தி மேற்கத்தையரின் முகாமைக்குக் கொண்டு வருவது போன்றவை ஆகும். செயித்தின் இந்த நூல் அறிமுகப்படுத்திய இன்னொரு முக்கிய அம்சம் காலனியத்துக்கும் புலமைக்கும் இடையேயான மிக நெருங்கிய தொடர்பு பற்றியதாகும். அதாவது அதிகாரத்துக்கும் அறிவுக்கும் உள்ள உறவை ஏனைய வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக்காட்ட மறந்ததை செயித் சுட்டிக்காட்டினார். அதிகாரத்துக்கும் அறிவுக்கும் உள்ள இந்த இணைப்பு எப்படி பாடப்புத்தகங்களிலும், அரசாங்க ஆவணங்களிலும், மறைப்பணியாளர்களின் அறிக்கைகளிலும், மனிதப்பண்பியல் ஆராய்ச்சிகளிலும், வரலாற்றெழுத்தியலிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ புகுத்தப்பட்டிருப்பதை செயித் தெளிவாக உதாரணங்களுடனும் குறிப்புகளுடனும் அம்பலப்படுத்தினார். இதுவரை மேன்மையான கௌரவமான முயற்சியாகக் கருதப்பட்ட கீழைத்தேசவியம் செய்த்தின் இத்தகைய வெளிப்படுத்தலுக்குப் பிறகு அது ஒரு தகாத அவமரியாதையான சொல்லாக வழங்கப்படலாயிற்று.

## பின் காலனியத்தின் சேவைகள்: திருத்தி எழுத்துதல், மீளுருவாக்கம் செய்தல்

பின்காலனியத்தை எளிதில் வகுத்துரைக்க முடியாது. ஒவ்வொரு கற்கைநெறிகளும் தங்களுடைய துறைசார் எல்லைகளுக்கும், இலக்குகளுக்கும், நோக்குகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப பின்காலனியத்தை வரையறை செய்திருக்கிறார்கள். முதலில் ஆங்கிலத்துறையில் ஆரம்பித்து வரலாறு, சட்டம் என்று தொடர்ந்து விளையாட்டுத்துறை வரை இப்பொழுது எட்டியிருக்கிறது. இந்தத் துறைகளிடையே பின்காலனித்துவம் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிலவினாலும், சிலஅம்சங்கள் அல்லது சில முன்னீடுபாடுகள் பொதுவானவை முக்கியமாக ஆங்கிலேயரின் ஆட்சி மறைந்து போனாலும் கீழைத்தேச வல்லுனர்கள் உருவாக்கிய வகைப்பாடுகள், சித்திரிப்புகள் யாவற்றையும் திருத்தி எழுதுவதில் இவர்கள் யாவரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள்

பின் காலனியத்தின் முதன்மைப் பணிகளாக நாம் பின்வருவனவற்றைக் கூறலாம்: மேற்கத்தியமே முழுப் பிரபஞ்சம் என்ற ஆளும் கருத்திலிருந்து, எண்ணத்தி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து மேற்கத்தியதையும் ஒரு பிராந்தியமாக்குவது, கீழைத்தேய வல்லுனர்களால் திரித்து எழுதப்பட்ட வரலாறுகளில் குறுக்கீடு செய்து கேள்விக் குரியதாக்குவது, இலக்கியங்களிலும் ஆவணங்களிலும் பொதிந்து கிடக்கும் சமய இன தப்பெண்ணங்களையும் வாதங்களையும் மற்றும் காலனியக் கருத்துகளையும் அம்பலப்படுத்துவது, ஆங்கில பேரிலக்கியங்களின் மைய நிலையை தளர்த்தி ஐரோப்பியர் அல்லாத தென்னாசிய, ஆபிரிக்கா, லத்தின் அமெரிக்க இலக்கியங்களுக்கும் சமநிலை கொடுத்து அவை இரண்டையும் இணைத்து வாசிப்பது, ஒதுக்கி வைக்கப்பட்டோரின் இலக்கியங்கள், வரலாறுகளை முன்னிலைப்படுத்துவது, அவர்களது தனித்துவத்தையும் இருப்பையும் கௌரவத்தையும் பேணிவைப்பது, காலனித்துவ நாடுகளின் எழுத்தாளர்கள் தங்களின் இனம், மொழி, கலாசாரம் பற்றிய படிப்பு முறைகளை அல்லது படிப்பு வார்ப்புக்களை காலனிய சக்திகளிடமிருந்து மீட்க முயல்வது, ஐரோப்பியர் படைத்த தங்களைப் பற்றிய சிதைந்த, சாதிசார்ந்த சித்திரிப்புகளை மீளப்பெறுவது, அதனை மறு பரிசோதனை செய்வது, பரிசோதிப்பதும் மற்றும் அனைத்தையும் கேள்விக்குள்ளாக்குவது.

மேற்குறித்தவை யாவும் பின் காலனியத்தின் அடிப்படை அம்சங்கள் ஆகும். இவற்றின் அடிப்படையில் தான் பின்காலனித்துவத்தின் பிரயோகம், அறிதல்சார் பண்பு விளக்கப்படுகிறது. தொடக்கத்தில் ஐரோப்பிய மேலாண்மைக்கு எதிராக ஆரம்பித்த பின் காலனித்துவ சொல்லாடல் சமீபத்தில் தன் கவனத்தை தேசிய சமாச்சாரங்களிலும் திசை திருப்பியிருக்கிறது. அதாவது தேசியம் தூண்டிவிடும் **தீவிர** இனவழி, சமயவழி, மொழிவழி ஆகிய தேசியங்களைக் கூட சந்தேகப்படுத்துகிறது. மேலும் குறுகிய மனப்பான்மையான தேசியம் எப்படித் தொழிட்படுகிறதென்று பின்காலனித்துவம் ஆழமாக அக்கறைப்படுகின்றது.

பின் காலனித்துவம்அறிமுகப்படுத்திய வாசிப்பு, அறிதல் முறைமையில் இரண்டு எமது கவனத்துக்குரியன. ஒன்று; பிரதிகள் அப்பாவித்தனமானவையல்ல. (Texts are not innocent) அவற்றை வாசிப்பவர்களும் அப்பாவிகள் அல்ல. அதாவது இந்த இரண்டுமே பல்வேறு கருத்துநிலை மூட்டைகளுடன் - கட்டுகளுடன் - செயல்படுபவை. ஆகையினால் எந்த வாசிப்பும் சிரானதல்ல, சிக்கலானவை, குழப்பானவை. அடுத்து, பின் காலனித்துவம் புகுத்திய வாசிப்பு முறைமை Contrapuntal reading ஆகும். இந்த வார்த்தை இசை சம்பந்தப்பட்டது. இதற்கு துல்லியமான தமிழ் வார்த்தை கிடைக்காத படியால் இப்போதைக்கு நாம் "எதிர்ப்பு ஒழி வாசிப்பு" என்று சொல்லிக் கொள்வோம். இதை செயித் தான் பின்காலனித்துவச் சொல்லாடலில் புகுத்தினர்.

ஒரு பிரதியை ஒற்றைத்தொனியில் தனித்துவாசிக்காமல், அதை பல் தொனிகளுடன் மற்றப் பிரதிகளுடன் இணைத்து வாசிப்பதாகும். இந்த முயற்சி முந்திய ஒப்பியலுக்கும் செயித் அறிமுகப்படுத்திய எதிர்ப்பு ஒழி வாசிப்புக்கும் வித்தியாசமிருக்கிறது. அதாவது பழைய ஒப்பியல் நோக்கில் மேற்கத்தைய இலக்கியங்கள் அளவு கோலாகவிருந்தன. இவற்றின் ரசனை, நடைக்கேற்ப மற்ற நாட்டு இலக்கியங்கள் எடை போடப்பட்டு அவற்றின் குறைகள், பலவீனங்கள் எடுத்துக் கூறப்பட்டன. அதே போல் சமய பிரதிகளில் கிறிஸ்தவ வேதம் மதிக்கப்பட்டு ஏனைய சமயப் பிரதிகள் எள்ளல் செய்யப்பட்டன. ஆனால் செயித் கூறும் எதிர்ப்பு ஒழி வாசிப்பு எல்லா பிரதிகளையும் சமமாக பொருள் கருத்து வேறுபாடின்றி ஒரே தளத்தில் பார்வை இடுகிறது. இந்த வாசிப்பு அறிதல் முறை எல்லாப் பிரதிகளையும் ஒரே மட்டத்தில் வைத்துப் பார்க்கிறது. இவ்வாறு பார்க்கும் பொழுது இப்பிரதிகளில் காணப்படும் இடைவெளிகள், நிசப்தங்கள், மௌனங்கள், முறிவுகள், பிளவுகள் போன்றன வெளிக்கொணரப்படும்.

உதாரணத்திற்கு Margaret Mitchel லின் Gone with the wind நாவலையும் Alice Randall எழுதிய The wind Done Gone யும் இணைத்து வாசிக்க வேண்டும். முதல் நாவல் அமெரிக்க உள்நாட்டுப் போர் பற்றி வெள்ளையர் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது. இதில் விடுதலையடைந்த துடுக்குமிக்க கறுப்பர்கள் பற்றி நிறைய வசவுகள் உண்டு. இந்த நூல் திரைப்படமான போது கதாநாயகனின் இனவாத செயல்கள் நீக்கப்பட்டாலும் நாவலில் இவரது வெள்ளைய வெறி விபரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இவர் தீவிர இனவாத இயக்கமான கறுப்பர்களை எதிர்க்கும் KKK கூட்டங்களின் அணிவகுப்புகளில் கலந்து கொண்டிருக்கிறார். ஆனால் ஆலிஸ் டாண்டலின் கறுப்பர்களின் பார்வையில் மிட்சலின் படைப்புப் பின்புலங்களையும் அதே கதாபாத்திரங்களையும் வைத்தே அமெரிக்க உள்நாட்டுப் போரை எழுதியுள்ளார். இதன் மூலம் மறு எழுத்துச் செய்வது மட்டுமல்ல மங்கலாயிருந்த இனத்துவேசங்களையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

அது போல் Joeseph Convad இன் 'Hear of Darkness' யும் Chinua Achebe யில் 'Things Fall Apart' யும் ஒப்பிட்டு வாசித்தால் ஆப்பிரிக்க பற்றி ஒரு மொத்தமான சித்திரம் கிட்டும். இப்படி ஐரோப்பியக் கருத்துகளை மையப்படுத்தும் மற்றமைகளை (மற்றதுகளை) இழிவுபடுத்தும் எழுத்துகளையும் கால-

**பின்காலனியத்தை எளிதில் வகுத்துரைக்க முடியாது. ஒவ்வொரு கற்கைநெறிகளும் தங்களுடைய துறைசார் எல்லைகளுக்கும், இலக்குகளுக்கும், நோக்குகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப பின்காலனியத்தை வரையறை செய்திருக்கிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சிதானந்தம்
சுகிர்தராஜா

னிய படிவார்ப்புகளை மீளுருவாக்கம் செய்யும் எழுத்துகளை இணைத்து வாசிக்கும் போது ஒரு பரந்த சிக்கலான, முரண்பாடுகள் நிறைந்த சித்திரிப்பு கிடைக்கக் கூடும். இந்த முரண்பாடு பற்றி பிரக்ஞை, தேடல் இக்கியங்கள் வரலாறுகள் என்பன நேர்த்தியானவை அல்ல என்று அறிந்து கொள்ள அவசியமாகிறது.

## காலனிய பிரஜையின் தோற்றங்கள் செயற்பாடுகள்

பின் காலனித்துவத்தின் கணிப்பு என்னவென்று நாம் மேலும் புரிந்து கொள்ள முற்படும் பொழுது பிரானஸ் ஃபனான் காலனித்துவப் பிரஜை மூன்று மட்டங்களில் செயல்படுகிறார் எனக் கூறுவதை நோக்கலாம். காலனிய பிரஜை முதல் கட்டத்தில் எஜமானனது அல்லது ஆட்சியாளர்களின் நடத்தைகள், சிந்தனைகள், போக்குகள், உணவு, உடை போன்றவற்றை முழுமூச்சுடன் கடைப்பிடித்து அவைகளால் அகவயப்படுத்துதல் (Internalize) ஆகும். இதற்கு ஒரு உதாரணம் அ. மாதவையா எழுதிய தில்லைக் கோவிந்தனில் வரும் கதாநாயகனின் சிற்றப்பன். இவருடைய ஐரோப்பிய பாவனையை நாவல் இப்படி வர்ணிக்கிறது: "ஐரோப்பிய ஆடையை எப்பொழுதும் தரிப்பது, அவர்களைப் போலவே சிலவேளைகளில் தொப்பி அணிவது... தன் நாட்டினைக் கறுப்பு மனிதர் என்று வைவது. அது மட்டுமல்ல, கூஷதான் ரயில் வண்டியிலே பிரயாணஞ் செய்த போது, வேறொரு பிரயாணி தன்னை யூர்ரேஷியன் என்று நினைத்ததே அவனுக்கு அளவில்லாத சந்தோசம்". மேலும் சிற்றப்பன் அவனுடைய மனைவியையும் வெள்ளைக்காரி போல் மாற்ற முயன்றான்: "கிறிஸ்தவச்சியைப் போல சட்டையும் தாவணியும் போட்டுக் கொண்டு தன்னுடன் வெளியே சென்று ஆண் மக்களோடு கலகலப்பாய் இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினான்." வெளித்தோற்றம் மட்டுமல்ல சிந்தனை கூட மேலாட்சி புரியும் கருத்துக்களை திருப்திப்படுத்தவும் பிரதிபலிக்கவும் செய்கின்றன.

> பின் காலனித்துவம் அறிமுகப்படுத்திய வாசிப்பு, அறிதல் முறைமையில் இரண்டு எமது கவனத்துக்குரியன. ஒன்று, பிரதிகள் அப்பாவித்தன மானவையல்ல. அவற்றை வாசிப்பவர்களும் அப்பாவிகள் அல்ல.

குருகுகதாசபிள்ளை எழுதிய வரலாற்றில் கும்பினியாரை எதிர்த்த கட்டபொம்மானையும் புலித்தேவரையும் இராஜதுரோகிகள் என்று சாடினார். ஆஷ்துரையைச் சுட்ட வாஞ்சிநாதனை பாதகன் என்று சாடினார். வ.உ.சிதம்பரம்பிள்ளை கைதான போது எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தியவர்கள் மீது ஆட்சியாளர்கள் துப்பாக்கிச் சூடு செய்த போது இந்த நடத்தையை நியாயப்படுத்தினார். அது மட்டுமல்ல அவருடைய நூல் ஆங்கிலேய அரசு நீடுழிகாலம் நிலைத்து நிற்குமாறு பிரார்த்திக்கிறோம் என்று முடிவடைகிறது. இந்தக் கட்டத்தில் காலனியை பிரஜை ஆட்சியாளர்களிடம் மிக விசுவாசமுள்ளவராகக் காட்சியளிப்பார். காலனிய ஆட்சி காருண்யமானது நேசசக்தியானது என்று கருதுவார். இந்த ஆங்கில மோகத்திலிருந்து நாளடவில் விடுபட்டு காலனியப் பிரஜை நாட்டு வழக்கத்துக்குத் திரும்புகிறார். இதுவரை மேற்கே பார்த்தவர்கள் இனி கிழக்கே பார்க்கத் தொடங்கினார்கள்.

இந்த இரண்டாம்கட்டத்தில் தான் வேர் தேடும் படலம் ஆரம்பமாகிறது. ஆங்கிலப் பிடியிலிருந்து அப்பாற்படுத்தப்பட்ட மக்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள மேற்கொண்ட முயற்சியே இந்த வட்டார வேர் தேடுதல் ஆகும். இந்தக் கட்டத்தில் வட்டார வழக்குகள் வட்டார செயல்கள், வட்டார உணர்வுகள் எல்லாம் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டன. நவீனத்தின் தாக்கத்தால் கிண்டல் செய்யப்பட்டு உள்ளூர் மறுமலர்ச்சிக்கு முட்டுக்கட்டை என்று கருதப்பட்ட பிராந்திய எண்ணங்கள், மரபுகள் யாவும் வாழ்வை விசாலப்படுத்தும் என்ற அவாவுடன், எதிர்பார்ப்புகளுடன் மீளுருவாக்கம் செய்யப்பட்டன. இந்த வட்டார மாயை அதிக நாள் நீடிக்கவில்லை. ஒன்று மாதவையாவின் தில்லைகோவிந்தன் கூறியது போல் "பலகாலமாய் வேரூன்றிய பழக்கவழக்கங்களின் ஆதிக்கமும் ஆசைகளின் வேகமும் என்னைப் பின்னுக்கு இழுத்தன." மற்றது நாம் நினைப்பது போல் நாட்டுப்புறப்புராணங்களும், கதைகளும், பழமொழிகளும், கூத்துகளும், ஒப்பாரிகளும் அப்பாவித்தனமாவை அல்ல. அவை சாதித்துவேசத்தை தூண்டுகின்றன, வெளிப்படுத்துகின்றன. மேலும் அவை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தி சாதிநிலையை நியாயப்படுத்துகின்றன.

மூன்றாவது கட்டம், இந்த மேற்கத்தேயம், பிராந்தியம் என்ற எதிடைகளை (binary) மீறி விடுதலை இலக்கியம் படைப்பதாகும். இது ஆங்கில மயக்கத்திலிருந்து விடுபட்டு உள்ளூர்த் தன்மைகளிலிருந்து நீங்கி உருவாகும் பண்பு கொண்டது எனலாம். ஃபனான் கூறும் இந்த மூன்றாவது கட்டத்தைத்தான் பின் காலனித்துவம் வரவேற்கிறது. ஆட்சியாளர்/அடிமை, மேற்கத்தையம், கீழைத்துவம், வெள்ளையர் /கறுப்பர், எஜமான்/வேலையாள், ஆண்/பெண், பெரும்பான்மை/சிறுபான்மை போன்ற முரண்களையும் இரட்டை நிலைகளையும் கடந்து விடுதலைஇலக்கியம் உருவாக்குவது தான் இந்த மூன்றாம் கட்டம். இந்த எதிரிடைகள் முற்றிலும் எதிர்ப்பை மையமாகக் கொண்டவை. நம்முடைய வரலாறுகள் சாஸ்திரங்கள் ஒன்றோடொன்று கலந்தவை, தொடர்புபட்டவை. ஆகவே இந்த எதிரிடை நோக்கு விரோதத்தையும் எதிர்ப்பையும் முக்கியப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சிதானந்தம் சுகிர்தராஜா

ஆங்கில மேலாண்மை நிந்திப்பதுமல்ல அது போல் தாய்நாடு மேல் அலாதி அன்பு பாராட்டுவதுமல்ல. இது இருசாராருக்கும் இடையே இடைவெளியை அதிகமாக்கிறது. ஆட்சியாளர்/அடிமை என்ற பாகுபாடுகளைக் கடந்து அவற்றை இணைத்து ஆக்கபூர்வமான கலப்புருவாக்கத்தை உருவாக்குவது தான் இந்த விடுதலை இலக்கியத்தின் நோக்கமாகும். பல முரண்பாடான தொகுப்புமுறையே இந்த விடுதலை இலக்கியமாகும் இந்த கலப்புருவாக்கத்தன்மையை கொமிபாபா மூன்றாம் வெளி (Third space) என்கிறார்.

## பின்காலனித்துவம் பின்நவீனத்துவம் ஒற்றுமைகள் ஒவ்வாமைகள்

பின் காலனித்துவம் பின் நவீனத்துவம் ஆகிய இரண்டு கோட்பாடுகளுக்கும் இடையே நெருக்கமான ஊடாட்டங்கள் இணைவுகள் விடுபடல்கள் உண்டு. இந்த இரண்டுமே எதிர்ப்பை மையமாகக் கொண்ட திறனாய்வுகள். இரண்டுமே உலகப் பொதுமையான மையம் ஒன்று இருப்பதை மறுக்கின்றன. வட்டார வழக்காறுகள், வட்டாரப் பண்பாடுகளை ஊக்குவிக்கின்றன. முக்கியத்துவம் கொடுக்கின்றன. இந்த வட்டார மையப்படுத்தல் பின் நவீனத்துவத்தினதும் பின் காலனித்துவத்தினதும் முக்கிய வெளிப்பாடுகள். இந்த இரண்டுமே மற்றவைகளையும் ஒதுக்கி வைக்கப்பட்டோரையும் முன்னிலைப்படுத்துகின்றன.

மேலும் ஆக்கங்கள் படைப்புக்களுக்கு உரித்தான அர்த்தங்கள் யாவும் இலக்கியப் பிரதிகளுக்கு உள்ளே, இயல்பாகவே உள்ளடங்கியிருப்பவை அல்ல என்று பின்காலனித்துவமும் பின் நவீனத்துவமும் கருதுகின்றன. மேலும் வாசகருக்கும் படைப்புகளுக்கும் இடையே ஏற்படும் அளவளாவுதல், ஊடாட்டம் மூலமே அர்த்தம் உருவாகிறது எனலாம். இலக்கியப் பிரதி தானே எல்லா அர்த்தங்களையும் வெளிப்படுத்துவதில்லை.

வாசிப்பவருக்கும் பனுவலுக்கும் இடையே நடைபெறும் பேரம் மூலமே அர்த்தம் நிச்சயிக்கப்படுகின்றது. பின்காலனித்துவம் பின்நவீனத்துவம் ஆகிய இரண்டுமே படைப்புகளின் அர்த்தம் கட்டுருவாக்கம் செய்யப்பட்டவை என்று நம்புகின்றன. பிரதிகளில் சொல்லாதவை, விடுபட்டவை, மறைக்கப்பட்டவை மௌனப்படுத்தப்பட்டவை, வாயடைக்கப்பட்டவை யாவற்றையும் கட்டுடைத்துப் பார்க்கின்றன. இவற்றில் தீவிரமாக ஈடுபடுகின்றன. மேலும் பிரதிகளின் அர்த்தங்கள் உறுதியற்றவை. எப்போதும் முடிவடையாததாக நிச்சயமற்றவையாகவே இருக்கின்றன. தீர்மானமான கருத்துக்களை தெரியப்படுத்துவதில்லை. ஆகவே பின்காலனித்துவமும் பின்நவீனத்தவமும் படைப்புகளைக் கட்டுடைப்பதில் முன்னுக்கு நிற்கின்றன. ஆனால் சில விடயங்களில் பின் காலனித்துவம், பின்நவீனத்துவத்தின் சில கருத்துகளிலிருந்து தன்னை விலக்கிக் கொள்கிறது. முக்கியமாக பின்நவீனத்துவம் பெரும்விபரிப்புக்கள் (Grand narratives) (பெரும் கதையாடல்கள்) எல்லாம் இறந்துவிட்டன என்று சொல்கிறது. நமக்குப் இப்போ பரிச்சயமான உதாரணங்களுடன் இதைப் புரிந்து கொள்வோம்.

திராவிடர் என்ற பெரும் விபரிப்பை எடுத்துக் கொள்வோம். இப்பொழுது இது சிதறுண்டு சிதைந்து போயிருக்கிறது. திராவிடம் முக்கியப்படுத்திய தமிழர் என்ற பொது அடையாளத்துக்குள் உள்வாங்கப்பட்ட தேசிய முன்னுரிமைகளால் (national priorities) அடையாளங்கள் இப்பொழுது தலைதூக்கி நிற்கின்றன. தங்கள் தனித்தன்மையை மானிட கௌரவத்தை இருப்பை மீளுருவாக்கம் செய்து அவற்றின் உன்னதங்களை வலியுறுத்துகின்றன. அது போல் "ஈழத்தமிழர்" என்ற பெரும் விபரிப்பு உடைந்து போய் யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், முஸ்லிம் தமிழ் என்ற மாவட்ட இனவேறுபாடுகள் முளைத்திருக்கின்றன. இந்த பிளவுகள் வரவேற்கத்தக்கவையானாலும் இந்த முறிவுகள் ஏற்படுத்தும் எதிர்மறை விளைவு இதர மக்களின் துன்ப துயரங்களில் காட்டும் அக்கறையின்மையாகும். ஆனால் பின்காலனித்து விளக்கவியலாளர்கள் பெரும் விபரிப்புகளுக்கு இன்னும் சில வேலைகள் காத்திருக்கின்றன என்கிறார்கள். முக்கியமாக "விடுதலை" என்ற பெரும் விபரிப்புக்கு இன்னும் இன்னும் பல வேலைகள் உண்டு.

பின்நவவீனத்துவம் மேற்கு நாடுகளின் கலாசார உந்துதல்களினால் உருவாகியமையாகையால் விமோசனம், "விடுதலை" ஒரு பெரும் கதையாக அங்கே முடிந்திருக்கலாம். ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் விடுதலை என்ற பெரும் விபரிப்பு இன்னும் முழுமை பெறவில்லை. பெண்கள், தலித்துகள், ஆதிப்பழங்குடியினர், இலங்கை மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் ஆகியோரின் விடுதலை இப்பொழுது தான் மிகத்தாமதமாகவும் மெதுவாகவும் நடந்து கொண்டிருக்கிறது. அவை இப்பொழுது தான் பேசுபொருளாக்கப்பட்டு வருகின்றன.

இன்னுமொரு வித்தியாசம் யாதெனில், பின்நவீனத்துவம் வரலாறு முடிந்து விட்டது என்கிறது. வரலாறுகள் எல்லாம் உண்மை நிகழ்ச்சிகள் அல்ல. அவையாவும் சொல்லாடல்களே

பின்நவீனத்துவம் மேற்கு நாடுகளின் கலாசார உந்துதல் களினால் உரு வாகியமையாகை-யால் விமோசனம், "விடுதலை" ஒரு பெரும் கதையாக அங்கே முடிந் திருக்கலாம். ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் விடுதலை என்ற பெரும் விபரிப்பு இன்னும் முழுமை பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது விபரிப்புகளே என்கிறது. புறவயமான உண்மைகளை (Objective Truth) அறிவது அரிது என்கிறார்கள் பின்நவீனவாதிகள். இவர்களுக்கு ஏ.சிவானந்தன் கூறுவது போல், "எல்லாம் நிலையற்றவை, சிதறுண்டவை, அலைந்து கொண்டிருப்பவை, பிரபஞ்ச உண்மைகள் என்பது இல்லை. பகுப்பாய்வை மறுத்து உரையாடல் புனிதப்பட்டுவிட்டது. கட்டமைப்பை மறுத்து கட்டுடைப்பு புனிதப்பட்டுவிட்டது. தற்காலிகத் தன்மை நிரந்தரத் தன்மையை மறுத்து புனிதப்பட்டுவிட்டது." வரலாற்றில் மறைக்கப்பட்ட மறுக்கப்பட்ட விளிம்புநிலை மக்கள் தாங்கள் பராதீனமாக்கப்பட்ட வரலாற்றை மீள்கண்டுபிடிப்புச் செய்து பதிவு செய்யும் இந்நாளில் "வரலாறு இறந்துவிட்டது" என்ற செய்தி மேற்கத்திய நாடுகளுக்குப் பொருந்தும். ஆனால் விளிம்புநிலை மக்களுக்கு அல்ல என்பது பின்காலனியச் சிந்தனை ஆகும்.

மற்ற வித்தியாசம் பெண்கள் தலித்துகள், மலையக மக்கள், ஒடுக்கப்பட்டோர், அடிநிலைமக்கள் யாவரும் தாங்கள் அந்நியமாக்கப்பட்டதை எதிர் படைப்புச் செய்கிறார்கள். இதன் மூலம் தங்களுடைய பெருமைகளுக்கும் பாரம்பரியங்களுக்கும் புதுஅர்த்தம் கொடுக்கும் போது "படைப்பாளி இறந்து விட்டார்" (author is dead) என்கிறது பின்நவீனத்துவம். இந்தக் கருத்துடன் பின்காலனித்துவம் வேறுபடுகிறது. இப்பொழுது தான் அடிநிலைமக்களின் படைப்பாளிகள் அடிநிலை மக்களுக்கு மனவலிமையையும் உறுதியையும் கொடுக்க முன்வருகிறார்கள்.

ஒடுக்கப்பட்டோர் தாங்கள் இழந்ததை மறு எழுத்தாக்கம் செய்யும் பொழுது "ஆசிரியர்" இறந்துவிட்டார் என்று பின்நவீனத்துவம் பிரகடனப்படுத்துகிறது. இவைகளைவிட பின்நவீனத்துவத்திற்கும் பின்காலனியத்துவத்திற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. அதாவது, பின்நவீனத்துவம் தர்க்க ரீதியான முடிவுகளை எடுக்கத் தயங்குகிறது. பின் நவீனத்தின் சார்புசாரா நிலையையும் முக்கியமாக அதன் அரசியலற்ற தன்மையும் போக்கும் மக்கள் சார்ந்த போராட்டங்களில் பங்கு பெற தயங்க வைக்கிறது. இதற்கு மாறாக பின் காலனித்துவம் மக்களின் பிரச்சினைகளில் ஈடுபடுவது மட்டுமல்ல அவற்றை அறமயப்படுத்துகிறது அரசியலாக்குகிறது.

## தமிழ் நாவல்களும் பின்காலனித்துவமும்

தமிழில் காலனித்துவத்தை விமரிசித்து எழுத்தப்பட்ட படைப்பிலக்கியங்கள் மிகக் குறைவு. சுதந்திரப் போராட்டத்தை ஒரு சில சிறுகதைகளும் நாவல்களும் மட்டுமே பதிவு செய்திருக்கின்றன என்று வெங்கட்சாமிநாதன் கூறுகிறார். இதில் சி.சு.செல்லப்பா எழுதிய "சத்தியாகிரகம்" சிறுகதையையும் அவருடைய மூன்றுபாக "சுதந்திர தாகம்" நாவலையும் சேர்த்துக் கொள்ளலாம். கல்கியின் "அலை ஓசைக்கும்" காலனியம் பின்புலமாக இருந்தாலும், நாவல் காதலைத்தான் பிரதானப்படுத்துகிறது. வெங்கட் சாமிநாதன் கருத்துப்படி "ஆக ஒரு நாட்டின் சுதந்திரப் போராட்டம் சுமார் அரை நூற்றாண்டு காலம் நீண்ட ஒரு மகத்தான சரித்திரம் அந்த நாட்டின் இலக்கியத்தில் சரிவர பதிவு பெறாமலேயே போய்விட்டதென்றால், அந்த நாட்டின் ஆத்மா ஏதோ வகையில் களங்கப்பட்டதாகத் தான் நினைக்கத் தோன்றுகிறது."

இதற்கு எதிர்மாறாக இந்த குறுகிய இருபது ஆண்டுக்குள் காயங்கள் பசுமையாகவும், இரத்தம் சொட்டிக் கொண்டிருக்கும் போதே தமிழீழப் போராட்டம் பற்றிய அனுபவங்கள் அபாயங்கள் எழுத்தில் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை கோவிந்தன் (இயற்பெயர் சூசைப்பிள்ளை றோபேட்) 1980 களின் இறுதியில் எழுதிய "புதியதோர் உலகம்". மற்றும் சமீபத்தில் வெளிவந்த சோபாசக்தியின் "தேசத்துரோகி" "ம்". மற்றும் சக்கரவர்த்தியின் "யுத்தத்தின்" இரண்டாவது பாகம் ஆக இந்தப் படைப்பாளிகளும் பின் காலனியத்தின் தாக்கத்தால் அல்லது இந்த திறனாய்வு விடயங்கள் தெரிந்து அறிவு நிலையின் அடிப்படையில் இந்த நூல்களை எழுதாவிட்டாலும் கூட அவர்களின் குறுக்கீட்டினால் குழப்பமாக்கப்பட்ட பிற்போக்கான, எல்லைப்படுத்தப்பட்ட தேசியம் - பின்காலனியத்தின் செயல்பாடுகளுடன் ஒத்துப்போகிறதுஎனலாம்.

ஒரு விசாலமான சமதன்மையுள்ள பார்வைகளுடன் "தமிழர்" என்ற ஒற்றை அடையாளத்துடன் ஆரம்பமாகிய தமிழீழ விடுதலைப் போராட்டம் எவ்வாறு நாளடைவில் இன, சமய, சாதி வேறுபாடுகளால் சிதறி சிதைந்து போவதை இந்த இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. "தமிழீழ" விடுதலையைக் காட்டிலும் அதனூடாகப் பெறவிருக்கும் சோசலிச மாற்றத்திலேயே நாம் கவனமாயிருக்கிறோம். என்று "புதியதோர் உலகம்" நாவலில் வரும் கீதா என்ற பாத்திரத்தின் கூற்று ஈழ விடுதலையின் ஆரம்பகால கனவை வெளிப்படுத்துகிறது உள் விமரிசனமாக எழுதப்பட்ட இந்த எழுத்துக்கள் துப்பாக்கி யார் கையில் இருந்தாலும் தமிழ் பேரினவாதியானாலும் சரி யாவரையும் சிங்களப் பேரினவாதியானாலும் சரி விமரிசிக்கத் தயங்கவில்லை.

மக்களுக்குகாக தூக்கப்பட்ட துப்பாக்கி குறுகிய தேசிய மனப்பான்மையையால் மக்களுக்கெதிராகத்

> **மக்களுக்குகாக தூக்கப்பட்ட துப்பாக்கி குறுகிய தேசிய மனப் பான்மையால் மக்களுக்கெதிராகத் திரும்பப்படுவதை கேள்விக்குள்ளாக்கு கின்றன. "தமிழ்த் தேசியம்" என்ற பெயரில் முஸ்லிம் மக்களுக்கெதிராக செய்யப்படும் கொடூரங்களை சக்கரவர்த்தியின் கதைகள் சித்தரிக்கின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பப்படுவதை கேள்விக்குள்ளாக்குகின்றன. "தமிழ்த் தேசியம்" என்ற பெயரில் முஸ்லிம் மக்களுக்கெதிராக செய்யப்படும் கொடூரங்களை சக்கரவர்த்தியின் கதைகள் சித்தரிக்கின்றன. உதாரணமாக சக்கரவர்த்தியின் ஒரு கதையில் வரும் ஒரு பெயர் தெரியாத தமிழ்விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர் முஸ்லிம்களுக்குக் கொடுத்த வேதனைங்களை இப்படிக் கூறுகிறார்: "முஸ்லிம் பெட்டைகளுக்கு முலைபுடிச்சன். அம்பாந்துறை சந்தியில் வச்சு ஹாஜிமார கொண்டு குவிச்சன்" ஆக குறுகியதும் சுயநலமும் கொண்ட தேசியத்தை விவாதப் பொருளாக்குவதுதான் பின்காலனியத்தின் முக்கிய இலக்கியச்செயற்பாடுகளில் ஒன்று. இந்த இலக்கியச் செயற்பாடுகளை இந்த நூல்களில் காணலாம்.

முடிவாக, பின்காலனித்துவம் ஒரு கோட்பாடாக பல்கலைக்கழகங்களில் தோன்றி கல்வித்துறை அமைப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டதால் அது இன்னும் சிந்தனை மட்டத்திலே தொழிற்படுகிறது. பின்காலனிய படைப்புகளில் காணப்படும் சிக்கலான மொழியும், மந்தமான நடையும் சாதாரண வாசகர்களை திக்குமுக்காட வைக்கிறது. பின்காலனித்துவ விளக்கவியலாளர்கள் சொல்லாடல்களில் புகுத்திய கலைச்சொற்கள் பெரும்பாலானவை அருவமான பொருள் கொண்டவை எனலாம். சிவானந்தன் கூறியது போல், "எந்த மக்களுக்காகப் போராடுகிறோமோ அந்த மக்களக்காக எழுதவே நாம் எப்போதும் எக்காலத்திலும் முயல வேண்டும்." பின்காலனித்துவ எண்ணங்கள், சிந்தனைகள் வகுப்பறை சொகுசுகளிலிருந்து வீதிகளுக்கும் வேர் மட்டங்களுக்கும் செல்ல வேண்டும். ஒரு அறிதல் கோட்பாட்டின் சிறப்பும் சாதனைகளும் அதன் சொல்வீச்சியிலும் பகுப்பாய்வுத்திறனிலும் கணிக்கப்படுவதில்லை. மாறாக அது ஏற்படுத்தும் சமூக அரசியல் விழிப்புணர்ச்சியின் மாற்றங்களில் தான் மதிப்பீடு செய்யப்படுகிறது.

பின்காலனியத்தின் வீச்சும் பரப்பும் அது ஏற்படுத்தும் தாக்கத்திலும் செயற்பாட்டிலும் பயனீட்டலிலும் தான் எடை போடப்படும். அறிவு மட்டத்திலிருந்து செயற்பாட்டு மட்டத்திற்கு அது இடம் பெயரத் தவறினால், தயங்கினால் மற்றைய திறனாய்வுகள் போல் பின்காலனித்துவமும் அதன் சக்தியையும், விசையையும் உள்ளாற்றலையும் உயிர்ப்பையும் இழந்து விடும், இழக்க நேரிடும். கோவிந்தனின் "புதியதோர் உலகம்" நாவலில் வரும் சங்கரின் அப்பா தன்னுடைய மகன் சங்கருக்குக் கூறிய வார்த்தைகளை பின்காலனியவிளக்கவியலாளர்கள் தங்களுடைய பணிக்கான எச்சரிக்கையாகவும் எடுத்துக் கொள்ளலாம்: "மகன் தத்துவங்களில் தேர்ச்சி பெற்றால் மட்டும் போதாது. நடைமுறைகளை யதார்த்த நிலைகளை, தந்திரோபாயங்களை சரிவரக்கணிக்கவும், தெரிந்திருக்க வேண்டும். எமது கட்சியிலிருந்த பலவீனம் இதுதான். பல முற்போக்கு தாபனங்களின் தோல்விக்கு இந்தப் பலவீனம் தான் காரணம்."

## குறிப்புகள்

1. யமுனா ராஜேந்திரன், "சிவானந்தனுடன் உரையாடல்" இன்னமொரு காலடி தமிழர் நலன்புரி சங்கம், லண்டன், 1998, பக்.81.
2. அ. மாதவையா தில்லைக் கோவிந்தன், திமைனி காரியாலயம் சென்னை. 1944. ப.130.
3. பேராசிரியர் வே. மாணிக்கம் நேர்காணல். கதை சொல்லி, மே - ஆகஸ்ட் 2006, ப.க (இணைய பதிப்பு)
4. அ.மாதவையா, பக்.128
5. சிவானந்தனுடன் உரையாடல் ப.80.
6. வெங்கட்சாமி நாதன் "பதிவாகும் சரித்திரங்கள்" காலம் 26, 2006, பக்.61
7. கோவிந்தன் "புதியதோர் உலகம்" விடியல் பதிப்பகம், கோவை, 1997 (1985) (இரண்டாம் பதிப்பு) பக் 165
8. சக்கரவர்த்தி "யுத்தத்தின் இரண்டாம் பாகம்", எக்ஸில், பிரான்ஸ், 2000, பக் 113
9. சிவானந்தனுடன் உரையாடல் பக் 77-78
10. கோவிந்தன் ப.155

*பின் காலனித்துவம் ஆங்கிலத்தை ஐரோப்பாவை ஒரு லென்ஸாக, கருத்தமைவு சட்டகமாக முன்வைக்கின்றது. பல உண்மைகளை எடுத்துக் கூறுகின்ற அதேவேளையில் வேறுபல அம்சங்களை பரிமாணங்களை மறைக்கின்றது. மொழிபெயர்ப்பு மூலமாக நாம் தாய்மொழி இலக்கியங்களை, இலக்கிய வரலாறுகளை, வரலாற்றெழுதியலாக வேறு கோணங்களிலிருந்து பார்க்கின்றோம். வெளியைப் பற்றி காலத்தைப் பற்றி, நிலத்தைப்பற்றி, நிலக்காட்சிகளைப் பற்றி மீண்டும் சிந்திக்கின்றோம். புத்தகங்களுடன் சேர்த்து மரபைப் பற்றி தொல்குடி சார்ந்ததைப் பற்றி autochthonous - நோக்கி எண்ணத்தைத் திருப்புகின்றோம். இவ்வாறு எண்ணக்கருத்துக்களை உருவாக்கும் போது பின்காலனித்தவத்திற்கும், மொழி பெயர்ப்பிற்கும், இலக்கியத்தின் வரலாற்றிற்கும் கருத்துநிலை நோக்குகளுக்கும் ஒரு முக்கிய மான தொடர்பு இருக்கின்றது தெளிவாகின்றது, பின் காலனித்துவம், தாய்மொழி, இலக்கிய வரலாறு, திறனாய்வுப் பயிற்சி, எண்ணக்கருமாதிரிகள் ஆகியயாவும் ஒன்றோடொன்று வெட்டுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.*

**செல்வா கனகநாயகம், காலம் 26, யூன் 2006**

**பின்காலனியத்தின் வீச்சும் பரப்பும் அது ஏற்படுத்தும் தாக்கத்திலும் செயற்பாட்டிலும் பயனிட்டலிலும் தான் எடை போடப்படும். அறிவு மட்டத்திலிருந்து செயற்பாட்டு மட்டத்திற்கு அது இடம் பெயரத் தவறினால், தயங்கினால் மற்றைய திறனாய்வுகள் போல் பின் காலனித்துவமும் அதன் சக்தியையும், விசையையும் உள்ளாற்றலையும் உயிர்ப்பையும் இழந்து விடும், இழக்க நேரிடும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியான் சமூகமும் பொருளியலும்

## கந்தையா சண்முகலிங்கம்

### நியூட்டன் குணசிங்க

*கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்தவர் கலாநிதி நியூட்டன் குணசிங்க. இவர் 1946 ஆம் ஆண்டில் நாவலப்பிட்டியில் பிறந்தவர். 1963 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவராகச் சேர்ந்து 1967இல் சமூகவியல் சிறப்புப் பட்டதாரி ஆனார். இவரை சுயமொழிக்கல்வித் திட்டத்தால் பயனடைந்த கிராம சிறு நகர்ப்புற இளைஞர் குழாத்தின் பிரதிநிதியாகக் கொள்ளலாம்.*

*நியூட்டனது குடும்பம், வாழ்க்கைச் சூழல், கல்விப் பின்புலம் ஆகியன ஆங்கிலமயமான உயர் தட்டு வாழ்க்கைச் சூழலைக் கொண்டிருக்கவில்லை. எனினும் இவர் தமது ஆங்கில மொழி அறிவைத் துரிதமாக வளர்த்துக்கொண்டார். சிங்கள மொழிப் பட்டதாரி ஒருவரின் அறிவுத்தரம் பற்றி ஆங்கிலம் கற்ற மத்திய தர வகுப்பினரிடமும் உயர் குழாத்திடமும் நிலவும் படிமத்திற்கு முற்றிலும் மாறுபட்ட ஒருவராக நியூட்டன் விளங்கினார்.*

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தைத் தமது சீவனோபாயமாகக் கொண்டவர்கள். இவ் விவசாயம் சிற்றளவினதாகவும் குடும்ப மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதாகவும் இருக்கின்றது.

*1970 களின் ஆரம்பத்தில் உயர் கல்விக்காக வெளிநாடு சென்றார். அவுஸ்ரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் எம்.ஏ பட்டம் பெற்றார். இதன் பின்னர் இங்கிலாந்தில் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்திலும், தொடர்ந்து சசெக்ஸிலும் கல்வி கற்றார்.*

*நியூட்டனுக்கு சுமார் பத்தாண்டுக்காலம் மேற்குலக கிளர்ச்சிப் புலமையாளர் வட்டங்களில் தம் வாழ்க்கையைச் செலவிடும் அரிய வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. 1970 — 1980 காலப்பகுதியில் இப்புலமை வட்டங்களில் விவாதத்திற்கும் ஆய்வுக்கும் உரியதாக இருந்த விடயங்கள் எமது கவனத்திற்குரியவை.*

*மூன்றாம் உலகு பற்றிய ஆய்வுகள் (Third World) பல்கிப்பெருகிய காலமாக 1970 களைக் குறிப்பிடலாம். பொருளியலில் தங்கியிருத்தல் (Dependency) பற்றிய மூன்றாம் உலகு சம்பந்தமான ஆய்வுகளில் கூட ஆய்வறிவுத் தங்கியிருத்தல் (Intellectual dependency) நிலவி வந்தது. இக் காரணத்தால் மொனாஷ், மன்செஸ்டர், சசெக்ஸ் போன்ற முதல் உலகின் அறிவு மையங்கள் கிளர்ச்சிப் புலமையாளர்கள் தொழிற்படும் இடங்களாயின.*

*குறிப்பாக சசெக்ஸ் பல்கலைக்கழகம் 1970 களில் அபிவிருத்திக் கல்விக்குப் புகழ் பெற்றதாக இருந்தது. இங்கு உள்ள IDS ( இன்ஸ்ரிரியூட் ஒவ் டெவலப்மன்ற் ஸ்ரடிஸ்) மூன்றாம் உலக மாணவர்கள் பலரையும் ஈர்த்தது. 1970 இல் இலங்கையின் வேலையின்மை பற்றி ஆராய இங்கு வந்த உலக தொழிலாளர் தாபனத்தின் (ILO) ஆணைக்குழுவின் தலைவராக இருந்த டல்லி சியர்ஸ் (Dudley Seers) என்னும் லிபரல் சிந்தனையாளர் சசெக்சைச் சேர்ந்தவரே.*

*மேற்குலகில் மூன்றாம் உலகு பற்றிய மார்க்சிய, நவ மார்க்சிய ஆய்வுகளில் அலைமோதிய ஒன்றோடொன்று தொடர்புபட்ட நான்கு விவாதங்களைக் குறிப்பிடலாம் . அவை :*

1. *தங்கியிருத்தல் .கோட்பாடு ( Dependency Theory) குண்டர் பிராங்கினால் உருவாக்கப்பட்ட இக்கோட்பாட்டாளர் தங்கியிருத்தல் பள்ளியினர் என அழைக்கப்பட்டனர்.*

2. *நிலமானியத்தில் இருந்து முதலாளித்துவத்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திற்கான மாற்றத்தின் இயல்பு பற்றிய டொப் - சுவீசி விவாதம் ( Dobb – Sweezy debate)*

3. *உற்பத்தி முறைமை பற்றிய விவாதம் (Modeof Production debate) மூன்றாம் உலகின் சமூக உருவாக்கத்தின் தன்மை யாது? அது முதலாளித்துவமா? நிலப்பிரபுத்துவமா? அல்லது அரை நிலப்பிரபுத்துவமா? எத்தகைய உற்பத்தி முறை தலைமை பெறுகின்றது. முன்னைய உற்பத்தி முறைகளின் ஊடிணைவு எவ்விதம் அமைந்தது ஆகியன விவாதத்திற்கு உட்பட்டன.*

4. *குடியான் சமூகம் ( Peasant Society) பற்றிய ஆய்வுகள். வியட்நாமிய விடுதலைப்போர், அது காலவரை கவனிக்கப்படாத குடியான் சமூகத்தின் இயல்புகள் பற்றிய புதிய அக்கறையை உண்டாக்கியது. எரிக் வூல்வ் (Eric Wolf) என்பவர் ஒக்டோபர் புரட்சி முதல் கியூபாவின் விடுதலை வரையான புரட்சிகள் சாரம்சத்தில் குடியான் யுத்தங்களே என விளக்கும் இருபதாம் நூற்றாண்டின் "குடியான் யுத்தங்கள்" என்ற நூலை எழுதினார். இத்துறை பற்றிய விழிப்புணர்வின் வெளிப்பாடாக குடியான் ஆய்வுகள் பற்றிய ஏடு ( Journal of Peasant Studies) என்னும் ஆய்வு இதழ் தோன்றியது.*

*மேற்குறித்த விவாதங்களின் பாதிப்புக்கள் சமூகவியல் மட்டுமன்றி பொருளியல் , வரலாறு, மானிடவியல், அரசியல் ஆகிய துறைகளிலும் ஏற்பட்டன. இக்கோட்பாடுகளை உள்வாங்கியும் செரித்தும் கொண்டவர் நியூட்டன். ஆனால் அவர் பொதுமைப்பட்ட கோட்பாட்டு முடிவுகளை ஸ்தூலமான நிலைமைகள் பற்றித் திட்டவட்டமான ஆய்வுகள் இன்றிப் பொருத்திப் பார்க்கும் ஒருவர் அல்லர். விரிவான கள ஆய்வுகளிலும் தரவுச் சேகரிப்பிலும் நுட்பமான கவனத்தைச் செலுத்தியவர். அதுமட்டுமன்றி தாம் எடுத்துக்கொண்ட விடயம் பற்றிய முன்னைய ஆய்வுகள் முழுவதையும் ஆழமாகக் கற்பதோடு நவீன கோட்பாடுகளின் பின்புலத்தில் அந்த ஆய்வுகளின் கருத்து நிலைப் பின்னணியை விளக்கும் நுண்திறன் அவரிடம் இருந்தது. ஆக்கத்திறனும் புத்தாக்க ஆற்றலும் அவரது எழுத்துக்களில் வெளிப்பட்டன. இலங்கையில் கிராமியப் பொருளியல், குடியான் சமூகவியல் பற்றிய ஆய்வுகளில் நியூட்டனின் பங்களிப்பு முன்னோடியாகவே உள்ளது. 1980 க்களின் ஆரம்பத்தில் நியூட்டன் குணசிங்க யாழ்ப்பாணக் குடியான் முறைபற்றி முன்னர் யாராலும் கண்டு கூறப்படாத கருத்துக்களையும் , புதிய பார்வையொன்றையும் முன்வைத்தார். அவரது பார்வை வீச்சு எம்மவரால் கண்டு கொள்ளப்படாமல் போனதும், அதனைக் கண்டு கொண்டவர்கள் கூட ஒரு விதத்திற்கான தொடக்கப் புள்ளியாக அதனை முன்னெடுக்காததும் எமது துரதிஷ்டமே. நியூட்டன் மறைந்து 18 ஆண்டுகள் கடந்துவிட்டன. அவரின் நினைவை மீட்டுப் பார்ப்பதற்கு இக்கட்டுரை உதவும்.*

## அறிமுகம்

இக்கட்டுரையில் மூன்று விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. கட்டுரையின் முதற் பகுதியில் குடியான் சமூகம் என்றால் என்ன? குடியான் உற்பத்தி முறையின் இயல்புகள் எவை? வரலாற்று ரீதியாக குடியான் சமூகத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை விளங்கிக்கொள்வது எப்படி? ஆகிய விடங்கள் ஆராயப்படுகின்றன. கட்டுரையின் இரண்டாம் பகுதி பொதுமைப்படுத்தப்பட்ட இந்த எண்ணக்கருவை ஸ்தூலமான நிலைமைகளுக்கு பொருத்தும் போது எழும் சிக்கலை எடுத்து கூறி கலாநிதி நியூட்டன் குணசிங்க முன்வைத்த விவசாய முறைமைகள் (Agrarian Systems) என்னும் கருத்தாக்கத்தையும் இம் முறைமைகளின் பொது இயல்புகளையும் விளக்குகிறது. கட்டுரையின் மூன்றாம் பகுதி 1981ம் ஆண்டில் நியூட்டன் குணசிங்க யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய ஆய்வின் முடிவுகளின் படி யாழ்ப்பாணத்தின் குடியான் சமூக முறைமைப் பற்றித் தெரிவித்த கருத்துக்களை அறிமுகப்படுத்துவதாய் அமைகிறது.

கட்டுரையின் முதற் பகுதி குடியான் சமூகம் (Peasant Society) என்னும் எண்ணக்கருவின் விளக்கமாக அமைய, ஏனைய இரு பகுதிகளும் நியூட்டன் குணசிங்க அவர்கள் முன்வைத்த நோக்கு முறை ஒன்றைப் பற்றிய விளக்கத்தைத் தந்து யாழ்ப்பாணக் குடியான் சமூகத்தின் இயல்பையும் இயங்குமுறையையும் வரலாற்றையும் விளக்கி நிற்கின்றன. கட்டுரையின் முதற் பகுதி தவிர்ந்த ஏனைய இரு பகுதிகளும் தழுவலாக அமைந்துள்ளன. இக் கட்டுரையாசிரியர் நியூட்டனின் ஆய்வுக் கட்டுரையை மொழிபெயர்ப்பதை விட அக்கட்டுரையில் பொதிந்துள்ள கருத்துக்களை எளிமைப்படுத்தியும் சுருக்கியும் தமிழில் தருதலே பயன் உடையது என்ற கருத்தை உடையவர். இவ்விதம் எளிமைப்படுத்தும் போதும் சுருக்கும் போதும் மூலத்தின் கருத்துக்கள் திரிபு அடைதல் ஓரளவு இடம் பெறக்கூடும் என்பதைக்

**கைத்தொழில்மயப்பட்ட சமூகத்தில் விவசாயமும் கைத்தொழில் மயமாக்கப்படுவதால் முதலாளித்துவ உற்பத்தி முறையின் அம்சங்கள் விவசாயத்திலும் காணப்படும். உற்பத்தி பேரளவினதாக இருக்கும். விவசாய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் கூலித் தொழிலாளர்களாக இருப்பர். உற்பத்திச் சாதனங்கள் அவர்களின் உடமையாக இருக்கமாட்டா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையாசிரியர் நன்கு அறிவர். இருப்பினும் நேரடி மொழிபெயர்ப்புகளால் ஏற்படும் குளறுபடிகளை விடத் தழுவல் பெயர்ப்புகள் ஆபத்து அற்றவை என்று கருதுகின்றார்.

## I

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தைத் தமது சீவனோபாயமாகக் கொண்டவர்கள். இவ் விவசாயம் சிற்றளவினதாகவும் குடும்ப மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதாகவும் இருக்கின்றது. ஐக்கிய அமெரிக்கா. மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகளிலும் சிற்றளவு பண்ட உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குடும்பப் பண்ணைகள் (Family Farms) உள்ளன. ஆனால் இப்பண்ணைகள் முற்றுமுழுதாக முதலாளித்துவ பொருளியல் அமைப்புடன் இணைக்கப்பட்டு, சந்தையுடன் ஒன்றிணைந்து செயற்படுவன. வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் விவசாய உற்பத்தியைக் குறிப்பதற்கு, குடியான் உற்பத்தி என்னும் தொடர் உபயோகிக்கப்படும். குடியான் உற்பத்தி முதன்மை பெற்றுள்ள சமூக முறைமையைக் குடியான் சமூகம் என்றும் அதன் உறுப்பினர்களைக் குடியான்கள் (Peasants) என்றும் அழைப்பர். குடியான் சமூகம் ஊரகச்சமூகவியலிலும் அபிவிருத்திப் பொருளியலிலும் உபயோகிக்கப்படும் முக்கியமான எண்ணக்கரு ஆகும். இத்துறைசார் கலைச்சொல்லாகவும் இதனைக் குறிப்பிடலாம்.

அரசியல், சமூகவியல், பொருளியல் போன்ற சமூக விஞ்ஞானத்துறைகளில் மாதிரிகள் (Models) கோட்பாடுகள் (Theories) எண்ணக்கருக்கள்; (Concepts) ஆகியன ஆய்வுக்குத் துணையான அருவமான கருத்தமைப்புகளாகப் பயன்படுகின்றன. புறமெய்மையின் சாரத்தை எளிமைப்படுத்திய வடிவில் தருவதே இவை.

குடியான் சமூகம் ஓர் சமூகவியல் எண்ணக்கரு (எண்ணக்கரு என்றால் என்ன? என்பதற்கான விளக்கத்தை பெட்டி1 ல் காண்க.) இந்த எண்ணக்கருவைத் தமிழில் குறிப்பது எப்படி? Peasant Movement என்ற சொல் 50 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் சொல்லாடலில்

### பெட்டி 1

### எண்ணக்கரு

பொருளியல், சமூகவியல், வரலாறு, அரசியல் ஆகிய சமூக விஞ்ஞானத்துறைகளின் விடயப்பரப்பையும் அவற்றின் ஆழத்தையும் அகலத்தையும் கண்டறிவதற்கு அத்துறைகளில் பயிலப்படும் எண்ணக்கருக்களை தெரிந்துகொள்ளல் சிறந்த வழிமுறை. வெறும் தரவுகளையும் தகவல்களையும் தெரிந்து கொள்வது மூலம் ஒருவர் அறிவுத் தெளிவை,புரிந்துகொள்ளலை,நோக்கி முன்னேறுவதில்லை. பதிலாக எண்ணக்கருக்களை கற்பதன் மூலமும் முக்கிய மாதிரிகளை விளங்கிக் கொள்வதன் மூலமும் கோட்பாடுகளைத் தெரிந்து அவை பற்றித் தர்க்கிப்பதன் மூலமும் அறிவு பாய்ச்சல் வேகத்தில் முன்னேறுகிறது. தரவுகளும், தகவல்களும் என்ற அடர்காட்டினிடையே திக்குத் தெரியாது அலைபவனிற்கு உதவக்கூடிய வழிகாட்டியே எண்ணக்கரு.

எண்ணக்கரு புறமெய்மையை எளிமைப்படுத்திய வடிவில் அதன் சாரமான அம்சங்களை கருத்து வடிவில் தருவது. எண்ணக்கரு ஒன்று தனியன்களிடையே காணும் பொதுமையை சாராம்சப்படுத்தும். மனித சிந்தனை இப்பொதுமைப்படுத்தலின் ஊடாகத்தான் செயற்படுகிறது.

உதாரணமாக: நாற்காலி என்ற கருத்து ஒரு பொதுமைப்படுத்தல் ஆகும். அது நாற்காலிகள் யாவற்றினதும் பொது அம்சங்களைச் சாராம்சப்படுத்துகிறது.ஒருவரின் பிருஷ்டபாகத்தை தாங்கிக் கொள்ளக்கூடிய தட்டையான பலகை, முதுகை நிமிர்த்திய நிலையில் சார்த்தி வைக்கக்கூடிய செங்குத்தான தாங்கி, நான்கு கால்கள் இவைதாம் நாற்காலியின் சாராம்சம். முதுகை நன்றாக சாய்த்துக் கொள்ளக்கூடியதான சாய்வு நாற்காலி நாற்காலியின் இன்னொரு சிறு வித்தியாசமான வடிவம். ஆனால் உடலை முற்றாக பக்கவாட்டில் சாய்த்துவிட்டால் நாற்காலி கட்டிலின் தன்மையைப் பெற்றுவிடும்.

அறிவியல் துறைகளிலும் பொதுமைகளைக் கருத்துவடிவில் கட்டமைத்து கொள்ள எண்ணக்கருக்கள் உதவுகின்றன. குடியான் சமூகம் அத்தகையதோர் எண்ணக்கருவே. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் கிராமப்புற விவசாய சமூக உற்பத்தி, அவற்றின் சமூக பண்பாட்டு இயல்புகள், இயக்கம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள "குடியான் சமூகம்" குடியான் உற்பத்தி" ஆகிய எண்ணக்கருக்கள் துணை செய்யும்".

குடியான் பொருளியலின் அடுத்த முக்கிய இயல்பு பிழைப்பூதிய உற்பத்தியாகும். உற்பத்தி பிரதானமாக நுகர்வை நோக்காகக் கொண்டு செய்யப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ள ஒன்று. அதனை விவசாய இயக்கம் என்றே கூறினோம். ஏன் இப்பொழுது "குடியான்" என்று கூற வேண்டும்? சொல் புதிது; பொருளும் புதிது என்பது தான் பதில் ( பெட்டி 2 ஐ காண்க.)

குடியான்கள் என்போர் யார்? குடியான் உற்பத்தி முறையின் சமூக, பொருளியல் உறவுகளின் தனி இயல்புகள் எவை? குடியான் உற்பத்தி முறை தொடர்பாக விருத்திப் பொருளியலில் எழுந்துள்ள பிரச்சினைகள் எவை? என்பன போன்ற விடயங்களை அடுத்து நோக்குவோம்.

குடியான் சமூகத்தின் முக்கிய இயல்புகளாக மூன்று அம்சங்களைக் குறிப்பிடுவர். அவையாவன :-

1. உற்பத்திச் சாதனங்கள் குடியான்களின் உடமையாக இருத்தல்.
2. பிழைப்பூதியத்தை (Subsistence) அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி அமைதல்.
3. குடியான்கள் இன்னோர் சமூகக் குழுவின் பொருளியல், அரசியல் மேலாதிக்கத்திற்கு உட்பட்டவராய் இருத்தல்.

இம் மூன்று அம்சங்களையும் சற்று விரிவாக நோக்கும்போது, குடியான் சமூகத்தின் தனி இயல்புகள் விளக்கமுறும்.

கைத்தொழில்மயப்பட்ட சமூகத்தில் விவசாயமும் கைத்தொழில் மயமாக்கப்படுவதால் முதலாளித்துவ உற்பத்தி முறையின் அம்சங்கள் விவசாயத்திலும் காணப்படும். உற்பத்தி பேரளவினதாக இருக்கும். விவசாய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் கூலித் தொழிலாளர்களாக இருப்பர். உற்பத்திச் சாதனங்கள் அவர்களின் உடமையாக இருக்கமாட்டா. முன்னேறிய நாடுகளின் பொருளியல் மாற்றம் சாராம்சத்தில் குடியான் உற்பத்தியின் அழிவுடன்தான் தோன்றியது எனலாம். மூன்றாம் உலக நாடுகளில் இன்று, குடியான் உற்பத்தி சந்தைப் பொருளியலின் தாக்கத்தினால் அழிந்து போகாமல் நிலைத்து நிற்கின்றது. இந்த நிலைபேற்றின் அடித்தளம் சிற்றுடமை விவசாய முறைதான். குடியான்கள் நிலத்துண்டுகளை உடமையாகவோ, குத்தகை அடிப்படையிலோ தம்வசம் வைத்துக்கொண்டுள்ளனர். ஏனைய விவசாயக் கருவிகளும் அவர்கள் உடமையாகவே உள்ளன.

குடியான் பொருளியலின் அடுத்த முக்கிய இயல்பு பிழைப்பூதிய உற்பத்தியாகும். உற்பத்தி பிரதானமாக நுகர்வை நோக்காகக் கொண்டு செய்யப்படுவது.

குடியான் தன் சுய தேவைகளுக்காகவே உற்பத்தியில் ஈடுபடுகின்றான். அவன் தன் உற்பத்திப் பண்டங்களை சந்தையில் விற்பதும்கூட, நுகர்வுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும். தொடர்ந்து உற்பத்தியை நடத்துவதற்குத் தேவையான விதை, கருவிகள் ஆகியவற்றைப் பெறுவதற்கும் ஆகும். உற்பத்தியில் கிடைக்கும் உபரியைக் குறியாகக் கொண்டு அவன் செயற்படுவதில்லை. உபரி இலாபத்தை, மீண்டும் மீண்டும் முதலிடுவதால் எழும் விரிவுறும் உற்பத்தி (Extended production) சந்தை விதிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் குடியான் உற்பத்தியை இழுத்துச் செல்-

குடியான் தன் சுய தேவைகளுக்காகவே உற்பத்தியில் ஈடுபடுகின்றான். அவன் தன் உற்பத்திப் பண்டங்களை சந்தையில் விற்பதும்கூட, நுகர்வுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும். தொடர்ந்து உற்பத்தியை நடத்துவதற்குத் தேவையான விதை, கருவிகள் ஆகியவற்றைப் பெறுவதற்கும் ஆகும்.

**பெட்டி 2**

## சொல்புதிது பொருள்புதிது

குடியான் சமூகம் பற்றிய சமூகவியல் பொருளியல் ஆய்வுகள், கட்டுரைகள் தமிழில் எழுதப்படவில்லை. இந்தப் பொருள் அல்லது விடயம் தமிழுக்குப் புதியது. இப்பொருளைச் சொல்வதற்கான புதிய சொல்லைத் தேடவேண்டும். புதிய சொல் இல்லாமல் புதியபொருளைப் பேசமுடியாது. Peasant என்ற ஆங்கிலச் சொல் தரும் பொருள் விவசாயம், விவசாயி என்பதில் இல்லை. குடியான் என்பது கிட்டிய சொல்தான். ஆனால் பூரண திருப்தி தருவதாக இல்லை. பண்ணைக்காரன், குடியானவன் என்ற சொற்களை ஏற்கனவே சில அர்த்தங்களுடன் உபயோகித்து வந்துள்ளோம். "குடிமை" என்ற சொல்லும் உபயோகத்தில் உள்ளது.

புதிய பொருளைப் பேசும்போது அறிவியல் துறைகளில் எதிர்கொள்ளும் இக்கட்டு இது. மிகக் கிட்டிய பொருத்தமுடைய சொல்லை உபயோகிப்போம். பொருத்தமான மாற்றுச் சொல்லை இன்னொருவர் முன்வைக்கலாம். தமிழகத்தின் முன்னணி மானிடவியலாளர் கி.பக்தவத்சலபாரதி "மானிடவியல் கோட்பாடுகள்" (2005) என்ற நூலை வெளியிட்டிருக்கிறார். அந்நூலில் அவர் Peasant Society என்பதை "உழுகுடிச்சமூகம்" என்கிறார். குடியான் என்பதை விட "உழுகுடி" ஆங்கிலச் சொல்லின் பொருளுக்கு நெருக்கமாக வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடியான் சமூகமும் பொருளியலும்**

**கந்தையா சண்முகலிங்கம்**

லும். ஆனால், நுகர்வுத் தேவையை அடிப்படையாகக் கொண்ட குடியான் உற்பத்தி சந்தையோடு பூரண இணைப்பைக் கொண்டதாக அன்றி விடுபட்டு இயங்கும். இவ்வியல்பு அதன் உடைவையும், சிதைவையும் தாமதப்படுத்துகிறது; தள்ளிப்போடுகிறது. இதனால் மேற்குலகில் குடியான் உற்பத்தி முறை அழிவுற்றது போன்ற மாற்றம் மூன்றாம் உலக நாடுகளில் ஏற்படவில்லை.

குடியான் சமூகம் பிறவர்க்கக் குழுக்களின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டது. எல்லா நாடுகளிலும் குடியான்கள் அரசியல் வலிமை அற்றவர்களாய் பிறரின் கட்டுப்பாட்டிற்குள் அமைபவர்களாய் இருப்பர். பொருளியல் பலமுள்ள நகரம் சார் வர்க்கங்கள், மத்திய வகுப்பினர் ஆகிய பிற குழுக்கள் குடியான்கள் மீது செலுத்தும் அதிகாரம் கருத்துநிலை மேலாதிக்கத்தாலும் வலுப்படுத்தப்படுகின்றது. இந்தியா. இலங்கை போன்ற நாடுகளில் வாக்குப்பலம் காரணமாக குடியான்கள் தேர்தல் காலங்களில் அரசியல் வலுவுடையவர்களாய்த் தோன்றுவர். இருப்பினும் உண்மையான அரசியல் அதிகாரம் இவர்கள் கையில் இருப்பதாகச் சொல்லுதல் இயலாது.

## பல்லினத் தன்மை (Diversity)

குடியான் பற்றிய மேற்கூறிய மூன்று வரைவிலக்கணங்களிலும் தொக்கி நிற்கும் அனுமானம் ஒன்று உள்ளது. குடியான்கள் பிறரிலிருந்து தம்மைப் பிரித்தறியக் கூடிய தனி இயல்புகளைக் கொண்ட ஓரினத்தன்மையுடைய சமூகக் குழு என்பதே அவ்வனுமானமாகும். ஆனால், இத்தகைய அனுமானம் தவறானது. குடியான் சமூக இயல்புகளைப் பிரித்தறிய இந்த அம்சங்கள் பயன்படுகின்றன. அதேவேளை, குடியான் சமூகம் பல்லினத் தன்மை கொண்டது. அவை ஒவ்வொன்றும் பிறவற்றில் இருந்து வேறுபடும். ஒரே நாட்டிற்குள் கூட ஒரு பகுதியின் இயல்புகள் பிறிதொரு பகுதியின் இயல்புகளில் இருந்து வேறுபடலாம். இவ்வேறுபாடுகளும் பல்லினத் தன்மையும் தீழ்க்கண்ட

> குடியான் சமூகம் பிறவர்க்கக் குழுக்களின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டது. எல்லா நாடுகளிலும் குடியான்கள் அரசியல் வலிமை அற்றவர்களாய் பிறரின் கட்டுப்பாட்டிற்குள் அமைபவர்களாய் இருப்பர்.

அடிப்படையில் அமைவன:-

1. உற்பத்திச் சாதனங்கள் மீது கொண்டுள்ள உரிமையின் அளவு. சாதனங்களின் மீது அவர்கள் கொண்டிருக்கும் உரிமை பலப்படுத்தப்படுகின்றதா? மோசமடைகின்றதா?
2. பண்டச்சந்தையுடன் (Commodity Markets) எவ்வளவு தூரம் குடியான்கள் பிணைக்கப்பட்டுள்ளனர்.
3. குடியான் குடும்ப உறுப்பினர்கள் வெளியே தம் உழைப்பினை விற்கின்றார்களா? ஏந்தளவிற்கு குடியான் குடும்ப வருமானம் விவசாய உற்பத்திசாரா உழைப்புகளில் இருந்து கிடைக்கின்றது.

## மாற்றம் (Change)

குடியான் சமூகத்தின் பல்லினத் தன்மை அதன் இன்னோர் முக்கிய இயல்பையும் சுட்டிக் காட்டுகின்றது. மேற்குலகில் எழுந்த கைத்தொழில் விருத்தி, குடியேற்றவாதம், ஏகாதிபத்தியம், உலகு தழுவிய பொருளியல் அமைப்பு ஆகியவற்றின் பின்னணியில் மாற்றத்திற்கு உட்பட்டுவரும் விவசாயச் சமூகங்களையே குடியான் சமூகம் என்பர். தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் இணைவுபடுத்தப்பட்ட பொருளியல் கட்டமைப்புக்குள் குடியான் உட்படுத்தப்படுகின்றான். இந்த உட்படுத்தல் பிணைப்பு அளவு அடிப்படையில் இடத்துக்கிடம், நாட்டுக்கு நாடு வேறுபடும். மாற்றமுறாத சந்தைத் தொடர்புகளற்ற ஒரு சமூகம் குடியான் என அழைக்கப்படுவது பொருத்தமற்றது. இக்குழுக்களை அகப்படாக் குடியான்கள் (Uncaptured Peasants) எனக் கூறலாம். இத்தொடர் சந்தைப் பொருளியலில் இருந்து விலகி நிற்கும் தன்மையைக் காட்டுகிறது.

## பல்வேறாக்கம் (Differentiation)

குடியான் சமூகத்திற்குள்ளேயே ஏற்பட்டுவரும் வர்க்க வேறுபாடுகளைப் பல்வேறாக்கம் என்று குறிப்பிடுவர். ஆபிரிக்காவின் சில பாகங்களில் குடியேற்ற ஆட்சிக் காலத்தில் குடும்ப உற்பத்தியாளர்கள் (Household producers) ஓரினத் தன்மையுடையோராய் சமத்துவமான நிலையில் வாழ்ந்தனர். அவர்களின் சொத்துடமை வருமானம் ஆகியவற்றில் ஏற்றத்தாழ்வுகள் அதிகம் இருக்கவில்லை. இதற்கு மாறாக இந்தியா? இலங்கை போன்ற நாடுகளில் காலனி ஆட்சிக்காலத்தில் கூட ஏற்றத்தாழ்வுள்ள அதிகார வரன்முறை (Hierarchical) சமத்துவமுள்ள சமூக அமைப்புநிலவியது. ஆனால் இவற்றுக்குள்ளேயே சில பகுதிகளில் சமத்துவமுடைய குடியான் அமைப்புக்களும் நிலவின.

இத்தகைய சமூகங்களுக்கு உள்ளே ஏற்படும் மாறுதல்கள் பல்வேறாக்கத்திற்கு வழிவகுக்கும். சில குடும்பங்கள் சந்தைக்கான உற்பத்தியில் கூடிய தீவிரத்துடன் ஈடுபடத்தொடங்கும். இவ்விதம் சந்தையுடன் கூடிய ஈடுபாடு கொள்ளும் குடும்பங்கள் காலப்போக்கில் உபரிலாபத்தை தேடுவதிலும், அவற்றை உற்பத்திச் சாதனங்களில் முதலீடு செய்வதிலும் ஈடுபடும். இன்னும் சிலர் சந்தைக்கான உற்பத்தியில் ஈடுபடுவர். வேறு சிலர் சந்தைக்கான உற்பத்தியில் ஈடுபட்டு, கடன் சுமையாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலில் ஏற்படும் பிறபல இன்னல்களாலும் வறுமை நிலைக்குள் தள்ளப்படுவர். வறியவரானோர் பின்னர் தம் உடமைகளை விற்று, கூலித் தொழிலாளர்களாக பிறருடைய கமங்களில் உழைப்பர். இவ்விதம் வறியோராதல் (Pauperization) பாட்டாளி மயமாதல் (Proletarianization) ஆகிய செயல்முறைகள் ஓரினத்தன்மையுடைய ஒரு சமூகத்தை ஏற்றத்தாழ்வுடைய சமூகமாக மாற்றிவிடும். இந்த மாற்றம் கிராமப்புறத்தில் நிகழும் வர்த்தக மயமாதலுடன் (Commercialization) இணைந்த ஒரு செயல் முறையாகும்.

விவசாயம் வர்த்தக மயமாதல் சந்தையுடன் குடியான் கொண்டுள்ள பிணைப்பின் வலுவை உணர்த்தும். வர்த்தக மயமாதலின் தீவிரத்திற்கு ஏற்ப, தேசிய மட்டத்திலும் உலக மட்டத்திலும் குடியான் சமூகம் கொள்ளும் பிணைப்புகள் அதிகரிக்கும். குடியான் கொள்வனவு செய்யும் பொருட்களின் வகையும் அளவும் பெருகிச் செல்லும். இதேபோல் அவனது உற்பத்திப் பொருட்கள் யாவும் படிப்படியாக சந்தையில் விற்கும் பண்டங்களாக மாறும். நெல், மிளகாய், மரக்கறி, பழவகை, தானியம், பருப்பு வகை என்ற பல்வேறு நுகர்வுப் பொருட்களும் நுகர்வுக்காகப் உற்பத்தி செய்தல் என்ற நிலையிலிருந்து சந்தைக்காக உற்பத்தி செய்யும் நிலைக்கு மாற்றமுறும். இச்செயல் முறையை பண்டமாக்கல் (Commoditization) என்பர். உற்பத்திப் பொருள் ஒன்று சந்தைக்காக உற்பத்தி செய்யப்படும் நிலையில் அது பண்டம் (Commodity) எனப்படும். உதாரணமாக இலங்கையின் கிராமங்களில் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நெல் நுகர்வுக்கான பொருளாக இருந்தது. இன்று அது ஒரு பண்டமாக மாறிவிட்டது.

வர்த்தகமயமாதல், பண்டமயமாதல் ஆகியவற்றின் உடனிகழ்வாக அமையும் பல்வேறாக்கம் குடியான் சமூகத்தில் வர்க்க வேறுபாடுகளை உருவாக்குகின்றது. செல்வந்த குடியான்கள், நடுத்தர குடியான்கள், ஏழைக் குடியான்கள், நிலமற்ற விவசாய கூலிகள் என்ற நான்கு வகைப்பட்ட பிரிவினர் தோன்றுகின்றனர். செல்வந்த, நடுத்தரக் குடியான்கள் என்ற இரு பிரிவினரையும் கிராம மட்டத்தில் வளர்ந்து வரும் செல்வந்த விவசாய வகுப்பின் பிரதிநிதிகளாகக் கொள்ளலாம். நிலமற்றவர்களும், ஏழைக்குடியான்களும் இறுதியில் விவசாயப் பாட்டாளி-



களாக மாறுவர். குடியான் சமூகத்தின் உடைவுக்கும், சிதைவுக்கும் பின்னர் தோன்றும் முதலாளித்துவ விவசாய அமைப்பில் இந்நிலை உருவாகும். இம் மாற்றத்தை ஒரு மாதிரி உருவாகக் காட்டலாம். (மாதிரி உரு 1)

மாதிரி உரு1ல் கூறப்பட்டுள்ள முறையில்தான் எல்லா நாடுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன எனக் கூறுதல் தவறு. புறநிலை மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கான எளிமைப்படுத்தப்பட்ட மாதிரியாகவே இதைக் கொள்ளுதல் வேண்டும்.

## குடியானின் எதிர்காலமும் விருத்தியும்

உற்பத்தி அளவு பெருகுதலும் விவசாய உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியும் விவசாயப் புரட்சிக்கு வித்திடுகின்றன. விவசாயத்துறையில் புகுத்தப்படும் புதிய தொழில்-

**மாதிரி உரு 1**




வர்த்தகமயமாதல், பண்டமயமாதல் ஆகியவற்றின் உடனிகழ்வாக அமையும் பல் வேறாக்கம் குடியான் சமூகத்தில் வர்க்க வேறுபாடு களை உருவாக்கு கின்றது. செல்வந்த குடியான்கள், நடுத்தர குடியான் கள், ஏழைக்-குடியான்கள், நிலமற்ற விவசாய கூலிகள் என்ற நான்கு வகைப்பட்ட பிரிவினர் தோன்று கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா சண்முகலிங்கம்

நுட்பம் தான் இப்புரட்சியை உண்டாக்கி வருகின்றது. வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் ஏற்பட்டு வரும் விவசாய மாற்றம் மேற்கு நாடுகளில் ஏற்பட்டது போன்று விவசாயப் புரட்சிக்கு வழியமைக்குமா என்பது கேள்விக்குரியதே. குடியான் சமூகம் இந்நாடுகளில் தொடர்ந்தும் பல்லாண்டுகள் நீடித்து நிலைக்குமா அல்லது அழித்தொழிக்கப்படுமா? குடியான்களைப் பாதுகாத்து வளர்த்து விடுவதா? அல்லது சந்தைச் சத்திகளைத் தம்போக்கில் செயல்படவிடுத்து தொழில் முயல்வோர் வகுப்பு ஒன்றை விவசாயத்துறையில் உருவாக்குதலா உகந்தது? என்பன போன்ற கேள்விகள் விருத்திப் பொருளியலில் விவாதத்திற்குரிய பிரச்சினைகள்.

இந் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்த ரஷ்யப் பொருளியலாளரான ஏ.வி.சயனோவ் (A.V.Shayanov) குடியான் உற்பத்தி முறை பாதுகாக்கப்படவேண்டுமென்றும், அது திறன்மிகு உற்பத்திமுறை என்றும் கருதினர். ஸ்டாலின் ஆட்சியின்போது அமைக்கப்பட்ட கூட்டுப் பண்ணைமுறை குடியான் உற்பத்தி முறையை இல்லாதொழித்தது.

இன்று மூன்றாம் உலக நாடுகளின் சிறுவிவசாயிகள் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு போன்றவர்கள் என்றும், அவர்களைப் பாதுகாப்பதும், வளர்ப்பதும் அவசியமென்றும் கருதும் கோட்பாட்டாளர்கள் பலர் உள்ளனர். இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் முதலிய விவசாய நாடுகளில் குடியான்களும், அவர்களது பொருளியலும் தேசிய அரசியலின் மையப் பிரச்சினைகளாகவும் உள்ளன. இதனால் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் சமூகவியலின் ஆய்வுக்குரிய விடயங்களுள் குடியான் பற்றிய ஆய்வுகள் இன்று முதன்மை பெற்றுள்ளன.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் முதலிய விவசாய நாடுகளில் குடியான்களும், அவர்களது பொருளியலும் தேசிய அரசியலின் மையப் பிரச்சினை களாகவும் உள்ளன. இதனால் வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளின் சமூகவியலின் ஆய்வுக்குரிய விடயங்களுள் குடியான் பற்றிய ஆய்வுகள் இன்று முதன்மை பெற்றுள்ளன.

## II.

இலங்கையின் குடியான் சமூகம் தனக்கேயுரிய சில பொது இயல்புகளை கொண்டிருக்கிறது. இக்கட்டுரையின் முதற் பகுதியில் குடியான் சமூகம் பற்றி நாம் விபரித்துள்ள பொது இயல்புகள் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள குடியான் சமூகங்களில் வெளிப்படுவதைக் காணுதல் முடியும். இருந்த போதும் நாடு முழுமைக்குமான ஓரினத்தன்மையுள்ள கட்டமைப்புக் கொண்ட குடியான் சமூகமோ பொருளியலோ இருப்பதாகக் கூற முடியாது. இடத்துக்கிடம் பல்வேறு வகைமைகளையுடைய குடியான் சமூகங்கள் இலங்கையில் காணப்படுகின்றன. இவற்றின் வரலாற்று வளர்ச்சியிலும் மாற்றங்களிலும் பல வேறுபாடுகளையும் காணக்கூடியதாக உள்ளது. இதனால் குடியான் சமூகம் குடியான் பொருளாதாரம்" என்று ஒருமையில் பேசுவது இயலாது. "குடியான் சமூகங்கள்" எனப் பன்மையில் பேச வேண்டும். இதே போல் குடியான் பொருளாதார முறைகள் பலவற்றை பன்மையில் குறிப்பிடமுடியும்.

யு.ஏ.சயனேவ் என்னும் ரஷ்ய நாட்டுப் பொருளியலாளர் 1920களில் குடியான் பொருளாதாரம் பற்றிய ஒருமைக்கோட்பாட்டை (A uniform theory of Peasant Economy) உருவாக்க முனைந்தார். "ஒவ்வொரு குடியான் குடும்பமும் சுய தேவையைத் தன்னளவில் பூர்த்தி செய்து கொள்வதாய் உள்ளது. தனது நுகர்வுத் தேவை முழுவதையும் தானே அது உற்பத்தி செய்து கொள்கிறது. அவ்வாறு உற்பத்தி செய்து கொள்வதன் மூலம் தன் வாழ்வுக்கு தேவையானவற்றை இயற்கையுடன் செய்து கொள்ளும் பரிவர்த்தனை மூலம் நிறைவேற்றிக்கொள்கிறது. சமூகத்தோடு அது செய்து கொள்ளும் பரிவர்த்தனை குறைவு" பதினெட்டாவது புரூமர் என்னும் நூலில் மார்க்ஸ் பிரெஞ்சு நாட்டின் குடியான்கள் பற்றிக் கூறிய போது மேற்குறித்தவாறு வர்ணித்துள்ளார். இதனைப் பின்பற்றிச் சயனேவ் தனது கோட்பாட்டை வடிவமைத்தார் எனலாம்.

- சிற்றுடமையான நிலம்
- குடும்ப உறுப்பினர்களின் உழைப்பின் மூலம் உற்பத்தி
- நுகர்வுக்கான உற்பத்தி

ஆகிய மூன்று அம்சங்களும் குடியான் பொருளாதாரத்தின் சர்வ வியாபகமான இயல்புகள் என சயனேவ் கருதுகிறார். இப்படியான பொருளாதாரத்தில் நுகர்வுத்தேவைகளுக்கும் குடும்ப உறுப்பினர்களின் உடல் உழைப்புக்கும் இடையிலான சமநிலை ஒன்றை பேணுவதே அதன் இயக்கு விதியாக அமையும் எனவும் சயனேவ் கருதினார். உதாரணமாக மனைவி கணவன் என்ற இருவரையும் ஐந்து சிறு குழந்தைகளையும் உடைய குடியான் குடும்பம் தனது நுகர்வுத் தேவைக்காக இருவரின் உடல் உழைப்பில் தங்கி இருக்கும். நுகர்வு- உழைப்பு சமநிலையை பேணுவதில் மிகுந்த கஷ்டத்தை இது எதிர்கொள்கிறது. வறுமையில் அல்லாடுகிறது. காலப்போக்கில் குழந்தைகள் வளர்ந்தவர்களாக உழைப்பாளர் எண்ணிக்கை கூடுகிறது. குடியான் வாழ்வு நிறைவானதாகின்றது. நுகர்விற்கு தேவையான அளவை அவர்களால் கஷ்டமின்றி உற்பத்தி செய்ய முடிகிறது. பின்னர் பிள்ளைகள் விவாகம் புரிந்து தனிக்குடும்பமாகும்போது மீண்டும் போராட்டம் ஆரம்பிக்கின்றது. இவ்விதமாக குடியான் பொருளாதாரம் பிழைப்பூதிய நிலையில், பிழைப்பூதிய மட்ட உற்பத்தியில் தேக்க முறுகிறது என்றும் சயனேவ் விளக்கம் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயனேவ் மாதிரியை பின்பற்றி 20ம் நூற்றாண்டின் பிற்கூறில் எரிக் வூல்வ், ஜேம்ஸ் ஸ்கொட், மிக்டல் ஆகியோர் குடியான் சமூகம், பொருளியல் பற்றி எழுதிய சமகால ஆய்வாளர்களென நியூட்டன் குணசிங்க குறிப்பிடுகிறார். இந்த ஆய்வாளர்களின் நோக்கு முறையில் இலங்கையின் குடியான் சமூகம் பற்றிய ஒருமைக் கோட்பாட்டை கட்டமைப்பதில் உள்ள சிக்கல்களையும் அவர் எடுத்து காட்டுகிறார்.

புகையிலை, கராம்பு, மிளகாய், போன்ற பல உற்பத்திப் பண்டங்கள் இலங்கையில் குடியான் உற்பத்தி மூலம் உற்பத்தி செய்யப்பட்டுச் சந்தைப் பரிவர்த்தனைக்காக வருகின்றன. சந்தைப் பரிவர்த்தனைக்காக உற்பத்தி செய்யாமல் அல்லது பரிவர்த்தனை மதிப்பை (Exchange Value) உருவாக்காது பயன் மதிப்பை (Use Value) உருவாக்கும் குடியான்கள் இன்று மிக மிக அருமையாகவே உள்ளனர். ஆகவே சயனேவ் குறிப்பிடும் பிழைப்பூதிய மட்டம் அல்லது ஆகக் குறைந்த அளவு ( Subsistence Minimum) என்ற விதி குடியான் உற்பத்தியில் சர்வ வியாபகமாகச் செயல்படுவதாகக் கூற முடியாது என்றும் நியூட்டன் குறிப்பிடுகிறார். சந்தைக்கான உற்பத்தியிலும், சந்தையில் தான் கொள்வனவு செய்யும் பொருட்களை நுகர்வதிலும் ஈடுபடும் குடியான்களையே நாம் காண்கின்றோம். சிற்றுடமை, குடும்ப உழைப்பு, சுயதேவை நுகர்வு ஆகியன மேலோங்கியுள்ள சமூகங்களும் உள்ள போதும் சந்தையுடன் பிணைக்கப்பட்ட குடியான் உற்பத்தி முறைகளே பரவலாக உள்ளன. இதனால் ஒருமைத் தன்மையுள்ள குடியான் விவசாய முறைமை ஒன்று கிடையாது என்கிறார். (There is no single Peasant Agrarian System)

நியூட்டன் குணசிங்க தமது ஆய்வுக் கட்டுரையில் பலவகையான மாதிரிகளை அடையாளம் காட்டுகின்றார். அவையாவன.

1. வடமத்திய மாகாணத்தின் காட்டுக்கிராமங்களில் காணப்படும் பிழைப்பூதிய உற்பத்தி முறை.
2. யாழ்மாவட்டத்தில் நிலவும் சந்தை நோக்கிய உற்பத்தி முறை.
3. வரண்டவலயத்தின் உழைப்புச் செறிவுமிக்க நெல் விவசாயம்.
4. பல்தேசிய கம்பனிகளுக்கான உற்பத்தி — உ+ம் சிலோன் டுபாக்கோ கம்பனிக்காக ஒப்பந்தமுறையில் புகையிலை பயிரிடும் குடியான்.

## குடியான் விவசாய முறைமை

குடியான் விவசாய முறைமை ஒன்று எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதான அம்சங்கள் எவை என்பதை நியூட்டன் அடுத்து விளக்குகின்றார். உற்பத்திச் சக்திகள் (Forces) உற்பத்தி உறவுகள் என்ற இரண்டு அம்சங்களின் சேர்க்கையாக அமைவதே உற்பத்தி முறைமை. உற்பத்தி சக்திகளில் மாறும் காரணிகள் மாறாக் காரணிகள் என இரு பிரிவுகள் உள்ளன. உற்பத்தி உறவுகளிலும் இவ்விதமே மாறும் காரணிகள், மாறாக் காரணிகள் என்ற இரு பிரிவுகள் உள்ளன. இந்த நான்கு பிரிவுகளுக்குள் உள்ளடக்கும் அம்சங்கள் கீழே உள்ள அட்டவணை 1ல் தரப்பட்டுள்ளன.

ஒரு முறைமையின் கீழ் மேற் குறித்த நான்கு வகையான அம்சங்களும் வெவ்வேறு வகையில் தொடர்புறுவதோடு இடைவினை புரிகின்றன. இந்த அம்சங்களின் பல்வகைக் கலவையாகவே குடியான் விவசாய முறைமைகள் அமைகின்றன.

குடியான் சமூகமும் பொருளியலும்

கந்தையா சண்முகலிங்கம்

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் ஏற்பட்டு வரும் விவசாய மாற்றம் மேற்கு நாடுகளில் ஏற்பட்டது போன்று விவசாயப் புரட்சிக்கு வழியமைக்குமா என்பது கேள்விக்குரியதே.

**அட்டவணை 1**

**உற்பத்தி சக்திகளும் உறவுகளும் - குடியான் விவசாய முறைமையில் உள்ளடங்கும் மாறும் மாறாக் காரணிகள்.**

| | மாறும் காரணிகள் | மாறாக் காரணிகள் |
|---|---|---|
| உற்பத்தி சக்திகள் | காணியின் அளவும் தன்மையும்<br>தொழில்மட்டத்தின் வளர்ச்சி மட்டம்<br>உற்பத்திச் செயல்முறை | நேரடி உற்பத்தியாளர்<br>தொழில் முறைகள்<br>நிலம்,நீர்,பயிர்கள் |
| உற்பத்தி உறவுகள் | உற்பத்தி உறவுகள்<br>உபரி உற்பத்தியை அபகரிக்கும் முறை.<br>பரிவர்த்தன உறவுகள் | சமூக உற்பத்தி<br>உபரி உற்பத்தியும் அதன் பகிர்வும்<br>மறு உற்பத்தி செயன்முறை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா சண்முகலிங்கம்

மாறும் காரணிகள் ஒவ்வோர் அம்சமும் இடத்துக்கிடம் வேறுபடும். உற்பத்தி சக்திகளில் காணியின் அளவு அதன் இடஅமைவு அதன் மண்வளம், இடத்துக்கிடம் மாறும். இதேபோல் உற்பத்தியில் உபயோகிக்கப்படும் தொழில்நுட்பம் வளர்ச்சியுற்றதாகவோ அல்லது பழமையானதாகவும் முன்னேற்றம் அற்றதாகவும் இருக்கலாம். ஒவ்வொரு பகுதியிலும் உழுதல், நிலத்தை பண்படுத்தல், நீர்ப்பாய்ச்சல் போன்ற உற்பத்திச் செயல்முறைகளில் வேறுபாடுகள் இருக்கும். இக்காரணங்களால் இவற்றை மாறுங்காரணிகள் என்பர்.

எல்லா முறைமைகளுக்கும் பொதுவான மாறாக்காரணிகள் அல்லது அம்சங்களும் உள்ளன. நேரடியாக உற்பத்தியில் ஈடுபடுவோர், அவர்கள் சில தொழில் முறைகளை கையாளுதல், நிலம், நீர், பயிர்கள் ஆகியன எல்லா முறைமைகளுக்கும் பொதுவான விடயங்கள். இதனால் இவற்றை மாறாக் காரணிகள் என்பர்.

குடியான் விவசாய முறைமை ஓர் சமூக சூழலில் செயற்படுகிறது. இது நாட்டிற்குள் இருக்கும் ஏனைய குடியான் விவசாய முறைமைகளுடன் இடைத்தொடர்புகளை கொண்டிருக்கும்.

உற்பத்தி உறவுகள் நிலையில் ஏற்படும் இடைத்தொடர்புகள் உள்ளன. இன்னொருபகுதியில் இருந்து மூலதனம் குறிப்பிட்ட குடியான் சமூகத்திற்குள் வரலாம், அல்லது விவசாயக் கூலிகள் காலத்திற்குக் காலம் வந்து தொழில் செய்யலாம். நிரந்தரமான குடியேற்றங்கள் நிகழலாம். பரிவரித்தனை உறவுகள் இடம் பெறலாம். ஒரு குறிப்பிட்ட குடியான் விவசாய முறையின் உற்பத்திகள் இன்னொரு பகுதியில் சந்தைப்படுத்தப்படலாம். வளங்களின் ஒதுக்கீட்டின் மூலம் ஒரு குடியான் சமூகத்தின் உழைப்பு, மூலதனம், நீர் இன்னொரு குடியான் சமூகத்தால் அபகரிக்கப்படலாம்.

> இலங்கையின் குடியான் சமூகங்களை தேசியமட்ட பொருளியலும், அரசின் வகிபாகமும் வெவ்வேறு வழிகளில் பாதித்து வருகிறது. இதே போன்று உலகப் பொருளாதார முறைமையும் தாக்கங்களை கொண்டு வருகின்றன.

குடியான் பொருளாதார முறை ஒன்றினை தேசிய பொருளாதாரத்தினதும் உலகு தழுவிய பொருளாதாரத்தினதும் அங்கமாக வைத்தும் நாம் நோக்குதல் வேண்டும். அவ்வகையில் நோக்கும் பொழுது குடியான் சமூகமும் அதன் பொருளியலும் பேரின முறைமை (Macro System) ஒன்றின் பகுதியாக இருப்பதைக் காணலாம். இப்பேரின முறைமையின் இரு படிநிலைகளில் ஒன்று தேசிய பொருளாதாரம். இன்னொன்று உலகப் பொருளாதாரம்.

இலங்கையின் குடியான் சமூகங்களை தேசியமட்ட பொருளியலும், அரசின் வகிபாகமும் வெவ்வேறு வழிகளில் பாதித்து வருகிறது. இதே போன்று உலகப் பொருளாதார முறைமையும் தாக்கங்களை கொண்டு வருகின்றன. பின்வரும் நான்கு வகையான தாக்கங்களிற்கு குடியான் சமூகங்கள் உட்படுகின்றன.

- அ. பல்தேசிய கம்பனிகளின் மூலதனமும், தேசிய மட்டத்திலிருந்து அரசின் மூலதனமும்குடியான் பொருளியலுக்குள் நுழைதல்.
- ஆ. குடியான் பொருளியல் முறைமைகளில் இருந்து உழைப்பாளர்கள் நாட்டின் பிற துறைகளிற்கு இடம் பெயர்தல்.
- இ. குடியான் விவசாய உற்பத்திப் பொருட்கள் உலக சந்தைக்குச் செல்லுதலும் கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் குடியான் சமூகத்தினுள் விற்பனைக்கு வருதலும், இதன் பயனாக குடியான் சமூகத்துடனான பரிமாற்றத்தின் வர்த்தக விகிதம் (Terms of Trade) தீர்மானிக்கப்படுதல்.
- ஈ. தேசிய அரசின் தலையீட்டின் மூலம் குடியான் விவசாய முறைமைகள் உருமாற்றம் பெறுதல்.

ஆகவே ஒரு குடியான் உற்பத்தி முறைமையின் மாற்றங்கள் பற்றி ஆராயும் போது மூன்று விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. குறிப்பிட்ட உற்பத்தி முறைமைக்கு உள்ளே ஏற்படும் உள்முரண்பாடுகள்.
2. பிற குடியான் உற்பத்தி முறைமைகளுடன் உள்ள தொடர்புகளால் எழும் முரண்பாடுகள்.
3. பேரின முறைமk (Macro System) யின் தலையீடுகள் உருவாக்கும் தாக்கங்கள்.

குடியான் உற்பத்தி முறைமைகளின் அடிப்படையான பொது இயல்புகள் யாவை என்பதை நியூட்டன் குணசிங்க விளக்கியுள்ளதை மேலே விபரித்தோம். யாழ்ப்பாண மாவட்டத்தின் குடியான் உற்பத்தி முறைமை பற்றியும் அதன் குடியான் சமூகம் பற்றியும் நியூட்டன் குணசிங்க எழுதியுள்ளவற்றை மேலும் சுருக்கமாக அடுத்த பகுதியில் நோக்குவோம்.

## III.

நியூட்டன் குணசிங்க அச்சுவேலிக்கு அருகில் உள்ள பத்தைமேனி என்னும் கிராமத்தில் 1981ல் கள ஆய்வை நிகழ்த்தினார். இன்று வடபகுதியில் நடைபெறும் சிவில் யுத்தம் ஆரம்பிப்பதற்கு சிறிது முற்பட்ட காலத்தின் யாழ்ப்பாணம் பற்றியே அவர் பேசுகின்றார் என்பதை நாம் கவனித்தல் வேண்டும். அன்றைய யாழ்ப்பாணத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றுடமை குடியான் உற்பத்தி வளர்ச்சிக்கான உள்ளாற்றல் நிறைந்த குடியான் முறைமை (An Agrarian System with a strong Potential for Growth) என அவர் குறிப்பிடுகிறார். யாழ்ப்பாணத்தின் அன்றைய குடியான் சமூகத்தை ஒரு எண்ணக்கரு என்ற முறையில் அருவ நிலையில் (Abstract Level) வைத்து நோக்கும்போது அதன் பிரதான இயல்புகளாக பின்வருவனவற்றை அடையாளம் காண முடியும்.

அ. வரண்ட காலநிலை, நிலத்தடி நீரைப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் செய்யும் விசேட முறை.

ஆ. மரபு வழிபட்ட விவசாய உறவுகள் அழிந்து போய் பண வடிவிலான நிலவார முறையும் சிற்றுடமை விவசாயமும்.

இ. சிற்றுடைமையாளனின் குடும்ப உறுப்பினர்களின் உழைப்பு கூலி உழைப்பு ஆகியன மூலம் பயிரிடல்.

ஈ. மூலதனச் செறிவுள்ள விவசாய உற்பத்தி, விவசாய யந்திரங்கள், உள்ளீடுகள் உபயோகித்தல்.

உ. உற்பத்திப் பொருள் வர்த்தகத்தில் விவசாயி நேரடியாக கொழும்பு வர்த்தகர்களைசென்றடைய முடிதல், படித்தரமுடைய இடைத்தரகர் முறை இன்மை.

ஊ. சாதி முறையின் இறுக்கம் இன்று வரை கூலித்தொழிலையும், நில உரிமையையும் பெருமளவு தீர்மானித்தல்.

எ. இம்முறைமையின் உள்ளேயே தரத்தில் உயர்ந்த மட்டத்தை நோக்கிய முன்னேற்றத்திற்கான இயக்கு சக்தி தொழிற்படுதல்.

யாழ்ப்பாணக் குடியான் உற்பத்தி முறை 1981ம் ஆண்டில் வெளிப்படுத்தி நின்ற பொது இயல்புகளை மேற்கண்டவாறு விபரித்த பின் பத்தைமேனிக் கிராமம் பற்றிய ஆய்வுத் தகவல்களை நியூட்டன் தருகின்றார்.

யாழ்ப்பாண் நகரிலிருந்து வடமேற்கு திசையில் 12 மைல் தொலைவில் உள்ள கிராமம் பத்தைமேனி. அச்சுவேலி இதன் அருகே உள்ள சிறு நகர். 2647 பேர் சனத்தொகையைக் கொண்ட இக்கிராமத்தின் சனத்தொகை வளர்ச்சிப்புள்ளி விபரங்கள் வருமாறு.

| பத்தைமேனியின் சனத்தொகை | |
|---|---|
| **ஆண்டு** | **சனத்தொகை** |
| *1921* | *1314* |
| *1931* | *1258* |
| *1953* | *1935* |
| *1963* | *2457* |
| *1971* | *2558* |
| *1981* | *2647* |

பத்தைமேனியில் 3 பரப்பு முதல் 8 பரப்பு வரை பயிர்ச் செய்கை செய்யும் குடும்பங்கள் இருந்தன. இப் பயிர்ச்செய்கை நிலங்கள் சிறுசிறு துண்டுகளாக இருந்த போதும் உற்பத்தி விளைதிறன், வினைத்திறன் என்பன தடைப்படவில்லை. வளமான மண்ணும், போதியளவு நிலத்தடி நீரும் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாய் அமைந்தன. பயிர் நிலத்தில் வீடுகளைக் கட்டும் வழக்கம் பெருகிய



போதும் கல்லைத்தோண்டி புதிய நிலங்களை விவசாயத்திற்கு கொண்டுவருவதால் பயிர்ச்செய்கை நிலத்தட்டுப்பாடு ஏற்படவில்லை. இருந்த போதும் புதிய நிலங்களை பயிர்ச்செய்கைக்கு கொண்டுவருதல் ஒரு காலத்தில் எல்லைப்படுத்தப்படும். பத்தைமேனியின் ஒவ்வொரு வளவிற்குள்ளும் கிணறு உண்டு. நிலத்தடி நீரை அளவுக்கதிகமாக உபயோகிப்பதால் எதிர்காலத்தில் நெருக்கடி தோன்றும். கடல்நீர் உட்புகும் அபாயம் உள்ளது.

கிணற்றில் இருந்து நீர் பாச்சும் தொழில்நுட்பம் மூன்று கட்டங்களாக வளர்ச்சியுற்றது. முதற்கட்டத்தில் துலா மூலம் இறைத்தல் முறை இருந்தது. துலா மிதிக்கவும் இறைக்கவும் உடல் உழைப்பாளர்கள் தேவை.ஆழக் கிணறு ஆயின் துலா மிதிப்பதற்கு இரண்டு பேர் தேவை. இந்தக் கட்டத்தில் பனை மரத்தை வெட்டி துலாச்செய்தல், இறைக்கும் உபகரணங்களைச் செய்தல் ஆகியன துணைக்கைவினைகளின் பெருக்கத்திற்கு உதவின. காலப்போக்கில் யாழ்ப்பாண குடியான் விவசாயம் வர்த்தகமயப்பட்டது. இதன் பயனாக செல்வந்த விவசாயிகள் சிலர் உருவாயினர். இவர்கள் கையில் மூலதனம் திரண்டது. இவர்கள் சூத்திரத்தில் முதலிட்டனர். சூத்திரம் எனப்படும் இயந்திரத்தை கொண்டு நீர் இறைக்கும் முறை இரண்டாம் கட்ட வளர்ச்சியாகும். சூத்திரம் வளைப்பதற்கு மாடுகள்

**குடியான் பொருளாதார முறை ஒன்றினை தேசிய பொருளாதாரத்தினதும் உலகு தழுவிய பொருளாதாரத்தினதும் அங்கமாக வைத்தும் நாம் நோக்குதல் வேண்டும். அவ்வகையில் நோக்கும் பொழுது குடியான் சமூகமும் அதன் பொருளியலும் பேரின முறைமை ஒன்றின் பகுதியாக இருப்பதைக் காணலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா சண்முகலிங்கம்

உபயோகிக்கப்பட்டன. மனித உழைப்பிற்குப் பதில் மாடு இடைப்புகுந்தது. ஆழக்கிணறுகளில் இறைப்பு வேலை சூத்திரத்தால் இலகுவாயிற்று. மூன்றாம் கட்டத்தில் மண்ணெண்ணை கொண்டு இயக்கும் இயந்திரங்கள் புகுந்தன. 1960களிலும் 1970களிலும் எல்லோரும் இயந்திரங்களைக் கொண்டு நீர் இறைக்க ஆரம்பித்தனர். துலாமிதித்தல் முறை வழக்கில் இல்லாமல் போயிற்று.

1967 காலத்தில் சூத்திரம் ஒன்றை நிறுவுவதற்கு ரூ 2000/= முதலீடு தேவைப்பட்டது. 1980ல் இது ரூ 10,000/= ஆக உயர்ந்திருந்தது. பட்டையால் இறைக்கும் முறைக்கு உழைப்பாளர்கள் தேவை. துலாமிதித்தல், இறைத்தல் வேலைகளிற்கு கூட்டு இறைப்பு என்ற முறை வழக்கில் இருந்தது. ஒரு கமக்காரன் இன்னொரு கமக்காரனுக்கு துலாமிதிப்பதற்கு உதவுவான். அதற்கு பதிலாக உதவியைப் பெற்றவன் உதவியை வழங்கியவனுக்கு துலா மிதிப்பதில் உதவுவான். இதனை கூட்டு இறைப்பு ஒப்பந்த முறை என்பர். இவ்விதமான உழைப்பு பரிவர்த்தனை (Exchange Labour) சூத்திரத்தின் வருகையால் குறைந்தது. ஏனெனில் மனிதனுக்குப் பதில் மாடு சூத்திரம் வளைப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. நீர் இறைக்கும் இயந்திரத்தின் வருகையுடன் உழைப்பு பரிவர்த்தனை முற்றாகவே மறைந்தது.

பத்தைமேனியில் வெங்காயம் பயிரிடும் 32 கமக்காரர்களில் 30 பேர் நீர் இறைக்கும் இயந்திரத்தையும் 2 பேர் சூத்திரத்தையும் உபயோகிப்பதைக் காண முடிந்தது. சிறிய நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை ரூ 3500/= விலையில் பெற முடிந்தது. பெரிய இயந்திரம் ஒன்றின் விலை ரூ 7500/= ஆகும். நீர்ப்பாசன தொழில்நுட்பம் வளர்ந்து சென்றதை இவ்விபரங்கள் காட்டுகின்றன. இதன் பயனால் புறத்தே உள்ள பேரின முறைமையான உலக பொருளாதாரத்துடன் யாழ்ப்பாணத்தின் குடியான் பொருளாதாரம் இணைக்கப்பட்டது. நீர் இறைக்கும் இயந்திரம், எரிபொருள், உதிரிப்பாகங்கள் என்பனவெளியில் இருந்து உள்ளே வரத்தொடங்கின. பசளை, கிருமிநாசினி,விதைகள் என்பனவும் வெளியில் இருந்து தருவிக்கப்பட்டன.

குடியான் உற்பத்தி சந்தையில் வெறும் விலையைப் பொறுத்தே செய்யக்கூடிய முதலீடுகளின் அளவு தீர்மானிக்கப்படும். பத்தைமேனியில் வெண்காயம் நீண்டகாலமாக பயிரிடப்பட்டு வந்தபோதும் 1960களில் தொடக்கம் தான் வெளிச்சந்தைக்காக (கொழும்பு) உற்பத்தி நிகழ்ந்தது. 1970க்கு முன்னர் ஒரு வருடத்தில் இருதடவைகள் வெங்காயம் பயிரிடப்பட்டது. 1970க்களில் வெண்காய விலை உயரத்தொடங்கியதும் விவசாயிகள் மூன்று தடவைகள் பயிரிடத்தொடங்கினர். வெண்காயம் நடுகை செய்த பின் 70-80 நாட்களில் அறுவடையாகும் பயிர். ஒக்டோபர்- டிசம்பர், ஜனவரி- மார்ச், யூன்- ஆகஸ்ட் என மூன்று பருவங்களில் இது பயிரிடப்பட்டது. அதிகளவு மழையால் வெண்காயப் பயிர் பாதிப்படையும். காலநிலை மாறுதல்களை அவதானித்து மழை, பனி என்பவற்றின் போக்கையும் அனுசரித்து இப் பயிர் பயிரிடப்படும். பயிரிடுகையில் உழைப்பு மிகச் செறிவான முறையில் உபயோகிக்கப்படும். நிலத்தை உழுவதற்கும், கொத்துவதற்கும், பண்படுத்துவதற்கும் நீண்ட நேர உழைப்புத் தேவை. உழுவதற்கு இரண்டு சில்லு உழவு யந்திரங்களையும் உபயோகிப்பர். மண்வெட்டியைக் கொண்டே கொத்து வேலை, பண்படுத்தல் வேலை நிகழும். பசளை, கிருமிநாசினி உபயோகம் குறிப்பிடத்தக்க அளவில் நிகழ்ந்தது. இயற்கைப் பசளையையும் மாட்டெருவையும் உபயோகித்தனர். உழுதல், கொத்துதல் முதலிய வேலைகள் ஆண்களாலும் நடுகை, களைபிடுங்கல், வெண்காயப் பூ பிடுங்குதல், அறுவடை வேலைகள் ஆகியன பெண்களாலும் செய்யப்பட்டன. குடும்ப உறுப்பினர்களின் உழைப்பும் கூலி உழைப்பும் பயன்படுத்தப்பட்டது. குடும்ப உறுப்பினர் உழைப்பில் ஆண், பெண் இரு சாராரிடையும் தெளிவான உழைப்புப் பிரிவினை இருந்ததாகக் கூற முடியாது. வெங்காய அறுவடை கூடிய

**பத்தைமேனியில் பயிரிடும் நிலத்துண்டுகளின் உரிமை - சாதியடிப்படையிலான உடைமை.**

| சாதி | காணியின் அளவு (பரப்பில்) | காணியுரிமை உடைய குடும்பங்கள் | மொத்த குடும்பங்களின் தொகை |
|---|---|---|---|
| வேளாளர் | 850 | 85 | 160 |
| நளவர் | 147 | 39 | 172 |
| மடத்தவர் | 260 | 35 | 48 |
| கரையார் | 171 | 25 | 42 |
| தனத்தார் | 111 | 17 | 24 |
| தச்சர் | 3 | 1 | 19 |
| பிறர் | 27 | 3 | 13 |
| மொத்தம் | 1569 | 205 | 478 |

குடியான் உற்பத்தி சந்தையில் வெறும் விலையைப் பொறுத்தே செய்யக் கூடிய முதலீடுகளின் அளவு தீர்மானிக்கப்படும். பத்தை மேனியில் வெண்காயம் நீண்டகாலமாக பயிரிடப்பட்டு வந்தபோதும் 1960களில் தொடக்கம் தான் வெளிச் சந்தைக்காக (கொழும்பு) உற்பத்தி நிகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்புச் செறிவுள்ள வேலை. கூலியாட்களை அமர்த்தி இவ்வேலையைச் செய்விப்பர்.

அரசாங்கத்தின் ஏற்றுமதி / இறக்குமதி கொள்கைகள் வெங்காயத்தின் சந்தை விலையை நிர்ணயிப்பனவா இருந்தன. 1968- 1980 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வெங்காயத்தின் சந்தை விலை ஒரு றாத்தல் (453கிராம்) 42 சதத்தில் இருந்து 2 ரூபா 19 சதம் வரை உயர்ந்து சென்றது.

1970ம் ஆண்டின் பின்னர் சென்மதி நிலுவைப் பிரச்சினை மோசமடைந்ததால் வெண்காயம், மிளகாய் ஆகியவற்றின் இறக்குமதி தடைப்பட்டது. இதனால் உள்ளூர் சந்தை விலை அதிகரிக்கத் தொடங்கியது. மேற்குறித்த பட்டியல் விலை இந்த அதிகரிப்பின் போக்கை வெளிப்படுத்துகிறது. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வெண்காயம் உற்பத்தி செய்யப்பட்ட போதும் யாழ்ப்பாண வெண்காயம் உள்நாட்டு சந்தையில் முக்கியமான இடத்தைப் பெற்றது. 1971- 1977 காலப்பகுதியில் வெண்காய விலை 81 சதத்தில் இருந்து 3 ரூபா 24 சதமாக உயர்ந்தது. இது நான்கு மடங்கு விலை உயர்வாகும்.

**யாழ்ப்பாணத்தில் வெண்காயத்தின் சந்தை விலை.(ஒரு றாத்தல்)**

| ஆண்டு | விலை |
|---|---|
| 1968 | 0.42 |
| 1970 | 0.43 |
| 1971 | 0.81 |
| 1972 | 1.14 |
| 1973 | 1.47 |
| 1974 | 1.31 |
| 1975 | 1.70 |
| 1976 | 2.35 |
| 1977 | 3.24 |
| 1978 | 2.46 |
| 1979 | 2.77 |
| 1980 | 2.19 |

(1 றாத்தல் = 453கிராம்)

**பெட்டி 3**

**உற்பத்தி உறவுகளும் வர்க்க உறவுகளும்**

தான் கள ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட பத்தைமேனிக் கிராமத்தின் வர்க்க உறவுகள் பற்றியும் நியூடன் குணசிங்க குறிப்பிடுகிறார். வர்க்கக் கட்டமைப்பின் அடித்தளத்தில் நிலமற்ற கூலி விவசாயத் தொழிலாளர்கள் இருந்தனர். இவர்களுக்கு கூலி உழைப்பு ஒன்று தான் வருமானத்திற்கான வழியாக இருந்தது. கூலித்தொழிலாளர் ஏறக்குறைய அனைவருமே வேளாளர் அல்லாதோராக இருந்தனர். அடுத்தபடியில் இருந்தவர்கள் சிறுதுண்டு நிலத்தில் பயிரிடுவதோடு கூலி உழைப்பிலும் ஈடுபட்ட குடியான்கள். இவர்களுக்கு நிலத்தில் இருந்து கிடைத்த உற்பத்தி வருமானம் குறைவாகவும் சீவனத்திற்குப் போதாததாகவும் இருந்தது. இவர்கள் கூலி உழைப்பில் ஈடுபடுதல் அவசியத் தேவையாக இருந்தது. பத்தைமேனியில் வாழ்ந்த இப்பிரிவினரும் வேளாளர் சாதியைச் சேராதவர்களே. அடுத்த படியில் இருந்தோர் நடுத்தரக் குடியான்கள். இவர்களிடம் போதிய வருமானத்தை விவசாய உற்பத்தியில் இருந்து ஈட்டக்கூடிய அளவு நிலம் இருந்தது. நடுத்தரக் குடியான்கள் கூலி உழைப்பிற்குப் போகும் கட்டாயம் இருக்கவில்லை. நடுத்தர குடியான்களில் பெரும்பான்மையினர் வேளாளராக இருந்தனர். பத்தைமேனிக் கிராமத்தின் சிறிய குழுவொன்று செல்வந்த விவசாயிகள் என்னும் பிரிவில் சேர்க்கப்படக் கூடிய வர்க்கமாய் இருந்து. இவர்கள் மூலதனச் செறிவுள்ளதும் உழைப்புச் செறிவுள்ளதுமான பயிர்ச்செய்கை முறைகளைக் கையாண்டனர். பயிர்ச்செய்கையில் பணத்தை முதலிட்டு இலாபம் ஈட்டினர். இவர்களின் உற்பத்தி முழுவதும் சந்தையை நோக்கியதாக அமைந்தது. செல்வந்த விவசாயிகள் தம் வீட்டிலேயே நிரந்தரமாக விவசாய கூலிகளை வைத்திருப்பதும் உண்டு.

கத்தரிக்கோல் நெருக்கடிக்கு வெவ்வேறு வர்க்கங்கள் எப்படி எதிர்வினை புரிந்தன என்பதைப் பார்க்கலாம். கூலி விவசாயிகள் உயர்ந்த கூலியை கேட்டனர். பொருட்களின் விலையேற்றம் இவ்விதம் கூலியை உயர்த்திக் கேட்பதற்குக் காரணமாயிற்று. உயர் கூலியை பெற்று கொள்வதில் இவர்கள் வெற்றி கண்டனர். ஏழை விவசாயக் குடியான்கள் இரண்டக நிலையில் இருந்தனர். தமது விவசாய உற்பத்திக்கு ஆட்களை கூலிக்கு பிடிக்கவும் வேண்டும். கூலி உழைப்பாளன் என்ற முறையில் உயர் கூலி இவர்களுக்கு நன்மையானதாகவும் இருந்தது. குரக்கன், மரவள்ளி ஏனைய கிழங்கு வகைகள் போன்றவற்றைப் பயிரிடுவதில் ஏழை விவசாயிகள் கூடிய நாட்டம் காட்டினர்.இப் பயிர்களைப் பயிரிடுவதற்கு கூலி ஆட்களைப் பிடிக்க வேண்டியதில்லை. குடும்ப உழைப்பைக் கொண்டே பயிரிடலாம். ஒருவருக்கு ஒருவர் மாற்று முறையில் உழுதல், கொத்துதல் போன்ற உழைப்பு பரிவர்த்தனை முறைகளுக்கும் இவர்கள் திரும்பினர். கத்தரிக்கோல் நெருக்கடிக்குச் செல்வந்த விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் முகம் கொடுத்த விதம் வித்தியாசமானது. செல்வந்த விவசாயிகள் முந்திரி தோட்டங்களில் முதலிட்டனர். உருளைக்கிழங்குச் செய்கை இலாபமானது எனக் கண்டு அதனைப் பயிரிடுவதிலும் ஊக்கம் காட்டினர்.

எந்தவொரு மனித சமூக அமைவிற்கும் உரிய இன்னொரு அடிப்படையான குறிப்பியக்கம் ஒரு மூடுண்ட வெளிக்குள் தன்னை வரையறுத்துக் கொள்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளகாய் விலையும் இவ்விதமே உயர்ந்தது. 1971ல் 1 ரூபா 60 சதமாக ஒரு றாத்தல் மிளகாய் விற்பனை செய்யப்பட்டது. 1976ல் இது 14 ரூபா 11 சதமாக உயர்ந்தது. இக்காலப்பகுதியில் வர்த்தக விகிதம் (Terms of Trade) விவசாயத் துறை சார்பாக மாறியது. குறிப்பாகச் சில விவசாயப் பண்டங்களின் விலைகளில் இது வெளிப்பட்டது.

1977ம் ஆண்டிலிருந்து தாராள வர்த்தக கொள்கை பின்பற்றப்பட்டது. விவசாய உற்பத்திப் பொருட்களிற்கு போட்டி கடுமையானதாக இருந்தது. இறக்குமதிகள் தடையின்றிச் செய்யப்பட்டதால் விலைகள் வீழ்ச்சியுற்றன. உற்பத்தியாளர்களின் இலாப ஈவு குறைந்து சென்றது. மேலும் உள்ளீடுகளின் விலைகளும் அதிகரித்தன. யாழ்ப்பாணத்தில் பயிர்ச்செய்கைக் காணியை ஒற்றிக்கு கொடுத்து பணத்தை பெறும் முறை இக்காலப் பகுதியில் பரவலாக இருந்தது. 3000 கன்று பயிர்செய்யக்கூடிய நிலத்திற்கு கமக்காரன் ஒருவன் ரூ12,000/= த்தை ஒற்றியாகக் கொடுக்க வேண்டும். ரூ 12,000/= ற்கு 25% ப்படி வட்டி பெறலாம். ஆகவே வருடாந்த வட்டி ரூ 3000/=ஆகும். ஒற்றி மீளப்படும்போது நிலச்சொந்தக்காரன் ரூ 12,000 முதலையும் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஒற்றி முறை நில வாடகையின் அதிகரிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

விவசாய வேலைகளுக்கான கூலியும் இக்காலத்தில் அதிகரித்தது. 1970 ல் ஒருஆளுக்கான நாட் கூலி 10 ரூபாவாக இருந்தது. 1980ல் இது 30 ரூபாவாக உயர்ந்தது. பசளை, கிருமிநாசினி ஆகியவற்றின் விலைகளும் இக்காலத்தில் உயர்ந்து சென்றன.விவசாய உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்கும்போது விவசாய உள்ளீடுகளுக்கான விலைகள் மாறாதிருக்குமாயின் உற்பத்தியாளர் நன்மை பெறுவர். ஆனால் உள்ளீடுகளின் விலைகளும் சமாந்தரமாக உயரும்போது குடியான் விவசாய உற்பத்தி நெருக்கடி ஒன்றை எதிர்நோக்கும். இதனையே பொருளியலில் கத்தரிக்கோல்நெருக்கடி (Scissors Crisis) என்பர். கத்தரிக்கோலின் இரு பக்கங்களும் சேர்ந்து அறுத்துச் செல்வது போல் உற்பத்தி பொருளின் விலை உயர்வின் நன்மைகளை உள்ளீடுகளின் விலை உயர்வு இல்லாமல் செய்வதையே கத்தரிக்கோல் நெருக்கடி என்ற உருவகம் குறிப்பிடுகிறது.

யாழ்ப்பாண குடியான் சமூகத்தில் உற்பத்தி சக்திகளின் மாற்றத்தினால் ஏற்படும் விவசாய விருத்தி பற்றி விபரிக்கும் நியூட்டன் குணசிங்க இந்த முறைமையின் உள்ளார்ந்த ஆற்றலை (Potential) தடைப்படுத்தும் காரணி எது என்ற கேள்வியை எழுப்புகின்றார். "கத்தரிக்கோல் நெருக்கடி" இலாபத்தையும் மூலதனத் திரட்சியையும் தடுக்கிறது. இதனால் இந்த முறைமை மேற்கொண்டு தர ரீதியான (Qualitative) மாற்றத்தை அடைதல் சாத்தியமற்றது. யாழ்ப்பாணக் குடியான் சமூக முறைமைக்கு வெளியே உள்ள பேரின முறைமை (Macro System) நிர்ணய சக்தியாகச் செயற்படுகிறது என்று அவர் கூறுகிறார். தமது கருத்தை விளக்கும் போது அல்தூசரின் மேல் நிர்ணயம் (Over determination) என்ற கருத்தாக்கத்தை அவர் உபயோகிக்கின்றார். ஒரு முறைமையின் உள்ளார்ந்த முரண்பாடுகளை தவிர்ந்த வேறு ஓர் காரணி அந்த முறைமையின் வளர்ச்சிப் போக்கையும் இயக்கத்தையும் தீர்மானிக்கும் முதன்மைக் காரணியாக ஆதிக்கம் பெறுவதையே "மேல் நிர்ணயம்" என்ற கருத்தாக்கம் குறிப்பிடுகிறது. ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை, நீர் இறைக்கும் இயந்திரம், உழவு இயந்திரம், பசளை, கிருமிநாசினி ஆகிய உள்ளீடுகளின் விலைகள் ஆகியவற்றின் விளைவான கத்திரிக்கோல் நெருக்கடி யாழ்ப்பாண முறைமையின் உள்ளே இருந்து உருவாகவில்லை. அது வெளியில் இருந்தே வருகிறது. அவரின் வார்த்தைகளில் கூறுவதாயின் "பத்தைமேனியின் வளர்ச்சிக்கான தடைகளின் இயங்கியல் அந்த முறைமையின் உள் இருந்து தோன்றவில்லை. பேரின முறைமையினால் வெளியிலிருந்து மேல் நிர்ணயம் செய்யப்படுகிறது".

இக்கட்டுரையில் ஆராயப்பட்ட விடயங்களில் இருந்து பெறப்படும் முடிவுகளை அடுத்து நோக்குவோம்.

1.1 வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் சமூக பொருளாதார நிலைமைகளையும், உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள் ஆகியவற்றையும் விளங்கிக் கொள்வதற்கு குடியான் சமூகம் என்னும் எண்ணக்கரு உதவுகிறது.

1.2 உற்பத்தி சாதனங்களை சிற்றுடைமையாளர்களான குடியான்கள் உடைமையாகக் கொண்டிருத்தல், பிழைப்பூதியத்தை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி அமைதல், குடியான்கள் இன்னோர் சமூகக் குழுவின் அரசியல், பொருளியியல் மேலாதிக்கத்திற்கு உட்பட்டவராய் இருத்தல் ஆகிய மூன்று குணாம்சங்கள் குடியான் சமூக பொருளியலின் அடிப்படை இயல்புகளாகும்.

1.3 பொதுவான மூன்று அடிப்படைகளைக் கொண்டமையும் குடியான் சமூகங்கள் பல்லினத் தன்மை வாய்ந்தனவாயும் உள்ளன. ஓரினத்தன்மையுடைய குடியான் சமூகம் என ஒன்றை ஒரு தேசத்தின் எல்லைக்குள்ளே அல்லது ஒரு பிராந்தியத்திற்கு உள்ளோ இனம் காணுதல் முடியாது.

**தேசம் என்கிற இந்த நிகழ்வை மனித இனத்தின் இருப்பை ஒழுங்கு செய்து ஆள்கிற சில பொதுவான விதிகளில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்த இருப்பு மரணத்திற்கெதிராக போராட்டத்தில் வெல்லப்பட்ட ஒன்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா சண்முகலிங்கம்

1.4 குடியான் பொருளாதாரம் பற்றிய ஒருமைக் கோட்பாட்டை ஏ.வி.சயனேவ் கட்டமைக்க முயன்றார். இக்கோட்பாடு இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

1.5 ஒருமைத்தன்மையுடைய குடியான் முறைமை என ஒன்று கிடையாது என்று கூறும் நியூடன் குணசிங்க குடியான் விவசாய முறைமைகள் ( Agarian Systems) என்னும் கருத்தை முன்வைக்கிறார். இலங்கையில் பல குடியான் விவசாய முறைமைகள் உள்ளன என்றார் அவர்.

1.6 குடியான் விவசாய முறைமை ஒன்றில் உற்பத்தி சக்திகள் உற்பத்தி உறவுகள் என்ற இரண்டின் அம்சங்களை தனித்தனியாகப் பகுத்தாய்ந்து அவற்றை மாறும் காரணிகள் மாறாக் காரணிகள் என்னும் வகைக்குள் உள்ளடக்கி ஒரு முறைமையின் (System) அடிப்படைகளை பிரித்து அடையாளம் காண முடியும் என நியூடன் குணசிங்க எடுத்துக் காட்டுகிறார்.

1.7 யாழ்ப்பாண குடியான் விவசாய முறைமை ஒன்றை 1981ல் நிகழ்த்திய கள ஆய்வின் படி அவர் இனம் கண்டு அடையாளப்படுத்தி விபரித்துள்ளார். வளர்ச்சிக்கான உள்ளாற்றல் நிறைந்த முறைமை என அவரால் வருணிக்கப்படும் இம்முறைமையின் இயக்கம் வரலாற்று முறையில் விளக்கம் பெற்றுள்ளது. அந்த முறைமை கத்தரிக்கோல் நெருக்கடியை நோக்கி 1980க்களில் செல்கிறது.

1.8 இந்த முறைமை மேற்கொண்டு தர ரீதியான ஒரு மாற்றத்தை அடைதல் சாத்தியம் அற்றது. யாழ்ப்பாணக் குடியான் சமூக முறைமைக்கு வெளியே உள்ள பேரின முறைமை ( Macro Systems) இதனை மேல் நிர்ணயம் செய்கிறது என்றும் அவர் கூறினார்.

## முடிவுரை

நியூட்டன் குணசிங்க தனது ஆய்வை வெளியிட்ட தருணத்தில் யாழ்ப்பாணம் யுத்த பூமியாக மாறும் நிலை உருவாக்கம் பெறுகிறது. இன்று அவரால் வருணிக்கப்பட்ட "வளர்ச்சிக்கான உள்ளாற்றல் நிறைந்த ஒரு முறைமை" முழுமையாகச் சிதறடிக்கப்பட்டுவிட்டது. அவர் கள வேலையை நிகழ்த்திய பத்தைமேனி இன்று கட்டாந்தரையாக மாறியுள்ளது. யாழ்ப்பாணக் குடியான் விவசாய முறைமை எங்கே செல்கிறது, அதன் எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற கேள்விகள் சிந்தனைக்குரியவை.

இக் கேள்விகளை நாம் கேட்கும் போது நியூட்டன் குணசிங்க எழுதியவை பற்றிய தேடல் மிகவும் தேவையாகிறது.

(நியூட்டன் குணசிங்க யாழ்ப்பாணத்தின் குடியான் முறைமை பற்றித் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் "Transformation and Trajectories of Agrarian Systems in Jaffna and Nuwara-Eliya Districts" என்னும் தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில் இருந்து பெறப்பட்டவை. பார்க்க 'Agrarian Change in Srilanka' என்னும் கட்டுரைத் தொகுதி பக்கம் *131 — 154.* இத் தொகுப்பு James Brow மற்றும் Joe Weeramunda ஆகியோரால் பதிக்கப்பட் டது. பல ஆய்வார்களின் கட்டுரை களைக் கொண்ட இந்நூல் (1992) நியூ டெல்லி சேஜ் பப்ளிகேசன்ஸ் ஆல் வெளி யிடப்பட்டது.)

### எடையிலாப் பொருளாதாரம் என்றால் என்ன?

"தகவல் பொருளாதாரம்", "புலனாகாப் பொருளாதாரம்", "அருவப் பொருளாதாரம்", "புதிய பொருளாதாரம்" என்றெல்லாம் அழைக்கப்படும் "எடையிலாப் பொருளாதாரம், நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டது. முதலாவதாக, தகவல் மற்றும் செய்தித் தொடர்புத் தொழில்நுட்பம் மற்றும் இணையம் (இன்டர் நெட்). இரண்டாவதாக, அறிவார்ந்த சொத்து, இதில் புனை வுரிமைகள், பதிப்புரிமைகள், வாணிகக்குறிப்பெயர்கள், வாணிகக்குறிகள், விளம்பரம், நிதிமற்றும் ஆலோசனைப்பணிகள், நிதிமாற்றங்கள், சுகாதாரக் கவனிப்பு (மருத்துவ அறிவு), கல்வி ஆகியவையும் அடங்கும். மூன்றாவது அம்சத்தில், மின்னணுவியல் நூலகங்கள், தகவல் ஆதாரங்கள், புதிய செய்தித் தொடர்புச் சாதனங்கள், ஒளிப்பேழைப் பொழுதுபோக்குகள், ஒலிபரப்பு ஆகியவை அடங்கும். நான்காவது, அம்சத்தில் உயிர்தொழில்நுட்பம், மரபு நூலகங்கள், தகவல் ஆதாரங்கள், மருந்தாக்கம் ஆகியவை உள்ளடங்கும்.

இன்றையப் பொருளாதாரங்களில் மிக வேகமாக வளர்ந்துவரும் துறைகள் இந்த நான்கு அம்சங்களுமாகும். இப்பட்டியலிலுள்ள அனைத்தும் கண்ணுக்குப் புலனாகாதவை; எனவே, இவற்றைத் தகவல் என்று கொள்ளலாம்.

எனினும், எடையற்ற பொருளாதாரத்தைப் புரிந்துகொள்வதில், கருத்துகள், தகவல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அளவுக்குமீறி வலியுறுத்த லாகாது. குறைந்தது 5,000 ஆண்டுகளாகப் பொருளாதாரங்கள் தகவல்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. மெசொப்பொட்டேமியா ஆற்று வடிநிலப் பகுதிச்சுமேரியர்கள் 5,000 ஆண்டுகளுக்கு முன்பே நிதிக்கணக்குகளை களிமண் வட்டுகளில் ஆப்பு வடிவ எழுத்துக்களில் எழுதி வந்தனர். முதல் தொழில்புரட்சியின்போது, நூற்பாலைகளும், நீராவிப் பொறிகளும் பொருளாதாரத்தை வெகுவாக உயர்த்தின. இந்த எந்திரங்கள்தான் புதிய தகவல்களின் இயற்பியல் உருவம்.

*(யுனெஸ்கோ கூரியர், பிப் 1999)*

1977ம் ஆண்டிலிருந்து தாராள வர்த்தக கொள்கை பின்பற்றப்பட்டது. விவசாய உற்பத்திப் பொருட்களிற்கு போட்டி கடுமையானதாக இருந்தது. இறக்குமதிகள் தடையின்றிச் செய்யப்பட்டதால் விலைகள் வீழ்ச்சியுற்றன. உற்பத்தியாளர்களின் இலாப ஈவு குறைந்து சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பாளி என்பவன் யார்?

## மிஷேல் ஃபூக்கோ



**மிஷேல் ஃபூக்கோ**
**(1926 - 1984)**

இவர் 1926 அக்டோபர் 15 இல் பிரான்ஸில் உள்ள போய்ட்டியர்ஸ் என்ற ஊரில் பிறந்தார். அப்பா புகழ் பெற்ற மருத்துவர். மகன் தன்னைப்போலவே மருத்துவராக வரவேண்டுமென்று விரும்பினார். மகனோ தத்துவத்துறையில் ஆர்வம் காட்டினார்.

1960 இல் இவரது புகழ் பெற்ற 'Madness and Civilisation' எனும் நூல் வெளிவந்தது. இந்த நூல் ஃபூக்கோவுக்கு பெரும் புகழையும் டாக்டர் பட்டத்தையும் பெற்றுக்கொடுத்தது. இவர் பலரது சிந்தனைகளிலும் தாக்கம் செலுத்தும் நபராக மாறினார். பிரான்ஸில் தொடர்ந்து நிகழ்ந்த 1968 மே புரட்சி ஃபூக்கோவை பெரிதும் கோபமுறச் செய்தது. புரட்சிக்குப் பிந்திய சூழலில் ஃபூக்கோ சிறைச்சாலைகளுக்குச் சென்று சிறைக்கைதிகளுடன் உரையாடல் மேற்கொண்டு பல்வேறு தகவல்களைத் திரட்டினார். இதன் விளைவாக 'Archaelogy of Knowledge' எனும் நூல் வெளியானது. பின்னர் 1975 இல் 'Dicipline & Punish: the origin of Prison' எனும் நூல் வெளியானது. கடைசியாக இவரது முற்றுப்பெறாத பிரதியான 'The History of Sexuality' எனும் நூல் வெளியானது.

ஃபூக்கோ 1984 இல் இறந்தார். ஆனால் அவரது கருத்துக்கள், சிந்தனைகள், தத்துவம், அரசியல், உளவியல், இலக்கியம், மொழியியல் என பல்வேறு துறைகளிலும் தாக்கம் செலுத்துகின்றன. இன்று அதிகமாகப் பேசப்படும் பின் நவீனத்துவம் சார்ந்த உரையாடல்களில் ஃபூக்கோவும் குறிப்பிடத்தக்கவராக விளங்குகின்றார். ஃபூக்கோ ஒழுங்கமைப்பு, அதிகாரம், அறிவு, பாலியல், முதலியவை குறித்த நுண்அரசியல் ஆய்வுகளின் வாயிலாக பெரிதும் அறியப்படும் ஒருவராக உள்ளார். குறிப்பாக அதிகாரத்தையும் (Power) அதன் முறைமையாக்கப்படுதலையும் (Legitimization) குறித்த சிக்கல்கள் பற்றி ஆராய்ந்தார்.

அதாவது மதநிறுவனங்கள் அல்லது அரசாங்கம் போன்றவை அதிகாரத்தை முறைமைப்படுத்திக் கொண்டு மக்களின் மேல் பிரயோசிக்கின்றன. அப்போது அதிகாரத்தைச் சார்ந்த மையமும் அதிகாரத்துக்கு எதிரான விளிம்புநிலை (Margin) யான மற்றமையும் (Other) தோன்றுகின்றன. இதைப் பற்றிப் பேசும்போது ஃபூக்கோ அதிகாரம் என்பது அறிவு என்ற அமைப்பின் செயல்-

**கருத்துக்கள், அறிவு, இலக்கியம், தத்துவம் மற்றும் விஞ்ஞானங்களின் வரலாற்றில், "படைப்பாளி" என்ற கருத்தாக்கத்தின் தோற்றம், "தனித்துவமாக்கல்" என்ற சிறப்பு தருணத்தை உருவாக்குகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளால் வருவது. அது சமூகரீதியாக முறைமைப்படுத்தப்படும் போது சட்டமாகவும் சட்டங்களை அமுலாக்கும் நிறுவனங்களாகவும் மாறிவிடுகிறது என்கிறார்.

மேலும் ஃபூக்கோ"அதிகாரம்" என்பது ஒற்றைப் பொருள் அல்ல. அது பல துண்டுகளாக இருக்கிறது என்று அகல்விரி நோக்கில் விளக்குகின்றார். நாம் உபயோகிக்கும் மொழியும் சிந்தனையும் துண்டாடப்பட்டவை. நாம் ஒழுங்கற்று துண்டு துண்டாகச் சிந்திக்கின்றோம். பேசும் போதும் எழுதும் போதும் அந்தத் துண்டுகளைக் கோர்த்து கோர்வையாக்கி வெளியிடுகின்றோம். நமது சிந்தனைகளைப் போலவே அதிகாரம் என்பதும் துண்டுகளால் ஆனது. இந்தத் துண்டாடப்பட்ட அதிகாரங்களை அதிகாரத்தின் நுண் அரசியல் 'Micro Politics of Power' என்கிறார் ஃபூக்கோ.

மேலும் அவர் "நமக்கு இப்போது தேவை என்னவென்றால் அதிகார உறவுகளைப் பற்றிய ஒரு புதிய ஒழுங்கமைவு" என்றார். வேறு வார்த்தையில் சொன்னால் காண்ட் காலத்தில் இருந்து தத்துவத்தின் பணி அனுபவத்தில் கொடுக்கப்பட்டதை விடவும் தாண்டி அறிவு சென்றுவிடாமல் தடுப்பதாகத்தான் இருந்தது. ஆனால் அதே சமயத்தில் அதாவது நவீன அரசு உருவாக்கத்திலிருந்தும், சமூகத்தின் அரசியல் நிருவாகத்திலிருந்தும் தத்துவத்தின் பணி என்பது அரசியலினுடைய பகுத்தறிவுத் தன்மையின் அளவற்ற அதிகாரத்தை கண்காணிப்பதாகவும் உள்ளது எனவும் விளக்குகிறார்.

ஃபூக்கோ இவ்வாறு அதிகாரம் அறிவு மற்றும் தத்துவத்தின் பணி பற்றிய பரிசீலனைகளை நுண்தளங்களில் விரித்துச் செல்கிறார் . சமூக அரசியல் ரீதியாக அக்கறையுள்ளவர்கள் ஃபூக்கோவின் கருத்துக்கள் மீது அக்கறை கொள்வது தவிர்க்க முடியாது. அதாவது நம்முடையதைப் போன்ற சமூகத்தில் ஆரோக்கியமான அரசியல் செயல்பாடென்பது சுயேச்சையானதாக நடுநிலையானதாகக் காட்டிக்கொள்ளும் நிறுவனங்களை விமர்சித்து அந்நிறுவனங்களின் ஊடாக செயல்பட்டு வரும் அரசியல் வன்முறையை வெளிப்படுத்துவதாக இருக்கும். இப்படி வெளிப்படுத்திக் காட்டுவதன் மூலமே அந்நிறுவனங்களையும் அந்த அரசியல் வன்முறைகளையும் எதிர்த்துப் போராடும் படி நாம் அனைவரையும் தூண்ட முடியும். இதையே ஃபூக்கோ வலியுறுத்துகிறார். ஆகவே கலை, இலக்கிய மற்றும் பண்பாட்டுத் தளங்களில் நிலவும் அதிகார உறவுகள் பற்றிய எச்சரிக்கை நமக்கு வேண்டும். இதைப் புரிந்து கொள்ளும் வகையில் தான் ஃபூக்கோவின் படைப்பாளி என்பவன் யார்? என்ற கட்டுரை இங்கு இடம் பெறுகிறது.

அதிகாரத்துக்கு எதிரான போராட்டம் என்பது அதிகாரம் என்னவென்பது பற்றிய தெளிவில் தான் உள்ளது. இதனாலேயே அதிகாரம் பற்றி விளக்குவதில் அதிகம் சிரத்தை எடுத்துக்கொண்டார். அதிகாரம் ஒரு தருணத்தில் தோன்றி மற்றதற்குச் செல்கிறது. எல்லா வித உறவுகளிலும அதன் உற்பத்தி நடக்கிறது.அதிகாரம் எங்கும் திறந்திருக்கிறது. இப்படிக் கூறுவது அது எல்லாவற்றையும் தழுவியுள்ளது என்பதனால் அல்ல. அது எல்லா இடங்களிலிருந்தும் வருகிறது என்ற காரணத்தினால் தான் என்று ஃபூக்கோ விளக்குகின்றார்.

நம் சமூகத்தில் நிலவும் அரசியல் வன்முறையை நீதியின் பெயரால் நாம் எதிர்த்துப் போராட வேண்டும் என்று மட்டுமே புரிந்து வைத்திருக்கின்றோம். ஆனால் ஃபூக்கோ தரும் விளக்கம் விரிவானது, ஆழமானது. அதாவது " அரசியல் வன்முறையை எதிர்ப்பதென்பதும் அரசியல் போராட்டங்களில் ஈடுபடுவதும் அதிகார உறவுகளை மாற்றியமைப்பதற்கும் தான்" என்கிறார்.

சமகால சிந்தனைப் பரப்பில் ஃபூக்கோவின் கருத்துக்களும் உரையாடல்களும் முக்கியத்துவம் மிக்கவையாக உள்ளன. குறிப்பாக பின் நவீனத்துவம் பற்றிய உரையாடல்களின் திசைப்படுத்தல்களில் கவனம் பெறும் சிந்தனையாளர்கள் பற்றிய மேலதிக வாசிப்பும் தேடலும் முக்கியம். இன்று மார்க்சியத்தின் போதாமைகள் குறித்து பின் நவீனத்துவம் முன்வைக்கும் விமர்சனங்களையும் நாம் கணக்கிலெடுத்துக் கொண்டு முன்னோக்கி நகர்ந்து செல்வதும் அதற்கான உரையாடல் களங்களை விரிவாக்கி ஆழப்படுத்திச் செல்வதும் தவிர்க்க முடியாது.

இந்தக் கட்டுரை எமது இதுகாறுமான சிந்தனை மரபில் ஒரு தளர்வை சுயவிமர்சனத்தை வேண்டியுள்ள கட்டுரை எனலாம். படைப்பாளி பற்றிய பிம்பங்களை உடைத்து"படைப்பு"பற்றிய புதிய பார்வைகளை தெளிவுகளை முன்வைக்கின்றன. தமிழ்ச் சூழலில் படைப்பு படைப்பாளி பற்றிய சிந்தனை ஒருங்கமைவு குறித்த மீள் பார்வைகளை, அதன் அவசியத்தை முன்னிறுத்துகின்றன. பூக்கோவின் இந்தக் கருத்துக்கள் படைப்பாளி பற்றிய புதிய பொருள் கோடல் சார்ந்த உரையாடல் களமாக நமக்கு திறந்து விடுகிறது. நாம் இதனையும் எதிர்கொள்வது காலத்தேவையாகும்.

இந்தக் கட்டுரை உன்னதம் (டிசம்பர் 98) எனும் இதழில் வெளிவந்தது. இதனை அ.சிவகுமார் தமிழில் தந்துள்ளார். இக்கட்டுரை இங்கு மீள் பிரசுரமாகிறது.

அதிகாரம் ஒரு தருணத்தில் தோன்றி மற்றதற்குச் செல்கிறது. எல்லா வித உறவுகளிலும அதன் உற்பத்தி நடக்கிறது. அதிகாரம் எங்கும் திறந்திருக்கிறது. இப்படிக் கூறுவது அது எல்லாவற்றையும் தழுவியுள்ளது என்பதனால் அல்ல. அது எல்லா இடங்களிலிருந்தும் வருகிறது என்ற காரணத்தினால் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளி என்பவன் யார்?

மிஷேல் ஃபூக்கோ

கருத்துக்கள், அறிவு, இலக்கியம், தத்துவம் மற்றும் விஞ்ஞானங்களின் வரலாற்றில், "படைப்பாளி" என்ற கருத்தாக்கத்தின் தோற்றம், "தனித்துவமாக்கல்" என்ற சிறப்பு தருணத்தை உருவாக்குகிறது. இன்றும் கூட படைப்பாளி மற்றும் படைப்பு என்ற திட்டமான, அடிப்படையான கூறோடு ஒப்பிட்டால், ஒரு கருத்தாக்கம் அல்லது இலக்கியப் பிரிவு அல்லது தத்துவக் கொள்கைக்குழு ஆகியவற்றின் சரித்திர மறு உருவாக்கத்தின் போது அப்பிரிவுகள் பலவீனமானவையாக, இரண்டாம் பட்சமானவையாக, ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட ஆய்வாகத் தோன்றுகின்றன.

படைப்பாளி என்ற தனி நபர் குறித்த சமூக - சரித்திர ஆய்வை நான் இங்கு தரப்போவதில்லை. நம்முடையதைப் போன்ற ஒரு கலாச்சாரத்தில் படைப்பாளி எப்படி பிரத்யேகத் தன்மையுடையவனாக ஆக்கப்பட்டான் என்பதையும், அவனுக்கு எவ்வித அந்தஸ்து தரப்பட்டது என்பதையும், ஒரு நூலுக்கு இவன்தான் ஆசிரியன் என்று உறுதியாகக் கற்பித்துக் கூறுதல் போன்றவை குறித்த ஆய்வுகள் எந்தத் தருணத்தில் தோன்றின என்பதையும், படைப்பாளியின் மதிப்பு எந்த முறையில் நிர்ணயிக்கப்பட்டது என்பதையும், உயர் நாயகர்களின் வாழ்க்கைகளைச் சொல்லுவதை விடுத்து படைப்பாளிகளின் வாழ்க்கைச் சரிதங்களை எந்த காலப்புள்ளியிலிருந்து சொல்லத் துவங்கினோம் என்பதையும் "படைப்பாளி, அவன் படைப்பு" என்ற இந்த அடிப்படை விமர்சனப் பிரிவு எப்படித்துவங்கியது என்பதையும் ஆராய்வது நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும். பிரதிக்கும் படைப்பாளிக்கும் உள்ள உறவையும், குறைந்தபட்சம் தோற்றத்திலாவது பிரதிக்கு வெளியேயும், அதற்கு முன்பாகவே இருப்பை உடையதாகவும் கருதப்படும். இந்த "உருவ"த்தை பிரதி எந்த முறையில் சுட்டுகிறது. என்பதையும் இப்போதைக்குப் பரிசீலிக்க நான் விரும்புகிறேன்.

பெக்கட் அழகாகச் சொன்ன கூற்றிலிருந்து ஆரம்பிக்க விரும்புகிறேன்: "பேசுவது யார் என்பது பொருட்படுத்தக் கூடிய விஷயமேயில்லை" தற்கால எழுத்தின் அடிப்படை ஒழுக்கவியல் (Ethical) கொள்கைகளில் ஒன்று இந்த புறக்கணிப்பில் வெளிப்படுகிறது. ஒருவர் பேசும் முறையையும், எழுதும் முறையையும் குறிக்கும் அம்சமாக உண்மையில் இந்த புறக்கணிப்பு இல்லையென்பதாலும், ஆனால் அடிக்கடி எடுத்துக் கொள்ளப்பட்டாலும் முழுதாக பயன்படுத்தப்படாத ஓர் உள்ளார்ந்த சட்டமாக இது இருப்பதாலும் நான் இதை "ஒழுக்கவியல் சார்ந்தது" என்று சொல்கிறேன். இந்த சட்டம் எல்லார்க்கும் அறிமுகமானது என்பதால் அதனுடைய இரண்டு கருப்பொருட்களை ஆராய்வதன் மூலம் அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

முதலாவதாக, வெளிப்பாடு என்ற பரிமாணத்திலிருந்து இன்றைய எழுத்து தன்னை விடுவித்துக் கொண்டுள்ளது என்று சொல்லலாம். எழுத்து, அதன் உள்அமைப்பின் எல்லைகளோடு கட்டுப்பட்டுத்தப்படாமல், அதனோடு மட்டுமே குறிப்பிடப்படும் போது அதனுடைய காட்சிப்படுத்தப்பட்ட வெளி அமைப்போடு அது அடையாளப்படுத்தப்படுகிறது. எழுத்து ஓர் விளையாட்டைப் போல விரிந்து, தவறாமல் எப்போதும் அவ்விளையாட்டின் சட்டங்களுக்கும், எல்லைகளுக்கும் அப்பால் போகிறது. எழுத்தில் முக்கிய விஷயம் எழுதுதல் என்ற செய்கையை வெளிப்படுத்துவதோ அல்லது உயர்த்திப்பேசுவதோ அல்ல; ஒரு கருப்பொருளை மொழிக்குள் பொருந்துவதும் அல்ல; மாறாக, எழுதும் நபர் தொடர்ந்து மறைந்துவிடும் ஒரு வெளியை உருவாக்குவதுதான்.

இரண்டாவது பொருளான எழுத்துக்கும் மரணத்துக்குமான தொடர்பு இன்னும் அதிக பரிச்சயமானது. கதை நாயகனின் அமரத்துவத்தை நிரந்தரப்படுத்தும் கிரேக்கக் காவிய மரபை இந்தத் தொடர்பு அழித்து விடுகிறது; அவன் இளமையிலேயே சாக விரும்பினால் கூட, மரணத்தில் புனிதமும், பெரிதும் ஆக்கப்பட்ட அவன் வாழ்வு அமரத்துவத்தை அடைவதால்தான் அது சாத்தியமாகும் பிறகு கதை இந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட மரணத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிடும். இன்னொரு வகையில் மரணத்தை ஏய்ப்பதுதான் அரேபிய கதைகளின் நோக்கம், கருப்பொருள், மற்றும் காரணம் - உதாரணமாக "ஆயிரத்தொரு இரவுகள்", மரணத்தைத் தடுத்து நிறுத்த, கதை சொல்லியின் இறுதி நாளைத் தள்ளிப் போட விடியும் வரை கதை சொல்லப்படுகிறது. மன்னனுக்குத் தடுத்து நிறுத்த, கதை சொல்லியின் இறுதி நாளைத் தள்ளிப் போட விடியும் வரை கதை சொல்லப்படுகிறது. மன்னனுக்குக் கதை சொல்லும் அமைச்சர் மகளின் செய்கை வாழ்க்கை வட்டத்திலிருந்து மரணத்தை விலக்குவதும், ஒவ்வொரு இரவும் புதுப்பிக்கப்படுவதுமான ஒரு முயற்சியே.

கதைஅல்லது எழுத்து என்ற இந்த கருத்தை மரணத்தை ஒதுக்கி வைக்கும் ஒன்றாக நமது கலாசாரம் உருமாற்றியிருக்கிறது. எழுத்து, தியாகத்தோடு, வாழ்க்கைத் தியாகத்தோடு கூட, தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. தானாகவே முன் வந்து தன்னைச் சிறப்பற்றவராக்கிக்

எழுத்தில் முக்கிய விஷயம் எழுதுதல் என்ற செய்கையை வெளிப்படுத்துவதோ அல்லது உயர்த்திப் பேசுவதோ அல்ல. ஒரு கருப்பொருளை மொழிக்குள் பொருந்துவதும் அல்ல் மாறாக, எழுதும் நபர் தொடர்ந்து மறைந்துவிடும் ஒரு வெளியை உருவாக்குவதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் செயலாக அது இப்போது உள்ளது; அச்செயலைப் புத்தகங்களில் குறிப்பிடும் தேவை இல்லை. ஏனென்றால் அது எழுத்தாளனின் இருத்தலிலேயே (existence) நடந்து விடுகிறது. ஒரு காலத்தில் அமரத்துவத்தை அளிப்பதைக் கடமையாகக் கொண்ட படைப்பு தற்போது கொல்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. ஃப்ளாபெர், ப்ரூஸ்ட், காஃப்கா போன்றவர்களைப் பொருத்தமட்டில் படைப்பாளியின் கொலைகாரனாக அது உள்ளது. இது மட்டுமல்ல; எழுதும் நபரின் தனிப்பட்ட குணாம்சங்களின் மறைதலில் எழுத்துக்கும், மரணத்துக்குமான தொடர்பு வெளிப்படுகிறது.

தனக்கும் தான் எழுதும் பொருளுக்கும் இடையில் தான் உண்டாக்கிக் கொண்ட எல்லா தந்திரங்களையும் கையாண்டு எழுதும் நபர் தன் தனித்துவத்தின் எல்லா குறிகளையும் இல்லாததாக்கிவிடுகிறான். இதன் விளைவாக, எழுத்தாளனின் அடையாளம் என்பது அவனுடைய இல்லாமை (ahsence) என்று ஆகிவிடுகிறது. எழுத்து என்ற விளையாட்டில் இறந்து போனவனின் பாத்திரத்தை அவன் ஏற்க வேண்டும்.

இதில் எதுவுமே அண்மைக் காலத்தியது அல்ல; சில காலத்துக்கு முன்பு படைப்பாளியின் மறைவை - அல்லது மரணத்தை - விமர்சனமும், தத்துவமும் அடையாளம் கண்டு கொண்டது. ஆனால் இக்கண்டுபிடிப்பின் விளைவுகள் போதுமான அளவு ஆராயப்படவோ, அதன் முக்கியத்துவம் சரியாக கணிக்கப்படவோ இல்லை. படைப்பாளியின் சிறப்பு அந்தஸ்தை நீக்க வந்ததாக சொல்லிக் கொண்ட சில கருத்தாக்கங்களும் உண்மையில் அந்த அந்தஸ்த்தை காப்பாற்றுவதாகவும், படைப்பாளியின் மறைதல் என்பதன் உண்மையான அர்த்தத்தை மறைப்பதாகவும் இருக்கின்றன. இன்றைய நிலையில் முக்கியத்துவம் பெற்றுள்ள அப்படிப்பட்ட இரண்டு கருத்தரங்குகளை இப்போது நான் ஆராயப் போகிறேன்.

முதலாவது படைப்பு பற்றிய கருத்தாக்கம்: எல்லார்க்கும் பரிச்சயமான ஒரு கருதுகோள். அதாவது, விமர்சனத்தின் பணி படைப்பாளியோடு படைப்புக்குள்ள தொடர்புகளை வெளிக் கொணர்வதோ அல்லது பிரதியின் வழியாக ஒரு சிந்தனையையோ அல்லது அனுபவத்தையோ மறு ஆக்கம் செய்வதோ அல்ல் மாறாக படைப்பு அதனுடைய வடிவம், அமைப்பு, உள்ளார்ந்த தோற்றம் மூலமாக பகுப்பாய்வு செய்வதுதான் என்று சொல்வது. ஆனால் இந்த இடத்தில் ஒரு பிரச்சினை எழுகிறது "படைப்பு என்றால் என்ன? படைப்பு என்று நான் பெயர் சூட்டும் இந்த சுவாரஸ்யமான ஒருங்கிணைப்பு என்ன? இதை உருவாக்கும் மூலப்பொருள்கள் எவை? ஒரு படைப்பாளி எழுதியதுதானே அது?" உடனடியாக சிக்கல்கள் தோன்றி விடுகின்றன. ஒரு தனி மனிதன் படைப்பாளியாக இல்லாவிட்டால் அவன் எழுதியது, சொன்னது, தாள்களில் விட்டுச் சென்றது, அல்லது அவனுடைய கூற்றுக்களிலிருந்து திரட்டப்பட்டது ஆகியவற்றை நம்மால் "படைப்பு" என்று சொல்ல முடியுமா?

ஒரு தனி மனிதன் படைப்பாளியாக ஏற்றுக் கொள்ளப்பட்டால் கூட இன்னொரு கேள்வி நம்முன் நிற்கிறது; அவன் எழுதிய, சொன்ன அல்லது தன்பின் விட்டுச் சென்ற எல்லாமே அவன் படைப்பின் பகுதிதானா? இந்தப் பிரச்சினை கருத்து ரீதியானதும், தொழில் நுணுக்க ரீதியானதும் ஆன ஒன்று. உதாரணமாக, நீட்ஷேவின் படைப்புக்களை வெளியிடும் திட்டத்தை மேற்கொள்ளும் ஒருவர் எந்த இடத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும்? நிச்சயம் எல்லாமே வெளியிடப்பட வேண்டும் ஆனால் "எல்லாம்" என்பது என்ன? நீட்ஷே வெளியிட்ட எல்லாவற்றையுமே வெளியிட வேண்டும் என்பது கட்டாயம்தான். ஆனால் அவருடைய மணிமொழிகளின் திட்ட வரைவுகளையும் வெளியிட வேண்டுமா? ஆமாம், நீக்கப்பட்ட பத்திகளையும், பக்கங்களின் அடிக்குறிப்புக்களையும் வெளியிட வேண்டுமா? ஆமாம். அவருடைய மணிமொழிகள் நிரம்பிய குறிப்பேட்டில் ஒரு குறிப்போ, அல்லது ஒரு சந்திப்பு பற்றிய பதிவு அல்லது ஒரு முகவரி அல்லது ஒரு சலவைத் துணிகளின் பட்டியலோ தென்பட்டால் என்ன செய்வது? அது ஒரு படைப்பா, இல்லையா? ஏன் அவற்றை படைப்பாக ஏற்றுக் கொள்ளக் கூடாது? இது ஒரு முடிவற்ற தொடர் பிரச்சனை. ஒருவன் தன் மரணத்துக்குப் பின் விட்டுச் செல்லும் லட்சக்கணக்கான சுவடுக்கிடையே ஒரு படைப்பை எப்படி வரையறுப்பது? படைப்புக்கு விளக்கக் கோட்பாடு கிடையாது. படைப்புக்களைப் பதிப்பிக்கும் வேலையை அதன் தீவிரம் அறியாமல் எளிமையாக மேற்கொள்பவர்களின் நடைமுறைப்பணி, அப்படிப்பட்ட கோட்பாடு இல்லாமையால் பாதிக்கப்படுகிறது.

இன்னும் கூட நாம் மேலே போகலாம்: "ஆயிரத்தொரு இரவுகள்" ஒரு படைப்பை உருவாக்குகிறதா? எழுத்தாளனை (படைப்பாளி) விட்டுவிட்டு படைப்பை அதனளவில் மட்டுமே பயில வேண்டும் என்று சொல்வது போதாது என்பது தெளிவாகிறது. படைப்பாளியின் தனித்துவத்தின் நிலை எந்த அளவு பிரச்சினைக்குரியதோ அந்த அளவு பிரச்சினைக்குரியவை "படைப்பு" என்ற சொல்லும், அது குறிப்பிடும் ஒருங்கமைவும்.

தனக்கும் தான் எழுதும் பொருளுக்கும் இடையில் தான் உண்டாக்கிக் கொண்ட எல்லா தந்திரங்களையும் கையாண்டு எழுதும் நபர் தன் தனித்துவத்தின் எல்லா குறிகளையும் இல்லாததாக்கிவிடுகிறான். இதன் விளைவாக, எழுத்தாளனின் அடையாளம் என்பது அவனுடைய இல்லாமை என்று ஆகிவிடுகிறது.

படைப்பாளியின் மறைதலை முழுதாகப் புரிந்து கொள்வதிலிருந்து நம்மைத் தடுப்பதும், இந்த மறைதல் நிகழும் கணத்தை மறைப்பதும், படைப்பாளியின் இருத்தலை நுணுக்கமாகக் காப்பாற்றுவதுமான இன்னொரு கருத்தாக்கம் எழுத்து (Writing) என்ற கோட்பாடு. கறாராக அமல்படுத்தினால் படைப்பாளி குறித்த குறிப்புரைகளைத் தவிர்க்க மட்டுமின்றி, அவனுடைய அண்மைக்கால மறைதலின் இடம் குறிப்பதற்கும் இந்தக் கோட்பாடு நம்மை அனுமதிக்கும். தற்காலத்தில் பயன்படுத்தப்படுவது மாதிரி, எழுத்து என்ற கோட்பாடு எழுதுதல் என்ற செயலோடோ, யாரோ ஒருவர் விரும்பிய ஒரு அர்த்தத்தின் சுட்டிக்காட்டலோடோ அது அறிகுறியானாலும் சரி, குறியாக இருந்தாலும் சரி தொடர்பு கொண்டிருப்பதில்லை. ஒவ்வொரு பிரதியின் பொது நிலையை, படைப்பு பரவியிருக்கும் வெளி, படைப்பு திறந்து பரவும் காலம் ஆகியவற்றின் நிலையைக் கற்பனை செய்து பார்க்க நாம் பெருமுயற்சி செய்கிறோம்.

இன்றைய வழக்கில் எழுத்து குறித்த கருத்தாக்கம், படைப்பாளியின் நடைமுறை அனுபவ குணாம்சங்களை பொருண்மை நிலை கடந்த பெயர் மறைவு நிலைக்கு இடமாற்றம் செய்வதாகத் தோன்றுகிறது. எழுத்தின் பண்பு விளக்கங்களான விமர்சன மற்றும் மத ரீதியான அணுகுமுறைகள் இரண்டையும் ஒன்றோடொன்று மோதவிட்டு படைப்பாளியின் நிஜ இருத்தலை மறைப்பதில் நாம் திருப்தி அடைகிறோம். எழுத்தின் புனிதத் தன்மைக்கு இறைமை வலியுறுத்தலைத் தருதல் மற்றும் அதனுடைய படைப்புத் தன்மைக்கு விமர்சன வலியுறுத்தலைத் தருதல் ஆகிய இரண்டையும் பொருண்மை நிலை கடந்த வார்த்தைகளில் மறு ஆக்கம் செய்வது எழுத்துக்கு மிகப் பிரதான அந்துஸ்தைத்தரும் ஒரு வழியாகத் தோன்றுகிறது. எழுத்து, அது சாத்தியமாக்கிய வரலாற்றின் காரணமாகவே, புறக்கணிப்பு மற்றும் அடக்குமுறை ஆகிய சோதனைகளுக்கு ஆளாக நேரிடும் என்று ஒத்துக்கொள்வது, மறைந்துள்ள பொருளின் (விளக்கவுரை தேவைப்படுவது) மதக் கோட்பாட்டையும், தொக்கி நிற்கிற குறிப்பீடுகள், மௌன கருத்துறுதி, மற்றும் மறைக்கப்பட்ட உள்ளடக்கம் ஆகியவற்றின் விமர்சனக் கோட்பாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தோன்றுகிறது. எழுத்தின் இல்லாமையைக் கற்பனை செய்வது, மாற்ற முடியாத சமயம் நிறைவு செய்யப்படாத பாரம்பரியத்தின் மதக் கோட்பாட்டையும், படைப்பின் தொடர்பு இருத்தல், படைப்பாளியின் மரணத்துக்குப் பின்னும் படைப்பின் அழியாமை, மற்றும் படைப்பாளியோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் போது படைப்புக்குக் கிடைக்கும் புதிரான மிகை அளவு ஆகியவற்றின் அழகியல் கோட்பாட்டையும் திருப்பிச் சொல்லுதல் போன்றதே.

**இன்றைய வழக்கில் எழுத்து குறித்த கருத்தாக்கம், படைப்பாளியின் நடைமுறை அனுபவ குணாம்சங்களை பொருண்மை நிலை கடந்த பெயர் மறைவு நிலைக்கு இடமாற்றம் செய்வதாகத் தோன்றுகிறது.**

படைப்பாளி மறைந்துவிட்டான் என்ற வெற்று உறுதியாக்கலைத் திருப்பித் திருப்பிச் சொல்வது போதாது. அதே காரணத்துக்காக, நீட்ஷேவைப் பின்பற்றி கடவுளும் மனிதனும் ஒரு பொது மரணத்தைப் பெற்றுவிட்டார்கள் என்று திருப்பித் திருப்பிச் சொல்வதும் போதாது. மாறாக, படைப்பாளியின் மறைதல் ஏற்படுத்தும் வெற்றிடத்தை அடையாளம் காண வேண்டும் பரவியுள்ள இடைவெளிகளையும், பிளவுகளையும் கவனிக்க வேண்டும் இந்த மறைதல் வெளிப்படுத்தும் நுழை வாயில்களை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும்.

முதலாவதாக, படைப்பாளியின் பெயரைப் பயன்படுத்துவதால் உண்டாகும் பிரச்சினைகளை சுருக்கமாக நாம் ஆராய வேண்டியுள்ளது. படைப்பாளியின் பெயர் என்பது என்ன? அது எவ்வாறு செயல்படுகிறது / பிரச்சினைக்குத் தீர்வு சொல்வதற்குப் பதிலாக படைப்பாளியின் பெயர் ஏற்படுத்தும் சில சிக்கல்களை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லப் போகிறேன்.

படைப்பாளியின் பெயர் ஓர் இடுகுறிப் பெயர் (Proper name). அதனாலேயே எல்லா இடுகுறிப் பெயர்களுக்கும் பொதுவான பிரச்சினைகளை அது எழுப்புகிறது. ஓர் இடுகுறிப் பெயரை ஒரு தனித்த, கலப்பற்ற குறிப்பீடாக மாற்ற முடியாது என்பது எல்லார்க்கும் தெரிந்ததுதான். சுட்டிக்காட்டும் செயலுக்கும் மேலாக அது வேறுசில செயல்களையும் கொண்டுள்ளது. குறிப்பிட்டுக் காட்டுதல், சைகை, விரலால் ஒருவரை சுட்டிக் காட்டல் ஆகியவற்றுக்கும் மேலாக அது ஒரு விவரணைக்கு இணையானது. ஒருவர் "அரிஸ்டாட்டில்" என்று சொல்லும் போது அந்த வார்த்தை ஒரு குறிப்பிட்ட விவரணையை அல்லது விவரணைத் தொடரில் ஒன்றைக் குறிப்பிடுகிறது. "ஆராய்ச்சி முறை வடிவியலின்" (Analytics) ஆசிரியர், மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சியின் (Ontology) பிதாமகர் என்பவை போன்று. இந்த இடத்தில் நிறுத்தி விடவும் முடியாது. ஏனென்றால் ஓர் இடுகுறிப்பெயருக்கு ஒரே ஒரு உட்பொருள் மட்டுமே இருக்காது. ரிம்பாத் (19 ஆம் நூற்றாண்டு பிரெஞ்சு கவிஞர்) The Spiritual Pursuit என்ற கவிதையை எழுதவில்லை என்பதை நாம் கண்டுணரும்போது (வேறு இருவர் ரிம்பாத் பாணியில் எழுதுயது ரிம்பாத் எழுதியதாக தவறாகக் கருதப்பட்டது), இந்த இடுகுறிப் பெயரின் அர்த்தமோ அல்லது படைப்பாளியின் பெயரின் அர்த்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமோ மாறிவிட்டதாக நாம் பாசாங்கு செய்ய முடியாது. விவரணை மற்றும் சுட்டுக் குறிப்பிடுதல் என்ற இரண்டு துருவங்களுக்கிடையில் இடுகுறிப்பெயரும், படைப்பாளியின் பெயரும் இடம் பெற்றுள்ளன. சுட்டிக் குறிப்பிடுதல் முறையிலும், முழுக்க அல்லாமல், விவரணை முறையிலும் முழுக்க அல்லாமல் இவ்விரண்டு பெயர்களுக்கும் தாங்கள் குறிப்பிடும் பொருளோடு ஒரு வகையான தொடர்பு இருக்க வேண்டும் அது ஒரு திட்டவட்டமான தொடர்பாக இருக்க வேண்டும். ஆனாலும் இங்குதான் படைப்பாளியின் பெயர் தொடர்பான குறிப்பிட்ட சிக்கல்கள் தோன்றுகின்றன - இடுகுறிப் பெயருக்கும், பெயரிடப்பட்ட தனி நபருக்கும் இடையே ஆனதும் மற்றும் படைப்பாளியின் பெயருக்கும் அது குறிப்பிடுவதற்கும் இடையே ஆனதுமான தொடர்புகள் ஒரே வகைத்தானவை அல்ல் மேலும் அவை ஒரே முறையில் செயல்படுபவையும் அல்ல. சில வேறுபாடுகள் உள்ளன.

உதாரணமாக, பியர் துபானுக்கு (Pierre Dupont) நீல நிற கண்கள் இல்லையென்றாலும், பாரீஸில் அவர் பிறக்கவில்லை என்றாலும், மருத்துவராக அவர் இல்லையென்றாலும், பியர் துபான் என்கிற பெயர் எப்போதும் அதே நபரைத்தான் குறிக்கும் சுட்டிக் குறிப்பிடுதலுக்கான (designdtion) தொடர்பை இம்மாதிரி விஷயங்கள் மாற்றுவதில்லை. படைப்பாளியின் பெயர் எழுப்பும் பிரச்சினைகள் இன்னும் அதிகம் சிக்கலானவை. நாம் இன்று விஜயம் செய்யும் வீட்டில் ஷேக்ஸ்பியர் பிறக்கவில்லை என்பதை நான் கண்டு பிடித்தால் - இது ஒரு மாற்றம்தான் - அது படைப்பாளியின் பெயரின் செயல்பாட்டை மாற்றாது என்பது தெளிவு. ஆனால், ஷேக்ஸ்பியர் பெயரைத் தாங்கி நிற்கும் பதினான்கு வரிப்பாக்களை அவர் எழுதவில்லை என்று நாம் நிரூபித்தோமானால் அந்த மாற்றம் படைப்பாளியின் பெயரின் செயல்முறையை பாதிக்கும். ஒரே படைப்பாளிதான் பேக்கன் மற்றும் ஷேக்ஸ்பியர் ஆகிய இருவரின் படைப்புக்களையும் எழுதினார் என்று காட்டுவதன் மூலம் பேக்கனின் Organon ஐ ஷேக்ஸ்பியர்தான் எழுதினார் என்று நாம் நிரூபித்ததால் அது மூன்றாம் வகை மாற்றமாகி படைப்பாளியின் பெயரின் செயல்பாட்டை முற்றிலுமாக மாற்றிவிடும். எனவே படைப்பாளியின் பெயர் மற்ற பெயர்களைப் போல வெறும் இடுகுறிப் பெயர் மட்டுமல்ல.

படைப்பாளியின் பெயருக்குள்ள முரண்பாடான தனித்தன்மை வேறு பல உண்மைகளுக்கும் குறிப்பிடுகின்றன. பியர் துபான் என்பவர் உயிருடன் இல்லை என்று சொல்வதும் ஹோமர் அல்லர் ஹெர்மஸ் ட்ரிஸ்மெகிஸ்டஸ் (மாய மந்திர ஞானம் குறித்த புத்தகங்களை எழுதிய பழங்கால எழுத்தாளர்) வாழ்ந்ததே இல்லை என்று சொல்வதும் ஒன்றல்ல. முதல் கூற்றைப் பொருத்தவரை யாருக்கும் பியர்துபான் என்ற பெயர் இல்லை என்று அர்த்தம் இரண்டாவதை பொருத்தவரை, ஒரே பெயருக்குக் கீழ் சில நபர்கள் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றோ அல்லது ஹோமார் அல்லது ஹெர்மஸ் என்ற நபர்கள் மீது பாரம்பரியமாக ஏற்றிச் சொல்லப்படும் குணாதிசயங்கள் எதுவும் உண்மையான படைப்பாளிக்கு இல்லை என்றோ அர்த்தம். ஓ என்பவரின் உண்மையான பெயர் பியர் துபான் அல்ல, உண்மையில் அது ஜேக்விஸ் துராந்த் என்று சொல்வதும் ஸ்டெந்தலுடைய பெயர் ஹென்ரி பெய்ல் என்று சொல்வதும் ஒன்றல்ல.

படைப்பாளியின் பெயர் ஒரு சொல்தொடரில் உள்ள வெறும் ஒரு கூறு (தன்னிலையாகவோ, செயல்படுபொருளாகவோ, பிரதிபெயர்ச் சொல்லால் இடமாற்றம் செய்யப்பட முடிகிறதாகவோ உள்ளவாறு) அல்ல என்ற உண்மையிலிருந்துதான் இந்த வேறுபாடுகள் விளைகின்றன. வகைப்படுத்தும் பணியை உறுதியளித்து படைப்பாளியின் பெயர் கதைச் சொல்லாடலைப் பொருத்தவரை ஒரு குறிப்பிட்ட பங்கை வகிக்கிறது. சில குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிரதிகளை ஒன்று சேர்த்து, அவற்றை வரையறை செய்து, மற்ற பிரதிகளிலிருந்து அவற்றை வேறுபடுத்திக்காட்ட ஒரு படைப்பாளியின் பெயர் ஒருவர்க்கு அனுமதியளிக்கிறது. இது அன்றி பிரதிகளுக்கிடையே ஓர் உறவையும் அது நிறுவுகிறது. ஹெர்மஸ் ட்ரிஸ்மெரிஸ்டஸ் வாழ்ந்ததில்லை. ஹிப்போக் நேடிஸ் (கி.மு.5ஆம் நூற்றாண்டு கிரேக்க மருத்துவர்) வாழ்ந்ததில்லை - பால்ஸாக் வாழ்ந்திருந்தார் என்ற அர்த்தத்தில் - ஆனால் சில பிரதிகள் ஒரே பெயருக்குக் கீழ் வழங்கப்படுகின்றன என்ற உண்மை பின்வரும் நிகழ்முறையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது ஓரினத்தன்மை, மரபு வழி உறவு, பிற பிரதிகளின் பயன்பாட்டின் மூலம் சில பிரதிகளின் உரிமைக்குச் சான்று கூறுதல், பரஸ்பரவிளக்கங்கள் அல்லது இணைந்த பயன்பாடு ஆகியவை ஏற்படுத்தும் தொடர்பு இந்த பிரதிகளுக்கிடையே நிறுவப்படுகின்றது. படைப்பாளியின் பெயர் சொல்லாடலின் இருத்தல் முறைக்கு ஒரு தனித்தன்மையளிக்கிறது. சொல்லாடலுக்கு ஒரு படைப்பாளியின் பெயர் இருக்கிறது என்பதும், "இது இன்னாரால் எழுதப்பட்டது" அல்லது "இன்னார்தான் இதற்கு ஆசிரியர்" என்று சொல்ல முடிவதும், இந்த சொல்லாடல் சாதாரண அன்றாட

படைப்பாளியின் பெயர் ஓர் இடுகுறிப் பெயர். அதனாலேயே எல்லா இடுகுறிப் பெயர்களுக்கும் பொதுவான பிரச்சினைகளை இது எழுப்புகிறது. ஓர் இடுகுறிப் பெயரை ஒரு தனித்த, கலப்பற்ற குறிப்பீடாக மாற்ற முடியாது என்பது எல்லார்க்கும் தெரிந்ததுதான். சுட்டிக்காட்டும் செயலுக்கும் மேலாக அது வேறுசில செயல்களையும் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு அல்லவென்றும், உடனடிய நுகர்வுக்கானது அல்லவென்றும் காட்டுகின்றன. மாறாக, அது ஒரு குறிப்பிட்ட முறைமையில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒரு பேச்சு; ஒரு குறிப்பிட்ட கலாசாரத்தில் ஒரு தனித்த அந்தஸ்து தரப்பட வேண்டியது.

மற்ற இடுகுறிப் பெயர்களைப் போலன்றி படைப்பாளியின் பெயர் ஒரு சொல்லாடலின் உட்புறத்திலிருந்து சென்று அதை உண்டாக்கிய உண்மையான வெளிப்புற நபரை அடைவதில்லை என்று தோன்றலாம் மாறாக, அந்தப் பெயர் எப்போதும் பிரசன்னமாயிருந்து, பிரதியின் எல்லைகளை வரையறை செய்து கொண்டு, அதன் (பிரதியின்) இருத்தல் முறைமையை வெளிப்படுத்திக் கொண்டு அல்லது குறைந்தபட்சம் விளக்கிக் கொண்டு இருப்பதாகப்படுகிறது. படைப்பாளியின் பெயர், ஒரு வகையான விவாத நிலையின் தோற்றத்தை வெளிப்படுத்திக் கொண்டும், ஒரு சமூகத்திலும், ஒரு கலாச்சாரத்திலும் இந்த சொல்லாடலின் அந்தஸ்த்தைக் குறிப்பிட்டுக் காட்டிக் கொண்டும் இருக்கிறது. அதற்கு சட்ட ரீதியான அந்தஸ்து கிடையாது மாறாக, ஒரு வகையான விவாத அமைப்பை நிறுவும் இடைவெளியிலும், அதன் குறிப்பிட்ட இருத்தல் முறைமையிலும் அது இடம் பெறுகிறது. இதன் விளைவாக, நம்முடையதைப் போன்ற பண்பாட்டில் சில வகை சொல்லாடல்கள் "படைப்பாளி - செயல்பாடு" (author function) என்ற கொடையைப் பெற்றுள்ளன. மற்றவற்றுக்கு அது மறுக்கப்பட்டுள்ளது. ஒரு தனிமுறைப்பட்ட கடிதத்தில் ஒருவர் கையொப்பமிட்டிருக்கலாம் - அதற்கு படைப்பாளி கிடையாது; ஓர் ஒப்பந்தத்துக்கு பொறுப்புறுதி தருபவர் இருக்கலாம் - அதற்கு படைப்பாளி கிடையாது. சுவற்றில் ஒட்டப்பட்ட ஓர் அநாமதேய பிரதிக்கு அதை எழுதியவர் இருக்கலாம் - ஆனால் படைப்பாளி கிடையாது. படைப்பாளி - செயல்பாடு என்பது ஒரு சமூகத்திற்குள்ளிருக்கும் சில குறிப்பிட்ட சொல்லாடல்களில் இருத்தல் முறைமை, பழக்கம், மற்றும் செயல்பாடு ஆகியவற்றின் தனிப்பண்புகளைக் காட்டுவதே.

**நம் கலாசாரத்தில் "படைப்பாளி - செயல்பாடு" என்ற கூறைக் கொண்ட ஒரு சொல்லாடலை எப்படி விளக்குவது? இந்த சொல்லாடல் மற்ற சொல்லாடல் களிலிருந்து எவ்வாறு வேறுபட்டுள்ளது?**

நாம் சற்றுமுன் விவரித்த "படைப்பாளி - செயல்பாடு" என்பதை ஆய்வு செய்யலாம். நம் கலாசாரத்தில் "படைப்பாளி - செயல்பாடு" என்ற கூறைக் கொண்ட ஒரு சொல்லாடலை எப்படி விளக்குவது? இந்த சொல்லாடல் மற்ற சொல்லாடல்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டுள்ளது? நம்முடைய குறிப்புக்களை ஒரு புத்தகத்தின் அல்லது ஒரு பிரதியின் படைப்பாளியோடு குறுக்கிக் கொண்டால், நம்மால் நான்கு வகையான தனிமைப் பண்புகளை தனிப்படுத்திக் காட்ட முடியும்.

முதலாவதாக, சொல்லாடல்கள் கைப்பற்றிக் கொள்வதற்கான பொருள்கள், சொல்லாடல்கள் தோன்றும் உடைமையுரிமையின் வடிவம் பல ஆண்டுகளாக முறைப்படுத்தப்பட்டு வந்த ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்தது. சரித்திர ரீதியாக, இவ்வகையான உடைமையுரிமை, தண்டனைக்குரிய கைப்பற்றலுக்கு (உடைமையாக்கலுக்கு) பின்பு வந்ததை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். பிரதிகள், புத்தகங்கள், மற்றும் சொல்லாடல்கள் ஆகியவை உண்மையில் படைப்பாளிகளை (புராணிக, புனிதமான, மற்றும் புனிதமாக்கும் உருவங்கள் அன்றி)ப் பெற ஆரம்பித்தன. படைப்பாளிகளின் சொல்லாடல்கள் புனித வரம்பை மீறிய போது அவர்கள் தண்டனைக்குள்ளானார்கள். நம் கலாசாரத்தில் (சந்தேகமில்லாமல் வேறு பல கலாசாரங்களிலும்) ஆரம்ப காலத்தில் சொல்லாடல் ஓர் உற்பத்திப் பொருளோ, சரக்கோ அல்ல் முக்கியமான அது ஒரு செயல் - புனிதமான தெய்வ நிந்தனையான முறையான முறையற்ற, மத ரீதியான இறைபழிப்பான என்ற இருகோள் வெளியில் பொருத்தப்பட்ட ஒரு செயல். உடைமையுரிமை என்ற வட்டத்துக்குள் பிடிபடும் பொருள்களாக வருமுன்பாக, பல ஆபத்துக்களை உள்ளடக்கிய செயலாகவே சொல்லாடல் இருந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி பத்தொன்பதாம் நூற்றாண்டு துவக்கத்தில் பிரதிகளுக்கு உடைமையுரிமை என்ற திட்டம் வந்த பிறகு, படைப்பாளியின் உரிமைகள், படைப்பாளி - வெளியீட்டாளர் உறவுகள், மறு பிரசுர உரிமைகள் மற்றும் இவை தொடர்பான விஷயங்கள் குறித்த கறாரான சட்டங்கள் இயற்றப்பட்ட பிறகு, எழுதும் செயலோடு இணைக்கப்பட்ட வரம்பு மீறுதலுக்கான சாத்தியக்கூறு, இலக்கியத்துக்கு மட்டுமே பிரத்தியேகமான ஒரு விதியாக மாறியது. உடமையுரிமைச் சமூகத்தில் இருத்தப்பட்ட படைப்பாளி வரம்பு மீறலைத் திட்டமிட்டு செயல்படுத்தி எழுத்துக்கு ஆபத்தை மீட்டளித்தான்; சொல்லாடலின் பழம் இருகோள் தளத்தை மறுகண்டுபிடிப்பு செய்ததால் கிடைத்த அந்தஸ்தை இவ்வாறாக ஈடுகட்டிக் கொண்டான்.

இருந்த போதிலும் படைப்பாளி - செயல்பாடு ஒரே மாதிரியாகவும், பொதுவானதாகவும் எல்லா சொல்லாடல்களையும் பாதிப்பதில்லை. இதுதான் அதனுடைய இரண்டாவது தனிப்பண்பு. நம்முடைய கலாச்சாரத்தில், ஒரு படைப்பாளிக்கு உரிமையாக்கிச் சொல்லப்பட்டவை எப்போதும் ஒரே மாதிரியான பிரதிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததில்லை. நாம் இப்போது "இலக்கிய" ப் பிரதிகள் (கதையாடல்கள், கதைகள், காவியங்கள், அவல நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள்) என்று அழைப்பவை ஒரு காலத்தில் அவற்றின் படைப்பாளியின் அடையாளம் குறித்த எவ்வித கேள்வியுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டு, சுற்றுக்கு விடப்பட்டு, விலையும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன அவற்றின் பழந்தன்மையே (உண்மையோ, கற்பனையோ) அவற்றின் அந்தஸ்துக்கு போதுமான உறுதியளித்ததால் அவற்றின் அநாமதேய நிலை எந்தவித சிக்கல்களையும் உண்டு பண்ணவில்லை. ஆனால் நாம் இப்போது விஞ்ஞானப் பிரதிகள் - பிரபஞ்சம், வானம், மருத்துவம், நோய்கள், இயற்கை விஞ்ஞானங்கள், மற்றும் பூகோளம் ஆகியவை தொடர்பானவை - என்று அழைப்பவை அவற்றின் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தால் மட்டுமே "உண்மை" என்று மத்திய காலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. "ஹிப்போக்ரேடிஸ் சொன்னார்", ப்ளினி (கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானிய இயற்கை விஞ்ஞானி) விளக்குகிறார் என்பவை உண்மையில் அதிகாரவலிமை சார்ந்த ஒரு தர்க்கத்தின் சூத்திரங்கள் அல்ல; நிரூபிக்கப்பட்ட உண்மையின் கூற்றுக்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட சொல்லாடல்களில் செருகப்பட்ட அடையாளக்குறிகள்.

பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டில் எதிர்மறையான ஒரு நிலை உண்டானது. நிறுவனம் பெற்றுவிட்ட அல்லது எப்போதும் மறு நிரூபணம் செய்ய முடிந்த உண்மையின் அநாமதேயத்தில் விஞ்ஞானச் சொல்லாடல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன் ஒரு திட்டமிடப்பட்ட கூட்டுப் பணியில் அவற்றின் உறுப்புத் தன்மையே அவற்றுக்குக் காப்புறுதியாக இருந்தன் அவற்றை உருவாக்கிய தனிநபரைச் சுட்டும் குறிப்பு அல்ல் படைப்பாளி - செயல்பாடு மறைந்து போய், ஒரு தேற்றம், முன்மொழிவு, குறிப்பிட்ட விளைவு, குணாம்சம், அமைப்பு, தனிமங்களின் தொகுப்பு, அல்லது நோய்க் குறித்தொகுதி ஆகியவற்றுக்குப் பெயர் சூட்டவே கண்டுபிடித்தவனின் பெயர் பயன்பட்டது. இதேபோல, படைப்பாளி - செயல்பாடு உரிமையாக்கப்பட்டிருந்தால் மட்டுமே இலக்கியச் சொல்லாடல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. நாம் இப்போது "ஒவ்வொரு கவிதை அல்லது புனை கதைப் பிரதியைக் குறித்து கேட்கிறோம் எங்கிருந்து அது வருகிறது? யார் அதை எழுதியவர்? எந்தச் சூழலில், எந்த நோக்கில் அது துவங்கப்பட்டது? நாம் இக்கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முறையில்தான் அப்பிரதிக்கு அளிக்கப்படும் அர்த்தமும், மதிப்பும் தீர்மானிக்கப்படுகின்றன. அநாயமதேய நிலையிலிருந்து- தற்செயலின் விளைவாகவோ அல்லது படைப்பாளியின் வெளிப்படையான விரும்பத்தின் காரணமாகவோ- ஒரு பிரதி கண்டுபிடிக்கப்பட வேண்டியிருந்தால், படைப்பாளியை மறு கண்டுபிடிப்பு செய்யும் விளையாட்டாக அது மாறுகிறது. இலக்கிய அநாமதேயம் பொறுத்துக் கொள்ள முடியாததாக இருப்பதால் அதை ஒரு புதிர் என்ற தோற்றத்திலேயே நம்மால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. இதன் விளைவாக இலக்கியப் படைப்புக்கள் குறித்த நமது பார்வையில் படைப்பாளி - செயல்பாடு ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. (அண்மைக்காலத்திய விமர்சன நடைமுறையைப் பொருத்தவரை, மேலே கூறியவை சந்தேகமேயில்லாமல்



பொதுமைப்படுத்தல்கள்தான் அவை செழுமைப்படுத்தப்பட வேண்டியவை)

படைப்பாளி - செயல்பாட்டின் மூன்றாவது குணாம்சம் என்னவென்றால் அது ஒரு தனிநபருக்கு உரிமையாக்கிச் சொல்லப்படுவது என்ற நிலையில் அது தன்னெழுச்சியாக வளர்ந்து விடுவதில்லை. நாம் "படைப்பாளி" என்று அழைக்கும் ஒரு வகை பகுத்தறிவு உயிருருவை (being) நிர்மாணிக்கும் சிக்கலான செயல்முறையின் விளைவே அது. தனிநபருக்குள்ளிருக்கும் ஓர் "ஆழ்ந்த" நோக்கம், "படைப்பாற்றல்", அல்லது "செயல்திட்டம்", எழுத்து வங்கும் சூழல் ஆகியவற்றைக் கண்டுணர்வதன் மூலம் அறிவுக்குப் புலனாகும் இந்த உயிருருவுக்கு விமர்சகர்கள் ஒரு யதார்த்த அந்தஸ்த்தைக் கொடுக்க முயல்கிறார்கள். நாம் கட்டாயப்படுத்தி பிரதிகளை மேற்கொள்ள வைக்கும் செயல்முறைகள், நாம் உண்டாக்கும் தொடர்புகள், பொருத்தமானதென்று நிறுவும் குணாதிசயங்கள், நாம் அங்கீகரிக்கும் தொடர்ச்சிகள், அல்லது நாம் செயல்படுத்தும் தவிர்ப்புகள் ஆகியவை, ஏறத்தாழ மனோதத்துவ வார்த்தைகளில், படைப்பாளியைக் குறிப்பிட்டுக் காட்டும் ஒரு தனிநபரின் அம்சங்களின் புறநிலைப்படுத்தல் (Projection) தான். காலப் பிரிவுகளுக்கும், சொல்லாடல்களின் வகைகளுக்கும் ஏற்ப இச்செயல்முறைகள் வேறுபடுகின்றன. நாம் இன்று செய்வதைப் போல ஒரு நாவலாசிரியரை பதினெட்டாம் நூற்றாண்டில் யாரும் நிர்மாணிக்காததைப் போல, "கவிஞனை" நிர்மாணிப்பதைப் போல நாம் ஒரு

படைப்பாளி - செயல்பாட்டின் மூன்றாவது குணாம்சம் என்னவென்றால் அது ஒரு தனிநபருக்கு உரிமையாக்கிச் சொல்லப்படுவது என்ற நிலையில் அது தன்னெழுச்சியாக வளர்ந்து விடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தத்துவப் படைப்பாளியை" நிர்மாணிப்பதில்லை. இருந்தும், படைப்பாளி நிர்மாணிப்பதில் காலங்காலமாக இருந்துவரும் சில நிலைத்த சட்டங்களை நாம் காணலாம்.

உதாரணமாக, இலக்கிய விமர்சனம் படைப்பாளியை ஒரு காலத்தில் வரையறை செய்த முறை - அல்லது நடைமுறையில் இருந்த பிரதிகளிலிருந்தும், சொல்லாடல்களிலிருந்தும் படைப்பாளி என்ற உருவை நிர்மாணித்த முறை - கிறித்துவ மரபு தன் பொறுப்பில் வந்த பிரதிகளை நம்பத் தக்கதென்று ஏற்றுக்கொண்ட (அல்லது நிராகரித்த) முறையிலிருந்து பெறப்பட்டதாகத் தோன்றுகிறது. படைப்பாளியின் புனிதத் தன்மையை வைத்து ஒரு பிரதியின் மதிப்பை நிரூபிக்க கிறித்துவ வேதாகம விமர்சன முறை பின்பற்றியதை ஒத்த முறைகளையே நவீன விமர்சனம் ஒரு படைப்பில் படைப்பாளியை "மறு கண்டுபிடிப்பு" செய்ய பயன்படுகிறது. புனித ஜெரோம் தன்னுடைய "பிரபலமானவர்களைப் பற்றிய" என்ற புத்தகத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட படைப்புக்கு ஆசிரியர்களான படைப்பாளிகளை சட்டபூர்வமாக அடையாளம் காண ஒரே பெயரை உடையவர்களாக இருந்திருக்கலாம். அல்லது இன்னொருவரின் தந்தை வழிப் பெயரை ஒருவர் முறைகேடாகக் கடன் வாங்கியிருக்கலாம். பிரதி சார்ந்த ஒரு மரபுக்குள் ஒருவர் செயல்படும் போது தனிநபர் உரிமைக்குறியாக (Trademark) பெயர் போதுமானதாக இருப்பதில்லை.

> நாம் இப்போது விஞ்ஞானப் பிரதிகள் - பிரபஞ்சம், வானம், மருத்துவம், நோய்கள், இயற்கை விஞ்ஞானங்கள், மற்றும் பூகோளம் ஆகியவை தொடர்பானவை - என்று அழைப்பவை அவற்றின் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தால் மட்டுமே "உண்மை" என்று மத்திய காலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பின் எவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட சொல்லாடல்களை ஒரே படைப்பாளிக்கு உடைமையாக்கிப் பேசுவது? ஒரு தனி நபருடனா அல்லது பல்வேறு தனி நபர்களுடன் செயல் தொடர்பு கொண்டுள்ளோமா என்பதைத் தீர்மானிக்க "படைப்பாளி - செயல்பாட்"டை எப்படிப் பயன்படுத்துவது? புனித ஜெரோம் நான்கு அளவுகோள்களை முன்வைக்கிறார்.

1. ஒரே படைப்பாளிக்கு உரிமையாக்கிச் சொல்லப்படுகிற படைப்புக்களில் ஏதோ ஒன்று மற்றவற்றைவிட தரத்தில் தாழ்ந்து இருந்தால் அப்படைப்பாளியின் படைப்புக்களின் பட்டியிலிருந்து அதைத் திரும்பப் பெற்றுவிட வேண்டும். (படைப்பாளி மாறாத தர அளவு உடையவர் என்று இதனால் சொல்லிவிடலாம்
2. படைப்பாளியின் சில படைப்புக்கள் அவருடைய மற்ற படைப்புக்களில் விளக்கப்பட்ட கோட்பாடுகளை மறுதலித்தால் முதலில் சொன்னதையே (திரும்பப் பெறுதல்) செய்ய வேண்டும். (இதன் மூலம் படைப்பாளியை கருத்து ரீதியான அல்லது கோட்பாட்டு ரீதியான ஒத்திசைவுத்தளம் என்று வரையறை செய்து கொள்ளலாம்)
3. படைப்பாளியின் படைப்பில் வழக்கமாகக் காணப்படுவதினின்று வித்தியாசமான வார்த்தைகளும், கூற்றுக்களும் கொண்ட நடை தென்படும் படைப்புகளை விலக்கிவிட வேண்டும்(படைப்பாளியை நடை ஒருமை கொண்டவராக இதன் மூலம் கருதிக் கொள்ளலாம்)
4. இறுதியாக, படைப்பாளியின் இறப்புக்குப் பின் சொல்லப்பட்ட கூற்றுக்கள் அல்லது நடைபெற்ற சம்பவங்கள் ஆகியவற்றைச் சொல்லும் பத்திகளை இடைச்செருகல்களாகக் கருத வேண்டும். (சில சம்பவங்கள் நிகழ்ந்த திருப்பு முனைகளில் ஒரு சரித்திர உருவாக படைப்பாளி இங்கு பார்க்கப்படுகின்றான்)

படைப்பை ஒருவர்க்கு உரிமையாக்கும் விஷயங்களில் அக்கறை காட்டாத நவீன இலக்கிய விமர்சனம் கூட இன்னும் படைப்பாளியை இப்படித்தான் வரையறை செய்கிறது; ஒரு படைப்பில் இடம் பெற்றுள்ள சில சம்பவங்களை மட்டுமின்றி அவற்றின் உருமாற்றங்கள், சிதைவுகள், மற்றும் பல்வேறு வகைப்பட்ட மாற்றங்களையும் விளக்க படைப்பாளி ஓர் அடிப்படையைத் தருகிறான் (அவனுடைய வாழ்க்கைச் சரிதம், அவனுடைய தனிப்பட்ட பார்வையை உறுதி செய்தல், அவனுடைய சமூக நிலை பற்றிய ஆய்வு, அவனுடைய அடிப்படை நோக்கத்தின் வெளிப்பாடு ஆகியவை மூலம் இந்த அடிப்படை கிடைக்கிறது). ஒரு வகையான எழுத்து ஒருமையின் (unity of writing) கோட்பாடாக படைப்பாளி இருக்கிறான். பரிணாமம், முதிர்ச்சியடைதல் அல்லது பாதிப்பு ஆகிய கோட்பாடுகளினால், பகுதியாகவாவது, எல்லா வேறுபாடுகளும் தீர்க்கப்பட வேண்டியிருப்பதால், பிரதிகளின் தொடரில், மேல் எழ வாய்ப்புள்ள முரண்பாடுகளை மட்டுப்படுத்த படைப்பாளி பயன்படுகிறான் அவனுடைய சிந்தனை அல்லது அவா, உணர்வு நிலை அல்லது உணர்வற்ற நிலை ஆகியவற்றின் ஏதோ ஒரு நிலையின் ஒரு புள்ளியில் முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும் ஓர் அடிப்படையான அல்லது மூல முரண்பாட்டைச் சுற்றி ஒவ்வாத கூறுகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன அல்லது இறுதியில் ஒன்று சேர்க்கப்படுகின்றன. இறுதியில், படைப்புக்கள், கருத்தோட்டப் பதிவுகள், கடிதங்கள், முடிவுறாத எழுத்துக்கள் மற்றும் இன்ன பிறவற்றில் சரிசமமாகவும், ஒரே மாதிரியான நேர்மை உறுதியுடனும் கிட்டத்தட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையடைந்த வடிவங்களில் வெளிப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட சொல்லமைப்பின் (expression) மூலமாக (source) படைப்பாளி ஆகிறான். படைப்பாளியின் படைப்புரிமைச் சான்றுக்கான (இன்றைய வேதாகம விமர்சன முறைக்கு அந்த அளவுகோள்கள் போதுமானதாகத் தோன்றவில்லை) நான்கு செயல்முறைகளை (modalities) வரையறை செய்கின்றன. இதைச் சார்ந்துதான் நவீன விமர்சனம் "படைப்பாளி- செயல்பாட்டை" நடைமுறைக்குக் கொண்டு வருகிறது.

தன்செயலற்ற பொருள்கூறாக (passive material) வழங்கப்படும் பிரதியிலிருந்து சுற்று முகமாக செய்யப்பட்ட வெறும், தனித்த மறு ஆக்கம் அல்ல படைப்பாளி - செயல்பாடு; படைப்பாளியைக் குறிக்கும் சில குறிகளை பிரதி எப்போதும் கொண்டிருக்கும். இவை இலக்கணவாதிகளுக்கும் நன்றாகத் தெரிந்த சொந்த பிரதி பெயர்ச்சொற்கள், காலம், இடம் குறித்த வினையடைகள் (adverbs) மற்றும் வினைத்திரிபுகள் போன்றவையே சொல்லாடல்களில் படைப்பாளி - செயல்பாடு இல்லாத சொல்லாடல்களில் இவ்வகைக் கூறுகள் வகிக்கும் பங்கையே அது இருக்கும் சொல்லாடல்களில் வகிப்பதில்லை. படைப்பாளி - செயல்பாடு இல்லாத சொல்லாடல்களில் இவ்வகை இடம் மாற்றிகள் (Shifters) (சற்றுமுன் சொல்லப்பட்ட குறிகள்) உண்மையான பேசுபவனையும்; (real speaker) அவனுடைய சொல்லாடலின் இடம் - காலம் சார்ந்த ஒத்திசைவுகளையும் குறிக்கின்றன. (தன்மை ஒருமையில் - first persion சொல்லப்படும் சொல்லாடல்களில் சில மாறுதல்கள் நிகழலாம்) படைப்பாளி - செயல்பாடு உள்ள சொல்லாடல்களில் அவற்றின் பங்கு அதிக சிக்கலானதும், மாறும் தன்மையுடையதும் ஆகும். தன்மை ஒருமையில் சொல்லப்படும் ஒரு நாவலில் தன்மை பிரதி பெயர்ச் சொல்லோ, நிகழ்கால தெரிநிலை வினையோ (Present indicative) எழுத்தாளனையோ அல்லது அவன் எழுதிக்கொண்டிருக்கும்கணத்தையோ துல்லியமாகக் குறிப்பதில்லை என்பது எல்லார்க்கும் தெரியும் மாறாக அவை, படைப்பாளியிடமிருந்து அதற்குண்டான தூரம் மாறுவதும், படைப்பின் போக்கில் அடிக்கடி மாறுபடுவதுமான ஒரு "நபரின் மறுவடிவ"த்தை (Alter egd) க் குறிக்கின்றன. படைப்பாளியை புனைந்து கொள்ளப்பட்ட பேசுபவனோடு (fictitions speaker) சமப்படுத்திப் பார்ப்பது எவ்வளவு தவறோ அவ்வளவு தவறுதான் படைப்பாளியை உண்மையான எழுத்தாளனோடு சமப்படுத்திப் பார்ப்பதும் இந்த பிளவில், பிரிவில், தூரத்தில்தான் படைப்பாளி - செயல்பாடு நடைமுறையில் செயலாற்றுகிறது.

ஒரு "விளையாட்டு" என்று கருதப்படுவதும், "பாதி-சொல்லாடல்கள்" மட்டுமே பங்கு பெறுவதுதான் நாவல் மற்றும் கவிதைச் சொல்லாடல்களுக்கு மட்டுமே உரித்தான குணாம்சம் இது என்று சொல்லி மேற்கூறியதை ஒருவர் ஆட்சேபிக்கலாம். உண்மையில், படைப்பாளி - செயல்பாடு கொண்டு எல்லாச் சொல்லாடல்களும் இந்த "தான்" என்பதின் பன்மையைப் பெற்றுள்ளன. கணிதம் தொடர்பான ஆய்வுக்கட்டுரை ஒன்றிற்கான முன்னுரையில் பேசும் "தான்" - கட்டுரையில் ஆக்கம் நிகழ்ந்த சூழ்நிலைகளை அது குறிக்கும் - ஒரு சான்று விளக்கத்தின் (demonstration) போக்கின் போது பேசும் "தானு"டைய நிலையோடு அல்லது செயலோடு ஒப்பானதாக இருக்காது; "நான் முடிக்கிறேன் அல்லது நான் கருதுகிறேன்" என்ற வடிவத்தில் அது தோன்றும். முதல் கூற்றில் வரும் "நான்", தனக்கு யாரும் சமமில்லாதவரும், தீர்மானிக்கப்பட்ட இடம் மற்றும் காலத்தில் குறிப்பிட்ட கடமையை முடித்தவருமான ஒரு தனி நபரைக் குறிக்கிறது. இரண்டாம் கூற்றில் வரும் " நான்", அதே மாதிரியான குறியீடுகளின் திட்ட அமைப்பு, வெளிப்படையான உண்மைகளின் இயங்கு நிலை, மற்றும் ஏற்கனவே உள்ள விளக்கச் சான்றுகளின் தொகுதி ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளும் எந்தத் தனி நபரும் செயற்படுத்த முடிகிற ஓர் உதாரணத்தையும், சான்று விளக்க அளவையும் குறிப்பிட்டுக் காட்டுகிறது. அதே ஆய்வுக் கட்டுரையில், படைப்பின் அர்த்தத்தையும், எதிர்கொண்ட தடைகளையும், பெற்ற முடிவுகளையும் மற்றும் மீதமிருக்கிற பிரச்சினைகளையும் விளக்குவதற்காகப் பேசும் ஒரு மூன்றாவது "தா"னையும் நாம் அடையாளம் காணலாம்; நடைமுறையில் இருக்கிற அல்லது இனி வர இருக்கிற கணிதச் சொல்லாடல்களின் களத்தில் இந்த "தான்" இடம் பெற்றுள்ளது.

படைப்பாளி - செயல்பாடு கொண்டுள்ள இன்னும் பல பிரத்தியேக குணாம்சங்களை ஆராய்ச்சி கண்டு சொல்லலாம் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அதிகம் தெரியக்கூடியதும், முக்கியமானதும் ஆன இந்த நான்குடன் நான் நிறுத்திக் கொள்ளப் போகிறேன். அவற்றைப் பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம்.

1. சொல்லாடல்களின் உலகத்தைச் சுற்றி அணைத்து, தீர்மானித்து, வெளிப்படுத்தும் சட்டம் சார்ந்த மற்றும் நிறுவன அமைப்போடு படைப்பாளி - செயல்பாடு இணைக்கப்படுகிறது.

2. அது எல்லா காலங்களிலும் எல்லா வகை நாகரிகங்களி-

இலக்கிய விமர்சனம் படைப்பாளியை ஒ காலத்தில் வரையறை செய்த முறை - அல்லது நடைமுறையில் இருந்த பிரதிகளிலிருந்தும், சொல்லாடல்களிலிருந்தும் படைப்பாளி என்ற உருவை நிர்மாணித்த முறை - கிறித்துவ மரபு தன் பொறுப்பில் வந்த பிரதிகளை நம்பத் தக்கதென்று முறையிலிருந்து பெறப்பட்டதாகத் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் ஒரே மாதிரியாக எல்லா சொல்லாடல்களையும் பாதிப்பதில்லை.

3. ஒரு சொல்லாடலை அதன் உற்பத்தியாளனோடு தன்னெழுச்சியாக உரிமையாக்குவதன் மூலம் அது வரையறை செய்யப்படுவதில்லை; மாறாக, அது குறிப்பிட்ட மட்டும் சிக்கலான செயல்முறைகளால் அல்லது வரையறை செய்யப்படுகிறது.

4. அது உண்மையான ஒரு தனி நபரை முழு மொத்தமாகவும், ஒற்றையாகவும் குறிப்பிடுவதில்லை, ஏனென்றால் ஒரே நேரத்தில் அது பல "தான்" களையும், "அகங்களையும்" வெளிக் கொண்டு வரலாம் - இந்த நிலைகளை வெவ்வேறு வகைப்பட்ட தனி நபர்கள் கைக்கொள்ளலாம்.

இந்த இடம்வரை என்னுடைய ஆய்வுப் பொருளை நியாயமற்ற வகையில் குறுக்கிக் கொண்டேன். ஓவியம். இசை மற்றும் இதர கலைகளில் உள்ள படைப்பாளி - செயல்பாடு பற்றி நிச்சயம் விவாதித்திருக்க வேண்டும் ஆனால், நான் விரும்புவது போல, சொல்லாடல் உலகத்துக்குள்ளேயே நாம் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் கூட "படைப்பாளி" என்ற பதத்துக்கு மிகக் குறுகிய அர்த்தத்தையே நான் கொடுத்திருப்பதாகத் தோன்றுகிறது. ஒரு புத்தகம் அல்லது ஒரு பிரதி அல்லது ஒரு படைப்பை யாருக்கு சட்டபூர்வமாக உரிமையாக்குகிறோமோ அந்த நபரை அந்தக் குறுகிய அர்த்தத்தில் படைப்பாளி என்று நான் விவாதித்துள்ளேன். சொல்லாடல் தளத்தில் ஒரு நபர், ஒரு புத்தகத்தின் படைப்பாளி என்பதற்கும் மேலாக - கோபாட்டு, மரபு, அல்லது ஒழுங்கு முறை (பிற புத்தகங்களும், படைப்பாளிகளும் அவர்கள் முறை வரும்போது இவற்றில் இடம்பெறுவார்கள்) ஆகியவற்றின் படைப்பாளியாக இருக்கக்கூடும் என்பதை எளிதாகப் பார்க்க முடியும். இந்த படைப்பாளிகள் "வாதமுறைக்கு அப்பாற்பட்ட" என்ற நிலையில் இருப்பதாக நாம் சொல்லாம். திரும்பத் திரும்ப சம்பவிக்கும் இந்த நிகழ்வு, நம்முடைய நாகரிகம் என்ற அளவுக்குப் பழையதோ அந்த அளவுக்குப் பழையது. ஹோமர், அரிஸ்டாடில், மற்றும் இறைகுருக்கள் முதல் கணிதவியலாளர்கள், ஹிப்பாக்ரடிக் மரபின் பிதாமகர்கள் ஆகியோர் இந்த பங்கை வகித்திருக்கிறார்கள்.

மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வேறொரு அசாதாரண வகை படைப்பாளிகள் தோன்றினார்கள் இவர்கள் "மகத்தான" இலக்கியப் படைப்பாளிகளுடனோ, சமயம் சார்ந்த பிரதிகளின் படைப்பாளிகளுடனோ, விஞ்ஞானத்தின் நிறுவனர்களுடனோ குழப்பிக் கொள்ளக் கூடாது. தளர்வான கூற்றில் சொல்வதனால் இவர்களை "வாதமுறையியலின் நிறுவனங்கள்" என்று நாம் அழைக்கலாம். இவர்கள் அவர்களுடைய படைப்புக்களின் ஆசிரியர்கள் மட்டுமல்லர் என்ற வகையில் தனிச் சிறப்புப் பெற்றவர்கள். வேறொன்றை அவர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள் பிற பிரதிகளை அமைப்பதற்கான சாத்தியங்களையும் சட்டங்களையும். இந்த அர்த்தத்தில் இவர்கள் உதாரணமாக தன்னுடைய பிரதியை மட்டுமே உண்டாக்கும் நாவலாசிரியனிடமிருந்து மிகவும் வித்தியாசமானவர்கள். ஃப்ராய்டு, "கனவுகளில் விளக்கம்" அல்லது "சிரிப்புத் துணுக்குகளும் நனவிலியோடு அவற்றுக்குள்ள உறவும்" ஆகியவற்றிற்கு மட்டும் படைப்பாளி அல்லர் மார்க்ஸ், "கம்யூனிச அறிக்கை" அல்லது "மூலதனம்" ஆகியவற்றிற்கு மட்டும் படைப்பாளி அல்லர்; சொல்லாடலின் எல்லையற்ற சாத்தியத்தை அவர்கள் இருவரும் நிலைநாட்டியிருக்கிறார்கள்.

இதை ஆட்சேபிப்பது சுலபம். ஒரு நாவலின் ஆசிரியன் அவனுடைய சொந்த பிரதிக்கு மட்டுமே படைப்பாளி என்று கொள்வது உண்மையல்ல என்று ஒருவர் சொல்லக்கூடும் ஒரு அர்த்தத்தில், அவனுக்குக் கொஞ்சம் "முக்கியத்துவம்" கிடைக்கும் பட்சத்தில், பிரதியின் படைப்பாளி என்பதற்கும் மேலாக மேலாண்மையும், அதிகாரமும் பெறுகிறான். மிக எளிமையான உதாரணமாக எடுத்துக் கொண்டால், Ann Radcliffe *(1764 -1823 பிரிட்டிஷ் நாவலாசிரியை)* The castles of Athlin and Dunbayne மற்றும் சில நாவல்களை மட்டும் எழுதவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டு துவக்கத்தில் Gothic பாணி அச்சமூட்டும் நாவல்கள் தோன்றுவதை சாத்தியப்படுத்தியவர் இந்த வகையில் அவருடைய படைப்பாளி - செயல்பாடு அவருடைய சொந்த படைப்பையே விஞ்சி நிற்கிறது. ஆனால் இந்த ஆட்சேபத்திற்கு ஒரு பதில் இருப்பதாக நான் நினைக்கிறேன். வாதமுறையியலின் இந்த நிறுவனங்கள் (மார்க்ஸையும், ஃப்ராஸ்டையும் நான் உதாரணங்களாகக் கொள்வதற்குக் காரணம் அவர்கள் இருவரும் முதலாவதும், முக்கியமானதுமான நிகழ்வுகள் என்பதால்தான்) ஒரு நாவலாசிரியன் சாத்தியப்படுத்துகிறார்கள். சாத்தியப்படுத்துவதிலிருந்து முற்றிலும் வித்தியாசமானதை Ann Radchiffe ன் படைப்புக்களில் இருக்கும் பிரத்யேகக்குறிகள், பிரதிமைகள், உறவுகள், மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றை மற்றவர்கள் மறு பயன்பாட்டுக்கு உள்ளாக்கலாம். Ann Radcliffe ன் படைப்புக்களில் காணப்படுவதைப் போன்றே அவர் ஸ்தாபித்த பத்தொன்பதாம் நூற்றாண்டு

ஒரு சொல்லாடலை அதன் உற்பத்தியாளனோடு தன்னெழுச்சியாக உரிமையாக்குவதன் மூலம் அது வரையறை செய்யப்படுவதில்லை. மாறாக, அது குறிப்பிட்ட மட்டும் சிக்கலான செயல்முறைகளால் அல்லது வரையறை செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gothic அச்சமூட்டும் நாவல்களிலும் ஒரே மாதிரியான உட்பொருளைப் பார்க்கலாம் தன்னுடைய பேதைத்தனம் என்ற பொறியில் சிக்கிக் கொண்ட கதை நாயகி, ரகசிய காப்பரண், தனக்கு இழைக்கப்பட்ட கெடுதிக்கு பரிகாரம் தேடும் சபிக்கப்பட்ட நாயகன் மற்றும் பிற.

மாறாக, வாதமுறையியலின் கர்த்தாக்கள் என்ற முறையில் மார்க்ஸும் ஃப்ராய்டும் சில வகை ஒப்புமைகளை மட்டும் சாத்தியப்படுத்தவில்லை; அவற்றுக்குச் சமமான முக்கியத்துவமுடைய சிவ வகை வேற்றுமைகளையும் சாத்தியப்படுத்தினார்கள். தங்களுடைய சொல்லாடல் அன்றி வேறொன்றுக்கான சாத்தியத்தை உண்டாக்கினார்கள் இருந்தும் அந்த வேறொன்று அவர்கள் நிறுவியதற்குத் தொடர்பான ஒன்றே.

ஃப்ராய்டு உள ஆய்வியலைத் தோற்றுவித்தார் என்று சொல்வது, கார்ல் ஆப்ரகாம் அல்லது மெலனி க்ளெய்ன் ஆகியோரின் படைப்புக்களில் பாலுணர்ச்சி உந்துதல் குறித்த கருத்தாக்கம் அல்லது கனவு குறித்த ஆய்வில் தொழில் நுணுக்கம் ஆகியவற்றை நாம் காண முடிகிறது என்று அர்த்தம் ஆகாது உள ஆய்வியல் சொல்லாடலிருந்தே தோன்றும் சில வகை விலகல்களை (உளவியலில் சில பிரச்சனைகளுக்கு வேறுபட்ட தீர்வுகளைச் சொல்வது) ப்ராய்டு சாத்தியமாக்கினார் என்பதே அதற்கு அர்த்தம் இந்த விலகல்களும் அவருடைய பிரதிகள், கருத்தாக்கங்கள், மற்றும் கருதுகோள்கள் ஆகியவை பற்றிய வகையிலேயே தோன்றின.

இது ஒரு புது சிக்கலை உண்டாக்குவதாகத் தோன்றும்; ஒரு விஞ்ஞானப் பிரிவைத் தோற்றுவித்தவரைப் பொருத்த வகையிலோ அல்லது ஒரு விஞ்ஞானத்தில் முக்கிய மாற்றத்தை அறிமுகப்படுத்தியவரைப் பொருத்த வகையிலே இது உண்மையில்லையா? தான் உருவாக்கிய விதிகளைத் திருப்பிச் சொன்ன சொல்லாடல்களை சாத்தியப்படுத்தியது மட்டுமின்றி கலிலியோ தானே சொன்னதிலிருந்து மாறுபாடுடைய கூற்றுக்களையும் வெளியிட்டார். குவியரை (Couvier) உயிரியலின் நிறுவனர் என்று சொல்வதும் அவர்களை மற்றவர்கள் பின்பற்றினார்கள் என்பதாலோ, அல்லது அதன் பிறகு சிலர் உயிர்ப் பொருள் பற்றிய கருத்தாக்கத்தை அல்லது குறியை (sign)த் தொடர்ந்து மேற்கொண்டார்கள் என்பதாலோ அல்லது தன்னுடைய உறுதி மாறா நிலைக்கு நேரெதிரான ஒரு பரிணாமக் கொள்கையை ஓரளவுக்கு குவியர்/ சாத்தியமாக்கினார் என்பதாலும், சஸூர் தன்னுடைய அமைப்பியல் பகுப்பாய்வுகளிலிருந்து மிகவும் வேறுபட்ட, புது சாத்தியங்களைத் தோற்றுவிக்கும் ஓர் இலக்கணத்தை (Generative Grammer) நிகழ்த்திக் காட்டினார் என்பதாலுமே மேலோட்டமாகப் பார்த்தால், வாதமுறையியல் நடைமுறைகளின் தொடக்கம். எவ்வகை விஞ்ஞான ரீதியான முயற்சியின் தோற்றுவித்தலுக்கும் ஒப்பானதாகத் தோன்றும்.

இருந்தும் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு உள்ளது. விஞ்ஞானத்தைப் பொறுத்த வரை அதை நிறுவும் வினை அதன் எதிர்கால மாற்றங்களுக்கு இணையான நிலையில் உள்ளது. அதுதான் சாத்தியமாக்கும் மாற்றங்களின் தொகுதியின் பகுதியாக இந்த வினை ஆகிறது. ஒரு விஞ்ஞானத்தின் நிறுவும் செயலை அதிலிருந்து பெறப்படும்



மாற்றங்களின் அமைப்பு முறையில் எப்போது வேண்டுமானாலும் மறுபடியும் புகுத்தலாம்.

இதற்கு எதிர்மாறாக, வாதமுறை சொல்லாடல் நடைமுறையின் (Discrusive Practice) தொடக்கம் அதனுடைய பிற்கால மாற்றங்களோடு பல்வேறு முரண் கூறுகளைக் கொண்டதாக உள்ளது. ஒரு விஞ்ஞான நிறுவுதலைப் போலல்லாமல், வாதமுறை சொல்லாடல் நடைமுறை அதனுடைய பிற்கால மாற்றங்களில் பங்கு கொள்வதில்லை.

வாதமுறை சொல்லாடல் தளங்களில் "மூலத்துக்குத் திரும்புதல்" (a return to the origin) என்ற தவிர்க்க இயலாத ஒரு தேவை எழும். சொல்லாடல் தளத்தின் ஒரு பகுதியாக இருக்கும் இந்தத் திரும்புதல் சொல்லாடலை ஓய்வில்லாமல் மாற்றிக் கொண்டே இருக்கிறது. இந்தத் திரும்புதல் ஒரு சரித்திர பிற்சேர்க்கையோ அல்லது வெறும் ஆபரணமோ அல்ல; மாறாக சொல்லாடல் நடைமுறையை மாற்றிக் கொண்டிருக்கும் ஒரு வலிய, இன்றியமையாத பணியை அது மேற்கொண்டுள்ளது. கலிலியோவின் பிரதியை மறு ஆய்வு செய்வது இயக்கவியலின் சரித்திரம் குறித்த நம்முடைய அறிவை மாற்றலாம்; ஆனால்

வாதமுறை சொல்லாடல் நடைமுறையின் தொடக்கம் அதனுடைய பிற்கால மாற்றங்களோடு பல்வேறு முரண் கூறுகளைக் கொண்டதாக உள்ளது. ஒரு விஞ்ஞான நிறுவுதலைப் போலல்லாமல், வாதமுறை சொல்லாடல் நடைமுறை அதனுடைய பிற்கால மாற்றங்களில் பங்கு கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கவியலையே அதனால் மாற்ற இயலாது; ஆனால், ஃப்ராய்டின் பிரதிகளை மறு ஆய்வு செய்வது உளபகுப்பாய்வையே மாற்றும், மார்க்ஸின் பிரதியை மறு ஆய்வு செய்வது மார்க்ஸியத்தையே மாற்றுவது போல.

சொல்லாடலின் துவக்கம், விஞ்ஞானத்தை நிறுவுதல் ஆகிய இரண்டுக்குமுள்ள எதிர்மறை நிலையை விளக்க நான் முயன்றுள்ளேன். இரண்டையும் வேறுபடுத்திப் பார்ப்பது அவ்வளவு எளிதல்ல; மேலும், இரண்டும் ஒன்றையொன்று ஒதுக்கி வைக்கும் தனித்த நடைமுறைகள் என்றும் நிரூபிக்க முடியாது. ஒரே ஒரு காரணத்துக்காக இரண்டுக்குமுள்ள வேறுபாட்டை சொல்ல முயன்றுள்ளேன். ஒரு குறிப்பிட்ட நபரின் பெயரைத் தாங்கி நிற்கும் ஒரு புத்தகத்தின் அல்லது ஒரு பிரதித் தொடரின் தளத்தில் படைப்பாளி - செயல்பாட்டை இருத்துவது சிக்கலான ஒன்று படைப்பாளி - செயல்பாட்டை இருத்துவது சிக்கலான ஒன்று; படைப்பாளி - செயல்பாட்டை படைப்புகளின் தொகுதிகள் அல்லது முழு பிரிவுகள் போன்ற பரந்த அலகுகளில் வைத்து ஆராயும் போது மேலும் பல தீர்மானிக்கும் காரணிகள் இருக்கின்றன என்று காட்டுவதற்காகவே.

முடிவாக, நான் சொன்னதற்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கிறேன் என்பதற்கான காரணங்களை ஆய்வு செய்ய விரும்புகிறேன்.

முதலில் கோட்பாட்டு ரீதியான காரணங்கள் உள்ளன. ஒரு புறம் நான் கோடிட்டு காட்டிய ஆய்வு, சொல்லாடலின் மாதிரிப் படிவ ஆராய்ச்சிக்கான (typology) அணுகுமுறையைத் தரும். இலக்கண அம்சங்கள், வடிவ அமைப்புக்கள் மற்றும் சொல்லாடலின் உள்ளுரைகள் (objects) ஆகியவற்றிலிருந்து மட்டுமே அவ்வகையான மாதிரிப் படிவ ஆராய்ச்சியை நிர்மாணித்து விட முடியாது என்பது முதல் பார்வையிலேயே எனக்குத் தோன்றுகிறது. இதற்கு மேலும் சொல்லாடலுக்கு மட்டுமே பிரத்யேகமான சில குணங்களும், தொடர்புகளும் உள்ளன. (இவற்றை இலக்கண. தர்க்கச் சட்டங்களாகச் சுருக்கி விட முடியாது). இவற்றைப் பயன்படுத்திதான் சொல்லாடலின் முக்கியப் பிரிவுகளை வேறுபடுத்தி ஒருவர் காண முடியும். ஒரு படைப்பாளியோடு உள்ள தொடர்பு அல்லது தொடர்பின்மை, மேலும் இந்தத் தொடர்பு மேற்கொள்ளும் வேறுபட்ட வடிவங்கள் - மிக வெளிப்படையான முறையில் - ஆகியவை சொல்லாடலின் குணங்களில் ஒன்றை நிர்மாணிக்கிறது.

மறுபுறம், சொல்லாடலின் சரித்திர ஆய்வுக்கான நுழைமுகத்தை இங்கு காண முடியும். சொல்லாடல்களை அவற்றின் வெளியீட்டு மதிப்பு, அல்லது வடிவ மாற்றங்கள் ஆகியவற்றை வைத்து மட்டும் அல்லாமல் அவற்றின் இருப்பின் செயல்வகைகளை (modes of existence) வைத்தும் ஆய்வு செய்வதற்கான தருணம் வந்து விட்டது. சுற்றுக்கு விடுதல், விலை நிர்ணயித்தல், உரிமையாக்கல், மற்றும் உடமையாக்கல் ஆகியவற்றின் செயல்வகைகள் ஒவ்வொரு கலாசாரத்தைப் பொருத்து வேறுபட்டும், ஒவ்வொரு கலாசாரத்துக்குள்ளேயே மாற்றங்கள் அடைந்தும் வருகின்றன. சொல்லாடல்கள் புழக்கத்துக்குக் கொண்டுவரும் பிரதான உட்பொருள் அல்லது கருத்தாக்கங்கள் ஆகியவற்றினால், சமூக உறவுகளுக்கேற்ப வெளிப்படம் சொல்லாடலின் செயல் வகைகளைப் புரிந்து கொள்வதை விடவும் படைப்பாளி - செயல்பாடு மற்றும் அதன் மாற்றங்கள் ஆகியவை மூலம் அதிகம் புரிந்து கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

இவ்வகை ஆய்வுகளைத் தொடக்கமாகக் கொண்டு "தன்னிலை" (subject) யின் சிறப்பு உரிமையையும் ஆராயலாம் என்று தோன்றும். வாழ்க்கைச் சரிதம் மற்றும் மனோ தத்துவ குறிப்பீடுகளை ஒதுக்கிவைத்துவிட்டு, ஒரு படைப்பின் (அது இலக்கியப் பிரதியோ, தத்துவ முறைமையோ, அல்லது விஞ்ஞானப் படைப்போ எதுவாக இருந்தாலும் சரி) உள்கட்டமைப்பு குறித்த ஆய்வை மேற்கொள்ளும் போது, தன்னிலையின் கலப்பற்ற சிறப்பியல்பு மற்றும் நிறுவும் பங்கு ஆகியவை கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. படைப்பைப் பிறப்பிக்கும் தன்னிலை (மனிதன்) குறித்த பொருளை (theme) மறுமுறை நிலைநாட்ட இந்த கேள்விக்கு நாம் திரும்புவதில்லை; மாறாக தன்னிலையின் நுழையும் புள்ளிகள், (Points of insertion) செயல்பாட்டு முறைகள் மற்றும் சார்புகளின் அமைப்பு ஆகியவற்றைப் புரிந்து கொள்ளவே இக்கேள்வியைக் கேட்கிறோம். இப்படிச் செய்வதற்கு அர்த்தம் பாரம்பரியமான பிரச்சனையைத் தலைகீழாக்கி பின்வரும் கேள்வியைக் கேட்பது என்பது அல்ல". ஒரு சுதந்திரமான தன்னிலைப் பொருள் (a free sucject) எப்படி விஷயங்களின் சாரத்திற்குள் ஊடுருவி அதற்கு அர்த்தம் தர முடியும், மொழிக்குள்ளேயே அதன் விதிகளை ஊக்குவித்து அது (தன்னிலை) தன்னுடையதான வடிவங்களை எப்படி உண்டு பண்ண முடியும்?" மாறாக பின்வரும் கேள்விகள் எழுப்பப்படும்: "சொல்லாடலின் ஒழுங்கமைப்பில் ஒரு தன்னிலைப்பொருள், எவ்வாறு எந்த சூழ்நிலைகளில், என்ன வடிவங்களில் தோன்றும்? ஒவ்வொரு சொல்லாடல் வகையிலும் அது எந்த இடத்தை நிரப்பும், என்னென்ன செயல்பாடுகளை மேற்கொள்ளும், எந்தெந்த விதிகளுக்குக் கீழ்ப்படியும்?"

வாழ்க்கைச் சரிதம் மற்றும் மனோ தத்துவ குறிப்பீடுகளை ஒதுக்கிவைத்துவிட்டு, ஒரு படைப்பின் (அது இலக்கியப் பிரதியோ, தத்துவ முறைமையோ, அல்லது எதுவாக இருந்தாலும் சரி) உள்கட்டமைப்பு குறித்த ஆய்வை மேற்கொள்ளும் போது, தன்னிலையின் கலப்பற்ற சிறப்பியல்பு மற்றும் நிறுவும் பங்கு ஆகியவை கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கமாகச் சொன்னால், ஒரு படைப்புக்கு மூலகர்த்தா (originator) என்ற பாத்திரத்தை தன்னிலைப் பொருளுக்கு (அல்லது அதனுடைய பதிலிக்கு) மறுப்பதும், தன்னிலைப் பொருளை, சொல்லாடலின் மாறும் தன்மையுடைய சிக்கலான செயல்பாடு என்ற ரீதியில் ஆய்வு செய்வதுமே இங்கு முக்கியம்.

இரண்டாவதாக, படைப்பாளியின் "சித்தாந்த" நிலையோடு தொடர்புடைய காரணங்கள் உள்ளன. பிறகு வரும் கேள்வி: "புனைகதை (Fiction) உலகத்தை மிரட்ட பயன்படுத்தும் அந்தத் துன்ப நெருக்கடியையும், ஆபத்தையும் ஒருவர் எப்படிக் குறைப்பது?" பதில் இதுதான்: படைப்பாளியோடு சேர்த்துத்தான் அதை ஒருவர் குறைக்க முடியும். ஒரு உலகத்துக்குள் புற்று நோய் போன்றதும், ஆபத்தானதுமான குறிப்பீடுகளின் பெருக்கத்தைக் கட்டுக்குள் வைக்க படைப்பாளி அனுமதி அளிக்கிறான் இந்த உலகத்தில் ஒருவர் தன்னுடைய வளங்கள் மற்றும் செல்வங்களோடு மட்டுமல்ல, தன்னுடைய சொல்லாடல்கள் மற்றும் அவற்றின் குறிப்பீடுகள் (singnifications) ஆகியவற்றிலும் சிக்கனமாக இருக்கிறார். அர்த்தத்தின் பெருக்கத்தில் படைப்பாளி ஒரு சிக்கனக் கொள்கை. இதன் விளைவாக, படைப்பாளியைப் பற்றிய பாரம்பரியமான கருத்தை நாம் முற்றாக மாற்ற வேண்டிய கட்டாயம் உள்ளது. நாம் முன்பு பார்த்தது போல, குறிப்பீடுகள் வற்றாத ஓர் உலகத்தை, குறைவற்ற செல்வத்தோடும், தாராள மனத்தோடும், தன் படைப்பில் முதலீடு செய்யும் அன்பான ஒருவனே படைப்பாளி என்று சொல்வதற்கு நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். படைப்பாளி மற்ற மனிதர்களிடமிருந்து வேறுபட்டவன் என்றும், எல்லா மொழிகளையும் கடந்தவன் என்றும், அவன் பேச ஆரம்பித்தவுடன் அர்த்தம் எல்லையில்லாமல் பெருகத் துவங்குகிறது என்று நினைக்கவும் நாம் பழக்கப்பட்டுள்ளோம்.

ஆனால் உண்மை நேர்மாறானது: ஒரு படைப்பை நிரப்பும் குறிப்பீடுகளின் எல்லையற்ற மூலம் அல்ல படைப்பாளி என்பவன் அவன் படைப்புகளுக்கு முந்தியதானவன் அல்லன் (does not precede) அவன் ஒரு வகையான நடைமுறை சார்ந்த கொள்கை இக்கொள்கை மூலம் நம் கலாசாரத்தில் ஒரு படைப்பாளி குறுக்குகிறான். விலக்குகிறான், தேர்ந்தெடுக்கிறான் சுருக்கமாக, சுதந்திர சுற்றுப் பரப்பு, சுதந்திரமான கதையாளுதல், புனைகதையின் சுதந்திர ஆக்கம், சிதைவு, மற்றும் மறு ஆக்கம் ஆகியவை இக்கொள்கையால் முட்டுக்கட்டையிடப்படுகின்றன. படைப்பாளியை ஒரு மேதையாகவும், கண்டுபிடிப்பின் அழிவில்லாத எழுச்சியாகவும் நாம் முன் வைப்பதற்குப் பழக்கப்பட்டிருந்தோமானால் அதற்குக் காரணம் நாம் பிரத்யட்சத்தில் அவனை இதற்கெல்லாம் நேர் எதிரான முறையில் நாம் இயங்க வைப்பதுதான். படைப்பாளியை ஒரு சித்தாந்த விளைபொருள் என்று சொல்வதற்குக் காரணம் அவனுடைய உண்மையான சரித்திர செயல்பாட்டிற்கு நேர் எதிராக அவனை குறித்துக் காட்டுவதுதான். (ஒரு சரித்திர ரீதியான செயல்பாடு அதைத் தலைகீழாக்கும் ஒரு உரு மூலம் குறித்துக் காட்டப்பட்டால் ஒரு சித்தாந்த விளைபொருள் உண்டாகும்) எனவே, அர்த்தப் பெருக்கத்தைக் கண்டு நாம் பயப்படும் முறையைக் குறிப்பிடும் சித்தாந்த



உருவாக படைப்பாளி இருக்கிறான்.

படைப்பாளியின் உருவால் கட்டுப்படுத்தப்படாத புனைகதை இருக்கும் ஒரு கலாசார வடிவத்தை நான் கோருவதாகத் தோன்றுகிறது. முழுச் சுதந்திர நிலையில் புனைகதை இயங்குவதற்கும், யார் வேண்டுமானாலும் கையாள முடிவது மாதிரியும், கட்டுப்பாடற்று வளர்வதற்கு இடமளிக்கும் வகையிலும் உள்ள ஒரு கலாசாரத்தைக் கற்பனை செய்வது வெறும் ரொமான்டிசிசம். பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு புனைகதையாக்கத்தை முறைப்படுத்துபவனாக படைப்பாளி பங்கு வகித்தாலும் - பூர்ஷ்வா மற்றும் பெருந் தொழில் சார்ந்த சமூகம், தனி மனிதத்துவம் , மற்றும் தனி உடமை ஆகியவற்றின் பண்புகளை வெளிப்படுத்தும் பங்கு இது - நிகழும் சரித்திர மாற்றங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டாலும் கூட வடிவம், சிக்கல் தன்மை, மற்றும் இருத்தலிலும் (Existence) கூட படைப்பாளி - செயல்பாடு இன்னும் நிலையாக இருக்கும் என்பதற்கு அவசியம் இல்லை என்று தோன்றுகிறது. சமூகம் மாற

படைப்பாளி மற்ற மனிதர்களிடமிருந்து வேறுபட்டவன் என்றும், எல்லா மொழிகளையும் கடந்தவன் என்றும், அவன் பேச ஆரம்பித்தவுடன் அர்த்தம் எல்லையில்லாமல் பெருகத் துவங்குகிறது என்று நினைக்கவும் நாம் பழக்கப்பட்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற, அது மாறும் தருணத்திலும் கூட படைப்பாளி - செயல்பாடு மறையும்; புனைகதையும் அத-னுடைய ஒரு சொல் - பல பொருள் (அர்த்தப் பெருக்கம்) பிரதிகளும் வேறொரு செயல்முறை (mode) க்கேற்ப மீண்டும் ஒருமுறை இயங்கும் வகையில் இந்த மறைதல் நடைபெறும்; ஆனாலும் அது படைப்பாளியாக இருக்காது, அது தீர்மானிக்கப்படவோ, அனுபவிக்கப்படவோதான் வேண்டும்.

எல்லா சொல்லாடல்களும், அவற்றின் அந்தஸ்து, வடிவம், மதிப்பு எத்தகையதாக இருந்தாலும் சரி, எத்தகைய பரிசீலனைக்கு அவற்றை ஆட்படுத்தினாலும் சரி ஒரு முணுமுணுப்பின் அநாமதேயத்தில் அதன் பிறகு வளரும், புளித்துப் போன சில கேள்விகளை நாம் கேட்கமாட்டோம் "உண்மையில் யார் பேசியது? உண்மையில் அது அவன்தானா, வேறு யாரும் இல்லையே? எந்த நம்பத்தக்க நிலையுடன் அல்லது சுயத்தன்மையுடன்? அவனுடைய சொல்லாடலில் அவனுடைய ஆழ்ந்த "தா"னில் எந்தப் பகுதியை வெளிப்படுத்தினான்?" மாறாக இம்மாதிரியான வேறு கேள்விகள் வரும். இந்த சொல்லாடலின் இருத்தலின் செயல்முறைகள் (modes) எவை? அது எங்கு உபயோகப்படுத்தப்பட்டது, அது எப்படி சுற்று மூலம் பரவும், அதை யார் தனக்கென உடைமையாக்கிக் கொள்வார்கள்? சாத்தியமான தன்னிலைகளுக்கு (subjects) எங்கெங்கு அதில் இடமிருக்கிறது? இந்த வேறுபட்ட தன்னிலை செயல்பாடுகளை யார் மேற்கொள்வார்கள்?" இந்த எல்லா கேள்விகளுக்கும் பின்னால் ஓர் அக்கறையின்மையின் அசைவை மட்டுமே நாம் கேட்போம்.:"பேசுவது யார் என்பது எந்த வேறுபாட்டை உண்டாக்கிவிடும்?"

எல்லா சொல்லாடல்களும், அவற்றின் அந்தஸ்து, வடிவம், மதிப்பு எத்தகையதாக இருந்தாலும் சரி, எத்தகைய பரிசீலனைக்கு அவற்றை ஆட்படுத்தினாலும் சரி ஒரு முணுமுணுப்பின் அநாமதேயத்தில் அதன் பிறகு வளரும்,

***நீங்கள் ஒரு "தத்துவவாதி" என்று மட்டுமின்றி "வரலாற்று ஆசிரியர்", "மார்க்சிஸ்ட்", "அமைப்பியல்வாதி" என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிறீர்கள் College de france இல் நீங்கள் வகிக்கும் பதவியை Professor of the History of Systems of Thought என்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்?***

நான் யாரென்று நீங்கள் துல்லியமாகத் தெரிந்துகொள்ளத் தேவையில்லை. வாழ்க்கையிலும், செயல்பாட்டிலும் உங்களுக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான ஈடுபாடு, நீங்கள் யாராக முதலில் துவங்குகிறீர்களோ அதிலிருந்து வேறாக மாறிவிடுவது என்பதுதான்.

உதாரணமாக, ஒரு புத்தகத்தை எழுத ஆரம்பிக்கும்போது அதன் கடைசியில் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தால் அதை எழுதுவதற்கான தைரியம் தான் வந்துவிடுமா!

எழுத்துக்கும், காதல் -உறவு ஒன்றுக்கும் பொதுவான இந்தவிஷயம் வாழ்க்கைக்கும் பொருந்தும். ஆக, முடிவு என்னவென்று தெரியாமல் இருக்கும் வரையில் தான் இந்த விளையாட்டானது அர்த்தமுள்ளதாக இருக்கும்.

சிந்தனையின் வரலாறுதான் எனது ஆய்வுக்கான களம். மனிதன் ஒரு சிந்திக்கும் ஜீவி எனப்படுகிறான். அவன் சிந்திக்கும் வழி முறையானது, சமுதாயம், அரசியல், பொருளாதாரம் மற்றும் வரலாறு ஆகியவற்றுடன் தொடர்புடையது; அது மட்டுமன்றி, பொதுப்படையான அளவுகோல்கள் (universal eategories) மற்றும் வடிவியல் ரீதியான அமைப்புகளுடனும் (formal stuctures) இது தொடர்பு கொண்டது.

எனினும் சமுதாய உறவுகளிலிருந்து சிந்தனையானது வித்தியாசப்படுகிறது. என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதுதவிர, உண்மையில் மக்கள் சிந்திக்கும் வழிமுறையானது தர்க்கவியல் ரீதியான, பொதுப்படையான, உலகளாவிய அளவு கோள்களால் ஆய்வு செய்யப்பட முடியாததாக உள்ளது.

எனவே சமுதாய வரலாற்றுக்கும் சிந்தனை குறித்த வடிவியல் ரீதியான ஆய்வுகளுக்கும் இடையில் ஒரு பாதை இருப்பதாகத் தெரிகிறது. இது ஒரு குறுகிப்போன பாதையாக, சந்தாகக் கூட இருக்கலாம். இதுதான் சிந்தனை குறித்த வரலாற்று ஆய்வாளனின் பாதை.

**(ஃபூக்கோ ஒரு நேர்காணலின் போது...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிய கோட்பாட்டுடன் மனிதநலம் சார்ந்த உளவியல் பகுப்பாய்வு முறையைப் பொருத்துதல்

எரிக்பிராம்

**எரிக் பிராம்**

***இவர் ஜெர்மனியில் பிறந்தவர். சமூக உளவியலாளராகவும் உளப்பகுப்பியலாளராகவும் பயிற்சி பெற்றவர். ப்ராங்க்ஃபர்ட் சிந்தனையாளர்களுடன் தொடர்பு கொண்டவர். ஃப்ராய்டு, மார்க்ஸ் ஆகிய இருவர் கருத்துக்களாலும் ஒருங்கே கவரப்பட்டவர். இரண்டாம் உலகப் போர் சமயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்தார். கேரன், ஹாரனி, சலிவன் போன்ற உளவியல் அறிஞர்களுடன் தொடர்பு கொண்டவர். மார்க்ஸ், ஃப்ராய்டு ஆகிய இருவர் கொள்கைகளையும் இணைத்து நோக்கிய புதிய ஃப்ராடியர்களுள் ஒருவர்.***

மார்க்சியம் என்பது மனித நலம் நாடும் ஒரு கோட்பாடு ஆகும். மனிதனின் உள்ளார்ந்த திறன்களை முழுமையாக மலரச் செய்வதே அதன் நோக்கம். தனது கருத்துகள் மற்றும் உணர்வு நிலையால் ஊகித்து உணரப்படும் ஒருவகை அல்லாமல், அவனது உடல் மற்றும் மனோரீதியான குணாம்சங்களால் நிறைந்துள்ள ஒருவராக, அது மனிதனைக் காண்கிறது. வெறும் வெற்றிடத்தில் வாழ்பவனாக அல்லாமல், சமூக உறவுகளால் நிலை நிறுத்தப்படுபவனாக, உயிர் வாழ்வதற்கென உற்பத்தியில் ஈடுபட்டாக வேண்டிய ஒருவனாக மார்க்சியம் மனிதனைப் பார்க்கிறது. மார்க்சிய சிந்தனையினுடைய அக்கறையானது இவ்வாறு மனிதனுடைய உணர்வு நிலையையும் உள்ளிட்ட முழுமையான மனிதனைப் பற்றியதாக உள்ளதால் தான் மார்க்சின் "பொருள் முதல்வாதம்" ஹெகலின் கருத்தியல் கோட்பாடு மற்றும் மார்க்சியத்தின் உருக்குலைந்த வடிவமான பொருளாதார - எந்திரத்தனமான கோட்பாடு இவற்றிலிருந்து வேறுபட்டுத் தோன்றுகிறது. மனிதனை, புரிந்துகொள்ளக் கடினமானவையும், அந்நியப்படுத்தப்பட்டவையுமாகிய வெளிப்பாடுகளின் மூலமாக விளக்கிய பொருளாதார மற்றும் தத்துவார்த்த ரீதியிலான வகைப்பாடுகளைக் கட்டவிழ்த்து விடுதலை செய்து, பின்னர் தத்துவம் மற்றும் பொருளாதாரக் கருத்துகளை மனிதனுக்காகப் பயன்படுத்தியது மார்க்சின் ஒரு மகத்தான சாதனையாக இருந்தது.

மார்க்சின் கவலை மனிதனைப் பற்றியதாக இருந்தது. பொருளாதார ஈடுபாடுகளின் ஆதிக்கத்திலிருந்து மனிதனை விடுவிப்பதும் அவனது சொந்த ஏற்பாடுகளும், செயல்பாடுகளும், அவனைச் சுற்றிலும் எழுப்பியிருந்த சிறையிலிருந்து அவனை விடுதலை செய்வதும் அவனது நோக்கமாக இருந்தது. மார்க்சின் இந்த அக்கறை பற்றி ஒருவர் புரிந்து கொள்ளவில்லை என்றால், அவரது தத்துவத்தையோ, அல்லது அதை நடைமுறையில் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் பலரும் ஏமாற்றும் நோக்கத்துடன் அதை மாற்றியமைத்திருப்பதையோ புரிந்து கொள்ள முடியாது. மார்க்சின் பிரதான உருவாக்கத்திற்கு "மூலதனம்" (டாஸ் காபிடல்) என்ற பெயர் சூட்டப்பட்டிருந்த போதிலும், இந்தப் புத்தகம் அவரது மொத்த ஆய்வில் ஒரு கட்டமாக மட்டுமே கொள்ளப்பட வேண்டிய ஒன்று; இதைத் தொடர்ந்து தத்துவத்தின் சரித்திரம் ஒன்று பின்வந்திருக்க வேண்டும். இயந்திரத் தொழில் சமுதாயத்தில் மனிதனின் ஊனமுற்ற நிலையைப் புரிந்து கொள்வதில், மூலதனம் பற்றிய ஆய்வு ஒரு அதி முக்கியக் கருவியாக மார்க்சுக்கு இருந்தது. அவரால் முடிந்திருந்தால் எழுதியிருக்கக் கூடிய மகத்தான நூலின் ஒரு முதல்

**மார்க்சின் கவலை மனிதனைப் பற்றியதாக இருந்தது. பொருளாதார ஈடுபாடுகளின் ஆதிக்கத்திலிருந்து மனிதனை விடுவிப்பதும் அவனது சொந்த ஏற்பாடுகளும், செயல்பாடுகளும், அவனைச் சுற்றிலும் எழுப்பியிருந்த சிறையிலிருந்து அவனை விடுதலை செய்வதும் அவனது நோக்கமாக இருந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியாகவே அது இருக்கிறது. அந்த நூலின் தலைப்பு, "மனிதனும் சமுதாயமும் பற்றி" என்று இருந்திருக்கக்கூடும்.

இளைஞராக இருந்தபோதும், "மூலதனத்தின்", ஆசிரியராக இருந்தபோதும், மார்க்ஸ் எழுதிய படைப்புகள் உளவியல் கருத்துகள் நிறைந்து காணப்படுகின்றன. மிக முக்கியமான சிலவற்றை மட்டும் குறிப்பிட வேண்டுமெனில் "மனிதனின் சாரம்", "ஊனமுற்ற மனிதன்" போன்ற கருத்துகளோடு, "அந்நியப்படுதல்", "உணர்வு நிலை", "அதீத ஆர்வத்துடன் கூடிய முயற்சிகள்" மற்றும் "சுதந்திரம்" போன்ற கருத்துகளோடு இணைத்து அவர் எழுதுகிறார். எனினும், ஒழுக்கநெறியை ஒரு அமைப்பு ரீதியிலான உளவியலின் மீது அமைத்த அரிஸ்டாட்டில் மற்றும் ஸ்கைனோஸா இவர்களுக்கு மாறாக, மார்க்சின் எழுத்துகளில் உளவியல் கோட்பாடு எதுவும் காணப்படவில்லை. "பசி" மற்றும் "பாலுணர்வு" போன்ற, நிலையாக அமைந்துள்ள தூண்டுதல்களுக்கும், சமூக ரீதியாக உருவாக்கப்படுகின்ற, மாறக்கூடிய தூண்டுதல்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு பற்றிய சிறு சிறு குறிப்புகளைத் தவிர, மார்க்சின் எழுத்துகளில், முக்கியமான உளவியல் கருத்துகள் ஏதும் இல்லை. அவரைப் பின்தொடர்ந்து வந்த எழுத்தாளர்களின் நூல்களிலும் கூட இவை காணப்படவில்லை. இக்குறைக்குக் காரணம் உளவியல் சார்ந்த விவரங்களை ஆய்வு செய்யத் தேவையான திறனோ அல்லது ஆர்வமோ இல்லாதது அல்ல. (ஏனெனில், மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இடையே இருந்த கடிதப் போக்குவரத்தின் சுருக்கப்படாத கடிதங்கள் கொண்ட தொகுப்பு ஒன்றில், உணர்வு நிலைக்கு எட்டாத உள்மனத் தூண்டுதல்களை மிக ஆழமாகவும், தீர்க்கமாகவும் ஆய்வு செய்யக்கூடிய ஒரு திறன் தெளிவாகப் புலப்படுகிறது. மிகவும் திறன் வாய்ந்த உளவியல் ஆய்வாளருக்குக் கூடப் பெருமை சேர்க்கும் வகையில் இவை அமைந்துள்ளன.) மனிதனின் பிரச்சனைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் ஆற்றல் மிக்க உளவியல் ஏதும் மார்க்சின் வாழ்நாளில் இருந்திருக்கவில்லை என்ற உண்மையே இதற்குக் காரணமாகும். மார்க்ஸ் 1883-ல் மரணமடைந்தார். மார்க்சின் மரணத்திற்கு பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே ஃபிராய்டு தனது படைப்புகளை வெளியிடத் துவங்கினார்.

ஃபிராய்டினால் உருவாக்கப்பட்ட உளவியல், பல்வேறு மாற்றங்கள் தேவைப்பட்ட போதிலும், மார்க்சின் ஆய்வுக்குத் துணைபோகக் கூடிய ஒரு உளவியலாக இருந்தது. உளவியல் பகுப்பாய்வு என்பது எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு ஆற்றல் மிக்க உளவியல். அது மனித நடத்தை, செயல், உணர்வுகள் மற்றும் கருத்துகளை ஊக்குவிக்கக்கூடிய உளம்சார்ந்த விசைகளைப் பற்றியது. இந்த சக்திகளை அவை உள்ளவாறே உணர்ந்து அறிந்து கொள்ள முடியாது. கண்டு அறியப்படும் விஷயங்களின் வாயிலாக இவை ஊகித்து அறிந்து கொள்ளப்பட வேண்டும். மேலும், அவை முரண்பாடுகள் வாயிலாக, மற்றும் மாற்றங்களின் வாயிலாக அறியப்படவேண்டும். மார்க்சிய சிந்தனைக்குப் பயன்பட வேண்டும் என்றால், இச்சக்திகளின் பரிணாம வளர்ச்சியை மனிதனின் தேவைகளுக்கும், அவன் பங்கு பெறுகின்ற சமூக மற்றும் சரித்திர ரீதியிலான நிதர்சனத்திற்கும் இடையில் உள்ள இடைவிடாத எதிரெதிர்ச் செயல்பாட்டின் ஒரு உருவாக்கமாகப் பார்க்கக் கூடிய ஒரு உளவியலாக அது இருக்க வேண்டும். அதன் துவக்கத்திலிருந்த சமூக உளவியலாக உள்ள ஒரு உளவியலாக அது இருக்க வேண்டும். இறுதியில், அது ஒரு திறனாய்வு செய்யும் உளவியலாக, சிறப்பாக, மனிதனின் உணர்வுநிலை பற்றி நுணுக்கமாக ஆய்வு செய்யும் ஒரு உளவியலாக அது இருக்க வேண்டும்.

மார்க்சிய சிந்தனைக்கு அவை பொருத்தமாக உள்ளன என்ற உண்மையை பெரும்பாலான ஃபிராய்டின்களோ மார்க்சிஸ்டுகளோ உணர்ந்து கொள்ளாத போதிலும் ஃபிராய்டின் உளவியல் ஆய்வுத்தத்துவம் மேற்கண்ட பிரதான விதிகளை நிறைவேற்றுவதாக உள்ளது. இவற்றைத் தொடர்புபடுத்திப் பார்க்கத் தவறிவிட்டதன் காரணம், இரண்டு பக்கத்திலும் வெகு தெளிவாகவே தெரிகின்றது. மார்க்சிஸ்டுகள் தமது பாரம்பரியப்படி தொடர்ந்து உளவியலை அலட்சியம் செய்து வந்தனர். ஃபிராய்டும் அவரது சீடர்களுமோ, இயந்திரத்தனமான பொருள் முதல்வாதத்தின் கட்டுக்குள்ளே தமது கருத்துகளை வளர்த்தெடுத்தனர். இந்தக் கட்டமைப்பு, ஃபிராய்டின் மகத்தான கண்டுபிடிப்புகளை மேலும் முன்னேறச் செய்வதற்குத் தடையாக அமைந்தது. மேலும், வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தோடு பொருத்தமற்றதாக அது இருந்தது.

இதற்கிடையில், புதிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றுள் மிக முக்கியமான ஒன்று மார்க்சின் மனித வாழ்வியலின் புத்தாக்கம் ஆகும். மார்க்சின் தத்துவத்திற்கு, மனிதன் பற்றிய ஒரு உளவியல் தத்துவம் தேவை என்ற உண்மையை பல மார்க்சிய சோசலிசவாதிகள் - சிறப்பாக, சிறிய சோசலிச நாடுகளில் உள்ளவர்களும், மேற்கத்திய நாடுகளில் உள்ளவர்களும், உணரத் தலைப்பட்டுள்ளனர். மேலும் ஒருமுகப்படுத்தப்படுவதற்கும், பக்தி செலுத்துவதற்குமான ஒரு அமைப்புக்கான

இளைஞராக இருந்தபோதும், "மூலதனத்தின்", ஆசிரியராக இருந்தபோதும், மார்க்ஸ் எழுதிய படைப்புகள் உளவியல் கருத்துகள் நிறைந்து காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதத் தேவையை சோசலிசம் திருப்தி செய்யவேண்டும் என்ற உண்மையையும் அவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். மனிதன் யார், மற்றும் அவனது வாழ்வின் பொருள் மற்றும் இலக்கு என்ன என்ற கேள்விகளை அது கையாள வேண்டும் என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். "புரட்சிக்கு பயன் அளிப்பது எதுவும் நல்லது" (தொழிலாளர் அரசு, சரித்திரத்தின் பரிணாம வளர்ச்சி, இன்னபிற) என்று கூறும் வெற்றுச் சொற்றொடர்களைத் தாண்டி அப்பால் செல்லக்கூடிய ஒழுக்கக் கோட்பாடுகள் மற்றும் ஆன்மீக வளர்ச்சி இவற்றுக்கான ஒரு அடித்தளமாக அது இருக்கவேண்டும்.

இதற்கு மாறாக, ஃபிராய்டின் சிந்தனைக்கு அடித்தளமாக உள்ள இயந்திரத்தனமான பொருள்முதல் வாதத்திற்கு எதிராக உளவியல் ஆய்வாளர்கள் கூட்டத்தில் எழுகின்ற விமர்சனமானது உளவியல் ஆய்வின் மறுமதிப்பீட்டிற்குக் காரணமாகியுள்ளது - சிறப்பாக, பாலுணர்ச்சி உந்துதல் தத்துவத்தைப் பொறுத்த அளவில் இது நிகழ்ந்துள்ளது. இவ்வாறு மார்க்சிய, மற்றும் உளவியல் ஆய்வு ஆகிய இரு சிந்தனைகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் காரணமாக மார்க்சிய தத்துவம் மற்றும் சோசலிச நடைமுறைப் பயிற்சி, மேலும் வளர்வதற்கு ஒரு ஆற்றல்மிக்க, நுணுக்கமாக ஆய்வு செய்யக்கூடிய, சமூக ரீதியில் செயல்படக்கூடிய உளவியலின் பயன்பாடு அதிமுக்கியமாகத் தேவைப்படுகிறது என்பதை மனித நலன் நாடும் மார்க்சியவாதிகள் உணர்ந்து கொண்டே ஆக வேண்டிய காலம் வந்து விட்டது. அதாவது, மனிதனை மையம் கொண்டுள்ள ஒரு தத்துவம் மனித உண்மை நிலையுடன் தொடர்பற்றுப் போகாமல் இருக்க வேண்டும் என்றால், உளவியல் இல்லாத ஒரு தத்துவமாக இதற்கு மேலும் அதனால் நிலைத்திருக்க இயலாது என்பதை அவர்கள் உணர வேண்டும். பின்வரும் பக்கங்களில் மனிதவியல் உளவியல் ஆய்வினால் சரி செய்யப்பட்டுள்ள அல்லது சரி செய்யப்பட வேண்டிய சில பிரதான பிரச்சினைகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கு கவனிக்கப் படவேண்டிய முதல் பிரச்சினை "சமூக குணாம்சம்" என்பது பற்றியதாகும். இது ஒரு குழுவிற்கு (உ-ம் : நாடு அல்லது வர்க்கம்) பொதுவாக அமைந்துள்ள குணாம்ச உருவாக்க அமைப்பு ஆகும். அக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணங்கள் மற்றும் செயல்களை இது திறம்பட நிர்ணயிக்கின்றது. இந்தக் கருத்து, ஃபிராய்டின் குணாம்சம் பற்றிய கருத்தின் ஒரு சிறப்பு வளர்ச்சி ஆகும். குணாம்சத்தின் ஆக்க சக்தியுடன் மாறக்கூடிய இயல்பு இதன் முக்கிய அங்கமாக விளங்குகிறது. குணாம்சம் என்பது பல்வேறுபட்ட பாலுணர்ச்சி உந்துதலின் தீவிர முயற்சிகளின் ஓரளவு நிலையான வெளிப்பாடு என்று ஃபிராய்டு கருதினார். அதாவது, சில குறிப்பிட்ட இலக்குகளை நோக்கிச் செல்லும் மனோசக்தியின் உந்துதல்களின் வெளிப்பாடுகள் இவை என்று பொருளாகிறது. வாய், மலத்துவாரம் மற்றும் இனப்பெருக்க உறுப்புகள் பற்றி தனது கருத்துகளின் வாயிலாக, மனித குணாம்சங்களில் ஒரு புதிய வகையை ஃபிராய்டு முன் வைத்தார். தனித்தன்மை வாய்ந்த, உத்வேகமுள்ள உந்துதல்களின் வெளிப்பாடுதான் நடத்தை என்று இது விளக்கியது. உடலின் சிற்றின்பப் பகுதிகளாகிய வாய், மலத்துவாரம், மற்றும் இனப்பெருக்க உறுப்புகள் தொடர்பாக, சிறுபிள்ளைப் பருவத்தின் துவக்கத்தில் ஏற்பட்ட அனுபவங்களின் விளைவே இந்த உந்ததல்களின் போக்கும், தீவிரத் தன்மையுமாக உள்ளன என்று ஃப்ராய்டு கருதினார். பாலுணர்ச்சி உந்துதலின் வளர்ச்சிக்கு, உடலமைப்புக் கூறுகளைத் தவிர, ஒருவரது பெற்றோரின் நடத்தையே முதன்மைப் பொறுப்பு வகிக்கின்றன என்றார் அவர்.

சமூகக் குணாம்சம் பற்றிய கருத்தாக்கம், ஒரு குழுவுக்குப் பொதுவான குணாம்ச அமைப்பை உருவாக்கும் அமைப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறது. உற்பத்தி முறையாலும் அதன் விளைவாக எழும் சமூக மட்டங்களால் உருவாகும் வாழ்க்கை முறையே சமூகக் குணாம்சத்தை உருவாக்குவதற்கு அடித்தளமாக அமைகிறது என்று இக்கருத்து கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட சமூகம் செயல்படுவதற்குப் பயன்படும் வகையில் அந்த சமூகத்தால் வடிவமைக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மனோசக்தி அமைப்பு தான் சமூகக் குணாம்சம். ஒரு சமூகம் தனது நோக்கங்களுக்காக ஒரு தனி மனிதனின் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கும் வகையில் அவன் செயல்பட வேண்டுமென்றால், சராசரி மனிதன் தான் செய்ய வேண்டிய பணியைச் செய்ய அவன் விரும்ப வேண்டும்.

சமூகச் செயல்முறையில் மனித சக்தியின் ஒரு பகுதி மட்டுமே வெறும் உடல் சக்தியாக வெளிப்படுகிறது. உதாரணமாக, வேலையாட்கள் நிலத்தைப் பண்படுத்துவது அல்லது சாலைகளை அமைப்பது. இதன் மற்றொரு பகுதி மிகக் குறிப்பிட்ட மனோ சக்திகளின் வடிவாக வெளிப்படுகிறது. பிற மக்கள் கூட்டங்களைத் தாக்கி, கொள்ளையடித்து வாழ்க்கை நடத்தும் ஒரு புராதன மக்கள் கூட்டத்தின் உறுப்பினர் ஒருவர், ஒரு போராளிக்கான குணாம்சங்களாகிய போர், கொன்றழித்தல் மற்றும் கொள்ளையடித்தல் இவற்றை வேட்கையுடன் விரும்பும் குணாம்சத்தைக் கொண்டிருக்கவேண்டும். விவசாயத்தில் ஈடுபட்டு அமைதியாக வாழும் ஒரு

**மனிதனை மையம் கொண்டுள்ள ஒரு தத்துவம் மனித உண்மை நிலையுடன் தொடர்பற்றுப் போகாமல் இருக்க வேண்டும் என்றால், உளவியல் இல்லாத ஒரு தத்துவமாக இதற்கு மேலும் அதனால் நிலைத்திருக்க இயலாது என்பதை மார்க்சியவாதிகள் உணர வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தினரோ வன்முறையை விலக்கி, கூட்டுறவை நாடும் குணத்தைக் கொண்டிருக்க வேண்டும். தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு அடிபணிந்து போவதுடன் தமது அதிகாரிகளாக உள்ளவர்கள்பால் மரியாதையும், அபிமானமும், அதன் உறுப்பினர்கள் கொண்டிருந்ததால்தான் ஒரு நிலப்பிரபுவத்துவ சமுதாயம் நன்றாகச் செயல்பட முடியும். உழைப்பதில் ஆர்வத்துடன், கட்டுப்பாட்டுடன், காலந்தவறாமல் செயல்படக் கூடியமனிதர்களுடன் தான் முதலாளித்துவ சமுதாயம் சிறப்பாகச் செயல்பட முடியும். இவர்களது பிரதான நோக்கம் பணவரவு; உற்பத்தி மற்றும் பண்டமாற்றின் விளைவாக உருவாகக் கூடிய லாபம்தான் இவர்களது வாழ்வின் முதன்மைக் கோட்பாடு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பணத்தைச் சேமிக்க விரும்பிய மனிதர்கள் முதலாளித்துவத்திற்குத் தேவைப்பட்டனர். இருபதாம் நூற்றாண்டின் நடுவில், பணத்தைச் செலவழிப்பதில் வேட்கை கொண்ட நுகர்வோராக உள்ள நபர்கள் அதற்குத் தேவைப்படுகின்றனர். சமூகச் செயல்முறையில் ஒரு உற்பத்திச் சக்தியாக அதற்குப் பயன்படக்கூடிய வகையில் மனித சக்தி வடிவமைக்கப்படும் உருவே சமுதாயக் குணம் ஆகும்.

மனிதர்களை செயல்படச் செய்யும் சக்தி கொண்ட கருவிகளாகிய அமைப்பு, சமயம், இலக்கியம், பாடல்கள், நகைச்சுவைத் துணுக்குகள், பழக்கவழக்கங்கள், ஆகியவையும், மேலும் இவை அனைத்திற்கும் பிரதானமாக, தமது பிள்ளைகளை வளர்த்தெடுக்கப் பெற்றோர் பயன்படுத்தும் முறைகளும் என, ஒரு சமுதாயத்திற்குக் கிடைக்க கூடிய அனைத்துக் கருவிகளாலும் சமூகக் குணாம்சம் கூடுதலாக வலிமையூட்டப்படுகிறது. இறுதியாகக் கூறப்பட்ட விஷயம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனெனில், தனி நபர்களின் குணாம்ச உருவமைப்பு அவர்களது வாழ்வின் முதல் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் பெருமளவு வடிவமைக்கப்பட்டு விடுகிறது. ஆனால், பெற்றோர்களின் தாக்கம், பிரபல உளவியல் ஆய்வு நிபுணர்கள் நம்புவது போல, தனிப்பட்டதோ அல்லது தற்செயலாக நிகழக்கூடிய ஒன்றே அல்ல. பெற்றோர்கள் அவர்களது சொந்த குணாம்சங்களின் வாயிலாகவும், அவர்களது கற்பிக்கும் முறையின் வாயிலாகவும் அவர்கள் பிரதானமாக சமுதாயத்தின் முகவர்களாக உள்ளனர். வெகு சிறிய அளவிலேயே அவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றனர். மேலும் சமுதாய அளவில் விரும்பப்படுகின்ற வகையிலான சமுதாய குணாம்சங்களை உருவாக்கும் ஒரு அமைப்பை ஏற்படுத்துவதிலான அவர்களது தாக்கத்தைப் பெரும்பாலும் இந்த வேறுபாடுகள் எந்த அளவிலும் குறைப்பதில்லை.

எந்த ஒரு சமுதாயத்திலும் உள்ள வாழ்க்கை முறையினால் சமுதாயக் குணாம்சம் வடிவமைக்கப்படுகிறது என்ற கருத்து உருவாவதற்கான ஒரு நிலை, ஃப்ராய்டின் பாலுணர்வு உந்துதல் கோட்பாட்டின் ஒரு மாற்றியமைக்கப்பட்ட வடிவமாகும். குணாம்சம் பற்றிய அவரது கருத்துக்கு இதுவே அடிப்படையாக உள்ளது. பாலுணர்வு உந்துதல் கோட்பாடானது, பாலுணர்வு உந்துதலை (அதோடு கூட, தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வதற்கான முயற்சியுடன்) ஒரு சக்தி ஆதாரமாகக் கொண்டு "இன்பம் தேடும் கொள்கை"யால் ஆளப்பட்டு வரும் ஒரு எந்திரமாக மனிதனைக் கண்ணுறும் எந்திரத்தனமான கருத்தாக்கத்தில் வேரூன்றி உள்ள ஒன்றாகும். இக்கருத்துக்கு மாறாக, முதற்படியாக ஒரு சமூக உயிருருவாக உள்ள மனிதனின் பல்வேறு முயற்சிகளும் (பொருள்களை) சேமிப்பதற்கானதும், மற்றும் (பிற நபர்களுடன்) சமூக வயப்படுவதற்கானதுமான அவனது தேவையின் விளைவாக உருவாக்கின்றன என்று காட்ட (குறிப்பாக, "தனக்காகவே மனிதன்" என்ற நூலில்) நான் முயன்றுள்ளேன். அதோடு கூட, மனிதனின் தலையாய பேரார்வங்களாக அமையும் சேமிப்பு மற்றும் சமூகவயப்படுதலின் வடிவங்கள், அவன் வாழ்ந்து வரும் சமுதாய அமைப்பைப் பொறுத்து உள்ளன என்பதையும் நான் கட்ட முற்பட்டுள்ளேன். இந்தக் கருத்தின்படி, பொருள்களை மனிதர்கள் மற்றும் இயற்கை - நோக்கியுள்ள ஒரு பேரார்வம் கொண்ட தேடும் முயற்சியினாலும், உலகோடு தன்னைத் தொடர்புபடுத்திக் கொள்ள அவனுக்கு உள்ள தேவையினாலும் தனித்தன்மை பெற்றவனாக மனிதன் பார்க்கப்படுகின்றான்.

மார்க்சியத் தத்துவத்தால் போதுமான அளவு விளக்கப்படாத முக்கியக் கேள்விகளுக்கு, சமூகக் குண நலன் பற்றிய கருத்து பதில் அளிக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் உறுப்பினர்கள், அந்த அமைப்பின் கீழ் துயருற்ற போதிலும், அதனோடு இணைந்திருந்தல் அவர்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய ஒன்று என்று அவர்களது பகுத்தறிவு கூறிய போதிலும், அவர்களைத் தொடர்ந்து அதனோடு ஒன்றுபட்டு இருக்குமாறு செய்வதில் ஏன் இந்தச் சமுதாயம் வெற்றி பெறுகிறது? பல்வேறு இலட்சிய ரீதியான தாக்கங்களாலும், மூளைச் சலவையினாலும் உருவாக்கப்பட்டுள்ள போலியான நலன்களை விடவும் மனிதர்களாக அவர்களுக்கு இருக்கக் கூடிய உண்மையான ஆர்வம் ஏன் அதிக முக்கியத்துவம் பெறுவதில்லை? அவர்களது வர்க்க

மார்க்சியத் தத்துவத்தால் போதுமான அளவு விளக்கப்படாத முக்கியக் கேள்விகளுக்கு, சமூகக் குண நலன் பற்றிய கருத்து பதில் அளிக்கின்றது.

நிலைமை மற்றும் சோசலிசத்தில் சாதகங்கள் பற்றிய உணர்வு நிலை, ஏன் மார்க்ஸ் எதிர்பார்த்த அளவு திறம்பட அமையவில்லை? இந்தக் கேள்விக்கான பதில், சமுதாய குணநலனின் தன்மையில் பொதிந்துள்ளது. தான் செய்ய வேண்டியதை விரும்பும் வகையில், ஒரு சராசரி நபரின் குணநலன் அமைப்பை வடிவமைப்பதில் ஒரு சமுதாயம் வெற்றி பெற்றுவிட்டால், அந்தச் சமுதாயம் அவன் மீது சுமத்தும் நிலைமைகளோடு அவன் திருப்தி அடைந்து விடுகிறான். இப்செனின் பாத்திரப்படைப்பு ஒன்று கூறியபடி, "தன்னால் செய்ய முடிந்ததை மட்டுமே அவன் விரும்புவதால், தான் விரும்பிய எதையும் அவனால் செய்யமுடியும்" எனவே, அடங்கிக் கிடப்பது பற்றி திருப்தி அடைந்துள்ள ஒரு சமூகப் பாத்திரம், ஒரு குறைபாடுள்ள பாத்திரம் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஆனால், குறைபாடு உள்ளதோ அல்லதோ, தான் சரியாகச் செயல்படுவதற்கு அடங்கிப்போகும் மனிதர்களே தேவையாக உள்ள ஒரு சமுதாயத்தின் நோக்கத்தை அது நிறைவேற்றுகிறது.

ஒரு சமுதாயத்தின் பொருளாதார அடிப்படைக்கும், "கொள்கையான மேல் கட்டுமானத்திற்கும்" இடையிலான தொடர்பை விளக்குவதற்கும் சமுதாயக் குணநலன் பற்றிய கருத்தாக்கம் பயன்படுகிறது. கொள்கை ரீதியான தொடர்பை விளக்குவதற்கும் சமுதாயக் குணநலன் பற்றிய கருத்தாக்கம் பயன்படுகிறது. கொள்கை ரீதியான மேல் கட்டுமானம் என்பது பொருளாதார அடிப்படையின் பிரதிபலிப்பேயன்றி வேறு எதுவும் இல்லை என்று மார்க்ஸ் கூறியதாக அடிக்கடி பொருள் படுத்தப்பட்டதுண்டு. இந்த பொருள்படுத்துதல் சரியல்ல. ஆனால் மார்க்சின் தத்துவத்தில், அடித்தளத்திற்கும் மேல் கட்டுமானத்திற்கும் இடையிலான உறவின் இயல்பு போதுமான அளவு விளக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. சமுதாயம், சமுதாய குணநலனை உருவாக்குகிறது என்றும், சமுதாய குணநலன், தனக்குப் பொருத்தமான, ஊட்டமளிக்கக் கூடிய கருத்துக்களையும் இலட்சியங்களையும் உருவாக்கவும் அவற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளவும் செய்கிறது என்பதையும் ஒரு செயலாற்றல் நிறைந்த உளவியல் கோட்பாட்டால் காட்டமுடியும். எனினும், குறிப்பிட்ட கருத்துக்களை உருவாக்கும் ஒரு குறிப்பிட்ட சமுதாய குணநலனை பொருளாதார அடிப்படை மட்டுமே உருவாக்குகிறது என்பதல்ல. கருத்துகள், ஒருமுறை உருவாக்கப்பட்ட பின்னர், சமுதாய குணநலன்களின் மீது பாதிப்பை ஏற்படுத்துகின்றன. சமூகப் பொருளாதார அமைப்பிற்கும், ஒரு சமுதாயத்தில் நிலவிவரும் கருத்துகள் மற்றும் இலட்சியங்களுக்கும் இடையே சமுதாய குணநலன் ஒரு இடைநிலை அம்சமாக உள்ளது என்பதைத் தான் நான் இங்கு வலியுறுத்துகிறேன். இது இரு புறங்களிலும் இடைநிலை அம்சமாக இருந்து வருகிறது. அதாவது பொருளாதார அமைப்பிலிருந்து கருத்துகளுக்கும், கருத்துகளிலிருந்து பொருளாதார அமைப்பிற்கும் இடையே இருந்து வருகிறது. பின்வரும் திட்டம் இந்தக் கருத்தை வெளிப்படுத்துகிறது.

1. சமுதாய குண நலன்

2. கருத்தகளும், இலட்சியங்களும்

3. பொருளாதார அமைப்பு

ஒரு சமுதாயத்தின் தேவைகளுக்கும், நோக்கங்களுக்கும் வேறு எந்தக் கச்சாப் பொருளையும் போல மனித சக்தியையும் சமுதாயம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறது என்பதை சமுதாய குணநலன் என்னும் கருத்தாக்கத்தால் விளக்க முடியும். உண்மையில் இயற்கையின் சக்திகளிலேயே மிகவும் வளைந்து கொடுக்கக் கூடியவன் மனிதன் தான். கிட்டத்தட்ட எந்த நோக்கத்துக்காகவும் அவனை வேலை செய்ய வைக்க முடியும். வெறுத்தொதுக்கவோ அல்லது ஒத்துழைக்கவோ; அடங்கிப் போகவோ அல்லது பொங்கி எழவோ; துன்பத்தையோ அல்லது இன்பத்தையோ ரசித்து அனுபவிக்கவோ, எதை வேண்டுமானாலும் செய்யும்படி அவர்களை ஆக்க முடியும்.

இவையெல்லாம் உண்மையாக இருக்கும் அதே சமயத்தில் தனது மனித சக்திகளை மலரச் செய்வதால் மட்டுமே தனது உயிர் வாழ்தலின் பிரச்சனையை அவர்களால் தீர்த்துக் கொள்ளமுடியும் என்பதும் உண்மையாகும். ஒரு சமுதாயம் மனிதனை எத்துணை அதிகமாக ஊனமுற்றவனாகச் செய்கிறதோ, அத்துணை நோயாளிகளாகின்றான் . உணர்வு ரீதியாக, தமக்கு விதிக்கப்பட்டிருக்கிற விஷயங்கள் பற்றி அவர்கள் திருப்தி கொண்டிருந்த போதிலும், அவர்கள் உணர்வு நிலைக்கு எட்டாத வகையில் அதிருப்தி கொண்டிருக்கிறான். இந்த அதிருப்திதான், தம்மை ஊனப்படுத்தும் சமூக வடிவங்களை மாற்றி அமைக்க காலப்போக்கில் அவர்களைத் தூண்டுகிறது. அவர்களால் இதைச் செய்ய முடியவில்லையெனில், குறிப்பிட்ட விதத்தில் நோய்வாய்ப்பட்டுள்ள அந்தச் சமுதாயம் செத்தழிந்து போகும். பழைய சமுதாய அமைப்புகளுடன் முரண்பட்டுப்போகும் புதிய உற்பத்திச் சக்திகளால் மட்டும் சமுதாய மாற்றமும், புரட்சியும் ஏற்படுவதில்லை. மனிதத் தன்மையற்ற சமுதாய நிலைமைகள் மற்றும் மாற்றமுடியாத மனிதத் தேவைகளுக்கு இடையிலான முரண்பாட்டுக் காரணமாகக் கூட அவை

ஒரு சமுதாயத்தின் பொருளாதார அடிப்படைக்கும், "கொள்கையான மேல் கட்டுமானத்திற்கும்" இடையிலான தொடர்பை விளக்குவதற்கும் சமுதாயக் குணநலன் பற்றிய கருத்தாக்கம் பயன்படுகிறது. கொள்கை ரீதியான தொடர்பை விளக்குவதற்கும் சமுதாயக் குணநலன் பற்றிய கருத்தாக்கம் பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படக்கூடும். மனிதனை கிட்டத்தட்ட என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அதுவும், கிட்டத்தட்டதான்! சுதந்திரத்திற்கான மனிதனின் போராட்டத்தின் சரித்திரம், இந்தக் கோட்பாட்டின் வெகு வலுவான நிருபணம் ஆகும்.

சமுதாய குணநலன் என்ற கருத்து, பொதுவான ஊகங்களுக்கு இடமளிக்கும் ஒரு தத்துவார்த்த கருத்து மட்டுமல்ல. ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது சமுதாய வர்க்கத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு வகையான சமுதாய குணநலன்கள் எவை என்று கண்டறியும் நோக்கத்துடன் கூடிய நடைமுறை ஆய்வுகளுக்கும் அது பயனுள்ளதாகவும், முக்கியமானதாகவும் உள்ளது. "கிராமப்புற உழவன் குணநலன்" என்பது தனித்தன்மை வாய்ந்தது. சேமிக்கும் குணம் கொண்டது, வீம்புடன், கூட்டுறவில் திருப்தி கொள்ளாமல் இருப்பது, நேரம் தவறாமை மற்றும் காலம் பற்றிய உணர்வு இல்லாதது, என்று நாம் வரையறை செய்தால், இந்தகட குணாதிசயத் தொகுப்பு என்பது பல்வேறு குணாதிசயங்களின் கூட்டுத்தொகுதி அல்ல. மாறாக, அதிக சக்தி கொண்டுள்ள ஒரு கூட்டமைப்பு ஆகும். இதை மாற்றுவதற்கு முயற்சிகள் ஏதும் செய்யப்பட்டால், வன்முறையாலோ அல்லது மௌனமான தடைகளாலோ அம்முயற்சிகளை இந்தக் கூட்டமைப்பு தீவிரமாக மறுக்கும். பொருளாதார ரீதியிலான சாதகங்கள் கூட சுலபமாக எந்த விளைவையும் இங்கு ஏற்படுத்த இயலாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கிராமப்புற உழவர் வாழ்வின் குணாதிசயமாக இருந்து வந்துள்ள பொது முறையிலான உற்பத்திமுறை இந்த குணநலனின் அறிகுறித் தொகுதிக்குக் காரணமாகவுள்ளது. இதேபோலத்தான், குறைந்து கொண்டு வரும்அடி - நடுத்தர வர்க்கமும் - இது ஹிட்லரை ஆதிக்கத்துக்குக் கொண்டுவந்ததாக இருக்கலாம். எந்தவித கலாச்சாரத் தூண்டுதலும் இல்லாமல் இருத்தல், தமது நிலைமை பற்றிய வெறுப்புணர்வு, அதாவது, தமது சமுதாயத்தின் முன்னேற்ற அலைகளால் விட்டு விடப்பட்டு பின்தங்கி நிற்கும் நிலை முன்னாட்களில் தமக்குப் பெருமிதம் அளித்த சின்னங்களை அழித்துவிட்டவர்கள் மீதான வெறுப்பு, ஆகியவை இந்த குணநலன் அறிகுறித்தொகுதியை உருவாக்கியுள்ளன. இத்தொகுதியானது. மரணத்தை விதைத்தல் (Necrophilia) இரத்த உறவுகள் மற்றும் மண் இவற்றின் மீதான அதிதீவிரமான, கடும்பகைமையுடன் கூடிய ஈடுபாடு, மற்றும் வெகு அதீத குழு சார்ந்த சுய காதல் ஆகியவற்றால் உருவாகியுள்ளது. மேற்கூறப்பட்ட சுய காதலானது தீவிர தேசப் பற்று மற்றும் இனப்பற்று ஆகியவையாக வெளிப்படுகின்றது. ஒரு உதாரணம்: தொழிற்சாலைப் பணியாளரின் குணநலன் கூட்டமைப்பு, காலந்தவறாமை, ஒழுங்கு, குழுவாகப் பணிபுரியும் திறன் இவற்றைக் கொண்டிருக்கிறது. ஒரு தொழிற்சாலைப் பணியாளர் திறம்படச் செயல்படுவதற்குத் தேவையான குறைந்த பட்ச குணங்களாக இத்தொகுதி உள்ளது. (பிற வேறுபாடுகளாகிய - சார்புத்தன்மை சுதந்திரப்போக்கு, ஆர்வம் - அலட்சியம், செயலூக்கம் - செயலற்ற தன்மை ஆகியன இங்குக் கவனிக்கப்படவில்லை. எனினும் ஒரு பணியாளரின் குணநலன் கூட்டமைப்புக்கு இப்போதும் எதிர்காலத்திலும் இவை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.)

சமுதாய குணநலன் என்ற கருத்து, பொதுவான ஊகங்களுக்கு இடமளிக்கும் ஒரு தத்துவார்த்த கருத்து மட்டுமல்ல. ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது சமுதாய வர்க்கத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு வகையான சமுதாய குணநலன்கள் எவை என்று கண்டறியும் நோக்கத்துடன் கூடிய நடைமுறை ஆய்வுகளுக்கும் அது பயனுள்ளதாகவும், முக்கிமான தாகவும் உள்ளது.

சமுதாய குணநலன் பற்றிய கருத்தின் மிக முக்கியப் பயன்பாடு என்பது மார்க்ஸ் கனவு கண்டபடியான ஒரு சோசலிச சமுதாயத்தின் எதிர்கால சமுதாய குணநலனை பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதலாளித்துவ சமுதாய குணநலனிலிருந்து வேறுபடுத்திக் காண்பதில் உள்ளது. முதலாளித்துவ சமுதாயத்தின் மைய விருப்பம் சொத்துகளையும் செல்வங்களையும் சொந்தம் கொள்வதில் இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் சமுதாய குணநலன் (முதலாளித்துவமோ அல்லது கம்யூனிசமோ) இன்று மிகவும் அதிகமாகத் தொழில் மயமாக்கியுள்ள சமுதாயங்களில் பரவலாகக் காணப்படும் - ஹோமோ கம்ஸுமென்ஸ் - என்பதிலிருந்து முன்கண்டதை வேறுபடுத்திக் காண இது உதவும்.

"நுகர் மனிதன்" "(ஹோமோ கன்ஸுமென்ஸ்)" என்ற மனிதனின் பிரதான இலக்கு பொருள்களை சொந்தம் கொள்வதல்ல, மாறாக மேலும் மேலும் அதிகமான பொருள்களைப் பயன்படுத்துவதும், அதன் மூலமாக தனக்குள் இருக்கின்ற வெற்றிடம், செயலறு நிலை, தனிமை மற்றும் பயம் ஆகியவற்றுக்கு ஈடு செய்வதும் ஆகும். இராட்சத வியாபார மற்றும் தொழில் நிறுவனங்கள், அரசு மற்றும் தொழிலாளர் அமைப்புகள், இவற்றால் தனித்தன்மை பெற்று விளங்கும் ஒரு சமுதாயத்தில், தனது பணிச்சூழலின் மீது எந்தக் கட்டுப்பாடும் கொள்ளவியலாத தனிநபர் சக்தியற்று, தனிமையுடன், சலிப்புற்று, கவலையை உணர்கிறான். அதே நேரத்தில் லாபத்திற்கான பிரம்மாண்டமான நுகர்பொருள் தொழிற்சாலைகள், லாபத்திற்கான தமது தேவையின் காரணமாக, விளம்பரங்களின் வாயிலாக அவனை ஒரு அடக்கமுடியாத வேட்கைகள் கொண்டவனாக மாற்றி விடுகின்றன. எப்போதுமே பாலருந்தும் குழந்தை போல அவன் மேலும் மேலும் அதிகமாக நுகர்வதில் ஈடுபட விழைகிறான். எல்லாப் பொருள்களுமே, சிகரெட்டுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மது, பாலுறவு, திரைப்படங்கள், தொலைக்காட்சி, பயணம், ஏன்? கல்வியும், புத்தகங்களும், சொற்பொழிவுகளும் கூட நுகரப்படக் கூடிய பொருள்களாக அவனுக்கு ஆகிவிடுகின்றன. புதிய செயற்கையான தேவைகள் உருவாக்கப்படுகின்றன. மனிதனின் ரசனைகள், சுய லாப நோக்கத்தோடு கையாளப்படுகின்றன. ["நுகர் மனிதனின்" (ஹோமோ கன்ஸுமென்ஸின்) குணநலன் உச்சகட்ட வடிவங்களை எட்டும்போது, இது ஒரு பிரபல மனநோய் வகையாகி விடுகிறது. மனச்சோர்வு மற்றும் கவலை பயம் இவற்றால் பீடிக்கப்பட்டுள்ள பல மன நோயாளிகளும் அதிகமாக உண்ணுதல், அதிகமாக பொருள்களை வாங்குதல், அல்லது மதுவுக்கு அடிமையாதல் ஆகியவற்றில் மறைமுகமாக தமது மனச் சோர்வு மற்றும் கவலைக்கு மாற்று காண வேண்டி நுழைகின்றனர்.] நுகர்வதற்கான பேராசை, அதீத மட்டங்களை எட்டும்போது"வாய் வழி வாங்கும் குணநலன்" என்று ஃபிராய்டால் அழைக்கப்பட்டது. இன்றைய தொழில்மயமான சமுதாயத்தில் இன்று பரவலாகத் தென்படக் கூடிய ஒரு பிரதான மனோ சக்தியாக இது ஆகத்தலைப்பட்டுள்ளது. மகிழ்வுடன் இருப்பது போன்ற மாயையில் இருந்த போதிலும், உண்மையில் நுகர் மனிதனின் (ஹோமோ கன்ஸுமென்ஸ்) தன் உணர்வின்றியே தனது சலிப்பு மற்றும் செயலற்ற தன்மைகளால் துயருற்றபடியே இருக்கிறான். எந்திரங்களின் மீதான சக்தி அதிகமாக அதிகமாக, ஒரு மனிதன் என்ற முறையில் அவன் சக்தியிழந்து போகிறான். எந்த அளவு அதிகமாக அவன் நுகர்வதில் ஈடுபடுகின்றானோ அந்த அளவு அதிகமாக தொழில் அமைப்பு உருவாக்கி வருகின்ற, பெருகிவரும் தேவைகளுக்கு அடிமையாகிப் போகிறான். சிலிர்ப்பு, கிளர்ச்சி இவற்றை மகிழ்ச்சி, சந்தோஷம் என்று தவறாகப் புரிந்து கொள்கிறான். பொருளாதார வசதிகளை, உயிர்ப்போடு இருத்தல் என்று கருதுகிறான். திருப்தி செய்யப்படும் பேராசையே வாழ்க்கையின் பொருளாகி விடுகிறது. அதற்கென தீவிரமாக முயற்சி செய்தல் ஒரு சமயமாகிப் போகிறது. நுகர்வதற்கான சுதந்திரம், மனித சுதந்திரத்தின் சாரமாகிப் போகிறது.

இந்த நுகரும் ஆர்வ எழுச்சியானது மார்க்ஸ் கனவு கண்ட சோசலிச சமுதாயத்தின் சர்வ எழுச்சிக்கு நேர் எதிர்மறையானது ஆகும். முதலாளித்துவத்தில் உள்ளார்ந்து இருந்த அபாயத்தை அவர் மிகத் தெளிவாகக் கண்ணுற்றார். மனிதனே உயர்வென்று மதிக்கப்படும் ஒரு சமுதாயம் தான் அவரது நோக்கமாக இருந்தது. அவனிடம் இருப்பதோ அல்லது அவன் பயன்படுத்துவதோ உயர்வாக மதிக்கப்படும் ஒரு சமுதாயமல்ல. மனிதனின் பொருள் சார்ந்த பேராசையின் தளைகளிலிருந்து அவனை விடுவிக்கவே அவர் விரும்பினார். அந்தப் பேராசையின் அடிமையாக அவன் கட்டுண்டு கிடக்காமல், அதிலிருந்து விடுபட்டு, முழுமையாக விழிப்புற்று உயிர்ப்புற்று, உணர்வுடன் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். "மிக அதிகமான எண்ணிக்கையிலான பயனுள்ள பொருள்களின் உற்பத்தியில் மிக அதிகமான எண்ணிக்கையிலான பயனற்ற நபர்கள் உருவாகிறார்கள்" என்று அவர் எழுதினார். அதீதமான வறுமை, மனிதன் ஒரு முழுமையான மனிதனாவதைத் தடுக்கிறது என்பதால், அதை ஒழிக்க அவர் விரும்பினார். தனது பேராசையின் கைதியாக ஒருவனை ஆக்கக்கூடிய அதீத செல்வச் செழிப்பையும் அவர் தவிர்க்க விரும்பினார். அவரது இலக்கு அதிகபட்ச நுகர்தலாக இருக்கவில்லை. மாறாக, ஒரு முழுமையான, செழிப்பான, வாழ்வுக்கு வழிவகுக்கும் உண்மையான மனிதத் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதும் வளர்ச்சி வளங்களுக்குப் பெரிதும் துணை நலமானதும் ஆன ஒரு நுகர்தலை எட்டுவதே அவரது இலக்காக இருந்தது.

கம்யூனிஸ்டு நாடுகளின் திட்டமிட்ட பொருளாதாரத்தின் துணையுடன் பொருள்சார்ந்த பேராசையை அவர்களால் கட்டுப்படுத்த இயலும். எனினும், இந்த பொருள்சார்ந்த பேராசை, முதலாளித்துவத்தின் ஆர்வ எழுச்சி இன்று கம்யூனிஸ்டு மற்றும் சோசலிச நாடுகளை வெற்றிகண்டு வருவது சரித்திர ரீதியான முரணான கேலிக் கூத்துகளில் ஒன்றாகும். இந்த வழிமுறைக்கு அதற்கே உரிய வாதப் பொருத்தம் உண்டு. கம்யூனிஸம் வெற்றி கண்டிருந்த வறிய ஐரோப்பிய நாடுகளுக்கு, முதலாளித்துவத்தின் ஐரோப்பிய நாடுகளுக்கு. முதலாளித்துவத்தின் பொருள்சார்ந்த வெற்றி மிகவும் கவர்ச்சியூட்டி ஆட்கொள்வதாக இருந்தது. சோசலிசத்தின் வெற்றி என்பது, முதலாளித்துவத்தின் ஆர்வ எழுச்சியின் வட்டத்துக்குள்ளேயே முதலாளித்துவத்தோடு போட்டியிட்டு வெற்றிபெறுவது என்ற அடையாளம் காணப்பட்டது. எனவே, பொருளாதார உற்பத்தியின் வளர்ச்சி அல்லது, மனிதனின் வளர்ச்சியைத் தனது பிரதான இலக்காகக் கொண்டுள்ள ஒரு சமுதாயமாக உருவாகாமல், வறிய நாடுகளில், முதலாளித்துவத்தை விடவும் வேகமாக தொழில் மயமாக்குதலை சாதிக்கக்கூடிய ஒரு அமைப்பாக மதிப்பிழந்து போகும் அபாயத்தில் சோசலிசம் உள்ளது. மார்க்ஸிய பொருள் முதல் வாதத்தின் ஒரு மோசமான திரிபு ஒன்றை ஏற்றுக்கொண்டதன் வாயிலாக, சோவியத் கம்யூனிசமும் முதலாளித்துவ நாடுகளைப் போலவே மனித நலன் நாடும்

**கம்யூனிஸ்டு நாடுகளின் திட்டமிட்ட பொருளாதாரத்தின் துணையுடன் பொருள் சார்ந்த பேராசையை அவர்களால் கட்டுப்படுத்த இயலும். எனினும், இந்த பொருள்சார்ந்த பேராசை, முதலாளித்துவத்தின் ஆர்வ எழுச்சி இன்று கம்யூனிஸ்டு மற்றும் சோசலிச நாடுகளை வெற்றி கண்டு வருவது சரித்திர ரீதியான முரணான கேலிக் கூத்துகளில் ஒன்றாகும்.**

ஆன்மிகப் பாரம்பரியத்தோடு தொடர்பற்றுப் போனது. இதன் காரணமாக, மேற்கண்ட சோசலிசம் மதிப்பிழந்து போகும் அவலம் மேலும் வேகமாக முன்செல்ல ஏதுவாயிற்று. மனித நலன் நாடும் ஆன்மிகப் பாரம்பரியத்தைப் பிரதிநிதிப் படுத்தியவர்களுள் மார்க்ஸ் தனிச்சிறப்பு வாய்ந்தவராகத் திகழ்ந்தார்.

தமது மக்களின் நியாயமான பொருள்சார்ந்த தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பிரச்சினையை சோசலிச நாடுகள் இன்னமும் தீர்க்கவில்லை என்பது உண்மையே. (அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கூட, மக்கள் தொகையில் நாற்பது சதவிகித்தினர் "வளமான" நிலையில் இல்லை.) ஆனால், வளர்ச்சி வளங்களுக்கு ஏதுவான நுகர்தல் என்ற இலக்கு, வெகு சுலபமாக உச்சகட்ட நுகர்தலுக்கு மாறக்கூடும் என்ற அபாயத்தினைப் பற்றி சமூகப் பொருளாதார நிபுணர்கள், தத்துவவாதிகள் மற்றும் உளவியல் அறிஞர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது மிகவும் அதிமுக்கியமான ஒரு விஷயமாகும். சமூகவியல் கொள்கையாளர்களின் பணி இங்கு மனிதத் தேவைகளின் இயல்பு பற்றி ஆய்தலும் மனிதனை மேலும் உயிர்ப்புடனும், உணர்வுடனும் இருக்கச் செய்யக் கூடிய நிஜமான தேவைகளுக்கும், முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்டு மனிதனை பலமிழக்கச் செய்து, அவனுக்கு மேலும் சலிப்பூட்டி, செயலற்றவனாக்கி, பொரள்களுக்கான பேராசைக்கு அவனை அடிமைப்படுத்துகின்ற செயற்கையான தேவைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டிற்கான கூறுகளைக் கண்டறிதலும் ஆகும்.

தமது மக்களின் நியாயமான பொருள்சார்ந்த தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பிரச்சினையை சோசலிச நாடுகள் இன்னமும் தீர்க்கவில்லை என்பது உண மையே. (அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கூட, மக்கள் தொகையில் நாற்பது சதவிகிதத் தினர் "வளமான" நிலையில் இல்லை.)

இங்கு நான் வலியுறுத்துவது என்னவென்றால் உற்பத்தி என்பது கட்டுப்படுத்தப்படக்கூடாது, ஆனால், ஒரு தனிநபரின் வளத்துக்குத் துணைபோகும் சரியான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், உற்பத்தி சக்திகள் சமுதாய நுகர்தலுக்கான வழிமுறைகளாகிய பள்ளிகள், நூலகங்கள், அரங்கங்கள், பூங்காக்கள், மருத்துவமனைகள், பொது போக்குவரத்துச் சாதனங்கள், என இன்னபிறவற்றுக்காகத் திருப்பிவிடப்பட வேண்டும் என்பதுதான். மிகவும் அதிக அளவில் தொழில்மயமாக்கப்பட்டுள்ள நாடுகளில் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லும் தனிநபர் நுகர்தல் எதைச் சுட்டிக்காட்டுகிறது என்றால், போட்டி, பேராசை மற்றும் பொறாமை ஆகியவை தனிநபர் சொத்தினால் மட்டுமல்லாது, தனிநபர் நுகர்தலினாலும் உருவாக்கப்படுகின்றன என்ற உண்மையைத் தான். ஒரு மனித நலன் நாடும் சோசலிசத்தின் இலக்கு முழு மனிதனின் மிக முழுமையான வளர்ச்சிக்குப் பணி செய்யக் கூடிய ஒரு உற்பத்தி முறையைக் கொண்டுள்ள ஒரு தொழில் மயமான சமுதாயத்தை உருவாக்குவதேயன்றி, நுகர்தமனிதர்களை (ஹோமோ கன்ஸுமென்ஸ்களை) உருவாக்குவது அல்ல என்ற உண்மையை சமூகவியலாளர்கள் மறந்து விடக்கூடாது. அதாவது, சோசலிச சமுதாயம் என்பது மனிதர்கள் வாழவும், வளரவும் சரியாக வகை செய்யும் ஒரு தொழில் மயமான சமுதாயம் என்ற தெளிவைத் தொலைத்து விடக்கூடாது.

சமுதாய குணநலன்களைப் படித்தறிவதை ஏதுவாக்கும் அனுபவ நடைமுறை வழிமுறைகள் உள்ளன. மக்கள் தொகை முழுவதிலும், மற்றும் ஒவ்வொரு வர்க்கத்திலும் இருக்கக்கூடிய பல்வேறு குணநலன் தொகுதிகள், ஒவ்வொரு தொகுதியினுள்ளும் காணப்படும் அம்சங்களின் தீவிரத்தன்மை, மற்றும் வெவ்வேறு சமூகப் பொருளாதார நிலைமைகளால் உருவாக்கப்பட்டுள்ள புதிய அல்லது முரண்பாடான அம்சங்கள் இவற்றைக் கண்டறிவதே இத்தகைய ஆய்வின் இலக்கு ஆகும். இத்தகைய வேறுபாட்டுக் கூறுகள் அனைத்தும், இருக்கக்கூடிய குணநலன் கூட்டமைப்பு, மாற்று வழிமுறைகள் மற்றும் என்ன செயல்பாடுகள் இந்த மாற்றங்களைக் கொண்டு வருகின்றன போன்ற விஷயங்களில் ஒரு நுண்பார்வை ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றன. விவசாயத்திலிருந்து தொழில்மயமாதலுக்கு மாறிக்கொண்டு வரும் நாடுகளிலும், முதலாளித்துவம் அல்லது அரசு முதலாளித்துவத்திலிருந்து - அந்நியமாகிப் போன தொழிலாளி நிலைமைகளிலிருந்து -நிஜமான சோசலிசத்திற்கு மாறிக் கொண்டிருக்கும் பிரச்சினைக்கும் இத்தகைய நுண்பார்வை மிக முக்கியம் என்பதை இங்கே எடுத்துக் கூற அவசியமில்லை. மேலும், இத்தகைய ஆய்வுகள் அரசியல் செயல்பாட்டுக்கு வழிகாட்டிகள் ஆகும். கருத்துச் சேகரிப்புகளின் மூலம் பெறப்படும், மக்களது அரசியல் "கருத்துகள்" மட்டுமே எனக்குத் தெரியும் என்றால், அடுத்துவரும் உடனடியாக எதிர்காலத்தில் அவர்கள் எவ்வாறு செயல்படக்கூடும் என்பதை நான் அறிவேன்.

ஆனால், இனவாதம் போர் அல்லது அமைதி சிந்தனை போன்ற மனோ சக்திகளின் வலிமையைப் பற்றி நான் அறிந்துகொள்ள விரும்பினால் (இவை தற்சமயம் உணர்வு ரீதியாக இன்னமும் வெளிப்படாமல் இருக்கக்கூடும்) இத்தகைய குணநலன் பற்றிய ஆய்வுகள், சமூக செயல்முறைகளில் செயல்பட்டுக் கொண்டுள்ள உள்ளார்ந்த சக்திகளின் வலிமை மற்றும் போக்கு பற்றி எனக்குத் தெரியப்படுத்துகின்றன. இச்சக்திகள் சிலகாலம் சென்ற பின்னரே தம்மை வெளிப்படுத்திக் கொள்ளக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குணநலன் புள்ளி விவரங்களைப் பெறப் பயன்படும் வழிமுறைகளை விவரமாக விவாதிக்க இங்கே இடமில்லை. இவற்றுக்குப் பொதுவாக அமைந்துள்ள ஒரு அம்சம் என்னவென்றால், உள்ளார்ந்த, பெரும்பாலும் தன்னுணர்வற்ற உண்மை நிலையின் வெளிப்பாடுகளுக்கு மாற்றாக இலட்சியக் கொள்கை (நியாயப்படுத்துதல்)களை ஏற்றுக்கொள்ளும் தவற்றினைத் தவிர்த்தல் ஆகும். மிகவும் பயனுள்ளதென்று நிரூபணம் ஆகியுள்ள ஒரு முறை, வரையரையற்ற திறந்த கேள்விகளைக் கொண்ட பேட்டிதான் ஆகும். அதில் உள்ள எல்லையற்ற கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள் அவற்றில், தன்னை அறியாமல், வெளிப்படுத்தும் நோக்கமின்றி பொதிந்துள்ள பொருளைக் கொண்டு அர்த்தப்படுத்திக் கொள்ளப்படலாம். இவ்வாறு, "நீ மிகவும் மதித்துப் போற்றும் சரித்திரத் தலைவர்கள் யாவர்?" என்ற கேள்விக்கு, ஒருவர் "மகா அலெக்ஸாண்டர், நீரோ, மார்க்ஸ் மற்றும் லெனின்" என்று பதிலளித்திருக்கலாம். இங்கு முதலாமவர் சக்தி மற்றும் கண்டிப்பான அதிகாரம் ஆகியவற்றை விரும்புகிறவர் என்றும், இரண்டாமவர் வாழ்விற்கான சேவையில் ஈடுபட்டுள்ளவர்களையும், மனித குலத்திற்கு நன்மை செய்பவர்களையும் மதிக்கிறார் என்றும் ஊகித்து அறியலாம். ஒரு விரிவான, கருத்துக்கு வெளியுருக்கொடுக்கும் கேள்விகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு நபரின் குணநலன் கட்டமைப்பைப் பற்றிய ஒரு நம்பத்தகுந்த வரிவடிவத்தைப் பெற முடியும். விருப்பமான நகைச்சுவைத் துணுக்குகள், பாடலக்ள, கதைகள், மற்றும் கவனிக்கத்தக்க நடத்தைகள் - குறிப்பாக, உளவியல் ஆய்வுக்கு வெகுவாகப் பயன்படும் "சிறிய செயல்கள்" என, வேறுவிதமான ஒருவரது கருத்துக்கு வெளி உருக்கொடுக்கும் சோதனைகள் சரியான விளைவுகளைப் பெற உதவுகின்றன. வழிமுறைச் செயல்பாட்டின்படி, இந்த அனைத்து ஆய்வுகளின் முக்கியமான நோக்கம் உற்பத்தி முறை மற்றும் அதன் விளைவான வகுப்பு அடுக்கமைப்புகள்; இவை உருவாக்கக்கூடிய மிக முக்கியமான குணநலன் அம்சங்களும் அவற்றின் தொகுதிகளும்; மற்றும் இவ்விரு புள்ளிவிவரத் தொகுதிகளுக்கு இடையிலான உறவுகளும் ஆகும். இவ்வாறு அடுக்காக அமைக்கப்பட்டுள்ள மாதிரிகளின் வாயிலாக, ஓர் ஆயிரம் நபர்கள் மட்டுமே ஆய்வின் விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் ஒரு நாடு முழுவதுமோ அல்லது மிகப்பெரிய சமூக வகுப்புகளுமோ கூட படித்தறியப்படலாம்.

ஆய்வு ரீதியான சமூக உளவியலின் மற்றொரு முக்கிய அம்சம் ஃபிராய்டினால் "உணர்வற்றநிலை" என்று அழைக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் ஃபிராய்டு தனி நபர்களின் அடக்கி ஒடுக்கப்பட்ட இயற்கைத் தூண்டல்களைப் பற்றி மட்டுமே அக்கறை காட்டினார். மார்க்சிய சோசலிச உளவியலின் மாணவரோ, இதற்கு மாறாக "சமூக உணர்வற்ற நிலை" பற்றி அதிக கவனம் செலுத்துவார். பெரிய குழுக்களுக்குப் பொதுவாக உள்ள ஒரு உள்ளார்ந்த உண்மை நிலையை அடக்கி ஒடுக்குவது பற்றி இக்கருத்து கூறுகிறது. ஒவ்வொரு சமுதாயமும், தனது உறுப்பினர்களையோ அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பின் உறுப்பினர்களையோ அவர்களுக்குள் உணர்வற்ற நிலையில் உள்ள சில உந்துதல்களை உணர்ந்து கொள்வதைத் தடுக்க தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளவேண்டும். ஏனெனில், அவர்கள் இவற்றை உணர்ந்துகொள்ளும் பட்சத்தில், சமூக ரீதியில் ஆபத்தான எண்ணங்கள் அல்லது செயல்களுக்கு அவை அவர்களை இட்டுச் செல்ல கூடும். எனவே இதற்கான தணிக்கை, அச்சிடப்படும் அல்லது பேசப்படும் வார்த்தைகளின் மட்டத்தில் இல்லாமல், அபாயகரமான விழிப்புணர்வை அடக்கிவைக்கும் மட்டத்திலேயே அதாவது, எண்ணங்கள் உணர்வுநிலையை எட்டுவதைத் தடுக்கும் முறையிலேயே வெகு திறம்பட செய்யப்பட்டு விடுகிறது.

சமூக உணர்வற்ற நிலையின் உள்ளடக்கம் சமூக கட்டமைப்பின் பல்வேறு வடிவங்களைப் பொறுத்து வேறுபடுவது இயல்புதான். இவற்றுள் சிலவற்றைக் குறிப்பிட வேண்டுமானால், இதோ சில, வலியத் தடுக்கும் மனச்சலிப்பு இன்னபிற. இந்த அடக்கி வைக்கப்பட்டுள்ள உந்துதல்கள் தொடர்ந்து அடக்கியே வைக்கப்பட வேண்டும்; பின்னர் அவற்றை மறுத்துக் கூறுகின்ற அல்லது அவற்றுக்கு எதிரானவற்றை வலியுறுத்துகின்ற இலட்சியக்கொள்கைகளால் அவை பதிலுக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். இன்றைய தொழில்மய சமுதாயத்தின் சலிப்புற்ற, கவலையுடன் மகிழ்ச்சியற்றுக் காணப்படும் மனிதன், தான் மகிழ்ச்சியுடனும், கேளிக்கைகள் நிறைந்தும் இருப்பதாக நினைத்துக் கொள்ள அவனுக்குக் கற்பிக்கப்படுகிறது. கருத்து மற்றும் பேச்சு /எழுத்துச் சுதந்திரம் மறுக்கப்படும் பிற சமுதாயங்களில், தற்பொழுது அவனது தலைவர்கள் மட்டுமே அந்தச் சுதந்திரத்தின் பெயரால் பேசிக்கொண்டிருந்தபோதும், தான் கிட்டத்தட்ட மிக முழுமையான ஒரு சுதந்திரத்தை எட்டிவிட்டதாக நினைக்கும்படி அவன் கற்பிக்கப்படுகிறான். சில அமைப்புகளில் வாழ்வதன் மீதான விருப்பம் கட்டுப்படுத்தப்பட்டதற்குப் பதிலாக, சொத்துகளின் மீதான விருப்பம் வளர்க்கப்படுகிறது. மேலும் பிறவற்றில், அந்நியப்படுத்தப்படுதலின் மீதான விழிப்புணர்வு

**உற்பத்தி என்பது கட்டுப்படுத்தப்படக்கூடாது, ஆனால், ஒரு தனிநபரின் வளத்துக்குத் துணைபோகும் சரியான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், உற்பத்தி சக்திகள் சமுதாய நுகர்தலுக்கான வழிமுறைகளாகிய பள்ளிகள், நூலகங்கள், அரங்கங்கள், பூங்காக்கள், என இன்னபிறவற்றுக் காகத் திருப்பி விடப்பட வேண்டும்**

அடக்கி வைக்கப்பட்டு அதற்குப் தபிலாக, "ஒரு சோசலிச சமுதாயத்தில் அந்நியபடுதலே இருக்க முடியாது" என்ற கோஷம் எழுப்பப்படுகிறது.

உணர்வற்ற நிலை என்ற தன்மை பற்றிக் கூறுவதற்கு மற்றொரு வழி, ஹெகல் மற்றும் மார்க்ஸ் இவர்களின் வார்த்தைகளில் பேசுவதாகும். அதாவது, தனது முடிவுகளில் சுதந்திரமாக இருப்பதான ஒரு மாயையை அவன் கொண்டிருக்கும் அதே சமயத்தில், அவனது முதுகுக்குப் பின்னால் வேலைசெய்யும் சக்திகளின் முழுமையைப் பற்றி....... அல்லது ஆதம் ஸ்மித் கூறியபடி, "தனது நோக்கத்தில் ஒரு பகுதியாக இல்லாத ஒரு விளைவை முன்னேறச் செய்வதற்கென, பொருளாதார மனிதன் ஒரு கண்ணுக்குப் புலப்படாத கையால் செலுத்தப்படுகிறான்". ஸ்மித்தைப் பொறுத்தவரை இந்தக் கண்ணுக்குப் புலனாகாத கை நன்மை பயக்கும் ஒன்றாக இருந்தது. ஆனால் மார்க்சுக்கும், ஃபிராய்டுக்கும் இது அபாயகரமான ஒன்றாக இருந்தது. இதனைத் திறனிழக்கச் செய்ய வேண்டுமென்றால் இதை வெளிப்படுத்தியே ஆக வேண்டியிருந்தது. உணர்வுநிலை என்பது ஒரு சமூக நிகழ்வு. மார்க்ஸைப் பொறுத்த அளவில் அது பெரும்பாலும் ஒரு போலியான உணர்வு நிலையாக, அடக்குமுறையின் சக்திகளால் உருவானதாக இருந்தது. உணர்வற்ற நிலையும், உணர்வுநிலையைப் போன்றே, பெரும்பாலான நிஜமான மனித அனுபவங்களை உணர்வற்ற நிலையிலிருந்து உணர்வு நிலைக்கு மேலேறி வர அனுமதிக்காத "சமூக வடிகட்டியால்" நிர்ணயிக்கப்படுகின்ற ஒரு சமூக நிகழ்வு ஆகும். இந்தச் "சமூக வடிகட்டி" பிரதானமாக மொழி, தர்க்கவாதம் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகளைக் கொண்டது. உள்ளார்ந்த நிலையில் தனிமனித அனுபவத்தில் உண்மை என்று உணரப்படுகின்ற, ஆனால் நிஜத்தில் சமுதாயத்தால் உருவாக்கப்பட்டு, அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படும் புனை கதைகளாக உள்ள இலட்சியக் கொள்கைகளால், (நியாயப்படுத்துதல்களால்) இந்தச் சமுதாய வடிகட்டி மூடிப்போடப்பட்டு உள்ளது. உணர்வு நிலை மற்றும் அடக்கு முறையை இவ்வாறு அணுகுவதன் மூலம், "சமூக உயிர்வாழ்தல் உணர்வு நிலையை நிர்ணயிக்கின்றது" என்ற மார்க்சியக் கூற்றின் உண்மையை அனுபவ ரீதியாக நிரூபித்துக் காட்டமுடியும்.

இந்த சிந்தனைகளின் ஒரு தொடர்விளைவாக, கொள்கைப் பிடிவாதம் கொண்டுள்ள ஃபிராய்டு மற்றும் மார்க்சியம் சார்ந்த உளவியல் ஆய்வுகளுக்கிடையே உள்ள மற்றொரு கருத்து ரீதியான வேறுபாடு உருவாகிறது. பாலுணர்வு ரீதியான அடக்கு முறைக்கான மிகவும் திறன் வாய்ந்த காரணம்- இவற்றுள் மிகவும் முக்கியமாக அடக்கப்படுபவை முறை தவறிய பாலுணர்வு ஆசைகள் - விதையறுப்பு பற்றிய அச்சம் என்று ஃபிராய்டு கருதினார். இதற்கு மாறாக, தனிநபராகவும் சமூக ரீதியாகவும், மனிதனின் மகத்தான அச்சம் தனது சக மனிதர்களிடமிருந்து முழுமையாகத் தனிமைப்படுத்தப்படுதல், முழுமையாக வெளியே ஒதுக்கப்படுதல் என்று நான் கருதுகிறேன். மரணம் பற்றிய அச்சம்கூட, இதைவிடக் கொள்வதற்கு எளிதானது. ஒதுக்கப்படுவது என்ற அபாய அச்சுறுத்தலின் வழியாக சமுதாயம் தனது அடக்குமுறைக்கான தேவைகளை வலியுறுத்திச் செயல்படுத்துகிறது. சில குறிப்பிட்ட அனுபவங்களின் இருப்பை நீங்கள் மறுக்கவில்லை என்றால், நீங்கள் இங்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டீர்கள். நீங்கள் எங்குமே ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், மனநிலை பாதிக்கப்படும் அபாயத்திற்கு நீங்கள் உள்ளாகிறீர்கள். (மனநிலை பாதிக்கப்பட்டிருத்தல் என்ற நோயின் அம்சம் வெளியில் உள்ள உலகத்தோடு எந்தவிதத் தொடர்பும் இல்லாதவாறு இருத்தல் என்பது தான்.)

மனிதனின் முதுகுக்குப் பின்னால் இருந்து கொண்டு வேலை செய்வதும், அவனை வழிநடத்துவதும் பொருளாதார சக்திகளும் அவற்றின் அரசியல் பிரதிநிதித்துவங்களும் என்று மார்க்சிஸ்டுகள் வழக்கமாக யூகித்துக் கொண்டுள்ளனர். இது ஒரு வெகு குறுகிய கருத்தாக்கம் என்று உளவியல் ஆய்வுகள் காட்டுகின்றன. சமுதாயம் மனிதர்களால் ஆனது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும், மிகப்பழமையானது துவங்கி மிக முன்னேற்றமானது வரையில் அதீத வேட்கையுடன் கூடிய முயற்சிகளுக்கான உள்ளார்ந்த, இன்னமும் செயல்படாத சக்தி உள்ளது. இந்த மனித செயல்பாட்டுக்கான சாத்தியப்பாடுகள் முழுமையும் ஒவ்வொரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கே உரித்தான பொருளாதார மற்றும் சமூக சக்திகளின் தொகுப்பின் சக்திகள் ஒரு குறிப்பிட்ட சமூக உணர்வற்ற நிலையையும், ஆரோக்கியமான மனவளத்துடன் கூடிய மனித செயல்பாட்டுக்கு அத்தியாவசியமான சில குறிப்பிட்ட மனிதத் தேவைகளுக்கும் (உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட அளவு சுதந்திரம், தூண்டுதல், வாழ்வில் ஆர்வம், மகிழ்ச்சி) அடக்குமுறை அம்சங்களுக்கும் இடையே சில குறிப்பிட்ட முரண்பாடுகளையும் உருவாக்குகின்றன. உண்மையில், நான் முன்பே கூறியபடி, புதிய உற்பத்தி முறைகளால் மட்டும் அல்லாது, மனித இயல்பின் அடக்குமுறைக்கு உட்பட்ட பகுதியிலும் கூட புரட்சிகள் ஏற்படுகின்றன. மேலும், இந்த இரண்டு நிலைமைகளும் ஒன்று சேரும்போது மட்டுமே அவை

மனிதனின் முதுகுக்குப் பின்னால் இருந்து கொண்டு வேலை செய்வதும், அவனை வழி நடத்துவதும் பொருளாதார சக்திகளும் அவற்றின் அரசியல் பிரதிநிதித்துவங்களும் என்று மார்க்சிஸ்டுகள் வழக்கமாக யூகித்துக் கொண்டுள்ளனர். இது ஒரு வெகு குறுகிய கருத்தாக்கம் என்று உளவியல் ஆய்வுகள் காட்டுகின்றன.

வெற்றியடைகின்றன. அடக்குமுறையானது, அதுதனிநபர் சார்ந்தாயினும், அல்லது சமூக ரீதியாகக் கட்டுப்படுத்துவதாயினும், மனிதனை விகாரப்படுத்துகிறது, துண்டுபடுத்துகிறது. அவனது முழு மனிதத்தையும் பெறவிடாமல் அவனை இழப்புக்கு ஆளாக்குகிறது. உணர்வு நிலை என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற "சமூக மனிதனை" பிரதிநிதிப்படுத்துகிறது. உணர்வற்ற நிலையோ, நம்முள் உள்ள பிரபஞ்சம் தழுவிய மனிதனை, நல்லதும் அல்லதுமாகிய, முழுமையான மனிதனை பிரதிநிதிப்படுத்துகிறது. டெரன்ஸ் கூறியதாகிய "மனிதன் அல்லாத எதுவும் எனக்கு அன்னியமானது என்று நான் நம்புகிறேன்" என்ற வாசகத்தை அந்த முழுமையான மனிதன் நியாயப்படுத்துகின்றான். (மார்க்ஸுக்கு மிகவும் பிடித்தமான வாசகம் இதுவாக இருந்தது)

மார்க்சிய தத்துவத்தில் ஒரு மைய அங்கம் வகிக்கின்ற ஒரு பிரச்சனைக்கு ஆழமான உளவியலும் ஒரு பங்களிப்பு அளிக்கிறது. இதற்கான ஒரு திருப்தியளிக்கும் தீர்வை மார்க்ஸ் கண்டறியவே இல்லை. இந்தப் பிரச்சனை, மனிதனின்சாரம் மற்றும் இயல்பு பற்றியதாகும். ஒரு புறம், "மனிதனின் சாரம்" போன்ற இயற்பியல் கடந்த, சரித்திர ரீதியில் அல்லாத ஒரு கருத்தைப்பயன்படுத்த விரும்பவில்லை - குறிப்பாக 1844-ம் ஆண்டுக்குப் பின்னர், அவர் இதைச் செய்ய விரும்பவில்லை.

மேற்சொன்ன கருத்து, பல்லாயிரம் ஆண்டுகளாக, பல ஆட்சியாளர்களாலும், தாம் ஒவ்வொருவரும் "மாற்ற இயலாத மனித இயல்பு" என்று அறிவித்தவற்றுக்கு ஏற்ப தமது விதிமுறைகளும் சட்டங்களும் இருந்தன என்பதை நிரூபிக்கப்பயன்படுத்தி வந்துள்ளதாகும். மற்றொரு புறம், ஒவ்வொரு கலாசாரமும் தனது பாடத்தை எழுதுகின்ற ஒரு வெள்ளைத்தாளாக மனிதன் பிறக்கிறான் என்ற தொடர்புவழி கண்ணோட்டத்தை மார்க்ஸ் எதிர்த்தார். இது உண்மையாயிருப்பின், ஒரு குறிப்பிட்ட சமுதாயம் உறுப்பினர்களை வலுக்கட்டாயமாகத் தள்ளுகின்ற வாழ்க்கை முறைகளுக்கு எதிராக மனிதன் எவ்வாறு கிளர்ச்சி செய்ய முடியும்.

ஊனமுறச் செய்யப்படக்கூடிய ஒரு மிகச்சரியான மனித இயல்பின் மாதிரி பற்றிய கருத்தை மார்க்ஸ் கொண்டிருக்கவில்லையென்றால் "ஊனமுற்ற மனிதன்" என்ற கருத்தை அவர் எவ்வாறு (மூலதனத்தில்) பயன்படுத்தியிருக்க முடியும"? உளவியல் ஆய்வின் அடிப்படையிலான ஒரு கேள்வி, "மனிதனின் சாரம்" என்று எதுவுமே கிடையாது என்ற ஊகத்தில் அடங்கியுள்ளது. அதாவது, சரித்திரம் முழுமைக்கும் மாறாமல் ஒரேமாதிரி இருக்கக்கூடிய "பொருள்" என்ற அர்த்தத்தில் எதுவுமிருக்க முடியாது. இதற்கான பதில், எனது கருத்துப்படி, கீழ்க்கண்ட உண்மையில் உள்ளது - அதாவது மனிதன் இயற்கையிலே இருப்பதற்கும் அவனது விருப்பமின்றியே உலகத்துள் தூக்கியெறியப்பட்டு, ஒரு விபத்துபோல தற்செயலாக ஏதோ ஓர் இடத்திலும் காலத்திலும் தூக்கி எறியப்பட்டு அதே சமயத்தில் அவனிடம் உள்ளுணர்வுக்கான கருவிகள் இல்லாததாலும், தன்னைப் பற்றியும், பிறரைப் பற்றியும், கடந்த காலத்தைப் பற்றியும் நிகழ்காலத்தைப் பற்றியும் அவனிடம் உள்ள விழிப்புணர்வினாலும் இயற்கையைத் தாண்டி அப்பால் செல்லுவதற்கும் இடையே உள்ள முரண்பாட்டில்தான் மனிதனின் சாரம் அடங்கியுள்ளது.

இவ்வாறு இயற்கையின் ஒரு வினோதப் பிறவியாகிய மனிதன், ஒரு புதிய வகையிலான ஒற்றுமையை கண்டுகொள்வதன் மூலம் தனது முரண்பாட்டுக்குத் தீர்வு கண்டால் ஒழிய, தாங்கமுடியாத அளவு தனிமையை அவன் உணர்வான். மனிதனின் உயிர் வாழ்தலில் உள்ள அடிப்படை முரண்பாட்டில்தான் மனிதனின் சாரம் அடங்கியுள்ளது. இவ்வாறு இயற்கையின் ஒரு வினோதப் பிறவியாகிய மனிதன், ஒரு புதிய வகையிலான ஒற்றுமையை கண்டுகொள்வதன் மூலம் தனது முரண்பாட்டுக்குத் தீர்வு கண்டால் ஒழிய, தாங்கமுடியாத அளவு தனிமையை அவன் உணர்வான். மனிதனின் உயிர் வாழ்தலில் உள்ள அடிப்படை முரண்பாடு இந்த முரண்பாட்டிற்கான தீர்வைத் தேடும்படி அவனை உந்தித்தள்ளுகிறது. அவன் பிறக்கும் தருணத்தில் வாழ்க்கை அவனைக் கேட்கும் கேள்விக்கு பதிலைத் தேடும்படி தூண்டுகிறது. ஒற்றுமையைக் கண்டறிவது எவ்வாறு என்ற கேள்விக்கு நிச்சயப்படுத்திக்கொள்ளக் கூடிய ஆனால் ஒரு வரையறைக்குட்பட்ட பதில்கள் பல உண்டு. மனிதனுக்கே உரிய (பகுத்தறிவு அன்பு) ஆகியவற்றை விடுவதன் மூலம் விலங்கு நிலைக்கு மீண்டும் பின்னோக்கிச் செல்வதன் வாயிலாக, ஒரு அடிமையாகவோ அல்லது அடிமைப்படுத்துபவனாகவோ இருப்பதன் மூலம், தன்னை ஒரு பொருளாக மாற்றிக்கொள்வதன் மூலம் அல்லது தனது சகமனிதர்களுடனும், இயற்கையுடனும் ஒரு புதிய ஒற்றுமையைக் கண்டுகொள்ளும் வகையில் தன்னிடமுள்ள தனிச் சிறப்பான மனித சக்திகளை வளர்த்துக் கொண்டு ஒரு சுதந்திரமான மனிதனாவதன் மூலம் மனிதன் ஒற்றுமையைக் கண்டறியலாம். தளைகளிலிருந்து சுதந்திரம் பெறுவதோடு மட்டுமின்றி தன்னிடம் அடங்கியுள்ள ஆற்றல்கள் அனைத்தையும்

மார்க்சிய தத்துவத்தில் ஒரு மைய அங்கம் வகிக்கின்ற ஒரு பிரச்சனைக்கு ஆழமான உளவியலும் ஒரு பங்களிப்பு அளிக்கிறது. இதற்கான ஒரு திருப்தியளிக்கும் தீர்வை மார்க்ஸ் கண்டறியவே இல்லை. இந்தப் பிரச்சனை, மனிதனின்சாரம் மற்றும் இயல்பு பற்றியதாகும்.

வளர்த்தெடுப்பதைத் தனது வாழ்வின் இலக்காக ஆக்கிக்கொள்ளவும் சுதந்திரம் பெறலாம். இந்த மனிதனின் உயிர் வாழ்தலே அவனது சொந்த உருவாக்கும் முயற்சியின் விளைவாக இருக்கும். மனிதனிடம் முன்னேற்றத்துக்கென உள்ளார்ந்த தீவிர முயற்சி ஏதும் இல்லை. ஆனால் முன்னேற்றத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் மீண்டும் மீண்டும் எழுகின்ற பிரச்சனையாகிய, தனது உயிர் வாழ்தலின் முரண்பாடு - அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மனிதனின் வேறுபட்ட மற்றும் முரண்பட்டுத் தோன்றும் சாத்தியப்பாடுகள் - அவனது சாராம்சத்தை உருவாக்குகின்றன.

சுருக்கமாகக் கூறுவதானால், மார்க்சிய சிந்தனையினுள் இயக்கவியல் ரீதியிலானதும், மனிதநலன் நாடுவதுமான உளவியல் ஆய்வை ஒரு முக்கியக் கண்ணோட்டமாகப் புகுத்துமாறு இக்கட்டுரை கோருகிறது. மார்க்சியத்திற்கு இத்தகைய உளவியல் தேவை எனவும், உண்மையான மார்க்ஸிய தத்துவத்தை உளவியல் ஆய்வு உள்ளடக்கிக்கொள்ள வேண்டும் என்றும் நான் கருதுகிறேன். இத்தகைய ஒரு ஒருங்கிணைதல் இரு துறைகளையும் வளம் பெறச் செய்யும்.

*தமிழில் : ஜார்ஜினா பீட்டர்*
*(நன்றி : "நேர்" யூலை - செப்2002)*

*மார்க்சியக் கருத்துக்கள் மனவெழுச்சிகளின் உருவாக்கத்தையும், வளர்ச்சியையும் விளக்குவதற்குப்பெரிதும் துணை புரிகின்றன. சமூகத் தளத்தில் ஒருவரால் அனுபவிக்கப்படும் நேர்த்தாக்கங்களும் எதிர்த்தாக்கங்களும், மனவெழுச்சிகளின் உருவாக்கத்துக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படைகளாகின்றன. முரண்பாடுகள் பலமடையும் பொழுது எண்ணளவு மாற்றம் திடீர் விசையுடன் பண்பளவு மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. என இயங்கியல் விளக்கும். இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட மனவெழுச்சி இயங்கியல் (Emotional actical) என்ற கோட்பாடு மனவெழுச்சி தொடர்பான ஆய்வுகளுக்கு புத்துயிர்ப்பு வழங்கியுள்ளது. இவ்வாறாக மார்க்சிய அறிகையை உளவியலுக்குப் பிரயோகிக்கும் பொழுது, புதிய புலக்காட்சிகள் மேலெழுகின்றன.*

*உளப்பகுப்பு வாதம், நடத்தை வாதம், அறிகைவாதம், மானிட வாதம் முதலாம் உளவியற் சிந்தனா கூடங்கள், மார்க்சிய நவமார்க்சிய வாதிகளின்தீவிர திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாதங்கள் படித்த மத்திய தரவகுப்பினரிடம் பிரபல்யம் பெற்றமைக்குரிய காரணங்களையும் மார்க்சியவாதிகள் ஆராய முற்பட்டனர்.*

*சமயம், தத்துவம், அரசியல் முதலியவற்றுக்குப் பிரதியீடாக நகர்ப்புற மத்தியதரவகுப்பினரிடத்து மார்க்சியம் அல்லாத உளவியற் சிந்தனைகள் பிரபல்யம் பெறலாயின. மனித அவலங்களை ஏற்படுத்தும் சமூகத்தளத்தின் மீதான கவனத்தைச் செலுத்தாது திசை திருப்புவதற்கும் மார்க்சியம் அல்லாத உளவியற் சிந்தனைகள் துணை நின்றன. உளவியல் வாண்மை அனுசரணையோடு* (Proferssional help) *மனச் சுகம் எட்டப்பட முடியும் என்ற மாயைத்தோற்றங்களும் உருவாக்கப்பட்டன.*

*புதிய பொருளாதார நெருக்கு வாரங்களின் விசைகளை இனங்காண முயற்சிக்காது "மனிதரை ஒழுங்கமைத்தல்"* (Organisation of man ) *என்ற நிலைப்பாட்டை மார்க்சியம் அல்லாத ஏனைய உளவியற் சிந்தனைகள் முன்னெடுத்தன.*

*மார்க்சிய உளவியல் தனித்துப் பொருளாதாரத் தோற்றப்பாடுகளுடன் மட்டும் இணைந்தது அன்று என்பதை கேபேர்ட் மார்க்கோஸ்* (Herbert marcus) *பேர்ன்பெல்ட்* (Bernfeld) *வில்கெம் றிச்* (Withelm Reich)*போன்ற சிந்தனையாளர்கள் சுட்டிக் காட்டினர். மார்க்சிய உளவியலில் வலியுறுத்தப்படும் ஒரு பிரதான கருத்து சார்பு நிலை உந்தல;* (Relative drive) *பற்றியதாகும். ஒரு குறிப்பிட்ட சமூக இயல்பு, உற்பத்தி இயல்பு, தொடர்பாடல் இயல்பு, முதலியவற்றை அடியொற்றியே சார்பு நிலையான உந்தல்கள் எழுகின்றன. நிலைத்த உந்தல்கள் மிருகவியல்புகளோடு இணைந்தவை. சார்பு நிலையான உந்தல்கள் சமூகப் பண்பு கொண்டவை.*

***கலாநிதி சபா.ஜெயராசா, அகவிழி, பெப் 2006***

**இயற்கையின் ஒரு வினோதப் பிறவியாகிய மனிதன், ஒரு புதிய வகையிலான ஒற்றுமையை கண்டு கொள்வதன் மூலம் தனது முரண்பாட்டுக்குத் தீர்வு கண்டால் ஒழிய, தாங்க முடியாத அளவு தனிமையை அவன் உணர்வான். மனிதனின் உயிர் வாழ்தலில் உள்ள அடிப்படை முரண்பாட்டில் தான் மனிதனின் சாரம் அடங்கியுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய தளங்கள் - மாற்றுப் பார்வை

## பேராசிரியர் சோ.சந்திரசேகரன்

அண்மைக் காலங்களில், உலகமயமாக்கப்பட்டுள்ள உலகளாவிய சூழலில் வர்த்தக அபிவிருத்தியில் இலத்திரனியலின் நன்மைகள் பற்றி விரிவாகப் பேசப்படுகின்றது. உலகின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்குத் தகவல் தொழில் நுட்பம் எவ்வாறு உதவ முடியும் என்பது பற்றி ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. சர்வதேச கணினி வலைப் பின்னல்களைப் பயன்படுத்துவதால் வறுமையைக் குறைக்க முடியும்; செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையில் உள்ள ஏற்ற தாழ்வுகளைக் குறைக்க முடியும் எனச் செல்வந்த நாடுகளின் தொலைத் தொடர்புக் கம்பெனிகள் பிரசாரம் செய்கின்றன. உலகவங்கி, யுனெஸ்கோ, யுஎஸ்எய்ட் (USAID) போன்ற நிறுவனங்களின் உதவியுடன் இக்கம்பெனிகள் மூன்றாம் உலக நாடுகள் தகவல் தொழில் நுட்பத்தில் பாரிய முதலீடுகள் செய்யவேண்டும். என வலியுறுத்துகின்றன. இக்கம்பெனிகள் தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குவதால் பெரிய இலாபத்தைப் பெறலாம் என எதிர்பார்க்கின்றன. இவ்விடத்து கணினி வலையமைப்புகளைப் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றி அதிகம் ஆராயப்படுவதில்லை.

ஒரு காலத்தில் உலகளாவிய வறுமையைப் (பட்டினியை) போக்க பசுமைப் புரட்சியே வழி என்று கூறப்பட்டது. ஆனால் பெரிய அளவில் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டமையால் வறியவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேர்ந்தது என்பது வரலாறு.

2000மாம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இணையத் தளங்களை நாடியோர் தொகை 72 மில்லியன்களாகும். இத்தொகை ஒவ்வொரு ஆண்டும் இரட்டிப்பாகிக் கொண்டு வந்து தற்போது நாடுவோர் தொகை அதிகரிப்பு வீதம் குறைந்து வருவதாகத் தெரிகின்றது. இணையத் தளத்தை நாடுவோரில் 3 சதவீதமானவர்கள் மட்டுமே மூன்றாம் உலகத்தைச் சாந்தவர்கள் 72 சதவீதமானவர்கள் அமெரிக்கர்கள்; 85 சதவீதமானவர்கள் 7 செல்வந்த (G7) நாடுகளைச் சேர்ந்தவர்கள்; உலக மக்கள் தொகையின் 10 சதவீதமானவர்களே இந்த G7 நாடுகளில் வாழுகின்றனர். உலக மக்கள் தொகையில் 40 சதவீதமானவர்கள் வாழும் சீனா, இந்தியா, நைஜீரியா, பிரேசில் முதலிய நாடுகளின் இணையதளப் பயன்பாடு 0.75% மட்டுமேயாகும்.

பல உலகநாடுகளில் இணையத்தளத் தொடர்புகள் மிகச் சிலவாகவே உள்ளன. இணையத் தளப்படத்தில் பல ஆசிய, ஆபிரிக்கப் பிரதேசங்கள் வெறுமையாகவே உள்ளன. 2000மாம் ஆண்டின் ஆரம்பத்தில் 100 மில்லியன் மக்கள் வாழும் நைஜீரியாவில் 77 இணையதளத் தொடர்புகளே காணப்பட்டன. வளர்முகநாடுகளில் தலைநகரங்களிலேயே இவை அதிகம். வெளியிடங்களில் மின் அஞ்சல் வசதிகள் மட்டுமே உண்டு. ஆபிரிக்காவில் தென் ஆபிரிக்காவையும் செனகல் நாட்டையும் தவிர்த்து நோக்கினால், கிராமப் புறங்களில் நேரடி இணையத்தளத் தொடர்பு கிடையாது. 780 மில்லியன் மக்கள் வாழும் ஆபிரிக்காக் கண்டத்தில் (உலக மக்கள் தொகையில் 13%) உள்ளவர்கள் மொத்த உலக இணையப் பயன்பாட்டில் 0.3 வீதமானவர்களாகவே உள்ளனர் இலத்தீன் அமெரிக்காவின் பயன்பாடு 1.4% மட்டுமே.

2000மாம் ஆண்டு மார்ச் மாதமளவில் உலகில் 275 மில்லியன் மக்கள் (உலக மக்கள் தொகையின் 4.8%) இணைய தளத்தைப் பயன்படுத்தினர். அமெரிக்கர்களில் 40 சதவீதமானவர்களும் ஜெர்மன் மக்களில் 15 சதவீதமானவர்களும் சீனர்களில் 1000க்கு 7 மேல் மட்டுமே இணையத் தளத்தை நாடியிருந்தனர். ஆபிரிக்காவில் வாழும் 73 கோடி மக்களில் 03.% மட்டுமே இவ்வசதியைப் பெற்றிருந்தனர். இவர்களில்

ஒரு காலத்தில் உலகளாவிய வறுமையைப் (பட்டினியை) போக்க பசுமைப் புரட்சியே வழி என்று கூறப்பட்டது. ஆனால் பெரிய அளவில் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டமையால் வறியவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேர்ந்தது என்பது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 இலட்சம் பேர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர்கள். பல ஆபிரிக்க நாடுகளில் 10000 பேருக்கு ஒருவரே இணையதள வசதிகளைக் கொண்டிருந்தார். இலங்கையில் இணைய தள வசதியைக் கொண்டிருந்தவர்கள் 61532 பேர் (2001)

பொதுவாக தொலைபேசித் தொடர்பு, கணினி, மின்சாரம் என்பன இன்றி இணையதளங்கள் உருவாக முடியாது. உலகில் உள்ள மக்கள் தொகையில் 35 சதவீதமானவர்கள் மின்சார வசதியற்றவர்கள். கிராமப்புறங்களில் வாழும் ஆபிரிக்கர்களில் 30 சதவீதமானவர்கள் மின்சார வசதியற்றவர்கள் இந்தியத்துணைக்கண்டத்தின் 50 சதவீத கிராமக்குடும்பங்களுக்கும் இதே நிலைதான் பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் உள்ள கிராமங்களில் 15 சதவீதமான வீடுகளுக்கே இவ்வசதியுண்டு.

மிகப் பிரதானமான உலகமக்களில் 80 சதவீதமானவர்கள் தொலைபேசி வசதியற்றவர்கள்; 49 நாடுகளில் 100 பேரில் ஒருவருக்கே பிரதான (Mainline) தொலைபேசித் தொடர்பு உண்டு. இவற்றில் 35 நாடுகள் ஆபிரிக்காவில் உள்ளன. உலகின் இருபது சதவீத மக்களைக் கொண்ட பத்து செல்வந்த நாடுகளில், உலகளாவிய தொலைபேசிகளில் 35% காணப்படுகின்றன. இச்செல்வந்த நாடுகளில் 100 பேரில் 54 பேருக்கும் வளர்முக நாடுகளில் 5.2 பேருக்கும் பிரதான தொலைபேசித் தொடர்புகள் உண்டு. 1000 பேரில் ஜப்பானில் 489 பேருக்கும் ஐக்கிய அமெரிக்காவில் 640 பேருக்கும் ஜேர்மனியில் 538 பேருக்கும் இந்தியாவில் 15 பேருக்கும் நைஜீரியாவில் 4 பேருக்கும் சீனாவில் 45 பேருக்கும் தொலைபேசி வசதிகள் (Mainline) உண்டு (இலங்கையில் 37.9 பேருக்கு - சகல தொலைபேசிகளையும் சேர்த்துப் பார்த்தால் 80 பேருக்கு - 2001)

வளர்முக நாடுகளில் தொலைபேசி வசதிகள் நகர்ப்புறங்களிலேயே அதிகம். ஆபிரிக்காவில் 50 சதவீதமான தொலைபேசிகள் தலைநகரங்களிலேயே காணப்படுகின்றன. ஆனால் 60-76 சதவீதமான மக்கள் அங்கு கிராமப்புறங்களிலேயே வாழுகின்றார்கள்.

**பல உலக நாடுகளில் இணையத்தளத் தொடர்புகள் மிகச் சிலவாகவே உள்ளன. இணையத் தளப்படத்தில் பல ஆசிய, ஆபிரிக்கப் பிரதேசங்கள் வெறுமையாகவே உள்ளன. 2000மாம் ஆண்டின் ஆரம்பத்தில் 100 மில்லியன் மக்கள் வாழும் நைஜீரியாவில் 77 இணையதளத் தொடர்புகளே காணப்பட்டன.**

சர்வதேச மதிப்பீடுகளின்படி உலகில் உள்ள சகல கணினிகளில் 28.3 சதவீதமானவை (161 மில்லியன் கணினிகள்) ஐக்கிய அமெரிக்காவில் காணப்படுகின்றன் ஐரோப்பாவில் 26.7 % மான கணினிகளும் இந்தியாவில் 1.08% மான கணிணிகளும் காணப்படுகின்றன (2000).

இணையதள வசதிக்கான மாதாந்தச் செலவு, வளர்முகநாடுகளைப் பொறத்தவரையில் மிக அதிகமானது; ஆபிரிக்காவில் 58 டொலர், இந்தியாவில் 35 டொலர், பெருநாட்டில் 18 டொலர் என இச்செலவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுக்கான செலவுகள் வளர்முகநாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்குமிடையே அதிக அளவில் வேறுபடுவதில்லை.

கணினிகளின் விலைகளும் அவ்வாறே அதிகமானவை. சராசரி அமெரிக்கர் தனது ஒரு மாதச் சம்பளத்தையும் வங்காள தேசப் பிரஜை தனது எட்டாண்டு வருமானத்தையும் செலவழித்தேஒரு கணிணியை வாங்கும் நிலை காணப்பட்டது. தொலைத் தொடர்பு வசதிகள் எதிர்காலத்தில் வசதிமிக்க நகர்ப்புறங்களிலேயே பெருவளர்ச்சி பெறமுடியும் என்றும் கிராமப்புற ஏழை மக்களுக்கு இவ்வசதிகள் கிட்டாது என்ற அச்சம் இன்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான பல மட்டுப்பாடுகள் இருந்த போதிலும் வளர்முக நாடுகள் "புதிய தொழில் நுட்பம்" பல்வேறு நன்மைகளைத்தரும் என எதிர்பார்க்கின்றனர்

- தகவல் தொழில் நட்பத்துறையில் ஏராளமான தொழில் வாய்ப்புகள் உருவாகும் தொழில் வாய்ப்புகள் பற்றிய தகவல்கள், புள்ளி விபரங்கள் என்பவற்றை மேலும் சிறப்பாகப் பெற முடியும்
- சுகாதாரம் : சுகாதாரத் தகவல் அமைப்புகளை நிறுவுதல், தொலை சிகிச்சை முறையைப் பயன்படுத்தல், சுகாதாரத்துறைச் செலவுகளைக் குறைத்தல் என்பன்
- கல்வியும் ஆராய்ச்சியும் : தொலைமுறைக் கல்வி (Tele Learning), உலகளாவிய, பிராந்திய ரீதியில் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தல்.
- கலாசாரம்: இணையத்தில் கலாசார, வரலாற்று அரும்பொருட்சாலைகளை அமைத்தல், CD யில் வரலாற்று ஆவணங்களைப் பாதுகாத்தல்.
- உல்லாசப் பயணம் : சர்வதேச உல்லாசப் பயணத்தை வலுப்படுத்தல், விளம்பரச் செலவுகளைக் குறைத்தல்.
- பால் நிலையும் அபிவிருத்தியும் : பால்நிலை சமத்துவம் பற்றிப் பிரசாரம் செய்தல், பெண்களின் உரிமைகளை மேம்படுத்தல்.
- இன்றைய அழிவுகள் : இவற்றை முகாமை செய்தல், அழிவுகள் பற்றிய தகவல் அமைப்பை உருவாக்குதல், எச்சரிக்கை வழிமுறைகளை ஏற்படுத்தல், அவசரகாலங்களில் தொடர்பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ.சந்திரசேகரன்

இது ஆபிரிக்க நாடுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு பட்டியலாகும். சமூக, பொருளாதாரக் குறைபாடுகளைத் தொழில்நுட்ப ரீதியாகத் தீர்க்கும் முயற்சியே இதுவாகும். வறுமை, ஊழல், குற்றம், நியாயத்தன்மை தொடர்பான பிரச்சினைகள் இங்கு சுட்டிக்காட்டப்படவில்லை ஏனெனில் அவை தொழில் நுட்பப் பிரச்சினைகள் அல்ல.

## வளர்முக நாடுகளில் இணையத்தின் பயன்பாடு

மனித உரிமை மீறலுக்கு எதிராகப் போராடுபவர்களுக்கு இணையம் பல வாய்ப்புகளை வழங்குகின்றது. அவர்கள் இவ்விடயம் பற்றித் தகவல்களை உடனுக்குடன் உலகெங்கும் அனுப்ப முடிகின்றது. 1989ல் பீக்கிங்கில் இடம் பெற்ற படுகொலைகள் பற்றி உலகுக்கு அறிவிக்க முதன் முதலாக இணையம் பயன்படுத்தப்பட்டது. சகல மனித உரிமை இயக்கங்களும் இணைய தள வசதிகளைக் கொண்டுள்ளதால் தகவல்கள் உடனடியாகப் பரிமாறப்படுகின்றன.

## மூன்றாம் உலகில் புதிய தொழில் வாய்ப்புகள்

தொழில் வாய்ப்புக்கள் சர்வதேச ரீதியாக விநியோகம் செய்யப்பட துரித வேக வலையமைப்புகள் காரணமாக உள்ளன. தூரம் என்ற விடயம் இன்று வலுவிழந்து விட்டது. வளர்முக நாடுகளின் தகவல் தொழில்நுட்ப மனிதவலு மேலை நாடுகளால் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. தகவல் தொழில் நுட்ப வேலைகளை வெளியாட்களைக் கொண்டு செய்து முடித்தல் (Outsourcing) இன்று பெரிய அளவில் நடைபெறுகின்றது. மேலைநாடுகள் மூன்றாம் உலக ஊழியர்களைக் குறைந்த சம்பளத்தில் வேலைக்கமர்த்தி வருகின்றன. வளர்முக நாடுகளில் 100 கோடி ஊழியர்கள் ஒரு நாளைக்குப் பெறும் சம்பளம் 3 டொலர் அவர்களுடைய சக ஊழியர்கள் மேலை நாடுகளில் பெறும் சம்பளம் 85 டொலர் (2000).

## இந்தியா

அண்மைக்காலங்களில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பிரதான காரணம் அந்நாட்டில் 1990களில் எழுச்சியுற்ற தகவல் தொழில்நுட்பத்துறையாகும். இத்துறையில் இடப்பட்டுள்ள முதலீடு 1000 கோடி டொலர்களாகும் இதில் 33 சதவீதம் வன்பொருள் துறையிலும் 62 சதவீதம் மென்பொருள் துறையிலும் இடப்பட்டுள்ளது. 1985 இல் இத்துறை பெற்ற வருமானம் 2.5 கோடி டொலர்கள் 2001 இல் 640 கோடி டொலர் 2004 இல் 1200 கோடி டொலர் 2009 இல் தகவல் தொழில் நுட்ப சேவைகளின் வருமானம் 5000 கோடி டொலர்களை எட்டவுள்ளது.

2002 ஆம் ஆண்டில் மொ.உள்நாட்டு உற்பத்தியில் தகவல் தொழில் துறையின் பங்களிப்பு 2 சதவீதமாக இருந்தது 2010 இல் இச்சதவீதம் 6-8 ஆக அதிகரிக்க உள்ளது. உலகளாவிய தகவல் தொழில் நுட்பத்துறையில் வேலை செய்வோரில் 16 % மானவர்கள் இந்தியர்களாவர். இந்தியாவில் ஜெர்மனியை விட இருமடங்கு தகவல் தொழில் நுட்ப ஊழியர்கள் உள்ளனர்; அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது 70% ஆற்றல் இந்தியாவிடம் உண்டு. இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள 40 மென்பொருள் தொழில்நுட்பப் பேட்டைகள், ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளுடன் வலையமைப்புத் தொடர்புகளைக் கொண்டுள்ளன.

இந்தியாவின் உயர் தொழில் நுட்ப நகரமாக மாறியுள்ள பெங்களூர் இந்தியாவின் சிலிக்கன் பள்ளத்தாக்கு எனப் பெயர் பெற்றுள்ளது. IBM , மொட்டொரொலா, ஒராக்கில், சன்மைக்ரோ சிஸ்டம்ஸ், டெக்ஸாஸ் இன்ஸ்ட்ருமென்ட் ஆகிய கம்பெனிகள் அங்கு நிலைகொண்டுள்ளன.

மென்பொருள் தயாரிப்பினால் பெறப்படும் பெரும்பகுதி வருமானம் ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலிருந்தே வருகின்றது. குஜராத்தும் மகாராஷ்டிராவும் சற்று முன்னேறி வருகின்றன. மூன்று தென் மாநிலங்களிலும் நாட்டின் 50 சதவீதமான தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும் மென்பொருள் தயாரிப்பில் ஈடுபட்ட ஊழியர்களில் 30 சதவீதமானவர்கள் உயர்ந்த சம்பளங்களை நாடி வெளிநாடுகளை நாடினர். இதனைத் தடை செய்யவே தகவல் தொழில் நுட்பப் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டன. கணினித் தொழில் வளர்ச்சி பெறப் பெற பெங்களூர் மக்கள் பல பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர். விலைவாசிகள் ஐந்து மடங்காக உயர்ந்து விட்டன் சுற்றாடல் மிக மோசமாக மாசடைந்து விட்டது; நாளாந்தம் நீர்விநியோகம், மின்சாரம் என்பன தடைப்பட்டன.

குறிப்பான முறையில் தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சி பெற்றமையால் இந்தியாவில் கிராமப்புற, நகர்ப்புற சமமின்மை பெரிதும் விரிவடைந்து வருகின்றது் தென்மாநிலங்களுக்கும் வடமாநிலங்களுக்குமிடையே வேறுபாடு

இணையதள வசதிக்கான மாதாந்தச் செலவு, வளர்முகநாடுகளைப் பொறுத்தவரையில் மிக அதிகமானது் ஆபிரிக்காவில் 58 டொலர், இந்தியாவில் 35 டொலர், பெருநாட்டில் 18 டொலர் என இச்செலவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுக்கான செலவுகள் வளர்முகநாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்குமிடையே அதிக அளவில் வேறுபடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைய தளங்கள் - மாற்றுப் பார்வை**

**சோ.சந்திரசேகரன்**

வளர்ந்து வருகின்றது. அரசாங்கம் கிராமப்புற மக்கள் பயனடையும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து வருகின்றது. ஆனால் இது நில ஆவணங்கள், பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைப் பெற மட்டுமே உதவுகின்றன. கிராமியப் பொருளாதாரத் துறையைத் தகவல் தொழில்நுட்பத் தயாரிப்புடன் ஒன்றிணைக்க முடியவில்லை. இதனால் தகவல் தொழில் நுட்பம் கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கு உதவ முடியாதுள்ளது. சமூகத்தின் பல்வேறு பிரிவினர் ஓரம் கட்டப்படுவதை மென்பொருள் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருளாதாரக் கொள்கை தடுத்து நிறுத்திவிட முடியாது எனப் பேராசிரியர் அமாருத்திய சென் கருதுகின்றார். இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறையின் வெற்றி காரணமாக ஒரு மிகச் சிறிய உயர்குழாமொன்று தோற்றம் பெற்றுள்ளது. அதிகூடிய அதிகாரம் பெற்ற (Superem powered) சில தனிநபர்கள் பல்வேறு வழிகளில் உயர்மட்டத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றனர் பொருளாதாரக் கொள்கைகளையும் தீர்மானிக்கின்றனர். தகவல் தொழில்நுட்பத்துறையின் அதிவளர்ச்சிக்கு ஏற்ப ஏனைய துறைகள் வளர்ச்சி பெறாமையால், சமச்சீரற்ற அபிவிருத்தியின் பாதக விளைவுகளை இந்தியா அனுபவிக்கவேண்டி வரும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். தகவல் தொழில்நுட்பத்துறையினால் கிட்டும் இலாபங்களைக் கொண்டு கிராமப்புறங்களின் கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய துறைகளில் முன்னேற்றங்க காண முடியும் என்று பல அறிஞர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

இவ்வாறு வளர்முகநாடுகளில் உயர்ந்த வருமானம் தரும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் அதே வேளையில் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்ற மெதுவும் ஏற்படவில்லை. "வறுமை என்னும் பரந்த சமுத்திரத்தில், செழிப்பான சில செல்வந்த தீவுகள் உருவாக" மென்பொருள் தயாரிப்புத் தொழில் காரணமாக இருந்து வருகின்றது.

வளர்முகநாடுகளில் உயர்ந்த வருமானம் தரும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் அதே வேளையில் பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றமெது வும் ஏற்படவில்லை. "வறுமை என்னும் பரந்த சமுத்திரத்தில், செழிப்பான சில செல்வந்த தீவுகள் உருவாக" மென் பொருள் தயாரிப்புத் தொழில் காரணமாக இருந்து வருகின்றது.

## கற்றோர் வெளியேற்றம்

2000மாம் ஆண்டளவில் ஜெர்மன் நாட்டின் மென்பொருள் சிறப்பறிஞர் பற்றாக்குறையைப் போக்க வளர்முகநாடுகளின் வல்லுனர்களை வரவழைக்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டால், வளர்முக நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்குமிடையே உள்ள இடைவெளியானது அப்படியே இருக்க நேரிடும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான மூளைசாலிகளின் வெளியேற்றம் மனித மூலதனத்தின் வெளியேற்றம் என்றே கருதப்படுகின்றது. ஆபிரிக்க நாடுகள் 1985-1990 காலப்பகுதியில் 60000 வல்லுனர்களை இழந்துள்ளன; தொடர்ந்து ஆண்டுதோறும் 2000 பேர் அந்நாடுகளிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்திய நிலைமைகளில் இப்பிரச்சினை சற்று வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்டது.

1. தாராளமயமாக்கத்தின் ஒரு விளைவான மூளைசாளிகள் வெளியேற்றமானது, பொதுமக்கள் பார்வையில் நீண்டகாலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நன்மை தருவதாக அமைகின்றது. இம்மூளைசாலிகள் வெளிநாடுகளிலிருந்து ஏராளமான வெளிநாட்டுச் செலவாணியை அனுப்புகின்றார்கள் அத்துடன் இவர்களால் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கும் இந்தியாவுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் ஏற்படுகின்றன. இதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் கூட்டுத் தொழில் முயற்சிகளும் அதிகரிக்கின்றன. தகவல் தொழில் நுட்பத் தொழிலின் "பன்னாட்டுத் தன்மை" பற்றிய அண்மைக்கால ஆய்வுகள் ஒரு புதிய கருத்தைத் தெரிவிக்கின்றன. தற்போது மூளைசாலிகள் மீண்டும் இந்தியாவில் உள்வாங்கப்படும் (Brain gain) நிலை காணப்படுகின்றது. இவ்வாறான மீள்வருகை, மூளைசாலிகளின் வெளியேற்றமின்றி இடம்பெற முடியாது. அவர்கள் தற்போது தமது சொந்த மூலதனம், புதிய அறிவு, அனுபவம், பல்வேறு சமூகத் தொடர்புகள் என்பவற்றுடன் திரும்பி வருவதால் இந்தியா பயனடைய முடிகின்றது என்ற முறையில் இவ்வாதம் தொடர்கின்றது.

   ஒரு இந்திய ஆய்வாளரின் கருத்தின்படி மூளைசாலிகள் வெளியேற்றம் என்பது இன்னும் பெறுமதி மிக்க ஒரு எண்ணக்கருவேயாகும்; வெளிநாடுகளில் வாழும் மென்பொருள் ஊழியர்களும் தகவல் தொழில் நுட்பம் பயிலும் மாணவர்களும் அங்கு தற்காலிகமாக வாழ்ந்து அந்நாடுகளுக்கு நன்மைகளை வழங்க முடியும். இவ்வாறு வெளிநாடுகளில் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ வெளிநாடுகளில் வாழுவோர் " 21 ஆம் நூற்றாண்டில் தேசிய வளர்ச்சிக்கான பிரதான காரணி" என அவர் (Khadria) வாதிடுகின்றார்.

2. இந்தியாவில் தகவல் தொழில் நுட்பக் கல்வியில் தனியார் துறையினர் முக்கிய பங்கு வகிப்பதாலும் உள்ளூர் சந்தை போதிய அளவு இல்லாமையாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுச் சந்தையின் தேவைகளுக்கேற்பவே பயிற்சியும் திறன் விருத்தி ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

### சுற்றாடல் பிரச்சினைகள்

வளர்முக நாடுகளில் கணினி மற்றும் இலத்திரன் பொருட்களின் உற்பத்தியினால் சுற்றாடல் பாதிப்படைகின்றது. கணினி தயாரிப்புக்கான சகல மூலப்பொருட்களும் மூன்றாம் உலக நாடுகளிலிருந்தே செல்லுகின்றன. ஒரு கணினியைத் தயாரிக்க 2250 kilowatt மின்சாரம் தேவைப்படுகின்றது. இது கம்போடியப் பிரஜை ஒருவரின் சராசரி வருடாந்த மின்சார நுகர்வின் 160 மடங்காகும். கணினியை உற்பத்தி செய்யும் போது 90 கிலோகிராம் கழிவுப் பொருள் உருவாகின்றது என்றும் 33000 லிட்டர் நீர் மாசடைவதாகவும் 5 கோடி கன மீட்டர் வளி மாசடைவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. மூன்றாண்டுகளின் பின் பயனற்றதாகிவிடும் கணினி மூன்றாம் உலக நாடுகளுக்கு வந்து சேர்ந்து கழிவுப் பொருளாகின்றது. இந்நாடுகளின் சுற்றாடலை மாசடையச் செய்யும் பல ரசாயனப் பொருட்கள் (Cadminum, ஈயம், Arsenic, Artoniam, தகரம் என்பன) அதில் உள்ளன.

இவ்வுண்மையை மூடிமறைக்க நன்கொடை வழங்கும் மேலைநாட்டு நிறுவனங்கள் பழைய கணினிகளோடு ஒரு புதிய தொழில் நுட்பத்தையும் சேர்த்து வழங்குகின்றன. ஆனால் இதனைக் கொண்டு இணையதளத்தில் உள்ள புதிய வலையமைப்புகளைக் கண்டு கொள்ள முடியாது. இதனை விட தொலைக்காட்சி, தொலைநகல், விடியோ என்பனவும் ஏராளமான கழிவுப் பொருட்களை ஏற்படுத்துகின்றன. ஜெர்மனியில் ஆண்டு தோறும் 35 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகள் கழிக்கப்படுகின்றன.

கணினிப் பயன்பாட்டின் காரணமாக காகித உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது. இதனாலும் சுற்றாடல் பாதிக்கப்படுகின்றது.

### தணிக்கை முறை

வேறு வழிகளில் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு இணையம் சிறந்த வழிமுறைகளை வழங்குகின்றது. எனினும் வசதி உள்ளவர்களுக்கே தகவல்களை இணையத்தினூடாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். சர்வாதிகார நாடுகளில் முக்கிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள உள்ள ஒரே வழி இணையமே. இந்நாடுகள் ஒருமுக்கிய பிரச்சினையை எதிர்நோக்குகின்றன. ஒரு புறம் இவை நவீன பொருளாதார வளர்ச்சியை நாடுகின்றன. மறுபுறம் எல்லா வழிகளையும் கையாண்டு அதிகாரத்தைத் தமது கையில் வைத்துக் கொள்ளவும் முயலுகின்றன. இது தீர்க்க முடியாத ஒரு முரண்பாடாகும்.

ஒரு சர்வதேச ஆய்வு மதிப்பீட்டின்படி (Reporters Sans Frontieres - 1999) உலகில் 45 நாடுகள் தமது பிரஜைகள் இணைய தளங்களை நாடுவதில் கட்டுப்பாட்டைச் செலுத்துகின்றன; பிரஜைகள் அரசாங்க இணையத்தள சேவையையே நாட முடியும். இவற்றில் 20 நாடுகள் புதிய தகவல் தொடர்பாடல் முறையின் "எதிரிகள்" எனப் பெயர் பெற்றவை. அவற்றில் சில: வியட்னாம், ஈரான், ஈராக், வட-கொரியா, சூடான், சிரியா, சீனா, கியூபா, பர்மா மற்றும் சில மத்திய ஆசிய நாடுகள். சீனாவில் இணையம் மற்றும் வலையமைப்புகளை நாடுவோர் காவல் நிலையத்தில் தம்மைப் பதிவு செய்ய வேண்டும். (1996). சீன வலைத்தளமானது வெளிநாட்டு ஊடகங்களின் செய்திகளைப் பிரசுரிக்க முடியாது.

சிங்கப்பூரிலும் இவ்வாறான பல கட்டுப்பாடுகள் உண்டு. அந்நாட்டில் தகவல் தொழில் நுட்பத் திட்டத்துக்குப் பொறுப்பான மேலதிகாரி (Leekwol Cheong - 2000) கூறியதாவது: "நாம் எமது ஆசிய விழுமியங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை (sage belt) மேற்கொள்ள வேண்டும். எமது மக்களை ஆபாசப்படங்களுள் இட்டுச் செல்ல முடியாது. மறுபுறம் ஜப்பானுக்கு அடுத்தபடியாகக் கணினி உற்பத்தி செய்யும் நாடு சிங்கப்பூர்; 20000 கணினி வல்லுனர்கள் அங்கு உள்ளனர்; 30 சதவீதமான வீடுகளில் கணினி உண்டு. சிங்கப்பூர் ஒலிபரப்பு அதிகார சபையானது நாட்டிற்குள் வரும் இணையத்தளத் தகவல்களைக் கண்காணித்து வருகின்றது.

ஐக்கிய அமெரிக்காவிலும் இவ்வாறான ஏற்பாடுகள் உண்டு. அமெரிக்க இரகசிய புலனாய்வுத்துறையானது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரித்தானியா ஆகிய நாடுகளுடன் இணைந்து இணைய தளங்களைக் கண்காணிக்கின்றன.

### கலாசார அம்சம்

பெரும்பாலும் செல்வந்த நாடுகளுக்கான தகவல் ஊடகமாக இணையம் விளங்குவதால் சகல தகவல்களும் ஆங்கிலத்திலேயே உள்ளன. உலகில் 6000 க்கும் மேற்பட்ட மொழிகள் உண்டு; 47 கோடி மக்களே ஆங்கிலமொழி பேசுபவர்கள் ஆனால் 90 சதவீதமான தகவல்கள் ஆங்கிலத்திலேயே உள்ளன. ஸ்பானிய மொழியில் 2 சதவீதமான தகவல்களும் பிரஞ்சு மொழியில் 5 சதவீதமான தகவல்களுமே உண்டு. இதனால் ஆங்கில மொழி கோள-



**வேறு வழிகளில் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு இணையம் சிறந்த வழிமுறைகளை வழங்குகின்றது. எனினும் வசதி உள்ளவர்களுக்கே தகவல்களை இணையத்தினூடாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயமாக்கப்பட்டு வருகின்றது; அவ்வாறே மேலைக்கலாசாரமும் (குறிப்பாக அமெரிக்க கலாசாரம்) கோள மயமாகி வருகின்றது. பிறமொழிகளும் கலாசாரங்களும் முக்கியத்துவம் இழந்து வருகின்றன. மூன்றாவது உலக நாடுகள் ஒரு புதுவகையான காலனித்துவத்துக்கு உட்பட்டு வருகின்றன. "நாம் இதற்கு உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும்.... இல்லையேல் நாம் காலனித்துவமயமாகிவிடுவோம்" என பிரான்ஸ் நாட்டு நீதியமைச்சர் (J.Toubon) கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ், கனடா, இத்தாலி முதலிய நாடுகளின் தலைவர்கள் அமெரிக்கக் கணினிகள், தொலைக்காட்சிகள் காரணமாகத் தமது கலாசாரங்கள் அழிய விட முடியாது எனச் செல்வந்த நாடுகளின் மகாநாட்டில் (G7 -1995) தெரிவித்தனர்.

## சமத்துவமின்மையின் அதிகரிப்பு

இணைய தளங்கள் உலகநாடுகளில் பெருகி வரும் இச்சந்தர்ப்பத்தில், வறிய நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்குமிடையே உள்ள இடைவெளி மேலும் விரிவடையும் அபாயம் உண்டு. ஏற்கனவே வளர்முக நாடுகளில் இவ்விடைவெளி அதிகம், சகாராவை அண்டிய ஆபிரிக்க நாடுகளில் 50 சதவீத மக்களுக்குக் குடிநீர் வசதிகள் இல்லை; 65 சதவீதமான தென்னாசிய மக்களுக்குச் சுகாதார வசதிகள் இல்லை. மேலை நாடுகளில் 1க்கு 6 என்ற முறையிலும் இலத்தீன் அமெரிக்காவில் 1க்கு 32 என்ற அளவில் வருமான இடைவெளி காணப்படுகின்றது.

இந்தியாவில் உள்ள 57000 கிராமங்களில் 13 சதவீதமானவை மட்டுமே தேசிய தொலைபேசி வலையமைப்புக்குள் வருகின்றன. இதனை விரிவுபடுத்த இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் ஆரம்பத்தில் வெற்றி பெறவில்லை. 13 பிராந்தியங்களில் 8 பிராந்தியங்களுக்கான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கம்பெனிகள் முன்வரவில்லை. ஏனெனில் இத்தொலைபேசித் தொடர்புகள் இலாபம் தருவனவல்ல. இந்நிலையில் இணையத் தொடர்புகளை எவ்வாறு ஏற்படுத்துவது.

தொலைத் தொடர்பு வசதிகளை மூன்றாம் உலகநாடுகளில் ஏற்படுத்துவது மிகவும் செலவு மிக்க பணியாகும். உலக வங்கியின் மதிப்பீட்டின்படி, மூன்றாம் உலக நகரங்களில் ஒரு தொடர்பை ஏற்படுத்த 500-1500 டொலர்கள் தேவை; ஆபிரிக்க நாடுகளில் 1000 பேருக்கும் 10 தொலைபேசித் தொடர்பு வசதிகளை ஏற்படுத்த 2000 கோடி டொலர்கள் தேவை; ஆனால் வளர்முக நாடுகளின் தற்போதைய வெளிநாட்டுக்கடன் பல இலட்சம் கோடி டொலர்களாகும் (2000 =2 Trillion டொலர்கள்). உலகில் வாழும் மக்களில் 150 கோடி மக்கள் முழுமையான வறுமையில் வாழ்கின்றனர். அவர்களுடைய மாதாந்த வருமானம் 30 டொலர்களுக்குக் குறைவு. வறுமையில் வாழ்பவர் தொகை அதிகரித்தும் வருகின்றது. (முன்பு இத்தொகை 130 கோடியாக இருந்தது). செல்வந்த நாடுகளில் கணினி வாங்குவோரின் ஆண்டு வருமானம் 75000 டொலர்களாகும்.

மூன்றாம் உலக நாடுகளில் யுத்தம், வறுமை, பட்டினி, போஷாக்கின்மை, நோய்கள், வேலையின்மை, வருமான சமமின்மை என்பன பிரதான பிரச்சினைகள் இணையதள தொடர்புகளை ஏற்படுத்துவதைவிட இவையே மூன்றாம் உலக நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய சவால்கள்.

மூன்றாம் உலக நாடுகள் இன்று வரை யுனெஸ்கோவின் பின்வரும் தேவைகளை நிறைவேற்ற முடியவில்லை; இவை தகவல் விநியோகம் தொடர்பானவை.

- 100 மக்களுக்கு 10 நாளேடுகள்
- 100 மக்களுக்கு 2 வானொலிகள்
- 100 மக்களுக்கு 2 திரை அரங்கு ஆசனங்கள். கியூபா மட்டுமே இத்தேவைகளை நிறைவேற்றியுள்ளது.

## முடிவுரை

மூன்றாம் உலக நாடுகளில் வாழும் உயர் குழாத்தினரே இணையத்தின் நன்மைகளைப் பெறும் நிலை காணப்படுகின்றது. பெரும்பாலான மக்கள் நன்மை பெற வாய்ப்புகள் குறைவு. "தகவல் என்பது பலதேவைகளுள் ஒன்று; இ.அஞ்சல்களால் மருந்தை வழங்க முடியாது; செயற்கைக் கோள்கள் சுத்தமான நீரை வழங்கப்போவதில்லை; உயர்மட்ட தொழில் நுட்ப செயற்றிட்டங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யமாட்டா; இணையதளத்தொடர்புகள் எவ்வாறு வறுமையையும் குடிநீர்ப் பிரச்சினையையும் போக்க முடியும்? இது மூன்றாம் உலக மக்கள் மத்தியில் கேட்கப்படும் கேள்வி. விசேட தரவுத்தளங்களைக் கொண்டு வறுமையை அகற்றி விட முடியுமா? நோய்கள் பல வறுமை காரணமாக உருவாவன; அவ்வாறே சகல மக்களும் மனித உரிமை மீறல் பற்றிய இணைய தளங்களின் ஊடாக அறிய வருவதால் அம்மீறல்களை நிறுத்தி விட முடியுமா? இவ்வாறுதான் மூன்றாம் உலக அபிவிருத்தியியல் அறிஞர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மூன்றாம் உலக நாடுகளில் யுத்தம், வறுமை, பட்டினி, போஷாக்கின்மை, நோய்கள், வேலையின்மை, வருமான சமமின்மை என்பன பிரதான பிரச்சினைகள் இணையதள தொடர்புகளை ஏற்படுத்துவதை விட இவையே மூன்றாம் உலக நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய சவால்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாகக் கூறுவதாயின் -

"தொழில் நுட்பவியல் தானாகத் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவதில்லை. ஆயினும் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு முன்நிபந்தனை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் பயன்பாடாகும். கைத்தொழில் யுகத்தில் எவ்வாறு மின்சாரம் அவசியமாக இருந்ததோ அது போன்று இன்றைய யுகத்தில் தகவல் தொழில் நுட்பம் தேவைப்படுகின்றது"

- *பேராசிரியர் Manuel Castells*

*(கலிபோனியா பல்கலைக்கழகம் )*

எனவே இன்று பின்தங்கிய சமூகங்களுக்குத் தேவைப்படுவது சக்தி வலுவின் விநியோகமாகும்.

"தகவல் தொடர்பாடல் திறன்களில் கவனம் செலுத்துவது அவசியம் தான் அதே வேளையில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பயன்பாட்டின் சமூக விளைவுகள் பற்றி நுணுகி ஆராயும் திறன் இருக்க வேண்டும்"

- *பேராசிரியர் Cas Hamelink*

*(அமெஸ்ட்டர்டாம் பல்கலைக்கழகம்)*

**உசாத்துணை**


1. Angala W.Little, Development Globalization and Education in Sri Lanka, Background Paper for Seminor on Globulasation and Education. Colombo, 2005
2. Sangeeta kamat, Globalisation, Development and Education: India, Background Paper for seminor on Globalisation and Education, Colombo, 2005.
3. .... Agemann, Internet and Development countries - Pros and cons, social usage of Internet in Malasia, International Workshop, 2000.


**இணைய தளங்கள் - மாற்றுப் பார்வை**

**சோ.சந்திரசேகரன்**

## உலகப் பெண்களின் நிலை பற்றிய சில உண்மைகள்...

* உலக விவசாயத் தொழிலாளர்களில் பெண்களின் பங்கு 40 சதம். நில உடமையில் அவர்கள் பங்கு 1 சதம்.
* கடந்த நூற்றாண்டுகளில் 24 சதம் பெண்கள் தான் நாட்டின் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
* உலக பொருளாதாரத்தின் உச்சமட்ட அதிகாரப் பதவிகளில் பாலின சமத்துவம் நிலை இன்னும் 500 ஆண்டுகள் ஆகும் என்பது ஐ.நாவின் மதிப்பீடு.
* 100 கோடி எழுத்தறிவற்றவர்களில் 2/3 பங்கு பெண்களாவர்.
* ஒவ்வொரு ஆண்டும் முறையான கருச்சிதைவு செய்து கொள்ள வாய்ப்பில்லாததால் 2 லட்சம் பெண்கள் உயிரிழக்கின்றனர்.
* பத்து லட்சம் குழந்தைகள், குறிப்பாகப் பெண்கள், பால் (sex) சம்பந்தப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.
* ஒவ்வொரு ஆண்டும் 20 லட்சம் பெண் குழந்தைகளின் பிறப்புறுப்புகள் சிதைக்கப்படுகின்றன.

***-இது உலக வங்கியின் கணிப்பு***

இணையதளத் தொடர்புகள் எவ்வாறு வறுமையைப் போக்க முடியும்? இது மூன்றாம் உலக மக்கள் மத்தியில் கேட்கப்படும் கேள்வி. விசேட தரவுத்தளங் களைக் கொண்டு வறுமையை அகற்றி விட முடியுமா? அவ்வாறே சகல மக்களும் மனித உரிமை மீறல் பற்றிய இணைய தளங்களின் ஊடாக அறிய வருவதால் அம்மீறல்களை நிறுத்தி விட முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமொரு ஊழிக்குத் தயாராகிறதா பூமி?

## உயிரினப் பல்வகைமை மீதான மனிதனின் ஆதிபத்தியம் உயிரினங்களை வேகமாகக் காவு கொண்டு வருகிறது

**பொ. ஐங்கரநேசன்**

"மலட்டுக் கோள்களுக்கு நடுவே பெறுதற்கரிய மக்கட்பேற்றைப் பெற்றிருக்கும் ஒரே கிரகம் நமது பூமித்தாய் மாத்திரம்தான். ஆனால், தன் மடி நிறைய உயிரினங்களைத் தாலாட்டும் பூமி, - இப்போது தனது உயிர் வளத்தைக் காவு கொடுக்கும் கால ஊழிக்குள் வேகமாகப் பிரவேசிக்கத் தொடங்கியுள்ளாள்" — என்று உயிரியலாளர்கள் சமீபகாலமாகக் குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

பூமி தன் மீது உயிர்ப் பசையைப் பூசி ஏறத்தாழ 3.5 பில்லியன் வருடங்கள் ஆகின்றன. இந்த நீண்ட உயிர்வரலாற்றில், இதுவரையில் பூமி ஆறு பேரழிவுகளைச் சந்தித்திருக்கிறது. இதில் கடைசியாக நிகழ்ந்த, இப்போதும் அதிகம் பேசப்படும் ஊழித்தாண்டவம் 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னால் அரங்கேறியது. கிறித்தேசியஸ் யுகத்தின் (Cretaceous Era) கடைசிக் காலத்தில் நிகழ்ந்த இந்தப் பிரளயத்தின் போதே அன்று பூமியில் இராஜாங்கம் நடத்தி வந்த டைனொசோர் இனங்கள் அடியோடு அழிந்தன. அண்ட வெளியில் இருந்து வந்த இராட்சத விண்கற்கள் பூமியை மோதி வெடித்ததால் கிளம்பிய தூசி மண்டலம் சூரியனை மறைத்ததில் சக்திப்பாய்ச்சல் தடைப்பட்டு.... பூமி குளிர்ந்து..... இனங்கள் இனங்களாகப் பெரும் எண்ணிக்கையில் தாவரங்களும் விலங்குகளும் செத்து மடிந்தன என்று இந்த ஊழிமரணங்களுக்குப் புதைபடிவ ஆய்வாளர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

**பூமியில் இருந்து நிரந்தரமாகவே விடைபெறுவதற்குக் காத்திருக்கும் அழியும் உயிரினங்களில் - சீனாவின் பண்டா கரடி, ஆபிரிக்காவின் மலைக் கொரில்லாக்கள், இந்தியப் புலிகள், நீலத் திமிங்கிலிங்கள் என்று நட்சத்திர அந்தஸ்துப் பெற்றிருக்கும் வெகு சில இனங்கள் மட்டுமே ஊடகங்களின் கவனிப்புக்கு ஆளாகின்றன.**

அதிர்ஷ்டவசமாக, இந்தப் பேரழிவுகளிலும் பூமி தன் தாய்மையைப் பேணியே வந்திருக்கிறது. தப்பிப் பிழைத்த உதிரி உயிரிகளில் மெல்ல மெல்லப் பரிணாமம் (Evolution) நிகழ்ந்ததில் இலட்சக்கணக்கான ஆண்டுகளில் பூமி, மீண்டும் புதிய புதிய உயிரினங்களால் அழகு பெற்றது. நகருயிர்களின் தலைவன் டைனொசோர்களின் அழிவுக்குப் பிறகு பாலூட்டிகள் ஆட்சி பெற்றிருக்கும் இன்றைய பூமியில் - இதுவரையில் சுமார் 17 இலட்சம் தாவர — விலங்கு இனங்கள் பெயரிடப்பட்டுள்ளன. ஆனால் இருப்பதில் பெரியதும் அதிக அளவில் ஆராயப்பட்டதுமான பாலூட்டிகளே கூட இன்னமும் முழுமையாக அறியப்படவில்லை. சமீபத்தில் வியட்நாம் - லாவோஸ் எல்லையில் உள்ள மலைப்பகுதியில் பசுவை ஒத்த புதிய இனப்பாலூட்டி விலங்கொன்று கண்டறியப்பட்டுள்ளது. பூச்சிகளில் இது வரையில் அறியப்பட்ட சுமார் 10 இலட்சம் இனங்களைவிடவும் 8 மடங்கு அதிகமான இனங்கள் இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. இப்படி, இன்னமும் பெயரிடப்படவேண்டிய தெரியவர வேண்டிய 125 இலட்சம் வரையான இனங்களைப் பூமி அடர்காடுகளிலும், ஆழ்கடல்களிலும் பொத்திவைத்திருப்பதாக உயிரியல் விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர். விலைமதிக்க முடியாத இந்த "உயிர்ப் புதையலே" இப்போது பேரழிவின் அடுத்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் இருப்பதாக அஞ்சப்படுகிறது.

உண்மையில், உயிர்க்கோளத்தை அழிவின் வாயில் இருந்தும் மீட்டெடுப்பது என்பது கைமீறிப்போகும் தருணத்தில்தான் இருக்கிறது. இந்தக் கட்டுரை வெளியாகி இருக்கும் இதழைப் பூரணமாகப் படித்து முடிப்பதற்குள் உலகில் ஏதாவது ஒரு இனம் பரிதாபமாகத் தன் கதையை முடித்திருக்கும். மணித்தியாலத்துக்கு ஒரு இனம் என்ற கதியில் பூமி தன் உயிர்ப்பைப் பறி கொடுத்துக் கொண்டிருக்கிறது. இது எச்சரிப்பதற்கான மிகைப்படுத்தல் அல்ல. பல தசாப்தங்களாக உயிரியலாளர்கள் இருண்ட காடுகளின் "இண்டு இடுக்கு" களிலெல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாங்கூட திரட்டிய தகவல்களின் முடிவாகவே இந்தப் பதைக்க வைக்கும் உண்மை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்த உயிரினங்கள் எதுவும் திடீரென ஒரே நாளிற் காணாமற் போய்விடுவதில்லை. எண்ணிக்கையில் படிப்படியாகக் குறையத் தொடங்கி ஒரு நிலையில், அழிவில் இருந்தும் இனிமேலும் தானாக மீள முடியாது என்னும் அளவுக்கு "அபாய எல்லை" க்குள் இறங்கி-விடுகிறது. இப்படித் பத்து வருடங்களில் பாதிக்குக் கீழாகவும் அழிந்து விடும் இனங்களை அல்லது வீரியத்-துடன் இனம்பெருக்கக் கூடிய அங்கத்தவர்களை 250க்கும் குறைவாகக் கொண்டிருக்கும். இனங்களை "அழியும்" இனங்கள்" (endangered) என்று உயிரியலாளர்கள் வரையறை செய்திருக்கிறார்கள். அழியும் இனங்கள் விரைவில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவுக்குச் சுருங்கி "வாழும் மரணம்" (Living dead) என்றாகி, கடைசியில் - காப்பகங்களிற் கூட ஒரு பிரதிநிதியையேனும் விட்டு வைக்காமல் "டோடோ" பறவையைப் போன்றோ அல்லது "பயணிப்புறா"வைப் போன்றோ கூண்டோடு அழிந்து (Extinct) விடுகின்றன.

பூமியில் இருந்து நிரந்தரமாகவே விடைபெறு-வதற்குக் காத்திருக்கும் அழியும் உயிரினங்களில் - சீனாவின் பண்டா கரடி, ஆபிரிக்காவின் மலைக் கொரில்லாக்கள், இந்தியப் புலிகள், நீலத் திமிங்கிலிங்கள் என்று நட்சத்திர அந்தஸ்துப் பெற்றிருக்கும் வெகு சில இனங்கள் மட்டுமே ஊடகங்களின் கவனிப்புக்கு ஆளாகி வருகின்றன. ஆனால் ஈனஸ்வரம் எழுப்பிக் கொண்டிருக்-கும் இனங்களின் பட்டியல் நாளுக்கு நாள் நீண்டு செல்கிறது. உலக நிலை காப்பு ஒன்றியத்தின் (The world conservation union) மதிப்பீட்டின்படி பாலூட்டும் இனங்களில் நாலில் ஒரு பங்கும், பறவைகளில் பத்தில் ஒரு பங்கும் அழியக் கூடிய அபாய நிலையை எட்டி-யுள்ளன. ஊர்வனவற்றில் ஐந்தில் ஒரு பங்கும், நீரிலும் நிலத்திலும் வாழக் கூடிய தவளை தேரை போன்றவற்றில் நாலில் ஒரு பங்கும், எல்லா வகை மீன்களிலும் - குறிப்பாக நல்ல தண்ணீரில் வாழ்பவை 34 - விழுக்காடும் அதே போன்று அழிவின் விளிம்பில் வந்து நிற்கின்றன. இந்த விபரங்கள் எல்லாம் நன்றாக நமக்குத் தெரிந்த முள்ளந்தண்டு உயிரினங்கள் பற்றியவைதான். இன்னும் போதுமான ஆய்வுகள் செய்யப்படாத குழுக்களில் 500 வகைப் பூச்சிகள், 400 வகையான நண்டு போன்ற மேலோடு உள்ள பிராணிகள், 900 வகை நத்தை சிப்பி போன்றவைகள் குறித்தும் அச்சம் இருக்கிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இன்று பூமிக்குப் பசுமைப் போர்வையை வழங்கிக் கொண்டிருக்கும் பூக்கும் தாவரங்களிலும் சுமார் எட்டில் ஒரு பங்கு அழிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் பூமிக்கோள் எதிர்கொள்ளத் தொடங்கி-யிருக்கும் இந்த ஏழாவது பேரழிக்கான கால்கோள் கடந்த யுகங்களைப் போல அண்ட வெளியில் இருந்து வர-வில்லை. இம்முறை பூமியின் பிந்திய பிரசவிப்பான மனிதனே பூமித்தாயின் உயிர்த்துகிலை உரியும் அவலம் நேர்ந்திருக்கிறது. விண்ணில் இருந்து பூமிக்கு வரக் கூடிய அபாயங்களை விண்ணிலேயே எதிர்கொண்டு அழிப்ப-தற்கு மனிதன் தயாராகிவிட்டிருக்கும் இன்றைய நிலை-



யில் ஆபத்து அவனாலேயே என்-பது முரண் நகையாக இருப்பினும் யதார்த்தம் அதுவாகத்தான் உள்ளது.

உயிர்வாழ்தலில் " உண்ணு-வதும் உணவாவதும்", "வலிந்தவை பிழைப்பதும் நலிந்தவை அழிவ-தும்" இயற்கையின் நியதிகளாகும்-போது பரிணாமப் பாதையெங்கும் இனங்களின் மறைவும் தவிர்க்க முடியாததாகிறது. புவிச் சரிதவியற் காலம் நெடுகிலும் இனங்கள் ஒவ்வொன்றும் சராசரியாக ஒரு மில்லியன் வருடங்கள் வரை வாழ்ந்துள்ளன. இவற்றில், "ஒரு வருடத்துக்கு மில்லியனில் ஒரு இனம்" (Species / million / year) என்ற கதியில் இயற்கை களை-யெடுப்பு நிகழ்த்தி வந்துள்ளது. கூடவே, இதே கதியிலேயே பரி-ணாமத்தில் புதிய இனங்களையும் பிரசவித்து வந்துள்ளது. ஆனால், "பழையன கழிதலிலும் புதியன புகுதலிலும்" பருமட்டாகவேனும் ஒரு சமநிலையைப் பேணி வந்த பூமியில் மனிதனின் வருகைக்குப் பின்னரேயே நிலைமை எதிர்-மாறாகியது. இனங்களின் அழிவு வீதம் படிப்படியாக அதிகரித்து இப்போது பெரும் சூறையாடலைப் போல 1000 மடங்குகளாக எகிறி-யிருப்பதுடன், புதிய உயிரினங்கள் தோன்றும் வீதமும் பெரும் சரிவைச் சந்தித்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தரையில் வாழும் வேறு எந்-தப் பெரிய விலங்கைவிடவும்

**இன்று பூமிக்குப் பசுமைப் போர்வையை வழங்கிக் கொண்டிருக்கும் பூக்கும் தாவரங்களிலும் சுமார் எட்டில் ஒரு பங்கு அழிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக் கின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னுமொரு ஊழிக்குத் தயாராகிறதா பூமி?

பொ. ஐங்கரநேசன்

மனிதர்கள்தான் நூறு மடங்கு அதிகமாகக் காணப்படுகிறார்கள் - சுமார் 600 கோடிகள். ஒரு பெரு வெடிப்பாக நிகழ்ந்திருக்கும் இந்தச் சனத்தொகைப் பெருக்கமே இது வரை இல்லாத அளவுக்கு உயிரினப் பல்வகைமையைக் காயப்படுத்தியுள்ளது. தனி ஒரு மனித இனத்தின் தேவைகளுக்கு - இன்னும் சொல்லப் போனால் அவனது பேராசைமிக்க விரய நுகர்வுக்கு உலகின் ஒட்டுமொத்த உயிரினப் பல்வகைமையுமே பலிக்கடாவாகியுள்ளது.

உயிரினப் பல்வகைமை (Bio diversity) என்னும் சொற்றொடர் 1980 களில் அமெரிக்க அறிவியலாளர்களால் உருவாக்கப்பட்டது. வெளிப்படையான தொனிப்பைவிட இது அர்த்தப் பரிமாணங்களில் இன்னும் ஆழம் நிறைந்தது. மழைக்காடுகள் பவளப்பாறைகள் - சதுப்பு நிலங்கள் - சவான்னாப் புல்வெளிகள் - கடல்நீரேரிகள் என்று பூமியின் பல்வகைப் பட்ட சூழற்தொகுதிகளையும், இவற்றின் கூறுகளாக இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு தூங்கு மூஞ்சிமரம் - புள்ளி மான் - வௌவால் மீன் - பறக்கும் அணில் - பாண் பூஞ்சணம் என்று பல தரப்பட்ட இனங்களையும் குறிக்கிறது. தவிரவும், இனங்களுக்கிடையேயான பல் வகைமையைப் போல இனத்துக்குள்ளேயும் உண்டு. உருளைக்கிழங்கில் சுமார் 3000 வகைகள் தென் அமெரிக்காவின் ஆண்டீஸ் மலைப்பகுதியில் பயிராகிறது. சேலம், கிளிச்சொண்டு, அம்பலவி, அல்போன்சா என்று மா இனத்தில் சுமார் 1000 இனங்கள் உண்டு. இப்படி ஒரு இனத்தின் அங்கத்தவர்களுக்கிடையே இருக்கக்கூடிய மாறுபாடுகளுக்குக் காரணமான மரபணுக்களையும் சேர்த்தே உயிரினப் பல் வகைமை முழுமை பெறுகிறது. சூழற்தொகுதிகள் - இனங்கள் - மரபணுக்கள் என்று உயிரினப் பல்வகைமையின் எல்லாப் படிகளிலுமே இன்று மனிதனின் பிடி அகோரமாக இறுகத் தொடங்கியுள்ளது.

> தனி ஒரு மனித இனத்தின் தேவைகளுக்கு - இன்னும் சொல்லப் போனால் அவனது பேராசை மிக்க விரய நுகர்வுக்கு உலகின் ஒட்டு மொத்த உயிரினப் பல்வகைமையுமே பலிக்கடாவாகி யுள்ளது.

சூழற் தொகுதிகளில் முதலிலும், அதிக அளவிலும் பாதிப்புக்கு ஆளாகியது பூமியின் உயிர்நாடியாக விளங்கும் மழைக்காடுகள் (Rain Forests) தான். பூமத்தியரேகையை ஒட்டி வெப்பமண்டல நாடுகளில் வான் அளாவி நிற்கும் இந்தப் பச்சை அடுக்கு வீடுகளில்தான் உலகின் அரைவாசி உயிரினங்கள் வாசம் செய்கின்றன. அதுவும், இவற்றில் பெரும் பாலானாவை தாம் வாழும் குறிப்பிட்ட அந்தப் பிரதேசங்களைத் தவிர வேறு எந்தப் பகுதிகளிலும் காணப்படாத இனங்கள் (Endemic) ஆகும். தான் கொண்டிருக்கும் உயிரினங்களோடு உலகின் மீதி உயிரினங்களின் இருத்தலிலும் பங்காற்றிக் கொண்டிருக்கும் மழைக்காடுகள் - வேளாண் தேவைகளுக்கும், நகரமயமாக்கலுக்கெனவும் பெரும் அளவில் சூறையாடப்படுகின்றன. நூறு வருடங்களுக்கு முன்னால் பூமியின் நிலப் பரப்பில் 12 விழுக்காடுகளாக இருந்த மழைக்காடுகள் இப்போது சரி பாதியளவே எஞ்சியுள்ளன. நூலிழையில் தன்னைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் இந்தக் காட்டுத் துகிலும் செக்கனுக்கு ஒரு ஏக்கர் என்ற அளவில் (வருடத்துக்கு இங்கிலாந்தும் வேல்ஸும் இணைந்த பரப்பளவால்) துச்சாதன மனிதனிடம் தன்னை இழந்து கொண்டிருக்கிறது.

பெரும் எண்ணிக்கையான இனங்களுக்குப் புகலிடம் அளிப்பதால் "கடலின் மழைக்காடுகள்" என்று வர்ணிக்கப்படும் "பவளப் பாறைகளும்" (coral reefs) பாரிய அழிவைச் சந்திக்கத் தொடங்கியுள்ளன. வெப்ப வலயக் கடலின் ஆழம் குறைந்த கரையோரப் பகுதிகளில் மைல் கணக்காகப் படுத்துக் கிடக்கும் பவளப் பாறைகள், - நட்சத்திர மீன், கடல் அனிமனி கடற் பஞ்சு... என்று கடலின் இரண்டு மில்லியன் இனங்களுக்கு இனிய இல்லங்களாக விளங்குகின்றன. கடல் மீன் இனங்களிலும் கால்வாசிப் பங்கு இங்கு சஞ்சாரம் செய்கின்றன பவளப்பாறைகள் ஜெலிமீன்களின் கூட்டத்தைச் சேர்ந்தவை. கல்சியம் காபனேற்றுச் சுவர் சூழ்ந்த, இடம் பெயரமுடியாத முடவன் உயிரிகள் ஆகும். இதனால் அல்காக்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, - அவற்றை தம்மில் வளர இடம் கொடுத்து அவற்றிடம் இருந்து உணவைப் பெற்று —— ஏறத்தாழ 195 மில்லியன் வருடங்களாகப் பூமியில் நிலை கொண்டிருக்கின்றன. ஆனால் கிறித்தேசியஸ் யுக ஊழியைக்கூடத் தாக்குப் பிடித்த இந்தப் பவளப்பாறை இனங்களினால் மனிதனின் சூழல் விரோதப் போக்குகளிலிருந்து மட்டும் தப்பிக்க முடியவில்லை. ஏற்கனவே கடலில் கலக்கும் கழிவுகள், டைனமைற் வெடிகள் - சயனைட் நஞ்சுகளைப் பயன்படுத்தும் மீன்பிடி முறைகள், அளவுக்கு அதிகமான மீன்பிடி, நங்கூரங்களின் காயப்படுத்தல்கள், கப்பற் போக்குவரத்துக்குத் தகர்க்கப்படும் நிர்ப்பந்தம் போன்றவற்றால் அவதிக்குள்ளாகி வந்த பவளப்பாறைகள் இப்போது பூமி சூடாகத் தொடங்கியதையடுத்து மோசமான பாதிப்புக்கு ஆளாகியுள்ளன. மனிதன் மேற்கொண்டு வரும் காடழிப்பினாலும், அவன் கரித்துத் தள்ளும் எரிபொருட்களினாலும் குவியும் கரியமில வாயு பூமியைச் சூடுபடுத்தி (Global warming) வருகிறது. இதில் கடல் நீரின் வெப்பநிலை உயர்ந்து அல்காக்களை அழித்துவிட, பவளப்பாறைகள் உணவூட்டல் இன்றி, நிராதரவாக மடிய ஆரம்பித்துள்ளன. இதுவரையில் இந்து சமுத்திரப் பரப்பில் மட்டுமே ஐம்பது விழுக்காடுகளுக்கும் அதிகமான பவளப்பாறைகள் இப்படி அழிந்து பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டொன்றுக்கு வெறும் 10 சதம் மீற்றர் அளவால் மட்டுமே வளரக் கூடிய பவளப் பாறைகளால் இப்பேரழிவில் இருந்தும் மீண்டெழுவது என்பது இயலாத ஒன்றாகும். இந்தக் கடற்காடுகளின் அழிவும் தரையில் மழைக்காடுகளின் மறைவும் இப்போதுள்ள கதியிலேயே தொடருமாயின் 2100 ஆம் ஆண்டளவில் உலகின் உயிரினங்களில் பாதியளவு பூமியில் இருந்து நிரந்தரமாகவே காணாமற்போய்விட்டிருக்கும்.

காடுகள், கடல்கள், மலைகள், பாலைவனங்கள், துருவப்பகுதிகள் என்று வாழிடச் சூழல்களைத் தனது "ஒக்ரோபஸ்" பிடிக்குள் கொண்டு வந்ததன் மூலம் இனங்களின் இருந்தலுக்குச் சாவு மணி அடித்த மனிதன், அவற்றைத் தானே சங்காரம் செய்யவும் தவறவில்லை. இதற்குப் பெரிதும் காட்டப்படும் உதாரணம் ஐக்கிய அமெரிக்காவின் பயணிப்புறாக்கள் (passenger pigeons) ஆகும். வானில் கூட்டங்களாகப் பறக்க ஆரம்பித்தால் பல மணி நேரங்களுக்குப் பகலில் இருளைக் கொண்டு வந்துவிடுமளவுக்குப் 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் பயணிப் புறாக்கள் பல்கிப் பெருகி இருந்தன. ஆனால் அவற்றின் வாழிடங்களை அழித்ததோடு, தீவர வேட்டையிலும் இறங்கியதில் 1896 இல் இரண்டரை இலட்சமாகக் குறைந்து, 1914 இல் காப்பகத்தில் இருந்த கடைசிப் புறாவும் உயிரைவிட்டது. ஒரு காலத்தில் மனிதனின் பராக்கிரம சாகசங்களை வெளிக்காட்டுவதற்காக வேட்டையாடப்பட்டு வந்த புலிகள் இப்போது மனிதனுக்குப் பராக்கிரமம் கொடுக்க வேண்டி வேட்டையாடப்படுகின்றன. புலி உறுப்பு மருந்துகள் நோய்களைக் குணமாக்குவதுடன் வீரியத்தையும் தருகின்றன என்ற நம்பிக்கை சீனாவில் இன்றளவும் நீடிப்பதால் புலிகளின் தாயகம் என்று நம்பப்படும் சீனாவில் இன்று 20 புலிகள் மட்டுமே எஞ்சியுள்ளன. புலியைத் தேசிய மிருகமாக்கிப் பெருமைப்படும் இந்தியாவில் புலிகள் காப்பகங்களிலேயே கொல்லப்பட்டு அவற்றின் உறுப்புகள் கடத்தப்படும் அவல நிலை உள்ளது.. கொம்புகளுக்காக வேட்டையாடப்பட்டதில் காண்டாமிருகத்தின் ஐந்து இனங்களுமே அழியும் நிலைக்கு வந்துள்ளன. இவை ஒரு சில உதாரணங்கள் தான். வாழிடங்களின் சீர்குலைவால் மறைந்த இனங்களுக்கு அடுத்த படியாக மனிதனின் வேட்டைக்குப் பலியான இனங்கள்தான் அதிகம். கடந்த 400 ஆண்டுகளில் மறைந்த விலங்கினங்களில் 23 விழுக்காடுகள் மனித வேட்டைக்கே இரையாகியுள்ளன.

இயற்கையின் பன்முகத்தன்மையைப் பசுமைப் புரட்சியும் பதம் பார்க்கிறது. மனிதன் தோன்று தொட்டுப் பயன்படுத்தி வந்த 7000 உணவுத்தாவரங்களுக்குப் பசுமைப் புரட்சியின் நாயகர்களான கோதுமை, சோளம், நெல் என்று மூன்று இனங்களுமாகச் சேர்ந்து "ஓரம் போ" சொல்லிவிட்டன. இந்த இனங்களிலே கூட, இருந்த ரகங்கள் கைவிடப்பட்டு பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கிக் கொடுத்த கலப்பு இனங்கள், மரபணுமாற்றப் பயிர்கள் என்று ஒரே மாதிரியான மரபணு அமைப்பைக் கொண்ட இனங்களே உலகம் பூராவும் பயிராகின்றன. இலங்கையில் ஒரு காலத்தில் 2000 வகையான நெல் ரகங்கள் இருந்ததாகப் பதிவுகளில் அறியக்கிடக்கிறது. பூச்சிகள், பீடைகள், வரட்சி போன்றவற்றுக்கு எதிராக இயற்கை தேர்வு செய்து கொடுத்த இந்த மரபணுவளங்கள்



வழக்கொழிய - விளைச்சலை மட்டுமே கருத்திற்கொண்ட வீரிய இனங்கள் பெருமளவில் வேளாண்வேதிகளை வேண்டி நிற்கின்றன. இந்த நஞ்சு இரசாயனங்களும் தம் பங்குக்கும் இனங்களின் உயிரைக் குடித்து வருகிறது. தோட்ட நிலங்களில் உள்ள பூச்சி புழுக்கள் நஞ்சேறி இறக்க இயற்கையான பீடை கொல்லியாக நம் வீட்டுத்தோட்டங்களில் நடை பயின்று கொண்டிருந்த செண்பகப் பறவை இரை இல்லாமல் மாயமாக மறையத் தொடங்கியிருப்பது இதற்கு உதாரணம் ஆகும்.

இன்று "படியாக்கம்" (cloning) வரை வளர்ந்துவிட்ட உயிரித்தொழில் நுட்பத்தில் மரபணுக்களே மூல வளங்களாகும். மரபணுமாற்றப் பொறியியலில் ஈடுபட்டிருக்கும் மேற்கு நாடுகள் மரபணுவளமிக்க வெப்ப மண்டல நாடுகளிலிருந்து அரிய தாவர-விலங்குகளைப் பெற்று அவற்றைத் தங்களதாக காப்புரிமையும் பெற்றுவிடுகின்றன. துர்அதிர்ஷ்டவசமாக வெப்ப மண்டல நாடுகள் வறுமையில் உழலும் நாடுகளாக இருப்பதால் ஒரு சில சதங்களுக்காக இதனை அனுமதித்து வருகின்றன. இந்த உயிர்க்கொள்ளையில் (Bio Piracy) அழிந்து வரும் இனங்கள் மேலும் மேலும் அருகி வருவது குறிப்பிடத்தக்கது.

மனிதன் உயிர்ப்பல்வகைமையின் மீது தொடுத்திருக்கும் இந்தப் போரில் (வேறு எந்த வார்த்தைகளால் விளிப்பது?) கண்

**இயற்கையின் பன்முகத்தன்மையைப் பசுமைப் புரட்சியும் பதம் பார்க்கிறது. மனிதன் தோன்று தொட்டுப் பயன்படுத்தி வந்த 7000 உணவுத் தாவரங்களுக்குப் பசுமைப் புரட்சியின் நாயகர்களான கோதுமை, சோளம், நெல் என்று மூன்று இனங்களுமாகச் சேர்ந்து "ஓரம் போ" சொல்லிவிட்டன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னுமொரு ஊழிக்குத் தயாராகிறதா பூமி?

பொ. ஐங்கரநேசன்

எதிரிலேயே இனங்கள் கரைவது எந்த அளவுக்கு உண்மையோ, அதே அளவுக்கு இந்த ஊழியின் முடிவில் மனித விலங்கும் தப்பிக்கப்போவதில்லை என்பது கசப்பான உண்மையாகும். மனிதனின் உயிர் வாழ்தலுக்கான பிராணவாயு பெருமளவு கடலின் பல்வகைமை மிக்க அல்காக்களின் ஒளிச்சேர்க்கையின் போதே வெளிவிடப்படுகிறது. பூமியின் கால நிலையை, நீரியற் சுழற்சியின் போக்கை காடுகளே — குறிப்பாக உயிர்ப் பல்வகைமை மிக்க அமேசன் காடுகளே தீர்மானிக்கின்றன. பல சமூகங்கள் இன்னும் 40 சதவீதமான உணவுகளைக் காடுகளிலிருந்தே பெற்றுக்கொள்கின்றன. 80 வீதமான சனத்தொகை தாவரங்களையும் விலங்குகளையும் அடிப்படையாகக் கொண்ட மருந்துகளையே தனது சுகவாழ்வுக்கு நம்பியிருக்கிறது. மொத்தத்தில் மனித நாகரிகமே உயிரினப்பல்வகைமை என்ற தூண்களின் மீது தான் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

1992 ஜூன் இல் பிறேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடந்த புவி உச்சி மாநாட்டின்போது உயிரினப் பல்வகைமை குறித்த ஒப்பந்தம் (convention on Biological diversity) உருவாக்கப்பட்டது. உயிரினப் பல்வகைமைகளைப் பாதுகாத்தல், உயிரினங்கள் அழிந்து விடாத வகையில் அவற்றைப் பயன் படுத்துதல், உயிரினப்பல்வகைமை தரும் தன்மைகளை நியாயமான முறையில் பகிர்ந்து அனுபவித்தல் ஆகிய மூன்றையும் இலக்குகளாகக் கொண்டு ஒப்பந்தம் அமைந்தது. மரபணு வள ஆதாரங்களைப் பயன்படுத்துதல், அதிலிருந்து உருவாகும் தொழில் நுட்ப அறிவுப் பரிமாற்றம், மரபணுக்களை மாற்றம் செய்து உண்டாக்கும் உயிர்ப் பொருள்களின் வணிகம் போன்றவை பற்றி ஒப்பந்தம் விரிவாகப் பேசுகிறது. வளர்ந்த நாடுகள் ஏழை நாடுகளுக்குப் போதிய தொழில் நுட்ப அறிவையும் அளித்து, நிதி உதவியும் செய்தால் ஒழிய ஏழை நாடுகள் உயிரினப் பல்வகைமையைப் பாதுகாக்க இயலாது என்பதையும் குறிப்பிடுகிறது. 1993 டிசம்பரில் அமுலுக்கு வந்த இந்த ஒப்பந்தத்தை இதுவரை 177 நாடுகள் கையொப்பம் இட்டு ஏற்றுமதி செய்துள்ளன. ஆனால், சூழல் வெப்பமடைதலுக்குக் காரணமான கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் கியோட்டோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட அடாவடித்தனமாக மறுத்துவரும் அமெரிக்கா, அது போன்றே இந்த ரியோ உடன்படிக்கையையும் நிராகரித்து வருகிறது. மரபணுமாற்ற உயிரப்பொருள் வணிகத்தை ஒழுங்குபடுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட ஆவணம் ஒன்றை 2000 ஆண்டு ஜனவரி 29 ஆம் தேதி 130 நாடுகள் ஏற்றுக்கொண்டன. ஆனால் மரபணுமாற்ற உயிர்ப்பொருள்களை பெருமளவில் தயாரிக்கும் அமெரிக்கா இதிலிருந்தும் விலகிக் கொண்டது. ஒப்பந்தம் உருவாகி இத்தனை ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் உலக அளவிலும் உள்ளூர் அளவிலும் அதற்குப் போதிய ஒத்துழைப்பின்றி உயிரினங்களின் அழிவு பரிதாபமாகத் தொடர்கிறது என்பதே சுற்றுச் சூழலியலாளர்களினதும், உயிரியலாளர்களினதும் கவலையாக இருக்கிறது.

மண்ணுள் உறையும் பக்றீரியாவிலிருந்து கடலில் மிதக்கும் இராட்சதத் திமிங்கிலங்கள் வரை, மனிதன் உட்பட இயற்கையின் பார்வையில் எல்லா இனங்களுமே சமமானவை. ஒவ்வொன்றும் தம்மளவில் முக்கியத்துவம் உடையவை. இதில் மனித இனம் மட்டும் தனது இருப்புக்காக எல்லா இனங்களையும் காவுகேட்பது என்பது இயற்கை நெறிகளை மட்டுமல்லாது அறநெறிகளையும் மீறிய ஒன்றாகும்.

"பூலோகத்தில் அதர்மங்கள் தலை தூக்கும்போது நெஞ்சு பொறுக்க முடியாமல் பூமாதேவி வெடிப்பாள் பிரளயம் பீரிட்டு உயிரினங்களைக் காவு கொள்ளும்" — என்று நமது புராணங்கள் சொல்லுவதை நம்பித்தான் ஆகவேண்டும் போல உள்ளது.

"பூலோகத்தில் அதர்மங்கள் தலை தூக்கும்போது நெஞ்சு பொறுக்க முடியாமல் பூமாதேவி வெடிப்பாள் பிரளயம் பீரிட்டு உயிரினங்களைக் காவு கொள்ளும்" என்று நமது புராணங்கள் சொல்லுவதை நம்பித்தான் ஆகவேண்டும் போல உள்ளது.

> "வேறுபட்ட நாடுகள், பண்பாடுகளுக்கிடையே ஒற்றுமையும் சகோதரத்துவத்தையும் உருவாக்கும் சாத்தியப்பாடு உலகமயமாக்கலுக்கு உண்டு. ஆனால் உலகில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற சில வல்லரசுகளின் முரட்டுத்தனமான உறுதியினால் இது சீரழிக்கப்படுகிறது. இத்தகைய உலகில் சந்தை, லாபம் ஆகியவற்றின் உத்திரவுகளுக்கு மனித உரிமைகள் அடங்கியதாகிவிடுகின்றன. IMF, WB, WTO, OCED போன்ற சர்வதேச நிறுவனங்களால் வறுமையை ஒழிக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல. மக்கள் மீது மனித நேயமற்ற கட்டமைப்புகளை திணிப்பதின் மூலம் ஏழ்மையை நீடிக்கச் செய்கின்றன.
>
> *(2000ஆம் ஆண்டு உலகப் பெண்கள் பேரணியின் பிரகடனத்திலிருந்து)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திமலதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org